
பாலகுமாரன்



# மெர்க்குரிப் பூக்கள்

CPL 598078

முதற்பதிப்பு : ஏப்ரல், 1981
இரண்டாம் பதிப்பு : பிப்ரவரி, 1984
மூன்றாம் பதிப்பு : மே, 1985
நான்காம் பதிப்பு : ஜூலை, 1986
ஐந்தாம் பதிப்பு : அக்டோபர், 1987
ஆறாம் பதிப்பு : மார்ச், 1988
ஏழாம் பதிப்பு : நவம்பர், 1989
எட்டாம் பதிப்பு : நவம்பர், 1990
ஒன்பதாம் பதிப்பு : மார்ச் 1992, விசா பப்ளிகேஷன்
பத்தாம் பதிப்பு : நவம்பர், 1992 „ „
பதினோறாம்பதிப்பு: செப்டம்பர் 1994 „ „
பன்னிரண்டாம் பதிப்பு : நவம்பர் 1996 „ „
பதிமூன்றாம் பதிப்பு : டிசம்பர், 1997 „ „
பதின்னான்காவது பதிப்பு : டிசம்பர், 1999 „ „
பதினைந்தாம் பதிப்பு : நவம்பர், 2002 „ „
உரிமை : ஆசிரியருக்கு
விசா பப்ளிகேஷன்ஸ் வெளியீடு

MERCURI POOKKAL
By : BALAKUMARAN
Fifteenth Edition : Nov 2002
Total Pages : 336
Paper used : 11.6 Cream wove

விலை ரூ. 85-00

Available at :

THIRUMAGAL NILAYAM
New No. 16, Old No. 55,
Venkatnarayana Road,
T Nagar, Chennai-600 017
Phone : 4342899, 4327696
Fax : 91 - 044 - 4341559

அச்சிட்டோர் :
யோகி ராம்சுரத்குமார் பிரிண்டர்ஸ்
12, கஜபதி தெரு, சென்னை-5

598078
894.8113
BAL



## சமர்ப்பணம்

ஒரு இயக்கத்தில்
முதல் களபலியான
திரு. கண்ணன் அய்யங்காருக்கும்
கலைந்து போன
அவர் துணைவிக்கும்

நிச்சயம் நீங்கள் ஒரு நல்ல வாசகராக இருக்க வேண்டும். நல்ல வாசகர்தான் நல்ல எழுத்தாளனாக முடியும். வேறு எவரும் இவ்வளவு நயத்துடன் எழுத முடியாது. உங்கள் எழுத்துகளைப் போல நீங்களும் சிரஞ்சீவியாய் இருக்க எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

N. V. ராஜன்
மதுரை-6

●

அத்தியாயம் 29, 30, 31 படிச்சேன். சும்மா சுருள் ...த்தியும் சுட்டுக் கோலுமாய் இடமும் வலமும் பாஞ்சு ...பாஞ்சு விளையாடி அட்டஹாஸம் பண்ணியிருக்கிறீர் ...ள். well இது Dramaன்னா To hell with it I Love it.

ஒத்துக்கிறதுல வெட்கமில்ல இத்தனை ரணமா இருக்
உங்ககிட்ட? நூற்றுல ஒன்றுதான் Surface ஆறதா? ஒ
அபூர்வ முதிர்ச்சியும் ஆளை அடிச்சி உட்கார்த்தி வை
கிற ஆங்காரமும் ஹம்மாடி!

இது தெரிஞ்சுண்டதா இல்லை. அறிஞ்சுண்ட
yes it is nok knowledge, it is awareness, It is wisdom-

மகத்தான விஷயங்கள் உங்கள் மூலமாக நடக்க
போறது இது என் ideal projection. உள்ள love
ege out let எதுவுமே கலக்காத அடி மனசுலேர்ந்து வ
சத்தியமான வார்த்தை நண்பனே ச்ரேயஸாயி
சந்தோஷமாயிரு ஸந்தோஷப்படுத்து. அழுக்குகளை
சுட்டெரித்து விடு. நெருப்பாய் நில். நீராய் குளி
ஆம், கம்பீரமாய் நான் உங்களை ஆசீர்வதிக்கிறேன்
உள்ளே இருக்கிற உன்னை நான் புரிந்து கொண்டே
என்கிற கம்பீரம் அது.

ப்ரஸன்னா ராமஸ்வா
சென்னை—

●

பாலகுமாரன், நீங்கள் யார்? எவ்விதம் இப்ப
எழுதுகிறீர்கள்? என்ன வேலை உங்களுக்கு? இத்தனை
சிறப்பாக எப்படி எழுத முடிகிறது? இதெல்லா
கற்பனையா நிஜமா? இவ்வளவு காலம் எங்கேயிரு
ந்தீர்கள்?

நான் நேரில் பார்த்து உங்கள் கதைகளைப் பற்றி
பேச விரும்புகிறேன்,

அன்புள்ள
Dr. T. K சரோஜா, M.B., B.S.
Govt. Hospital, Neyveli-3

2 ... பெறப்பட்டது
சென்னை-600 008

# சில அபிப்பிராயங்களும் ஒரு சிறிய முன்னுரையும்

மனுஷனாயா, நீ. பிரம்மராட்சஸன், சித்து
வேலைக்காரன். ஒவ்வொரு இதழிலும் இப்படிப் பயத்
தையும் வேதனையையும் பாரத்தையும் ஏற்றி வைத்து
விட்டு முற்றும்னு எப்படிப் போட முடிஞ்சது உன்
னால்...

...பாலகுமாரன், சுற்றுப்புறம் மறந்து, எடுத்த
வேலைகள் மறந்து, மறுபடி மறுபடி உங்கள் எழுத்து
களையே பைத்தியம் மாதிரி படித்துக் கொண்டிருக்
கிறேன் என் ஆசானே, உனக்கு என் நமஸ்காரம்.
சகல வல்லமைகளும் உனக்கு வரட்டும் என்று சத்திய
மாய், வெகு சத்தியமாய் இந்த நேரம் பிரார்த்திக்
கிறேன்.

கணபதிராமன்
நெல்லை-2

●

உங்கள் எல்லாச் சிறுகதைகளும் படித்திருக்கி
றேன். அத்தனைக்கும் சிகரம் மெர்க்குரிப் பூக்கள்.
அர்த்தமுள்ள, ஜீவிதமுள்ள இன்று வாழும் மக்களின்
வேதனையை, ,பரபரப்பை அப்படியே தருபவன்தான்
நாவலாசிரியன். அப்படிப்பட்ட நாவலாசிரியன் வர
லாற்று ஆசிரியனும் கூட. ஏன், மொழியாக்க வெறி
யன்கூட. இவனால மொழி வளரும். வாழ்க்கை
மாறும். சமுதாயம் இவன் சீற்றத்துக்குப் பயந்து தலை
வணங்கும். அப்படி இதோ ஒருவன் பாலகுமாரன்.

சினி. இராசகோபால், (MA)
மதுரை-1

ஆனால் சியாமளியை தங்களுடன் தாங்க
இணைக்காதது, சாவித்திரி கோபாலன் சம்பாஷணை
யிம் (25 ஆம் அத்தியாயம்) சாவித்திரியின் வாத
களுக்குச் சரியான எதிர்வாதம் தராதது கதையி
முடிவு முதலியவை தாங்கள் திரித்துக் கூறுபவரே
என்று எண்ணத் தோன்றுகிறது.

இனி வரும் கதைகளிலாவது இவை நேராவண்ண
இருக்க வேண்டும்

பர்ணபாஸ்—திருவாரு

●

மெர்க்குரிப் பூக்கள் ஒரு நல்ல நாவல். அரற்ற
சற்று அதிகமிருந்தாலும், தெளிவுபடுத்த வேண்டு
என்கிற எண்ணமும் தேடல் பற்றிய பிரக்ஞை முழு
தும் விரவியிருந்ததை மறுப்பதற்கில்லை. ஒரு வார
பத்திரிகையில் இந்த நாவல் வெளியானது அதிசய
தான். உங்களைப் பின்பற்றி நிறையப் பேர் எழுத
துவங்குவார்கள். எனவே அடுத்த நாவலிலே
நீங்கள் நடையை மாற்றிக் கொள்ள வேண்டும்

S. சுதாகரன் B Sc
பெங்களூ

நீங்கள் ஒரு மார்க்ஸிஸ்டா. ஆமெனில் உடனே
பிரகடனப்படுத்துங்கள். இல்லையெனில் சும்மா இரு
கள், மார்க்ஸை முறையாக அறியாதவர் அதுபற்றி
பேசுவது தவறு. அது மிகப் பெரிய இடையூற
ஊசலாட்டக்காரராய், திரிபுவாதியாய் உங்க
எழுத்து உங்களை இனம் காட்டுகிறது. வியாபார
துக்கு மட்டும் மார்க்ஸைப் பயன்படுத்துவது அயோ
கியத்தனம்.

கதிரேசன்

திருத்துறைப்பூண்



Ayn Rand பாதிப்பு தெரிகிறது. யூனியனைக் கேலி செய்கிறீர்களே. சிவப்புக் கொள்கையும் தொழிலாள யூனியனும் ஒன்றையொன்று விழுங்கும் காலம் இது. அதை நாவல் தெளிவாய் சொல்கிறது.

அ குமார்
பெங்களூர்

●

பம்பாயிலிருந்து 22 காலை வந்துவிடுவீர்கள் என நினைக்கிறேன். கௌரி சமத்தாயிருக்கிறாள். 22ஆம் தேதி காலை நான் நுங்கம்பாக்கம் போகிறேன். வீட்டிற்கு வந்து குளித்துவிட்டுச் சாப்பிட அங்கே வந்துவிடுங்கள். சித்தி உங்களைச் கண்டிப்பாய் வரச் சொன்னாள். நிறையப் பேர் உங்களைச் சந்திக்க அங்கே ஆவலாய் இருக்கிறார்களாம். ஊருக்கு வரும்போது நான் வீட்டில் இல்லாததுக்குக் கோபிக்காதீர்கள். சுமங்கலி பிரார்த்தனைக்குப் போகாமல் இருக்கக் கூடாது.

அன்புடன் உங்கள்
**கமலா**
**சென்னை—14**

●

இம்மாதிரி நானும் மாட்டிக் கொண்டிருக்கிறேன். எதிர்த்துப் பேசிவிட்டுக் கட்சி கட்டளையிட அவமானப்பட்டிருக்கிறேன், போராட்டத்தில் ஈடுபட்டு நடுங்கியிருக்கிறேன். இதைத் தெரிந்தவன் உங்கள் எழுத்தை இன்னும் அநுபவிப்பான். ஆனால் இந்தக் குழப்பமெல்லாம் புத்திசாலிக்குத்தான்.

**இரவிச்சந்திரன்**
பெங்களூர்

உங்களுக்கு என் பிறந்த நாள் வாழ்த்துக்கள். மனத்துள் இத்தனை அண்மை-ஸ்நேகம் எந்த எழுத்தும் ஏற்படுத்தவில்லை. இது நானா இது நானா என்று ஒவ்வொரு Characterன் அலையலிலும் என் மனதைப் புத்தியை இனம் காண முயல்கிறேன்.

S. சந்திரன் M.Sc., MPhil-பாண்டி

உங்களை ஒன்று கேட்கலாமா? மெர்க்குரிப் பூக்களை சினிமாவா எடுக்க சம்மதிச்சுட்டீங்களா, இதைப் பேப்பர்ல படிச்சேன், என்னால் பொறுக்கவே முடியலை. அன்னி பூரா பொருமினேன். அந்தப் பூக்களை அழகு குறையாம நம்ப இன்டஸ்ட்ரியில் எடுக்க யார் ஆள்? ஒரு ஆள் சொல்லுங்கள். கணேசனை சாவித்திரியை யார் புரிஞ்சுக்க முடியும். சியாமளியை, சங்கரை யார் உருவம் கெடாம எடுக்க முடியும். கோபாலனை, அவன் புரட்சியை எவர் படமாக்க முடியும்? பாலா, நீங்கள் பெரிய முட்டாள்.

ரேணுகா
திருத்துறைப்பூண்டி

●

உயிரோடு உறவாடி உணர்வுகளைத் தீப்பிடிக்க வைக்கும் வரிகள். அப்பப்பா சுடுகிறது. சாவித்திரி, சியாமளி இரண்டு பெண்களின் மனங்கள் பெண் இனத்தின் பிரதிபலிப்புகள். எனக்கு இருவரையுமே பிடிக்கிறது. என்னால் தனியே இது இது என்று எதையும் மேற்கோள் காட்ட முடியவில்லை. அந்த இரண்டு பெண்களும் எனக்குள்ளே என் பெயரோடு இருக்கிறார்கள். இன்னும் தெளிவாகச் சொல்கிறேன். நானே சாவித்திரி, நானே சியாமளி. இப்படி இங்கே நிறைய பேர் இருக்கலாம். உலகுக்குத் தெரியாது.

ரோஹிணி. M A, MEd., Dip in Malayalam
கோவை



முடிச்சதுக்கப்புறம் மனசில ஒரு மூலையில ரொம்ப இதமா சந்தோஷமா ரொம்ப ரொம்ப சுகமாவலிச்சுண்டு இருக்கு. எல்லோரும் வந்துட்டு வீடே கலகலப்பாய் துவம்சம் பண்ணி ஊருக்குப்போன பிறகு ஒரு தனிமையான அமைதியிலே, அந்தக் குட்டிப் பேத்தி போட்டு எறிஞ்சுட்டு போயிட்ட ரயில் படத்தை சிலேட்டிலே மலங்க மலங்க பார்த்துண்டே உட்கார்ந்திருக்கிற அந்த வயசான மாமா மாமியோட மௌனத்தைக் கலைக்காம ஏதோ ஒண்ணை அந்தரங்கத்திலே படமா நிறுத்திண்டு அவளாக கலங்கிப் போறதைக் கலைக்காம அது எல்லாத்துக்கும் சாட்சியா உட்கார்ந்துண்டு இருந்துண்டு. எனக்கு அந்த தவிப்பு இப்போ சியாமளியோட சங்கரனோட, கோபாலனோட, சாவித்திரியோட, ஓடி ஆடி சிரிச்சு காதலிச்சு ஒரு பெரிய ஆரவாரப் பெருமூச்சுக்கப்புறம் கண்ணைத் திறந்தா யாரையும் காணவே இல்லை. எல்லோரும் இங்கதான் இருக்காளோ.

ஜுலை 14 உங்கள் வீட்டுக்கு வந்தேன். சந்திக்க முடியவில்லை.

S, சம்பத்குமார்
Scientific Officer
Tata Institute of Fundamental Research
Bby

# என்னுரை

இவை ஸ்நேகம் மிகுந்து எழுதப்பட்ட இனிய கடிதங்கள். தன்னால் தன்னுள் பாதிக்கப்பட்டு அவ்வித பாதிப்பு தனக்கு வெளியே வேறு ஜீவனுக்கும் ஏற்பட்டதை அறிந்து இனம் கண்டு என் மாதிரியே உனக்குமா என்று பரவசமாகி பாராட்டாய் வெளியிட்ட கடிதங்கள்.

எனக்கு வந்த பாராட்டை நான் பாராட்டிக் கொள்ளும் காரியமாக அல்லாமல் எழுதுபவருக்கும் வாசகருக்கும் சமீப காலமாய் நல்ல தொடர்பு ஏற்பட்டு விட்ட சூழ்நிலையை அறிவிக்கும் எண்ணமே இங்கே இவை வெளியிடப்பட்டிருக்கின்றன.

ஒரு சிறிய விழிப்புணர்ச்சி நிச்சயம் ஏற்பட்டிருக்கிறது. சில கடிதங்களில் குரல் உயர்ந்து உணர்ச்சி அதிகமாயிருப்பினும் ஒரு சத்திய சந்தோஷம் தெரிகிறது. நீ சொல்வதை நானும் புரிந்து கொண்டேன். மேற்கொண்டு என்று ஒரு தேடல் தொக்கி நிற்கிறது.

இவை என் விலாசத்திற்கு நேரடியாய் வந்த கடிதங்கள். இவை பிரசுரிக்கப்படும் என்று இவற்றை எழுதியவர்கள் யாரும் எதிர்பார்த்திருக்க மாட்டார்கள். அதற்காக எழுதப்பட்டதும் இல்லை இவை. என் பதிலோ நன்றியோ தேவையில்லை இவர்கட்கு.

கம்பங்களுக்கு நடுவே பந்து உதைக்கப்பட்டதும் கூட்டம் முழுவதும் எழுந்து கைதட்டுவதுபோல் தானே அக்காரியம் செய்து முடித்த மகிழ்வோடு களைப்போடு உற்சாகத்தோடு தனக்குப் பிடித்த கட்சி ஜெயிப்பதைப் போல் தன் எண்ணம், தன் விஷயம் என் மூலம் வர கை தட்டிப் பாராட்டும் விதம் இது. பந்து உதைத்தவன் திரும்பிப் பார்ப்பானா, வணக்கம் சொல்வானா



என்று கூட்டம் எப்படி எதிர்பார்ப்பதில்லையோ, இவர்களும் என் பதில் இயக்கத்தை எதிர்பார்க்கவில்லை.

கை தட்டல் இல்லாமல் போயிருந்தால் பந்து உதைத்தவனுக்கு என்னமோ ஏதோ—இது தவறோ என்று பயம் வரத்தான் செய்யும். கைத்தட்டல் கேட்ட பிறகு சற்று நிம்மதி படர்ந்து, தட்டிப் பாராட்டினவர்களை முற்றிலும் மறந்து இன்னும் ஒரு எண்ணிக்கைக்கும் பந்தை மும்முரமாய் உதைக்கும் முனைப்பு ஏற்பட்டு விடும்.

நான் அந்நிலையில் இருக்கிறேன். வாசகர்கள் கொடுத்த உற்சாகம் என்னைப் பலப்படுத்தியிருக்கிறது. மேலும் இயங்கத் தூண்டியிருக்கிறது.

இது ஒரு உன்னதமான விஷயம். அனுபவித்தவர்க்கு இதன் மகிமை புரியும்.

இங்கே ஆண் பெண் உறவு க்ஷீணமடைந்த நிலையில் இருக்கிறது. இந்த க்ஷீணமடைந்த உறவில் பிறந்த என் தலைமுறை அதிகம் அவஸ்தைப்பட்டிருக்கிறது. அடுத்தவரை அறிந்து கொள்ளும் முயற்சியே இல்லாதிருப்பதும் முயற்சியின் ஆரம்பத்திலேயே ஆயாசம் கொள்வதும் தினசரி வாழ்க்கையைச் சிக்கலாக்கிப் பயத்தை ஏற்படுத்தி பயம் காரணமாய் வெறுப்பை உமிழ்ந்து மேலும் விலகி நிற்கும் நிலை நீடிக்கிறது. இதை மாற்ற முடியாதா என்ற கேள்வியின் விளைவு நல்ல நட்புக்கு ஏங்கின தன்மை என்னை எழுதத் தூண்டிற்று.

சிறு பத்திரிகைகள் மூலம் புதுக்கவிதை பரிச்சயம் ஏற்பட நல்ல நண்பர்களின் உதவியால் மெல்ல நல்ல புத்தகங்கள் படிக்க நேர்ந்தது. நிறைய படித்ததின் விளைவு எழுத்து வலுவாயிற்று.

சற்று வலுவேறிய பிறகு வாரப் பத்திரிகைகள் அணைத்துக்கொள்ள, அதிகம் எழுதினேன். எழுதுவதற்கு அதிகம் படித்தேன்.

வாரப் பத்திரிகைகளைக்கோபமாய் பார்க்கும் குழுவிலிருந்து கிளம்பியவன் நான். திசை மாறினேன் என்று என்னைக் கசையாலடிப்பவர்கள் இன்றும் உண்டு. தனித்துக் கட்டுமரம் தள்ளிக்கொண்டிருப்பதைவிட பெருங்கப்பல், வசதி விரைவு என்று ஏறினேன். என் நோக்கம், திசை மாறவேயில்லை. கட்டுமரம் தள்ளிக் களைத்துப் போனவர்களையும் பார்க்கிறேன்

கப்பலுக்கு வாடகை கொடுக்க வேண்டாமா. கொடுத்திருக்கிறேன். பேட்டிக் கட்டுரைகளாய், மொழி பெயர்ப்பு கட்டுரைகளாய் இன்னும் பலவிதங்களாய் இவை கொடுத்த பிறகு என் படைப்பிலக்கியம் மாறவில்லை தடுக்கப்படவில்லை.

அப்படி ஒரு சின்ன மன ஒப்பந்தம் செய்து எளிதாய் இருந்தது.

எப்படி, என்ன எழுதப் போகிறேன் என்று ஒரு கேள்வி கூட இல்லாமல் தன் கப்பலில் இடம் கொடுத்து இந்த நாவலை தன் பத்திரிகையில் தொடராய் வெளியிட்டவர் திரு. சாவி. இடையே நூதன எதிர்ப்புகள் இதற்கு வந்த போது வார்த்தை மரறாது வழிவிட்டவர் திரு. சாவி. அவர் கொடுத்த சர்வ சுதந்திரம். நான் முழுவதுமாய் அனுபவித்தேன். மிகப் பிரபல எழுத்தாளர்களுக்கே தரக்கூடிய உரிமைகள் எனக்கும் கொடுக்கப் பட்டன. என் வரையில் இது பெரும் பேறு, அதிர்ஷ்டம். எழுதுபவரை மதிக்கத் தெரிந்த மனிதர் அவர். தன் பத்திரிகை நோக்கம் வியாபாரம் என்பதைத் தெளிவாய், அவர் கொண்டிருப்பதும், அதற்கு இடைஞ்சல் இல்லாத எந்த எழுத்தும் அவருக்குச் சம்மதமானதும் நியாயமானவையே

வாரப்பத்திரிகை இலக்கியம் வளர்க்காது என்பது இருபது ஆண்டுகளுக்கு முன்பே அடிபட்டுப் போயிற்று. திருவாளர்கள் ஜெயகாந்தனையும், தி. ஜானகிராமனையும், இந்திரா பார்த்தசாரதியையும், சுஜாதாவையும் ஜெயந்தனையும் அப்பெரும் கப்பல்கள் சுமந்து வந்திருக்கின்றன, விரைவாய் இலக்கியம் பரப்பியிருக்கின்றன. இன்னாரால் இன்னவிதமாய் வளர்விப்பதே இலக்கியம் என்பது சரியான வாதமில்லை காலம் தட்டிக் கேட்கப் பத்திரிகைகள் மட்டுமில்லை. அதைக் காட்டிலும் பெரிய மீடியமான சினிமாவும் இலக்கியம் வளர்க்க வேண்டிவரும்.

அப்படி மாறிய காலத்தில் ஆரம்பத்தைக் காட்டுகிறது மேலே கொடுக்கப்பட்ட கடிதங்கள்.

இந்நாவலை இலக்கியம் என நான் கொண்டாட முற்படுவதாய் நினைக்க வேண்டாம் அதைக் காலம் தீர்மானிக்கும். இந்நாவல் வாரப் பத்திரிகையில் வெளி வந்ததாலேயே உண்டான துவேஷத்தைத் தணிக்க முயல்கிறேன்.

முடிந்த நாவலை மொத்தமாய் பார்க்கிறபோது மெல்லிய நிறைவும் அடுத்தபடி செய்ய வேண்டியவைகளுமாய் ஒரு கவலை நினைப்பு உள்ளே ஓடுகிறது.

வளமான இத்தமிழ் மொழியில் வித்தை காட்டி நல்லிலக்கியம் வளர்த்து சராசரிக்கும் கீழாய் திரிந்து கொண்டிருந்த என்னை, மன அமைதிபபடுத்தி பக்குவம் கொடுத்த பெரியவர்கள் நினைப்பு வருகிறது. நல்ல ரசனைக்கு வித்திட்ட விதகர்களின் எழுத்துகள் நினைவுக்கு வருகின்றன. இவர்களால் என் சொந்த வாழ்க்கை பெரிதும் சீரடைந்தது.

அவ்விதமாகவே என் எழுத்தும் உதவுமோ? உதவும். உதவ வேண்டும் என்பதே என் குறிக்கோள் தொடர்பு கொள்ளுதலே வாழ்க்கை எனத் தெரிந்த பிறகு எழுத்து தொடர்புக்கு உதவியாயிற்று. வாழ்க்கை அர்த்தமுள்ளதாய்ப்படுகிறது.

என் எழுத்து தொடர்பால் இன்னும் நாலு பேர் நாலு பேரிடம் தொடர்புகள் ஏற்படுத்த நாலுநாற்பதாய்

ஆயிரமாய் மாற நம்பிக்கையுடன் கைகோர்த்து நல்லதை நோக்கி நடப்போம் என்கிற நினைவு சுகமாயிருக்கிறது.

இந்த நம்பிக்கை பலத்தால் மேலும் பார்க்கிறேன்.

துணை நின்ற திரு. சாவி அவர்கட்கும் அவர் குமாரன் திரு. பாச்சாவுக்கும் என் நன்றிகள்.

பாராட்டுக் கடிதமெழுதி வலுவேற்றிய ஆயிரமாயிரம் வாசகர்களுக்கு.என் நெகிழ்வு மிக்க கை குலுக்கல்கள்.

இந்த நெகிழ்வினூடே பிரமித்து நிற்கையில் நான் போற்றி வளர்க்கப்பட்ட விதம் நினைவுக்கு வர.

எனக்குத் தமிழ் சொல்லிக் கொடுத்த என் தாயார் வித்வான் திருமதி சுலோசனா அவர்களை நமஸ்கரிக்கிறேன்.

''அம்மா சோற்றில் கல் இருக்கிறதே?''

''ம்ம்ஹூம், அது தமிழ்''

''என்ன?''

''கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தது நம் தமிழ் இல்லையா''

''அம்மா எடுத்து போடட்டுமா?''

''அப்படியே சாப்பிடுப்பா.''

நான் விழுங்கினேன். ஒருவேளை இப்படி நீ சிரிக்கச் சிரிக்க உருட்டிக் கொடுத்த தமிழ்தான் இவ்விதம் ஜீரணமாகி நாவலாயிற்றோ?

அம்மா நான் மறுபடி நமஸ்கரிக்கிறேன்.

101/8A, வெங்கடாசலம் தெரு

சென்னை—4 பாலகுமாரன்

29th March, 1981

# மெர்க்குரிப் பூக்கள்

## 1

கணேசன் கண் விழித்ததும் அவன் முதலில் பார்த்த பொருள் ஒரு நட்சத்திரம். ஜன்னலுக்கு வெளியே வெகு, தொலைவில் அற்புதமாய் மின்னிக் கொண்டிருக்கிற விஷயம்.

எழுந்தவுடன் நட்சத்திரம் பார்ப்பது நல்லதா, கெடுதலா? உள்ளங்கையைப் பரக்கத் தேய்த்துப் பார்ப்பது தான் கணேசனுடைய தினசரி வழக்கம். அப்படிப் பார்க்காத நாளெல்லாம் சிரமப்படுத்தும் என்பது தீர்மானம். ஆனால், இன்றைக்கென்னவோ எழுந்தவுடன முதலில் பார்த்த பொருள் நட்சத்திரம்தான்.

புலருமுன் தெருவில் விளக்கணைத்து விட்டார்கள். அறைக்குள்ளே இருட்டு கனமாக அழுந்திக் கொண்டிருக்க நட்சத்திரம் சிரித்துக் கொண்டிருந்தது. வெகு தூரத்தில் சிவப்பாய், கனமாய், அழகாய் அந்தச் சுடர் மின்னிக் கொண்டிருந்தது. பிசுபிசுத்த இமைகளூடே ஒளிக்கதிரால் முத்தமிட்டது. இத்தனை அழகாய், அமைதியாய் சிரிக்கிற சுடர் கெடுதலைத் தருமா? கணேசன் விழிகளை அசைக்கிற பக்கமெல்லாம் அதுவும் நகர்ந்தது. விழிகளைத் திறந்ததும் ஜன்னலுக் கப்பால் வெகு தொலைவில் போய் ஒட்டிக் கொண்டது.

''இதென்ன விளையாட்டு உனக்கு. சாவித்தி மாதிரி?'' கணேசன் சட்டென்று படுக்கையில் எழுந் உட்கார்ந்தான். அந்த விடியல் இருட்டில், படுக்கை யைத் துழாவிச் சாவித்திரியைத் தேடினான். சாவித்தி இல்லை. மீண்டும் கைகளைத் துழாவி 'மணி நாலரை டுத்தா!—'என்றபடி கடிகாரத்தைத் தேடினான்; கடிகார இல்லை. திரும்பி ஜன்னல் வழியே வானத்தைப் பார்க்கை யில் நட்சத்திரம் தெரிந்தது. அது நட்சத்திரம் இல்லை வெள்ளி. விடிவெள்ளி, சிவந்து மிளிரும் சுக்ரன், அசுர களின் குருவான சுக்ரன். மிகுந்த கர்வத்துடன், கம்பீர துடன் அழுத்தமாய் அந்த நட்சத்திரம் இப்போ கணேசனைப் பார்த்தது.

'எழுந்தவுடன் விடிவெள்ளியைப் பார்ப்பது நல்லத கெட்டதா? சாவித்திரியைத்தான் கேட்க வேண்டும்!'

''சாவித்திரி. மணி நாலரை ஆயிடுத்தா?'' அந்த சின்ன ஹாலில் அவன் குரல் அவனுக்கே அன்னியமா ஒலித்தது

ஒரு நாளைப் போல் சாவித்திரி நாலரை மணிக் எழுந்திருக்கிறாள். நாலே முக்காலுக்கு அடுப்பு மூட் கிறாள். ஆறு மணிக்கு குழம்பு, ரசம், கூட்டு ஏதை யாவது செய்து இவனுக்கு அடைத்துக் கொடுக்கிறாள் கணேசன் ஏழேகாலுக்கு தொழிற்சாலையில் இருந்தா வேண்டும். பதினொரு கிலோ மீட்டர் சைக்கிள் மிதிக் வேண்டும். ஆறு மணிக்குக் கிளம்பினால்தான் இத சாத்தியம். பி.எஸ்.ஸியில் கோல்டுமெடல் வாங்கிவிட் இப்படிப்பட்ட வேலையில் மாட்டிக் கொண்டது மட தனம். ஆனால் பத்து வருஷ சர்வீஸுக்கு ஆயிரத் நூறு ரூபாய் சம்பளம், இது இந்த நகரத்தில் எங்கே கிடைக்கும்?



ஆனால் ஞாயிற்றுக்கிழமைகளில் எட்டு மணிவரை தூங்கலாம். சாவித்திரி அன்றைக்கும் நாலரை மணிக்கு எழுந்திருப்பாள் எழுந்து பல்லைத் தேய்த்துவிட்டு இவன் அருகே படுத்துக்கொள்வாள் இவன் தூக்கத்தை மெள்ளக் கலைப்பாள். சோம்பல் முறித்துத் தளரும் உடம்பைத் தடவிக் கொடுப்பாள். இதெல்லாம் ஞாயிற் றுக்கிழமை மட்டுமே முடியும். இன்று என்ன கிழமை? புதன்கிழமை. லீவு போட்டுடலாமா. சாவித்திரியைக் கேட்கலாமா? சாவித்திரி வா...நான் இன்னிக்கு லீவு. வா, இந்தப் பக்கம் வா. படுத்துக்கோ.

இல்லை, இன்று லீவு போடுவதற்கில்லை. இதெல் லாம் ஞாயிற்றுக்கிழமைதான் முடியும்.

கணேசன் சைக்கிளை இரண்டு போலீஸ் வேன்கள் கடந்து போயின. வண்டிகள் போன வேகத்தில் புழுதி பறந்து இவன் கண்களை மறைத்தது. அந்தப் போலீஸ் வேன்கள், இவன் தொழிற்சாலை வாசலுக்குப் போகக் கூடும். ஒரு மாதமாய் தினமும் வாசலில் போலீஸ் நிற் கிறது. ஆரம்பத்தில் இரண்டு பக்கமும் வரிசையாய் நிற்கிற போலீஸுக்கு நடுவே போவது பயத்தைத் தந்தா லும், போகப் போகப் பழக்கமாகிவிட்டது. இரண்டு மூன்று தெரிந்த போலீஸ்காரர்களைப் பார்த்ததும் குட் மார்னிங் போட வைத்தது.

''ஆளுக்கு ஆயிரம் ரூபாய் சம்பளம் வாங்கினாலும் ஸ்டிரைக் பண்றீங்களே சார்? என் சம்பளம் எவ்வளவு தெரியுமா உங்களுக்கு?'' பிரம்புக் குச்சியால் முதுகைச் சொரிந்து கொண்டே போலீஸ்காரர் கேட்ட கேள்வி சிரிக்க வைத்தது.

''நின்னா ஒரே முட்டா வெளியே நிக்கணும். உள்ளே போறது. ஒழிகன்னு கூச்சல் போடறது. காண்டீன்ல தம்ளரைத் தட்டி கலாட்டா பண்றது.

உற்பத்தி பண்ண சாமானை வெளியே அனுப்பாதேன்னு மறிக்கிறது. என்னதான் செய்யப் போறீங்க? சதா நேரமும் இங்கேயே நூறு போலீஸ் நிக்கிறது நடக்கற காரியமா? நாலு பொழுதுக்கு லீவு கேட்டா முடியாதுன்னடறான். ஏதுன்னா ஒரு வழிக்கு வாங்கப்பா.''

—வயசான ஹெட்கான்ஸ்டபின் முகத்தைத் துடைத்துக் கொண்டபடி அலுத்தபோது பெருமையாய் இருந்தது.

''எப்பத்தான் முடியும் இது?''

''தெரியலையே சார்.''

கணேசன் சைக்கிளை வேகமாக மிதித்தான். அதோ அந்தப் பாலம் தாண்டினால் தொழிற்சாலை தெரியும். இன்று பதினைந்து நிமிடம் தாமதம். சாவித்திரியால் வந்த தாமதம்.

ஞாயிற்றுக்கிழமை. ஞாயிற்றுக்கிழமை என்கிறதை மீறி புதன்கிழமையும் பூ உதிர்ந்ததால் உண்டான தாமதம்.

''ஹை எழுந்தாச்சா, எழுந்தாச்சா இது'' கடிகாரத்தைத் தேட மீண்டும் கைகளைத் துழாவி எழுந்திருக்கையில் சகவித்திரி அறை வாசலில் நிழலாய்த் தெரிந்தாள் ''இன்னும் காமணி இருக்கே. எதுக்கு எழுந்திருக்கணும் இவ்வளவு சுருக்க. தூங்கு...நான் எழுப்பறேன் இன்னும் கொஞ்சம் தூங்கு...''

அருகே மெத்தென அமர்ந்து, உட்கார்ந்திருந்தவனை மெல்ல மல்லாத்தி மார்பைத் தடவி, வயிற்றைக் குழைத்து, புஜங்களை நீவி, விரல்களைச் சொடுக்கெடுத்து விடுகையில் உடம்புக்குள் சூடேறி நெருப்புக் கோழி சிறகடித்து உயரப் பறக்க முயற்சி செய்கிற மாதிரி ஒரு வேகம் பரவிற்று.

''எழுந்தவுடன் அத்தனை பட்டனையும் போட்டுக்கணுமா'' பொய்க்கோபத்துடன் கணேசன் சாவித்திரியைத் தன்னோடு இறுக்கினான்.



''ச்கு... பின் கைல குத்தப் போறது. விடிஞ்ச பிறகு என்ன ஆட்டம்?'' —சாவித்திரி தளர்ந்துக் கொண்டாள். புடைவை சரிய தளர்த்தி அவன் கழுத்தைக் கோர்த்து முத்தமிட்டாள். சாவித்திரியின் தோளில் கணேசன் மெல்ல பற்களைப் பதித்தான். அவள் தோளை நெருக்கித் தன்னோடு இறுக்கினான். கூந்தலுக்குள் தன் மூக்கை வைத்து சுவாசித்தான். வியர்வையும், பவுடரும், பூ நெடியுமாய் ஒரு வாசனை மூளைக்குள் ஏறிச் சிறகடித்தது. இன்னும், இன்னும் என்று அந்த நெடியை விரும்பி ஆசுவாசித்து, அப்பா...இதுக்குப் பேர்தான் பொம்மனாட்டி வாசனையா? விரல்கள் அவள் உடம்பு முழுக்க அலைந்து என்ன செய்து என்று தெரியாமல் தவித்தன. சாவித்திரி கூச்சத்துடன் நெளிந்து இன்னும் நெருக்கமானாள்.

''என்ன தேடறேள் இப்போ.'' —சாவித்திரி கொஞ்சினாள். கணேசன் சாவித்திரியின் காதைக் கடித்தான். 'தேவிடியா தேவிடியா' என்று முணுமுணுத்தான்.

சாவித்திரி கணேசனின் கன்னத்தைக் கிள்ளினாள். ''வெளிய சொன்னா வெட்கக் கேடு. எப்பக் கண்டாலும் பொண்டாட்டியைத் தேவிடியான்னு கூப்பிடறது. தேவிடியாளைத்தான் பொண்டாட்டியா நினைச்சுப்பான்னு கேள்விப்பட்டிருக்கேன் இங்க என்னமோ தலைகீழ்ப் பாடமா இருக்கே!''

''ஏன், தேவிடியான்னா என்ன மட்டம்? என்கிட்டே செத்தநாழி தேவிடியாளாத்தான் இரேன்.''

''ஆஹா இருக்கலாமே, அதுக்கு என்ன பண்ணனும் இப்போ?''

''கையைக் காலைச் சுருக்காம, வேண்டாம் வேண்டாம்னு தள்ளாம... பதினைஞ்சு வருஷத்துக்கப்புறமும் வெட்கம் பிடுங்கித் திங்கறதா நடிக்காம... இதுக்குன்னு

பொறந்த ஜன்மமா இதுக்கோசரம்தான் நாங்கள்
மாதிரி இரேன். துணியை இழுத்து இழுத்து மறை
கண்டு...எவன் கண்டுபிடிச்சான் இந்தத் துணியை
படவா.''

சாவித்திரி மல்லாந்து நழுவி உடல் குலுங்கச் சி
தாள். ''ஐயோ, என் ஆம்பளையே'' என்று மறுப
கட்டிக் கொண்டாள்.

''பொம்மனாட்டி துணியில்லாம இருந்தா இத்தனை
வெறி வருமா?''—வாகாய் தகர்ந்து கொடுத்தாள்.

வராம எங்க போகும்? பொறக்கும் போதே து
யோடவா பொறந்தோம்? என்னிக்கு மறைக்க
கத்துண்டோமோ அன்னிலேருந்து ஹிம்சைதான்
மனசு, உடம்பு இரண்டும் ஒளிவு மறைவில்லாம இரு
கிற போதுதான் எந்த உறவும் சரியா அமையறது
உதாரணத்துக்கு நம்ம ரெண்டு பேரையும் எடுத்து
கோயேன்.''

''வாண்டாம்—நான் இப்ப எப்படி இருக்கேன்
வாயைத் திறந்து வர்ணிக்க வேண்டாம்.''

''சாவித்திரி உன்னை விட்டு இந்தக் கூச்ச
போகவே போகாதோடி?''

சாவித்திரி சந்தோஷப்பட்டாள். உள்ளுக்கு
கர்வப்பட்டாள். மனைவியின் மனசு ருசி கணவனுக்கு
தெரியாமலா போகும்? உனக்கென்ன தெரியும் என்
அலட்சியப்படுத்தாமல் மெல்ல மதிக்கிற ஆண் தா
அபூர்வம். உனக்குப் பிடிக்காததைச் செய்ய மாட்டே
என்கிறவன் அபூர்வம். 'சரிதான் கிடடி' என்று இ
நேரம் இவன் சொன்னால் என்ன செய்ய முடியும் த
னால்? எப்படி எதிர்க்க முடியும்? இந்தப் பதினைந்
வருடத்தில் ஒரு முறைகூட இவன் மதிப்பழிய நடந்
தில்லை. இவன் அபூர்வம். பூர்வஜென்ம புண்ணியம்
இப்படிப்பட்ட புருஷனுகில்லாமல்—எதை மறைக்க?



சாவித்திரியின் அசைவுகள் அவள் சந்தோஷமாயிருக்கிறாள் என்பதைக் கணேசனுக்கு உணர்த்தின. எப்பேர்ப்பட்ட மனைவி இவள். எவ்வளவு இயல்பான கீழ்படிதல். வணங்குவது தெரியாமல் வணங்கிவிட்டு, கொடுப்பது தெரியாமல விட்டுக்கொடுத்து, கேட்டதும் சிணுங்காமல் மனம் உவந்து, ''சாவித்திரி ஐ லவ்யூ... இதுக்காக இல்லை, சாவித்திரி எல்லாத்துக்கும் சேர்த்தே சொல்றேன் ஐ லவ்யூ...''

சுவர்க்கடிகாரம் தாளமிட்டது. கணேசன் மனசுக்குள் பறக்கிற கொடியும் கோட்டையும் அதை நெருங்கித் தாக்குகிற குதிரைப் படையும் தோன்றின. முன்னூறு நானூறு குதிரைகள் தலைதெறிக்க கோட்டை வாயிலை நோக்கி ஓடின. புழுதிப் படலம் கண்ணை மறைத்தது. கோட்டை எது, குதிரை எது என்று தெரியாமல் போகிற நேரம், ஐந்து மணி சங்கு வலு கொடுத்து ஊதியது.

''அம்மா-''-சாவித்திரி அவன் மேலிருந்த தன் கைகளை நீக்கிப் பின்புறம் ஓசையெழப் போட்டாள். அயர்ந்தாள்.

எழுந்து நின்று வேஷ்டி கட்டிக் கொள்ளும்போது முதுகு வலித்தது, கண்ணுக்குள் சோர்வும் தூக்கமும் அழுத்தின.

''வேணும்னா லீவு போட்டுடட்டுமே?''-சாவித்திரி சொன்னா.

''லீவு போட முடியாது சாவித்திரி. லீவு போடுகிற நேரமில்லை இது.''

பாலத்தின் சரிவில் இறங்குகையில் ஆட்கள் கூட்டமாக இருப்பது தெரிந்தது. லேசான பதட்டம் காணப்பட்டது. கூட்டத்தைத் தாண்டி அந்தப் பக்கம் இரண்டு போலீஸ் வேன்கள். இவனைக் கடந்துபோன போலீஸ் வேன்கள்.

''க்ளோஸ் பண்ணிட்டாம்பா! க்ளோஸ் பண்ணி
டாம்பா'' ஆட்கள் கலவரத்துடன் பிரிந்து கொண்டிரு
தார்கள். அறுநூறு, எழுநூறு பேர் கூட்டம். இ
மேலும் மேலும் வரும். ஏழே கால் ஷிப்ட் ஏழே முக்கா
ஷிப்ட். எட்டேகால் ஷிப்ட் என்று மெல்ல மெ
கவியும். வாசலில் நின்று கலவரப்படும்.

என்றுமில்லாதபடி தொழிற்சாலைக் கதவு
அழுந்த மூடப்பட்டிருப்பது வேதனையாய்த் தெரிந்த
சைக்கிளை விட்டு இறங்கினால் துவண்டு விடுவோமே
என்ற பயத்தால் வண்டியை இறுக்கமாகப் பிடித்
கொண்டு விசாரித்தான்.

''நோட்டீஸ் போட்டிருக்குது. இத்தோட கம்பெ
க்ளோஸ். எல்லோரும் தெருவோட நிற்க வேண்டிய
தான்!''

''என்னான்னு போட்டிருக்கான்? தெளிவா சொ
லேன்.

''என்னை மாதிரி படிக்காத முண்டமா.
படிச்சவன்தானே, போய் பார்த்துக்கேயேன், நீயெல்லா
எங்கயாவது பொழச்சுடுவே, என் கதி?''

பதில் சொன்னவன் பெயிண்டர் போலிருக்கிற
அவன் மீது மெல்லிய இனிப்பு வாசனை அடித்தது.

விஷயம் என்ன என்பது புரியவில்லை. க
டைப்பா, நிரந்தர மூடலா, என்பது தெரியவில்லை
நேற்று வரை யூனியன் கோரிக்கைகளுக்குத் த
யசைத்து விட்டு இப்போது செய்கிற தந்திரம் என்
வென்று தெரியவில்லை ஒரு வேளை அத்தலைவ தல
யசைப்பும் இதை ஒட்டித்தானோ, உள்ளிருப்பு வே
நிறுத்தம் என்று தொடர்ச்சியாய் ஆட்கள் வ
போவதை நிறுத்தத்தானோ? பின்னடைந்து தாக்
திட்டமோ? நாலு நாள் முன்பு யூனியன் உபதலை
கோபாலன் பயந்தது இது தானோ?



''தோழர்களே, நல்ல தொழிற்சங்கவாதியாய் இருப்பவன் சந்தேகப்படக் கற்றுக்கொள்ள வேண்டும் நமது கோரிக்கைக்கு முதலாளி ஒத்துக் கொண்டால் அவர் ஒத்துக்கொள்ள முடியாத கோரிக்கைகளை முன்வைக்க வேண்டும். புலிக்கு எப்போதும் பசி இருந்துகொண்டே இருக்க வேண்டும். அப்போதுதான் அது புலியாய் இருக்கும். எருமையாய் மாறி நாம் அசை போடக் கூடாது...''

கடைசி மீட்டிங்கில் அவன் பேசியது பல பேருக்குக் கோபத்தைக் கொடுத்துவிட்டது. 'எருமைன்னான் பாத்தியா? இவனைப் போய் உபதலைவரா போட்டாறுங்களே?'' என்று பின்பக்கம் பேச்சு எழுந்தது. ஆனால் அன்று கோபாலன் சொன்னது உண்மையாகி விட்டது. அந்தக் கோபாலனை இப்போது அவசியம் பார்த்தாக வேண்டும். அவன் மாதிரி ஆட்களிடம்தான் முழு விவரம் கேட்க முடியும். கோபாலன் உபதலைவர் தான். ஆனால் இப்போது இருக்கிற தலைவர் மாதிரி பத்து தலைவருக்குச் சமம். திரும்பி விடலாமா, கோபாலனைப் போய்ப் ார்க்கலாமா?

யாரோ ஒருவன் கம்பிக் கதவுகளுக்கு நடுவே கை விட்டு நோட்டீசைக் கிழித்துப்பறக்க விட்டான். கெட்ட வார்த்தைகள் சொன்னான். கூட்டம் முன்னும் பின்னும் அலை மோதியது. கணேசன் அவசரமாய் சைக்கிளைப் பின்னுக்குத் தள்ளியபோது, எவன் மீதோ இடிபட்டது. முழங்காலைப் பிடித்துக்கொண்டு அலறியவன் எழுந்து நின்று இவன் சைக்கிளை எட்டி உதைத்தான்.

சைக்கிள் தடாரென்ற சப்தத்துடன் கீழே விழுந்தது. இரும்புக் கதவுகளைச் சில பேர் முழு பலத்துடன் அசைத்துக் கொண்டிருந்தார்கள். தொழிற்சாலை சுவர் ஏறி உள்ளே குதிக்கச் சிலர் முற்பட்டார்கள் ஒவொன்ற கூச்சலுடன் கற்களைத் தூக்கி உள்ளே எறிந்தார்கள். போலீஸ் பட்டாளம் வரிசையாய் அணி வகுத்தபடி இவர்களை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தது.

இவர்கள் யாரை நோக்கிக் கற்களை எறிகிறார்கள். இந்தக் கதவடைப்பு திட்டமிட்ட செயல் என்று இவர்களுக்கு ஏன் தெரியவில்லை? இப்போது கோபாலனைப் பார்க்கவேண்டும். இந்தக் கூட்டத்தை அவனால் மட்டுமே கட்டுப்படுத்த முடியும். இந்தக் கூட்டத்தில் அவஸ்தைப் படுவதைவிட கோபாலன் வசிக்கும் அறைக்குப் போகலாம். அவனையும் கூட்டிக்கொண்டு தன் வீட்டுக்குப் போகலாம். சைக்கிளைத் திருப்பி ஏறி மிதிக்கிற போது ஹாண்ட் பார் வளைந்திருப்பது தெரிந்தது. உலுக்கி சரி பண்ணுகையில் பாலத்தின் அடியிலிருந்து ஆட்கள் வரிசையாய் வருவதைப் பார்க்க முடிந்தது. அநேகமாய் எல்லோர் கையிலும் சாக்கு மூட்டை இருந்தது. கலவரத்துடன் வண்டியை நிறுததுகையில் முதல் சோடா பாட்டில் வெட்ட வெளியில் பறந்து கீழிறங்கித் தெறித்தது.

திரும்பிவிடலாமா, இல்லை அவர்களைத் தாண்டி விடலாமா—கணேசன் தடுமாறினான். குறுக்கும் நெடுக்குமாய் சைக்கிளில் அலைக்கழிந்தான். அவனையும் அறியாமல் பயத்தில் 'டேய்' என்று அலறினான் அடியாள் வைத்துக் கூட்டத்தைக் கலைக்கப் போகிறார்கள். தொழிற்சாலை பாதுகாப்புக்குப் போலீசும், செயல் கூட்டத்தைப் பயமுறுத்தக் கூலிப்பட்டாளமுமாய் செயல்படப் போகிறார்கள்.

இடுக்கி மாதிரி வளைத்துக் கொண்டு தாக்கப் போகிறார்கள். கணேசன் ஆத்திரமடைந்தான். சைக்கிளை மிதித்து அவர்களைக் கடந்துவிடத் துடித்தான். கோபாலனிடம் இதைச் சொல்லவேண்டும் இது திட்டமிட்ட சதி என்று நேரடி சாட்சியாய் இருக்க வேண்டும், எந்தக் கோர்ட்டுக்குக் கூப்பிட்டாலும் போகவேண்டும். எதிரே கச்சலாய், கருப்பாய் ஒருவன் சாக்கு மூட்டையைக் குனிந்து பிரித்துக் கொண்டிருக்கிறான். அவன் பக்கமாய் புகுந்துவிடலாமா? இந்த சைக்கிள்



வேறு இந்தச் சமயம் பார்த்து வளைந்து விட்டது. இந்த வேகம்...வேகம் போதுமா? தாண்டிவிடலாமா? வேகம்... வேகம்...வேகம்...வேகம்...

ஆனால் பாலத்தின் கீழ் இருந்து வந்தவர்கள் பழக்கப்பட்டவர்கள். கணேசன் மடக்கப்பட்டான் சூழ்ந்து கொள்ளப்பட்டான் மூன்றே நிமிடங்களில் ரத்தமாக்கப் பட்டான், கால்களை அகல விரித்து நடுத்தெருவில் வானம் பார்த்தபடி கிடந்தான். கண்களை அகல விரித்துக் கடைசியாய் மூடியபோது அவன் நெற்றிக்குள் அழகாய் கனமாய் சிகப்பாய் ஒரு நட்சத்திரம் சிரித்தது. கணேசன் சாவித்திரி, சாவித்திரி என்று சொல்லிக் கொண்டே செத்துப் போனான்.

## 2

''உங்கள் பெயர்?''
''கோபாலன்.''
''வயது?''
''முப்பத்தி ஆறு.''
''தகப்பனார் பெயர்...''
''தெரியாது...''
''வளர்த்தவர், உறவினர்?''
''மா-சே-துங்''
''சொந்த ஊர்?''
''மக்கள் சீனம்?''
''படிப்பு?''
''முதலில் மார்க்ஸியம், பிறகு மாவோயிசம்.''

பளிச்சென்று பிடரியில் ஒரு அடி விழுந்தது. கொத்து முடியை உலுக்கி ஒரு கை முகத்தைத் திருப்பிற்று. ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு அடிகள் சீராய், திடமாய், வலது கன்னத்தில் விழுந்தன.

''கம்பெனி வாசல்ல காதுல பூ வெச்சிக்கினு இரு
பான் பாரு அவங்கிட்ட வெச்சிக்கோ இந்தப் பேச்செ
லாம். இது சென்ட்ரல் ஜெயில், செவ்வெண்ணை
கழண்டு பூடும்'' கோபாலன் உணர்ச்சிகள் எதுமின
அடித்தவனையே வெறிக்கப் பார்த்துக் கொண்
ருந்தான்.

''வழக்கம்போல மறியல் கேஸுன்னு நினை
கிறியா, கார்த்தால கொண்டாந்து சாயங்கால
வெளியே விட்டுருவாங்கன்னு பார்க்கறையா. இ
அடெம்ட்டு மர்டர் கேஸு ப்ரதர், இதோன்னா ஆ
மாசம் ஆகும் வீட்டைப் பார்க்க. பொத்தின் மா
இருக்கிறது உனக்கும் நல்லது. சொல்லுங்க உங்க அப்ப
பேர் என்ன?''

''தெரியாது.''

''வளர்த்தவர்கள், உறவினர்?''

''மா-சே-துங்''

''சொந்த ஊர்?''

' மக்கள சீனம்.''

இப்போது ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு பே
சேர்ந்து கொண்டார்கள். மெல்லிய பிரம்புகளை
தலைக்குமேல் விசிறிக் கீழே இறக்கினார்கள். இட
வலம் மேலே கீழே சுழன்று... கோபாலன் தலையை
பொத்திக் கொண்டபடி கீழே தரையில் உட்கார்ந்
விட்டான்.

புரட்சி என்பது ஓர் ஓவியம் போலவோ மெல்லி
இசைக்கச்சேரி போலவோ அமைவதன்று. புரட்
என்பது அவமானம், வலி, துக்கம், வேதனை நிரம்
யது. இவைகளற்று, புரட்சி உருவானதாய் சொல்வ
கேலிக் கூத்து. பதினாறு வருடங்களாய் மனப்பாட
செய்த வரிகள் கண்ணில் கரை கட்டின ஜலத்துக்
நடுவே ஓடின

''இவன் பேரை மட்டும் எழுதிக்கோ. மத்தன
அப்படியே வுடு. உதை வாங்காம வழிக்கு வர மாட
டான்.''



முதலில் அறைந்தவன், கோபாலன் அக்குளில் பிரம்பைக் கொடுத்துத் தூக்கினான். கோபாலனுக்கு அவனைத் தெரியும், அவன் பெயர் துரைசிங்கப் பெருமாள்.

வட சென்னையில் க்ரைம் இன்ஸ்பெக்டர். மனிதர்களை அறைவதில் அவனுக்கு மகா ஆனந்தம் புஜபலம் தான் மனிதரை மேலுச்கு உயர்த்தும் என்கிற ஆர்வம் அவன் கண்ணில் எப்போதும் தெரியும். இந்தக் கொலைக் கேஸில் போலீஸ் தரப்பு வெற்றி அடைந்தால் துரைசிங்கப் பெருமாளுக்கு ப்ரமோஷன் நிச்சயம். இவனுக்கு மோட்டார் சைக்கிள் அலுத்துவிட்டது. டெலிபோன் பொருத்தின வெள்ளைகாருக்கு ஆசை வந்து விட்டது. இவன் ஏகாதிபத்தியத்தின் ஏவல் ஆள். ஏகாதிபத்யம் இருக்கும் வரை இவனும் இருப்பான்.

அறைக்குள் தள்ளி மூடப்பட்ட போது கோபாலனுக்கு கண்ணில் நீர் கோத்துக் கொண்டது. இடது கண் விளிம்பு ரத்தம் தெறிப்பது மாதிரி வலித்தது. கண்ணில் நீர் பொங்கி வருவதைத் தடுக்க முடியவில்லை. ஆனால் இது அழுகிற நேரமும் இல்லை. கட்சியின் கட்டளையை மீறி மேடை ஏறிப் பேசியது தவறு இனிக் கட்சியின் காரியக் கமிட்டி கோபாலனுக்கு வக்கீலை அமர்த்தி வாதாடாது. எக்கேடும் கெட்டு ஒழி என்றும் கை விரிக்காது. முதலில் கண்டனம் தெரிவித்துக் கடிதம் எழுதும் மன்னிப்புக் கேட்டுக் கொண்டால் ஒரு வேளை விடுவிக்க முயற்சி செய்யும்.

இரவில் அறைக்குள் தபதபவென்று போலீஸ் நுழைந்த போது தெரிந்து விட்டது இது வெறும் மறியல் கேஸ் இல்லையென்று. ஆனால் கலவர வழக்காக இருக்கும் என்று நினைத்ததும் பிசகு. கொலை முயற்சியும், கொலைக்கு உடந்தையும் கணேசன் என்பவர் கொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து சந்தேகக் கைதியாகவும் தன்னைப் பிடித்தது பற்றி முதல் விவரம் தாக்கல் செய்யப்பட்ட போது அதிர்ச்சியாகத்தான் இருந்தது.

கணேசன் எப்படிச் செத்துப் போனான் என்பது தெளிவாய்த் தெரியவில்லை. தனக்காக அழுவதைவிட கணேசனுக்காய் அழலாம்.

சந்தோஷமும், சிரிப்பும், சகஜமும், சாமர்த்தியமும் நிறைந்த சிநேகிதனை இழந்ததற்காக அழலாம்

கணேசன் நல்லவன். இன்னொருத்தருக்குத் தன்னால், கிஞ்சித்தும் இடைஞ்சல் வரக்கூடாது என எண்ணுகிறவன். இரண்டு முறை கோபாலன். கணேசன் வீட்டில் சாப்பிட்டிருக்கிறான் அவன் மனைவி பெயர் என்ன? காயத்திரியா, சாவித்திரியா?

சாவித்திரிதான், சாவித்திரிதான். சின்னப் பெண். அழகும் துறுதுறுப்பும் நிறைந்தவள் 'பி. ராமமூர்த்தி மாமாவை உங்களுக்குத் தெரியுமா? என்னோட அத்தையை அவரோட ஊர்லதான் கொடுத்திருக்கிறது.'

'உங்களுக்கு ராமமூர்த்தி மாமாவைத் தெரியுமா''— வெகுளியாய் அவள் பேசினது கோபாலனுக்கும் பிடித்திருந்தது. தலைவரை ராமமூர்த்தி மாமா என்று அவள் அழைத்தது, வேடிக்கையாய் இருந்தது, ஒரு சிங்கம் எங்கள் வீட்டில் நாலுகுட்டி போட்டது என்கிற மாதிரி இருந்தது.

அவளைப் போய் பார்க்க வேண்டும் ராமமூர்த்தி மாமாவிடம் சொல்லி-ச்சீ தலைவரிடம் சொல்லி அவளுக்கு ஏதாவது ஒரு வழி செய்ய வேண்டும். கணேசன் நல்லவன், அவன் செத்துப் போயிருக்க வேண்டாம். சாவித்திரிக்காகவாவது அவன் சாகாமல் இருந்திருக்கலாம்.

அயோக்ய நாய்கள். கையில் கிடைத்தவர்களை எல்லாம் கிழித்திருக்கிறார்கள். கூலி நாய்கள் ஏவினால் திசையறியாது பாய்கிற நாய்கள்.

தலை வாழையிலையில் குனிந்து பரிமாறிய சாவித்திரியின் ஞாபகம் வந்தது. அம்மா உயிரோடு இருந்தால் இம்மாதிரி ஒரு பெண்ணை இழுத்து வந்து தாலி



கட்டச் சொல்லியிருப்பாள் சிறிய வயதில் அம்மா செத்துப் போனது நல்லதாய்ப் போயிற்று. இல்லையென்றால் இப்படி நிம்மதியாய் ஜெயிலில் உட்கார்ந்து யோசனை பண்ண முடிப்ாது

இப்படி யோசனை பண்ணப் பண்ண வெளி ஆட்களின் துக்கம் பற்றி யோசிக்க யோசிக்கத் தன் உடம்பு வலியும் வேதனையும் சுலபமாய் மறைந்தது போகிறது.

கோபாலன் அந்தச் சிறையின் சின்ன அறைக் குள்ளே தன் கையை மடித்துத் தலையை வைத்துக் கொண்டு தூங்கிப் போனான்.

நடுவே குளிரெடுத்து வேஷ்டியை உதறி மேலே இழுத்துப் போர்த்திக் கொள்ளும் போது கதவுக் கம்பியை யாரோ அசைத்தார்கள். கான்விக்ட் வார்டர்.

''உங்க ஆளுங்க நிறையபேரு கைதாயிட்டாங்க சார். வெளியே துணியை அவிழ்த்துப் போட்டு க்யூவில் நிக்கிறாங்க. முரட்டுக் கும்பலா நிக்குது சார்...விவரம் தெரியாம எங்களைக் கோவிச்சுக்கிறாங்க. நாங்களா கைது பண்ணினோம்? கொலைகாரா கொலைகாரான்னு கூப்பிடறாங்க சார். கொஞ்சம் நீங்க எடுத்துச் சொல்லணும்.''

பெருங்குற்றங்களைச் செய்து விட்டு ஆயுள் கைதியாய் வந்தவர்கள் ஜெயிலுக்குள் கன்விக்டட் வார்டர் என்று அழைக்கப்படுவார்கள். சட்டாம்பிள்ளைகள், குரூப் லீடர்கள் மாதிரி வேலை செய்வார்கள். இவர்களைப் போய் எதிர்த்து என்ன பயன்? யாரெல்லாம் கைதாகி இருக்கிறார்கள்? என்ன விதியின் கீழ் இந்த நடவடிக்கை?

''உங்க பேரைச் சொல்லிக் கோஷம் போட்டாங்க. அதான் உங்களண்டை வந்து பேசறேன். நீங்க அவங்களண்டை இதமா சொல்லணும்.''

கோபாலன் கம்பிகளைப் பிடித்து நிற்க முயற்சித்தான். உடம்பு முழுவதும் ரணமாய் வலித்தது.

அது 'ப' வடிவில் அமைந்த சிறைக்கூடம். நடுவே திறந்த வெளி முற்றம். சுற்றியும் வராந்தா. அதை உள்ளடக்கிச் சிறை கூண்டுகள். நுழைந்ததும் கோபாலனுடையது இடது பக்கம் உள்ள அறை. கம்பியில் முகம் புதைத்து வாசலைப் பார்த்துக் கொண்டிருந்த போது திட்டி வாசல் மாதிரி ஒருசிறிய கதவு திறந்துகொண்டது.

முதலில் நான்கைந்து போலீஸ்காரர்கள் கையில் பிரம்புடன் நுழைந்தார்கள். பிறகு கலர் சட்டைகள், காக்கி பேண்டுமாய் ஆட்கள். இவன் கம்பெனி ஆட்கள்'

சுந்தரம், மணி, சரவணன், வேலு பாக்கியராஜ் குணசேகரன், பார்த்தசாரதி, கோவிந்தன், சோமு, வரதாச்சாரி, தேசிகன், குருமகுராஜ்... மெல்ல மெல்ல முப்பத்தி ஆறு பேர், முற்றத்து நடுவே நின்றார்கள்.

கோபாலனுக்கு மறுபடி அழுகை பொங்கும்போல் இருந்தது. வயிற்றிலிருந்து ஒரு பெரிய சங்கடம் சட்டென்று பலமிழந்து அகன்றது. முதன் முறையாய் இந்த யூனியன் சிறைவாசத்துக்குத் துணிந்திருக்கிறது. இந்தத் துணிவுதான் முக்கியம். அவமானம் அற்றுப் போவதுதான் எதிலும் முதல்படி. உள்ளே நுழைந்த அனைவரையும் கைகுலுக்கி வரவேற்க வேண்டும் போல இருந்தது. தன் யூனியன் பெயரைச் சொல்லி வாழ்க என்று கூச்சல் போட எத்தனித்தபோது தாடையை அசைக்க முடியவில்லை. விகாரமான கூச்சலோடு கம்பியைப் பிடித்துக் கொண்டிருக்கும் கோபாலனைக் கண்டவுடன் தோழர்கள் வேகமுற்றார்கள். கண்ணிடுங்கி உதட்டோரம் ரத்தம் வழிந்து முழங்கைகள் முழுவதும் பிரம்படிகள் படர்ந்த உபதலைவனைக் கண்டதும் ஆத்திரமுற்றார்கள்.

சிறைச்சாலை என்பது என்ன என்பது தெரியாத நிலை முன்பின் உணராத அனுபவம், நாற்பது பேராய்ச் சேர்ந்து இருக்கிற தைரியம், கூச்சலைக் கிளப்பி, குழப்பத்தை விளைவித்து வார்டரின் பையிலிருக்கிற



சாவியைப் பிடுங்கி கோபாலனை அறையிலிருந்து வெளியே கொண்டு வந்து முற்றக்கதவை உலுக்க முற்படுகையில் இதன் பதில் விளைவு பயங்கரமாய் இருந்தது.

முற்றத்தைச் சுற்றி போலீஸ்காரர்கள் நிற்க வைக்கப்பட்டு அடங்கச் சொல்லி அதட்டின போது தோழர்கள் பதிலுக்கு அதட்டினார்கள் 'வெளியே வாடா பெண்டை நிமித்திடறேன்'—கூட்டத்தில் எவனோ குரல் கொடுத்தான். ஒரு போலீஸ்காரனின் லத்தி பறிக்கப்பட்டு இரண்டாக முறிக்கப்பட்டது.

பளிச்சென்று முன்னேறி தாக்க உத்தரவு கிடைத்ததும் போலீஸ்காரர்கள் ஆத்திரத்துடன் தாக்கினார்கள். ஜெயிலுக்குள் இத்தகைய சுதந்தரம் வெளிப்படக் கூடாது அதை உடனே அழித்துவிட வேண்டும் என்ற வெறியோடு தாக்கினார்கள். முதுகு, கை, கால் பிருஷ்டம் எல்லா இடங்களிலும், பிரம்புகள் முத்தமிட்டன. பிரம்புகள் எல்லாக்காலத்திலும் எல்லா இடத்திலும் உன்னதமான விளைவை உடனே கொடுக்க வல்லவை. கைகலப்புக்கு முற்பட்டவர்கள் தனியே கவனித்துத் தாக்கப்பட்டார்கள். உடம்பு உரம் அழிக்கப்பட்டதும் மனசின் கர்வம் கலைந்து போயிற்று. எதிர்ப்பு வெறி எவ்விதம் தொற்றிக் கொள்கிறதோ அதே விதமாய் அழுகையும் வேதனையும் கலவரமும் பரவலாகித் தோழர்களைத் தொற்றிக் கொண்டது. கோபாலனுக்கும் நான்கைந்து அடிகள் விழுந்தன. ஐந்தே நிமிடத்தில் கூட்டம் ஒரு அமைதியான நிலைக்குக் கொண்டு வரப்பட்டது.

வலி தாங்காமல் அரற்றினவர்களைக் கோபாலன் சமாதானப்படுத்தினான்.

உதடு கிழிந்து பொங்கும் ரத்தத்தை வேஷ்டியால் ஒற்றினான். விரல்கள் நசுங்கித் தவித்தவனிடம் போய் தன் சட்டையை கிழித்துக் கட்டுப் போட்டான். பயத்தில் மயக்கமடைந்தவனை மடியில் போட்டுக் கொண்டு

மெல்ல உலுக்கிச் சலனப்படுத்தினான் அவமானத்தி குன்றி ஒடுங்கியவர்களிடம் நடுவே நின்று 'உலகம் இ விதம் காண், உழைப்பவர்களை அடக்கி நசுக்க எத்தனி கிறது' என்று பிரசங்கம் செய்தான்.

மெல்ல சட்டையை கழற்றி அன்று காலை தனக்கு கிடைத்த சீர்வரிசைகளைக் காண்பித்தான். பயத்தி கூட்டம் உறைந்து பேயிற்று

முதுகிலும் விலாவிலும் சதை கிழிந்து ரத்தம் கட் நின்ற போதும் எந்த உணர்ச்சியும் இன்றிக் கோபால இருப்பதைக் கண்டு ஆச்சர்யமுற்றது.

விரல்கள் நசுங்கின வலியில் அழுது கொண்டிருந் கோவிந்தன்—கோபாலனைப் பார்த்ததும் வாய்விட் அலறினான். எழுந்து நின்று 'தலைவரே' என்று கட்டி கொண்டான். கூட்டம் எவ்விதம் ஒட்டு மொத்தமா வீறு கொண்டதோ அதே விதமாய், ஒட்டு மொத்தமா உதட்டைப் பிதுக்கி அழத் துவங்கியது. கோபால என்ன சொன்னாலும் கட்டுப்பட்டுக் கேட்பதாய் உறுதி சொல்லிற்று.

இது மனிதனின் பலகீனமான நேரம் வலியும் அவ மானமும் ஆளைக்குடைசாய்த்து விட்ட நேரம். கோபாலன் அடுத்த பதினைந்து நிமிடத்தில் தன் திட்டங்களைச் சொல்லிவர அந்த மாலை வேளையில் சிறையில், அரையிருட்டில் சுலபமாய்த் தலைவனானான்.

## 3

அன்பார்ந்த ஐயா,

கடந்த திங்கட்கிழமை அன்று நானும் என் மனைவியும் இரண்டு குழந்தைகளும் ஒரு திரு மணத்திற்குப் போய்த் திரும்பி வருகையில்



நாங்கள் ஏறிவந்த 38C பஸ் போலீஸரால் சூழ்ந்து கொள்ளப்பட்டது. அருகிலுள்ள தொழிற்சாலையில் கதவடைப்பு என்றும் அங்கே கலவரம் செய்வதற்குச் சில விஷமிகள் இந்தப் பஸ்ஸில் வருகிறார்கள் என்றும் தகவல் கிடைத்ததாகச் சூழ்ந்துகொண்ட போலீஸார் என்னிடம் கூறினார்கள். நாற்பது வருடம் சென்னையில் வசித்துவரும் எனக்கும் விஷமிகள் யார் யார் என்று சுலப மாய்க் கண்டு பிடிக்க முடியும். நான்கைந்து தொழி லாளர்களும் பஸ் கண்டக்டரும் டிரைவரும் எங்கள் குடும் பமும் தவிர பஸ்ஸில் யாரும் இல்லை. ஆயினும் பஸ்ஸில் இருந்த அனைவரும் ஒரு போலீஸ் ஸ்டேஷன் முன்பு பல வந்தமாக இறக்கப்பட்டோம். நாள் முழுவதும் போலீஸ் காவலில் வைக்கப்பட்டோம். என் குழந்தைகள் கதறி அழுதன. என் மனைவிக்கு ஜுரம் வந்து விட்டது. இதனால் எங்களுக்கு ஏற்பட்ட அவமானம் சொல்லத் தரமன்று

உண்மையான விஷமிகளைக் கண்டு பிடிக்க லாயக் கற்று பெயருக்கு அப்பாவிகளைக் கைது செய்யத்தான் போலீசா? இதற்குப் பெயர்தான் சட்டம் ஒழுங்கா? எனக்கும் அந்தத் தொழிற்சாலைக் கதவடைப்புக்கும் என்ன சம்பந்தம்? இந்த வேதனையும் அவமானமும் எனக்கு ஏன் வரவேண்டும்?

நகரப் போலீஸார் குறிப்பிட்ட கம்பெனியின் கைக் கூலிகள் என்று சில தமிழ்ப் பத்திரிகைகள் சொல்லு கின்றன. இது உண்மையாய் இருக்குமோ என்று சாதாரண குடிமகனாகிய எனக்குத் தோன்றுகிறது. எனக்கு ஏற்பட்ட இந்த நிலைமை என் விரோதிக்குக் கூட வரக்கூடாது என்று கடவுளை வேண்டுவதை விட

வேறுவழி ஒன்றும் எனக்குப் புலப்படவில்லை. யாருக்கும் துன்பம் விளைவிக்க நினைக்காத ஒரு குடிமகனுடைய குமுறலைத் தயவு செய்து வெளியிடுங்கள்.

உங்கள் உண்மையுள்ள
K. சந்தானக்கிருஷ்ணன்

ரங்கசாமி தினசரியை நாலாக மடித்து வீசி எறிந்தார். அறைக்குள் குறுக்கும் நெடுக்குமாய் உலாவினார். டையைத் தளர்த்திவிட்டுக் கொண்டார். கண்ணாடி ஜன்னல் வழியே அமைதியாய்த் தூங்கிக் கொண்டிருந்த தொழிற்சாலையை வெறித்துப் பார்த்தார். வரிசை வரிசையாய் டிராக்டர்கள். நானூற்று நாற்பத்தேழு டிராக்டர்கள் சிகப்பு நிற சிற்றானைக் குட்டிகள் ஒவ்வொன்றும் முப்பதைந்து குதிரைச் சக்திகள். விரலால் நிமிண்டி அழுத்தினால் போதும் சீறிப் பாய்ந்து சாகசம் காட்டும் கருவிகள்

உருவத்தில் சிறியது நெடுநாள் உழைப்பதும் அதிகமான உந்து சக்தி கொண்ட முதல் தரமான வண்டிகள் மொத்தம் ஏழு கம்பெனிகள் இந்த தேசத்தில் எத்தனை டிராக்டர்கள் தயாரிக்கின்றன. தரத்தில் ஈடு கொடுக்க இதுவரை எவராலும் முடிந்ததில்லை. இது ஒரு சாதனை மாதம் அறுநூறு வண்டிகள் தயாரித்துக் கொடுக்கும் சாதனை ஒரு தனி நபர் சாதனை. இதற்காக ரங்கசாமி நிறைய இழக்க வேண்டியிருந்தது. மனைவி, குடும்பம் குழந்தைகள் எதிலும் சிக்காமல் இருக்க வேண்டியிருந்தது.

'கல்யாணம் பண்ணிக்கோடா ரங்கு யாரவேணாலும் பண்ணிக்கோ, வெள்ளைக்காரியோ வடதேசமோ வேற ஜாதியோ எந்தப் பெண்ணை வேணுனா பண்ணிக்கோ, அம்மா சொல்லுவாளேன்னு பயப்படாதே மனசுக்குப் புடிச்சவளைக் கல்யாணம் பண்ணிக்கோ.' நான் உசிரோட இருக்கறச்சேயே பண்ணிக்கோ.



ஆனால் முப்பது வயதில் மனசுக்குள்ளேயே ஒரு கல்யாணம் நடந்து விட்டது. இந்தத் தொழிற்சாலையோடு மனதைப் பிணைத்துக் கொண்டாகி விட்டது. இதைக் கொஞ்சி, சீராடி' புணர்ந்து, சண்டை போட்டு எல்லாம் நடந்து கொண்டிருக்கிறது. சில சமயம் இவர் சண்டை போடுகிறார், அது சமாதானமாய் போகிறது. சில சமயம் அது சண்டை போடுகையில் இவர் சமாதானப்படுகிறார்.

ஆனால், இப்போது ஏற்பட்டிருக்கிற சண்டை விபரீதமாய்ப் போய்க் கொண்டிருக்கிறது. இரண்டு பேர் பிடிக்கும் சிக்காமல் எல்லை தாண்டிப் போய்க் கொண்டிருக்கிறது.

'ஆன் த இன்ட்ரஸ்ட் ஆப்த கம்பெனி ஐ ப்ளீட்யூ கோபால்—ஷட் அப்,' ''ஐ ஸே ஸட் அப்,''—வாயை மூடு—என்பது தப்பான வார்த்தையாய்ப் போய்விட்டது. அந்த கோபாலன் ஒரு இடியட், பெர்வர்டட் இடியட்.

ஒரு விஷயத்தின் அடிப்படைக்குப் போகத் தெரியாதவன் எப்படித் தலைவனாகிறான்? மூலதனமும் உழைப்பும் கூட்டாகச் சேருவதுதான் உற்பத்தியெனில் லாபம் என்பது இரண்டு பேருக்கும் சமமாகப் பகிர்ந்தளிக்க வேண்டியது இல்லையா? கூச்சமில்லாமல் இன்னும் கொடு இன்னும் கொடு என்று எப்படிக் கேட்கிறார்கள்.

மூலதனத்தை மூழ்கடித்து விட்டு உழைப்பை எங்கே கொட்டப் போகிறார்கள்? புதிதாக வேலைக்குச் சேருபவன் வருமானம் சராசரி ஏழுநூறு ரூபாய். இந்த தேசத்தின் தொழிலாளிக்கு இது அதிகபட்ச வருமானம். இந்த முட்டாளுக்கு இது ஏன் தெரியவில்லை. பேச்சு வார்த்தை முறிவதற்கு ஒவ்வொரு சமயமும் இந்தக் கோபாலன்தான் காரணம். டயர்களுக்கு திடீர் என்று பஞ்சம் வந்து விட்டது. ஆறு ரூபாய் கிலோ விற்ற ரப்பர் பதிமூன்று ரூபாய் ஆகிவிட்டது. மின்சாரக் குறைப்பு வேறு உபத்திரவம் செய்கிறது. டயர் வரும் என்ற

நம்பிக்கையில் நானூறு வண்டி செய்தாகி விட்டது. மாதக் கடைசியில் அதிக விலைக்கு வாங்கிய டயர் கொண்டு வந்து கொடுக்கையில் யூனியன் அந்த நானூறு வண்டிகளுக்கு டயர் பொருத்த மறுத்து விட்டது. மூன்று நாள் ஓவர்டைம் வேண்டுமாம். ஒரே நாளில் நானூறு வண்டிகளுக்கு டயர் பொருத்த முடிந்தாலும் மூன்று நாள் ஓவர்டைம் வேண்டுமாம். குறைந்த பட்சம் ஒரு ஆளுக்கு முப்பத்தாறு ரூபாய் ஓவர்டைம் என்றால் ஒரு நாளைக்கு முப்பத்தாறாயிரம் ரூபாய் செலவு ஆகும். மூன்று நாளைக்கு லட்சத்து எட்டாயிரம் ஆகும் வெளியே இருந்து ஆட்களைத் தருவித்து வெறும் எட்டாயிரம் செலவில் டயர் மாட்டிக் கொள்கிறேன் என்பதையும் மறுத்து விட்டார்கள். இவர்களே தான் மாட்டுவார்களாம் 'மூன்று நாள் ஓவர்டைமும் வேண்டுமாம். பேராசைக்கு ஒரு எல்லை இல்லையா?

காசு காசு என்று இவர்கள் அலைவது ரங்கசாமிக்குப் புதிதல்ல. நிறைய சம்பாதித்து நிறைய செலவழிக்க வேண்டும் என்கிற தனி மனித ஆத்திரத்தை அவரால் புரிந்து கொள்ள முடிகிறது. ஆனால் அந்த த்வனி காசுக்கு மிரட்டுகிற குரல் கட்டோடு பிடிக்கவில்லை.

''டயர் கொடுக்காதது உன் தப்பு.''

கோபாலன் விரல் நீட்டிப் பேசுகிறான் ஒரு சொடுக்கில் அவனை விரட்டி விட முடியும் அடையாளமே தெரியாமல் அழித்துவிட முடியும். ஆனால் நாளை இந்த கோபாலனுக்குப் பதில் இன்னொரு பூபாலன் வந்து நிற்கப் போகிறான்.

மேலே இருப்பவனை எதிராக எண்ணுவது இங்கே ஒரு குல வழக்கம். ஒன்று ஆராதிப்பார்கள். இல்லையேல் அடித்து நொறுக்குவார்கள். பரஸ்பரம் புரிந்து கொண்டு நடப்பது உறவோடு வாழ்வது இவர்களுக்குப் புரிவதேயில்லை. மனைவியோ, மானேஜரோ தலைவரோ, கடவுளோ எல்லாம் இந்த இரண்டு



எல்லைகளில்தான் இருப்பார்கள் உற்பத்தி செய்தும், டயர் இல்லாத நிலை இவர்களுக்கு ஏன் தெரிலதில்லை. பணமுடக்கத்தின் தீவிரம் இவர்களுக்கு ஏன் எட்டவில்லை.

கோபாலனால்தான் அன்றைய மீட்டிங் மோசமாயிற்று மூன்று நாள் ஓவர் டைம் பெரிதல்ல. கோபாலனின் நடவடிக்கை நிறுத்தப்பட்டே ஆக வேண்டும் இத்தனைக்கும் அவன் உபதலைவன்தான். கதர் சட்டையும், காசநோயும் உள்ள தலைவரைப் பின்னால் நின்று குத்திவிடுகிற உபதலைவன்.

துரைசிங்கப் பெருமாளை மறுபடியும் பார்ட்டிக்குக் கூப்பிட வேண்டும், தனியே விவரமாய் பேச வேண்டும். கோபாலனுக்கு ஏதேனும் ஒரு முடிவு கட்ட வேண்டும். கோபாலன் முகத்தை துரைசிங்கப் பெருமாள் விகாரப்படுத்திவிட்டதாகச் சொல்கிறான் விகாரப்பட்ட கோபாலன் முகம் எப்படி இருக்கும் என்று பார்க்க வேண்டும்.

சட்டென்று ஒரு அயர்ச்சி ரங்கசுவாமிக்குள் பரவியது பேசாமல் எல்லாவற்றையும் உதறிவிட்டு தேம்ஸ் நதிக்கரைப் பக்கம் போய்விடலாமா என்று தோன்றியது ஸாலிஸ்பெரி புல்வெளிகளுக்கு நடுவே குடி பெயர்ந்துவிட ஆசை வந்தது.

இந்த அசிங்கங்களோடு போராடுவதற்குப் பதில் பெர்மிங்ஹேம் போய்விடலாம். ஆனரெரி மெனேஜ்மெண்ட் கோர்ஸ் ப்ரொபஸராகி காலந் தள்ளலாம். கடுமையாய் உழைத்தால் முன்னுக்கு வரலாம் தேம்ஸ் நதிக்கரை இன்னும் பசுமையாய் மனசில் இருக்கிறது. இங்கே இருக்கிற அத்தனையும் உதறி ஓடிப்போகலாம். கம்பெனி ஒயிண்டப் பண்ணப்போனால் மூன்று நாட்கள் கூட ஆகாது. டிராக்டர் டிசைனை காப்பிரைட் கொடுத்த கம்பெனி தடை சொல்லிற்று என்றால் அரசு மௌனமாகும். ஆனால் இது எவ்வளவு தூரம் போகும் என்பதையும் பார்க்க வேண்டும்.

நானூற்று நாற்பத்தேழு டிராக்டர், வரிசை வரிசையாய் சிகப்புநிற சிற்றானைக் குட்டிகள், விரலால் நிமிண்டினால் போதும், வித்தை காட்டும் கருவிகள். டயர் பொருத்தப்படாமல் காலி டின்னிலும் கட்டைகளிலும் முட்டமாய் நிறுத்தப்பட்டிருக்கின்றன. இந்த சிகப்பு நிறத்தைப் பார்க்கும் போதெல்லாம் அம்மாவின் பட்டுப் புடைவை ஞாபகம் வருகிறது.

சின்ன வயதில் கையில் உருட்டி உருட்டி சாதம் போட்டுச் சொன்ன அம்மாவின் அழைப்புத் தாளாமல் தான் இங்கு வந்தார், அவள் அழுகுரல் தாங்காமல்தான் இங்கு தங்கினார். தொழிற்சாலை துவங்கினார். பதினான்கு வருடம் கழித்து இப்போதுதான் முதலாய் மூடி விட்டுப் போகலாமா என்கிற அயர்ச்சி வருகிறது.

''நகரத் தமிழ்ப் பத்திரிகை இந்தப் போலீஸ்காரர்களை அந்தத் தொழிற்சாலை மேனேஜ்மெண்டின் கைக் கூலிகள் என்று சொல்லுகின்றன.'' மனைவியும் குழந்தைகளுமாய் போலீஸ் ஸ்டேஷனில் அழுகிற ஆளை ரங்கசுவாமியால் கற்பனை பண்ணக்கூட முடியவில்லை.

நான் செய்வது தவறோ? யார் யாரையோ இது பாதிக்கிறதே. இது சரியா?

லோகல் ஃபோர்ஸ் வேண்டும் என்று பெர்சனல் மானேஜர் சொன்னதற்குத் தலையசைத்து விட்டது தப்போ? ஊரைச் சுற்றியிருக்கிற ரௌடிகளுக்குக் காசு கொடுத்துக் கம்பெனியைப் பத்திரப்படுத்திக் கொண்டது குறையோ?

தொழிலாளிகள் தாக்க வந்தால் தடுத்து நிறுத்த அடியாட்கள் வைத்தது பிசகோ? யார் அந்த லோகல் ஆட்கள்? விலாசமென்ன, விவரமென்ன, விரட்டச் சொன்னால் ஏன் அடித்துக் கொன்றிருக்கிறார்கள்?

'ஹூ இஸ் தட் கணேசன்?''



இன்டர்காமை எடுத்து செகரெட்டரி பாலுவைக் கூப்பிட்டார்.

''பாலு...வாட் ஹாப்பெண்ட் டு கணேசன்ஸ் பாமிலி? ஏதாவது உதவிப் பணம் அனுப்பினீங்களா?''

''மூன்று முறை முயற்சித்தும் மறுத்து விட்டார்கள் சார்.''

''நானே நேரிடையாகச் சென்று பேசட்டுமா பாலு...இரண்டு குழந்தைகளாமே கணேசனுக்கு?''

''நோ சார்...'' பாலு பளிச்சென்று போனைக் கீழே வைத்தது தெரிந்தது. பரபரப்புடன் அடுத்த அறையில் நகர்வது தெரிந்தது. இரண்டே பாய்ச்சலில் இவர் அறைக் கதவைத் திறந்து பயத்துடன் இவரை நேரிட்டு பாலு பார்க்கையில்...திறந்த கதவுக்கு அப்பால், துரை சிங்கப் பெருமாள் படியேறிக் கொண்டிருந்தான்.

ஐந்து நிமிடப் பேச்சுக்குப் பிறகு ''இவ்வளவுதானே நான் அரேன்ஜ் பண்றேன்' அந்த வீட்டுப் பக்கம் போவதற்கு'' என்று சொல்லி விட்டு விரைவாய் கீழே இறங்கினான்

''கவலைப்படாதே பாலு, நாம் திடமாய் முன்னேறிக் கொண்டிருக்கிறோம்''—ரங்கசுவாமி மறுபடியும் குரலில் உற்சாகம் வரவழைத்துப் பேசினார்.

# 4

சாவித்திரி சுவரை வெறிக்கப் பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருந்தாள். வீடு முழுக்க அலம்பிவிடப்பட்டிருந்தது. ஒரு மர நாற்காலியில் குத்திட்டு உட்கார்ந்து கைகளால் முழங்காலைப் பின்னிக் கொண்டு அசைவற்று இருந்தாள். கணேசன் வீட்டுக்குள் கிடந்த வரைதான்

அழுகையும் ஆர்ப்பாட்டமும். ஊர் ஜனமனைத்தும் அவனைத் தோள்மீது தூக்கிக் கொண்டு தெரு தாண்டி மறைந்ததும் அவள் அழுகை பட்டென்று நின்றது. இனி அவள் அழுது பயனில்லை இனி அழக்கூடாது. நேரக் கூடாதது நேர்ந்து விட்டது. நெஞ்சைக் கிறிக் கொண்டு புண்ணியமில்லை. எப்படி திடுமென்று வந்தானோ அதே மாதிரி திடுமென்று போய்விட்டான். ஒரு வார்த்தைகூட சொல்லிக் கொள்ளாமல் போய் விட்டான்.

கல்யாணத்திற்கு முதல் நாள் வரை சாவித்திரி கணேசனைப் பார்த்ததில்லை. முதலிரவில் அவனை நமஸ்கரித்து எழுவதற்கு முன் அவன் குரலைக் கேட்டதில்லை. அவனைப் பார்த்த க்ஷணத்திலேயே சாவித்திரிக்கு முழுக்கப் புரிந்து போயிற்று. அவனோடு ஜென்ம ஜென்மமாய் உறவு இருக்கிறது என்று மனசுக்குப் பட்டுவிட்டது. பூக்கள் தூவின படுக்கையில் கணேசனோடு தனியாய் விடப்பட்ட போது "உனக்குச் சந்தோஷம் தானே சாவித்திரி" என்று முதலும் இல்லாமல் முடிவும் இல்லாமல் ஒரு கேள்வி கேட்டான். அவனை விழி விரியப் பார்த்து விட்டுச் சந்தோஷம் என்பதாய் தலையசைத்தாள்

"வெரிகுட், வெரிகுட்"—மிகுந்த ஆதுரத்துடன் ஒரு சிநேகிதன் மாதிரி அவள் தோள்மீது கை வைத்தான். சிறிது நேரம் கழித்து, "பதிலுக்கு நீ என்னைக் கேட்கலையே சாவித்திரி" என்றான்.

"என்னைக் கேள்வி கேட்ட போதே உங்க மனசு புரிஞ்சு போயிடுத்து, தன்னோட மனசுல சந்தோஷமில்லைன்னா அடுத்தவா சந்தோஷம் பத்தி அக்கறைப்பட முடியுமா?"

"வெரிகுட், வெரிகுட், அப்புறம்..."

"உங்ககிட்ட கடைசி வரைக்கும் இந்த வெரிகுட் வாங்கணும்னு ஆசை. என்னை ஆசீர்வாதம் பண்ணுங்கோ"—சாவித்திரி குனிந்து வணங்கினாள்.



"உன்னைப் பெண் பார்த்துட்டு வந்து அப்பா என்னைக் கூப்பிட்டுச் சொன்னார். 'பொண் மகா கெட்டிக்காரி கொஞ்சம் தட்டிக் கொடுத்து நடந்துக்கோ. முழு குடித்தனமும் அவளே பார்த்துப்பான்னு, நான் அப்படித்தான் பண்ணப் போறேன் சாவித்திரி."

சாவித்திரி மனசுக்குள் மாமனாரை நமஸ்கரித்தாள்.

நாலாம் நாளே சென்னை வந்து தனிக்குடித்தனம் நடத்தினாள். மாமியார் கொடுமையில்லாமல் நாத்தனார் தொந்தரவு இல்லாமல் யார் இடைஞ்சலும் வராமல் சாவித்திரி தன் கொடியை உயரப் பறக்க விட்டாள். பதினான்கு வருஷம் எந்தக் குறுக்கீடும் இல்லாமல் அவள் கொடி பட்டொளி வீசிப் பறந்தது. ஒரே நாளில் சின்னாபின்னமாகியது.

இத்தோடு வாழ்க்கை முடிந்து விட்டது. இனி முடிந்த
வரை விதித்தவரை உயிரோடு இருந்து விட்டுப் போக
வேண்டும் கணேசனுடைய இனிமை அத்தனையும்
குழந்தைகள் மனதில் தூவ வேண்டும். அவைகள் கணேச
னுடைய குழந்தைகள் என்பதை எல்லாவிதத்திலும் பிறர்
அறியும்படிச் செய்ய வேண்டும். சிநேகிதத்தையும் அன்பை
யும் பெண்கள்மீது பொழிகின்ற பரம்பரை உடையாமல்
பார்க்க வேண்டும். கணேசன் இருந்தால் குழந்தைகளுக்
கும் இவை சொல்லிக் கொடுக்காமலேயே வந்திருக்கும்.
புருஷனை அப்படியே உருவத்தில் உரித்து வைத்திருக்கும்
இந்த இரண்டு ஆண் குழந்தைகளுக்கும் அதிர்ஷ்டமில்லா
மல் போய்விட்டது. மூத்தவனுக்கு அப்பாவின் மரணம்
புரிந்து விட்டது அவனை மெல்ல மெல்ல இந்தத் துக்கத்தி
லிருந்து கரையேற்ற வேண்டும் அந்தப் பனிரெண்டு
வயதுப் பையன் அரக்கனாய் அந்தக் கம்பெனி ஆட்கள்
மீது பாய்ந்தது மனசில் மறுபடி தோன்றிற்று. யாரைப்
பார்த்தாலும் சட்டையைப் பிடித்துக் கொண்டு "எங்க
அப்பாவை ஏன் குத்தினே, எங்க அப்பாவை ஏன் குத்தினே

என்று கேட்ட விதம், அழுத அழுகை இன்னும் மனசை அழுத்துகிறது. ஆஸ்பத்திரியில் கூட்டமில்லை. வீட்டுக்கு எடுத்து வருகையில்கூட்டமில்லை.இன்றுமாலையில் தெரு கொள்ளாத கூட்டம். ஆவேசத்துடன் கதறுகிற கூட்டம். கொலறது யார்? ஏதற்கு? ஏன் என்ற கேள்வியெல்லாம் சாவித்திரியை விட்டு ஓடி விட்டது. சர்வ நிச்சயமாய் இந்தச் சாவு கேள்வியற்றுப் போகப் போவதில்லை கணேசன் சடலத்தைக் குளிப்பாட்டுகையில் யாரோ பத்துபேர் ரத்தம் கீறி "பழிக்குப் பழி" என்று சப்தம் எடுத்துக் கொண்டார்களாம். இன்னும் யார் யாரோ வாசலில் உட்கார்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் தொடர்ந்து இங்கே இருப்பார்கள் ஏதே ஒரு தீர்மானமான முடிவோடு அவர்கள் இங்கே இருக்கிறார்கள். அநாவஸ்யமாய் வீட்டுக்குள் வரக் கூடாது என்கிற உத்தரவாம், வாசலில் இருந்தபடி காவல் காக்கக் கட்டளையாம். வீட்டுக்குச் சம்பந்தப் பட்டவரைத் தவிர வேறு யாரையும் அனுமதிக்கப் போவதில்லையாம். சற்று முன்பு கூட பெரிய ரகளை நடந்தது. மேனேஜர் மாதிரி ஒரு ஆள் வந்தபோது அவன் சட்டையை உலுக்கிக் கேள்வி கேட்டார்கள். அவன் முகத்தில் காறித் துப்பினார்கள். அவன் காரில் பழிக்குப் பழி என்று ஆணியால் எழுதினார்கள்.

இரண்டு நாள் கழித்து அது கணேசன் வீடு என்று தெரிவதற்காக வாசல் பக்கத்து ஜன்னலில் ஒரு சிகப்புக் கொடி கட்டப்பட்டது கோபாலனிடமிருந்து ஒரு கசங்கிய தாளில் செய்தி வந்தது.

"உங்கள் துக்கத்தைப் பகிர்ந்து கொள்ளச் சக்தியில்லை. தற்போது அதற்கு வாய்ப்பில்லை. தோழர்கள் எல்லா உதவிகளையும் செய்வார்கள். சீக்கிரமே சந்திக்கிறேன்" கடிதம் ரகசியமாய் வந்தது. கடிதம் கொண்டு வந்தவன், கணேசன் சாரைக் கொன்ற கேஸ் கோபாலன் மீது ஜோடிக்கப்பட இருக்கிறதென்றும் போலீஸ்



விசாரிக்க வந்தால் எந்தக் கேள்விக்கும் பதில் சொல்ல வேண்டாமென்றும் சொன்னான். போலீஸ் தங்களை இந்த வீட்டு வாசலிலிருந்து அப்புறப்படுத்த முயற்சிக்கிறதென்றும் சொன்னான். போலீஸ் வந்தால் தோழர்களுடைய உதவி இந்தக் குடும்பத்திற்குத் தேவையென்று சொல்லுமாறும் வேண்டிக் கொண்டான்.

கடிதம் வந்த அரை மணிக்குள் வீட்டுக் கொல்லைப் புறமாய்ச் சுவரேறிக் குதித்து ஒரு மனிதர் வந்தார். வீடு முழுவதும் திபுதிபுவென்று தொழிலாளிகள் சூழ்ந்து கொண்டார்கள். வழுக்கைத் தலையும் விளிம்பில்லாத மூக்குக் கண்ணாடியும் இனிமையான முகமுமாய் இருந்தார். மலையாளம் கலந்த உச்சரிப்புடன் பேசினார். குழந்தைகள் தலையை வருடிக் கொடுத்தார். கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலத் தலைவர் என்று அறிமுகப்படுத்திக் கொண்டார் "கோபாலன் இந்தக் காரியத்தைச் செய்திருப்பான் என்றா நினைக்கிறீர்கள்?" என்று கேட்டார். சாவித்திரி இல்லையென்று தலையசைத்தாள்.

"உங்களைக் கோபாலனுக்கு எதிரான சாட்சியாய்த் திருப்ப போலீஸ் முடிவு செய்திருக்கிறது. மேனேஜ்மெண்ட் உதவியை அது சுமந்து கொண்டு வரப்போகிறது மறந்து விடுங்கள். கோபாலன் விடுதலையாகும்வரை உங்கள் குடும்பத்தைக் கட்சி கவனித்துக் கொள்ளும். யூனியன் பண உதவி செய்யும். கோபாலனை அழித்தால் யூனியனை அழிக்கலாம் என்பது அவர்கள் முடிவு. ஆயிரக்கணக்கான குடும்பங்களைப் பட்டினி போடத் தீர்மானம். அமைதியாய் இருங்கள். ஒரே வாரத்தில் கோபாலன் ரிலீஸ் ஆகிவிடுவான். கோர்ட்டில் பேப்பர்கள் தாக்கல் செய்யப்பட்டு விட்டன. பல குடும்பங்களின் நன்மையை உத்தேசித்துக் கேட்கிறேன். தயவு செய்து மௌனமாய் இருங்கள்

அவர் வெளியேறின ஐந்தாவது நிமிடம் போலீஸ் நுழைந்தது. நாலைந்து போலீஸ்காரர்கள் அவனுக்குச்

சல்யூட் செய்தது வியப்பாய் இருந்தது. சாவித்திரி எதை
யும் வாங்க மறுத்து விட்டாள். கணேசன் பழக்கமாய்
உட்காரும் ஈஸிசேரில் அமரப் போன போலீஸ் இன்ஸ்
பெக்டரைத் தடுத்து நிறுத்தினாள். போலீஸ் முதல்
அறிக்கை ரிப்போர்ட் வேண்டுமென்ற கோரிக்கைக்
கடிதத்தைத் தோழர்கள் சொல்லியபடி நீட்டினாள்.
அந்த போலீஸ் இன்ஸ்பெக்டர் அவளை விழித்து முறைத்
தான். ''இவனுங்களை 'நம்பியா காகிதம் கொடுக்கறே.
அய்யர் வூட்டுப் பொண்ணா கெட்டிக்காரியா இருப்
பேன்னு நினைச்சேன். உன் தலைவிதி மாட்டிக்கினு
சாவு.

இடது கையால் கடிதத்தைப் பறித்துக் கொண்டு
வெளியேறினான். எதிர் வீட்டில், பக்கத்து வீட்டில் ஏறி
இறங்கினான். அந்த வீட்டுக்காரர்கள் புகார் கொடுத்
திருப்பதால் ஐந்து நிமிடத்தில் வாசலில் கூடியிருக்கிற
தொழிலாளிகள் கலைய வேண்டுமென்று உத்தர விட்
டான். சாவித்திரி விடுவிடுவென்று போய் வாசற் கதவை
அகலத் திறந்தாள். குழந்தைகளை அழைத்துக் கொண்டு
தெருவில் நின்று கொண்டிருந்த நாற்பத்தேழு தோழர்
களும் வீட்டிற்குள் நுழைந்தார்கள்.. அசையாமல் நின்று
கொண்டார்கள். தெருவும் சுற்றுமுள்ள வீடுகளும் நிசப்த
மாய்—நின்று போலீஸை வேடிக்கை பார்த்தன

கோபாலனிடமிருந்து கடிதம் கொண்டு வந்தவன்
மட்டும் வாசற்படியில் நின்றபடி போலீஸ் இன்ஸ்பெக்டர்
ரைப் பார்த்துக் கூறினான், ''பெருமாளு, உனக்கு என்
கையாலதாண்டா சாவு'' அந்தப் போலீஸ் இன்ஸ்
பெக்டரைப் பார்த்துக் கூறினான், அந்தப் போலீஸ் இன்ஸ்
பெக்டர் கூவினவனைப் பாய்ந்து இழுத்தான். லத்தியால்
விளாசினான். பூட்ஸ் காலால் மிதித்தான். அடிபட்டவன்
கதறல் சாவித்திரியின் வயிற்றில் சிறிய நெருப்பை
உண்டு பண்ணிற்று. போலீஸ் வேன் புறப்பட்டுப்



போனதும் சாவித்திரி மருந்து பாட்டில்களைத் தேடி
னாள். வராந்தாவில் அடிபட்டவனைச் சாய்த்திருந்
தார்கள். சாவித்திரி வெந்நீரைத் துணியில் நனைத்துக்
காயங்களைத் துடைத்தாள். மருந்து போட்டாள். இந்த
யுத்தத்தில் அவள் எந்தப் பக்கம் சேர்வது என்று தீர்மா
னித்து விட்டாள். குழந்தைகளைத் தவிர வேறு யாரோ
டும் பேசாமல் இருந்தாள். குழந்தைகளை அதைரியப்
படுத்தி விடக் கூடாது என்று தன் துக்கத்தை அடக்கி
வைத்திருந்தவள், ஒரு வாரம் கழித்துக் கோபாலனைக்
கண்டதும் கதறி அழுதாள். கோபாலன் கழுத்து நரம்பு
புடைக்க கண்கள் சிவக்க கைகளை மார்புக்குக் குறுக்கே
கட்டிப் பரட்டைத்தலையும் வெறிப் பார்வையுமாய்
அவளையே பார்த்துக் கொண்டிருந்தான்.

''உங்களுக்குத் துணையா இருக்கணும் உங்களுக்
குப் பலமா இருக்கணும்னு 'வாய்க்கு வாய் சொல்வாளே
அவாளைக் குத்திக் கொல்றப்போ நீங்க காணாம
போயிட்டேளே. தன்னந்தனியே நடுரோட்ல செத்துப்
போயிருக்காளே... என்னால இந்தச் சாவைத் தாங்க
முடியலயே.''

துக்கம் தாளாமல் கோபாலன் நாக்கு அடிவரை
இழுத்து அடைத்துக் கொண்டது. இது இனி வெறும்
ஸ்ட்ரைக் இல்லை, இது போர்! காசு கொடுத்தால் முடி
கிற காரியமில்லை. காவு 'கேட்கிற கேள்வி! இதை
அணையவிடப் போவதில்லை. உடம்பு முழுவதும் ரத்த
விளாறானாலும் சரி. உயிரே போனாலும் சரி. இப்படி
ஒரு துக்கத்தைக் கவிழ்த்து விட்டவனை இனி தூங்க
விடப் போவதில்லை. பளிச்சென்று கோபாலனுக்கு
மனசுள் இருந்த குழப்பம் நீங்கி என்ன செய்ய வேண்
டும் என்கிற தெளிவு ஏற்பட்டுவிட்டது. கையில் நெருப்
புச் சட்டியுடன் 'அக்கினிக் குஞ்சொன்று கண்டேன்'
என்று ஆனந்த நடமாடும் ஒரு ஆள் ;கோபாலன் மனசுக்
குள் தோன்றினான். வெந்து தணிந்தது காடு—என்று

ஆரவாரம் செய்தான் கோபாலன். தோழர்களிடம் கம்பெனிக்கு அருகே ஒரு பொதுக் கூட்டத்திற்கு உடனே ஏற்பாடு செய்யும்படி கூறினான். இந்த நெருப்பை ஊதி ஊதி ஊரை எரிக்காமல் விடுவதில்லை என்று தீர்மானித்துக் கொண்டான்.

## 5

சியாமளி கண்ணாடி முன் நின்று தலையைக் கோதிக் கொண்டாள். அதன் அருகில் நெருங்கி விழியோரம் மை தீட்டிக் கொண்டாள். வாசனைப் பவுடரை முகத்திலும் கழுத்திலும் தேய்த்துக் கொண்டாள். சற்று பின்னே நகர்ந்து வயிற்றுப் பக்கம் புடைவையைத் தழைத்துக் கொண்டாள். புடைவையைச் சற்று மேலே தூக்கி கால் கொலுசு மடிந்திருப்பதை ரசித்தாள் மீண்டும் தலையைச் சீராக்கிக் கொண்டு கதவைத் திறந்தாள். பத்தரை மணி வெயில் முகத்தைத் தாக்கிற்று. முற்றத்து ஈரம் முழுவதும் காய்ந்திருந்தது. வெளியே நகர்ந்து கதவைப் பூட்டிக் கொண்டாள். முற்றத்தைச் சுற்றி வெயில் மேலே படாமல் வீட்டுக்கார அம்மாள் போர்ஷனுக்கு நடந்தாள். பகல் சாப்பாட்டுக்குப் பிறகு தூக்கத்திற்குத் தயாராகிக் கொண்டிருக்கும் கனத்த உருவமுள்ள பெண்மணியிடம் சாவியைக் கொடுத்தாள்.

''நான் தையல் கிளாசுக்குப் போகிறேன் மாமி' அவர் வந்தால் சாவியைக் கொடுங்கோ.''

''யாரு-சியாமளியா, தையல் கிளாசுக்குப் போறையா உன் புருஷன் மத்தியானம் வருவானோ, தையல் கிளாஸுங்கறே, ஊசி நூலாவது வேண்டாமா?''—வீட்டுக்கார அம்மாள் கேள்விகளை அடுக்கினாள்.



''எல்லாம் கிளாஸிலியே இருக்கு மாமி இன்னிக்குத் தவுன் கட்டிங், குழந்தைக்கு ஃப்ரில் வச்ச ஃப்ராக் தச்சிருக்கேன். அவன் பள்ளிக்கூடத்திலேர்ந்து வரதுக்குள்ளே திரும்பி விடுவேன். அவர் மத்தியானம் வரமாட்டார். வந்தா வெயில்ல நிக்க வேண்டாமே. அதுதான் சாவி கொடுக்கிறேன்.''

''வெயில்ல நிப்பானேன், நான் உள்ள கூட்டிண்டு வந்து சாதம் போடமாட்டேனா?''

''நீங்க கூப்பிடுவேள், அவர் வரமாட்டார். வெய்யில்லயே நிப்பார்.''

''வாஸ்தவம், மனுஷன் மகா சங்கோஜி, மாடிலதான் என் மச்சினன் சங்கர் இருக்கானே வேலைக்குப் போகமே, அவனை விட்டுக் கூப்பிடச் சொல்றேன் சைக்கிள் செயின், கம்பெனி கலாட்டா, வெட்டு குத்து, கொலைன்னு எதாவது பேசிண்டு இருக்கட்டும்.''

''இந்த ஸ்டிரைக் முடிய ரொம்ப நாளாகுமா மாமி?''

''யார் கண்டா ஒண்ணுந் தெரியல. அப்பாவியைக் குத்திக் கொன்னுருக்கா அது அழிக்காம விடுமா?''

''நாள் ஆனாலும் ஆகட்டும், நல்லபடியா முடிஞ்சா தேவலாம்'' சியாமளா சிரித்தபடி மெல்ல நகர்ந்து வீட்டின் வாசற்படியில் நின்றாள். படியிலிருந்து திரும்பிமாமி சிரமத்துடன் தரையில் படுப்பதைப் பார்த்தாள். மெல்லப் படியிறங்கித் தோட்டக் கதவை நெருங்கிச் சற்று ஓசைப்படுத்திவிட்டு தோட்டத்துக்குள் இடப்பக்கமாக நகர்ந்தாள். வீட்டைச் சுற்றிப் பின்பக்கம் போனாள். கொல்லைப் பக்க மரப்படிகள் மீது சப்தமில்லாமல் மெதுவாக ஏறினாள். கவனத்துடன் ஏறினபோதும் பளு தாங்காமல் படிகள் கிறீச்சிட்டன. திறந்தவெளி மாடிக்குள் நுழைந்து கொடிக்கயிறுகளுக்குக் குனிந்து முன்பக்கம் எழுப்பியிருந்த ஒற்றை அறையை நெருங்கினாள்.

கதவு லேசாய் திறந்திருந்தது சுற்றுமுற்றும் ஒருமுறை பார்த்து விட்டுச் சட்டென்று நுழைந்து தாளிட்டு கொண்டாள்.

உள்ளே இருட்டாய் இருந்தது. வெளிச்சத்தில் பூத்த கண்களுக்குள் அந்த கும்மிருட்டு வட்டமடித்து கை நீட்டி இருட்டில் துழாவின போது பின்பக்கம் வந்து இரண்டு வலுவான கைகள் சியாமளியின் இடுப்பை வளைத்துப் பிடித்தன. சியாமளி நிம்மதியாய் மூச்சு விட்டாள். அந்தக் கைகள், அவளுக்குப் பழக்கமான கைகள். இடுப்பை வளைத்து வயிற்றில்பதித்த கைகளை சியாமளி வருடிக் கொடுத்தாள், திருந்த இசைக்கத் துடன் உடம்பைப் பின்னுக்குத் தள்ளி கைகளுக்குச் சொந்தக்காரன்மேல் சரிந்தாள். வீணையை மீட்டும்முன் பிருடைகளைத் திருகி தந்தியை முறுக்கேற்றுவது மாதிரி அவன் சியாமளியிடம் சில விஷமங்கள் செய்தான். காதோடு வைத்து சுருதி அறிவது மாதிரி அவள் கன்னப் பக்கம் இழைத்து முத்தமிட்டான். மெல்லக் கவனமாய் வாரிக் கைகளில் ஏந்திக் கட்டிலுக்கு அருகே நகர்ந்து தான் முதலில் அமர்ந்து அவளை மடியில் வைத்துக் கொண்டான். மறுபடியும் பிருடைகளைத் திருகி முறுக் கேற்றுவது மாதிரி விஷமங்கள் செய்தான். மெல்ல அவள் உதட்டருகே குனிந்து ம-ப-ஸா என்றான் சியாமளிக்கு சிரிப்பு வந்தது. அவன் நிதானம் பிடித்திருந்தது. இந்த ஆபத்தான சூழ்நிலையிலும் அவனுள் சங்கீதம் புகுந்தது ஆச்சர்யமாய் இருந்தது. அவனை யாராவது வலுக்கட்டாயமாய்த் தெருவில் நிறுத்தி கன்னம் கன்ன மாய் அறைந்தாலும் அழுது முடிக்கும் போது இந்த மாதிரி ஏதாவது ஸ்வர வரிசையில் முடிப்பானோ என்று தோன்றிற்று. அவன் மெல்ல சியாமளியின் தலையைக் கோதிவிட்டான். வலக்கையினால் கன்னங்களை அழுந்த பிடித்துக் கண்களில் முத்தமிட்டான். மறுபடியும் சியாமளியை ஹிம்ஸை செய்தான். கனமாய்



அவன் காதுக்கு மட்டும் கேட்கும்படி 'மா ஜானகி செட்ட பெட்டகா...'' என்று பாட்டுப் பாடினான். வளைவும் குழைவும் துள்ளலுமாய் சஞ்சாரம் செய்தான். எந்த அசைவுமற்றுக் கிடக்கிற சியாமளியை உற்றுப் பார்த்தான் சட்டென்று பாட்டை நிறுத்திவிட்டு அவளை இறுக்கிக் கொண்டான்.

''இன்னிக்கு ஏன் இது ஒண்ணும் பேசாமல் இருக்கு- என் மேலே ஏதாவது கோவமா? என் பாட்டு பிடிக்க லையா?''

—சியாமளி விழிகளை அகலத் திறந்தாள். இப்போது இருட்டு பழக்கமாயிற்று. அவன் ஸ்பரிசம் மாதிரி கண் ணுக்கு இருட்டு இதமாய் இருந்தது. முதலில் அந்த அகல மான தோள்கள்தான் கண்ணுக்குப் பட்டது. உறுதியான பிடரி வழியும் தலை, குழந்தை முகம், பெரிய கண்கள், வளைந்த உதடுகள், பளீரென்றபற்கள். மீண்டும் அவளை மடியில் தளர்த்தி, விரலால் வருடி, இடக்கையால் இடுப்பை வளைத்து, வலக்கையால் உடம்பு முழுவதும் நீவி, வீணை வாசிக்கிற பாவனையில் விரல்கள் மேலேறி அங்கங்கே அழுந்தி ''மாஜானகி'' என்று ஸ்வர வேகத் துடன் மீண்டும் அடிவயிற்றில் வந்து நின்றது. சியாமளி கிளர்ச்சியுடன் எழுந்து அவனைத் தழுவிக் கொண்டாள். மனசு முழுவதும் ஒரு குதூகலம் பொங்க அவனுக்காக ஆயத்தமானாள்.

மேலும் கீழும் இடதும் வலதும்
சிறிதும் பெரிதும் உருவும் அருவும்
எதுவுமற்றுப் பரவிப் பெருகும்
காற்றைப் போல, காற்றைப் போல.
சேர்ந்து பிணைவோம் காற்றைப் போல.
முரண்டி தேய்த்து மேலே எழும்பி
வானில் பறந்து பூமியில் பாய்ந்து
திசைகள் அற்ற காற்றைப் போல

தேகம் அற்ற காற்றைப் போல
மேலும் கீழும் இடதும் வலதும்

இவனால் எப்படிப் பாட்டுப் பாடமுடிகிறது? இவனால் எப்படி இவ்வளவு சந்தோஷமாய் இருக்கமுடிகிறது? கொஞ்சம்கூட குறுகுறுப்பு இல்லாமல் மலர மலர எப்படிச் சிரிக்க முடிகிறது? இவன் இன்னமும் குழந்தையோ சின்னப் பையன் தானோ? இத்தனை வேகமாய் ஈடுபடுபவனை எவ்விதம் பையன் என்று அழைக்க முடியும் விரல்களை அகலப் பிரித்தும் முழுக்கப் பற்ற முடியாத புஜமும் பாறாங்கல் திண்மையும், மூச்சையே நிறுத்தி விடுகிற இறுக்கமும் காட்டுகிறவன் பையனா ஆளா? இவன் மனசும் உடம்பும் சம்பந்தமில்லாமல் வளர்ந்தவனோ, அதனால்தான் 'மா ஜானகி' என்று பாட்டுப்பாட முடிகிறதோ? கட்டிப்பிடிப்பவளையெல்லாம் சீதை என்று வர்ணிப்பது புத்திசாலித்தனமா? பேதமையா?

இவன் பேதமை கிடக்கட்டும்; என் புத்தி எவ்விதம், உடம்பு முழுவதும் இறகால் வருடின மாதிரி ஒரு வேகம் பரவுகிறதே இது எதனால்? உடல் கூட்டுக்குள் சதா ஒரு அனல் கங்கை இருக்கிறதே ஏன்? விழிகளைச் சொருகிக் கொண்டு சினிமா பாட்டு கேட்கிறேனே, இதன் விளைவா பகல் முழுவதும் கண்ணாடி எதிரே நின்று என்னையே ரசித்துக் கொள்கிறேனே? அந்தக் கோளாறா? இத்தனை அழகும் புத்தியும் இருந்து என்ன பிரயோஜனமென்று கேட்டுக்கொண்டேனே? அது தவறா?

மனசு நிறைய, நிஜம்மா என்னைப் பாராட்ட ஆள் இல்லையேன்னு ஏக்கம் வந்ததே, அங்கே சறுக்கினேனோ ஆள் கிடைக்காதான்னு அலைஞ்சுட்டேனோ? யாருக்கும் தெரியாமல் எதிர் வீட்டுப் பூவைத் திருடி தலைலே வச்சுண்டேனே எட்டு வயசில், அந்த புத்தியோ.

''ஏதுடி பூ?''

CPL 598078



''எதிர் வீட்டு அம்மா கொடுத்தா.''

598078

''ஏதுடி பூ?''

''உங்க வீட்டுலதான் பூ பூக்குமா, இது எங்க வீட்டு கொல்லைப் பக்கம் பூத்தது''—பட்டென்று அங்கங்கே பொய் சொல்லிப்பேசுகிற புத்தி, திமிர் இன்னும் தொடருகிறதா? வீட்டுக் கொல்லையில் ஆளுரச் செடி இருக்கிறது. எப்போதாவது அபூர்வமாய்ப் பூக்கும். கட்டிக் கொண்ட ஆளும் உயரம்தான், எப்பவாவது சிரிக்கும்.

கொல்லென்று இலையே தெரியாமல் பூக்கிற செடி, இப்படி — கவிதையாய் காம்போதியாய் ஆராதிக்கிற ஆள் இல்லாமலே போய்விட்டது. கம்பெனிக்குப் போகாமல் வேறு பொழுதுபோக்கு இல்லாமல் முற்றத்துக்கும் மாடிக்கும் அலைந்து கொண்டிருந்தவனை கண்ணி வைத்துப் பிடித்துப் போடச் சொல்லிற்று.

894.8113 BAL

போதும் போ என்று அவனைப் பிடித்துத் தள்ள மனசில்லாமல் தவிக்கிறது. தொட ஜ்வாலை பறக்கிறது. தனியே படுத்துக் கொண்டு இருக்கும் போதுகூட இவன் கனமாய் மேலே அழுந்துவது மாதிரி தோன்றுகிறது. விடிந்ததும் ஓடிப்போய் இவனுக்கு குட்மார்னிங் சொல்ல பரபரக்கிறது. குனிந்து வணங்கி மிருதுவாய் புன்முறுவலோடு இவன் பதிலுக்கு குட்மார்னிங் சொல்லுகையில் உலகத்தையே ஜெயித்த மாதிரி சந்தோஷம் வருகிறது.

இந்தச் சந்தோஷம்தான் காதலா? யாரோ ஒருவன் எனக்காகக் காத்துக் கொண்டிருக்கிறான் என்கிற பெருமை, எதிரே தடுமாறுகிறான் என்கிறதில் கர்வம் வருகிறதே இதுதான் காதலா?

சின்ன விழிகளில் நீல சமுத்திரம்
கொண்டு அடக்கிவிட்டாள்—என்னை
இங்கு நிறுத்தி விட்டாள்,

[illegible] பெறப்பட்டது

என்னமாய்ப் பாடினான் அடிக்குரலில். லேசாய் பிசிர் தட்டி காதோர ரோமங்களை நீவிக்கொண்டு, கட்டிலில் சம்மணமிட்டபடி உத்தரீயமும், குண்டலமும் போட்ட ராஜபார்ட் கவிஞன் மாதிரி, சட்டென்று சந்தோஷத்தை எவ்வளவு அழகாய் பாடினான். மறுபடி பாடச் சொல்லிக் கேட்போமா? உலுக்கி நிறுத்துவோமா?

நான் இமையென்னும் கரைதனில்
விழி ஒளி அலைகளில் காலை நனைப்பவனோ
வெறும் காற்றை அலைபவனோ

அந்தப் பாட்டு முழுக்கத் தனக்கும் மனப்பாடமாகி விட்டது. பத்துமுறை பாடியிருப்பானா. உன்னைப் பற்றின பாட்டு என்கிறதால் படிந்து விட்டதா? விழியோரம் எப்போதும் நிற்கிற ஆண். இதுதானே என் ஆசை!

உன் கண்களில் தங்கிய நீல சமுத்திரம்
என்னுள்ளும் பொங்குதடி
இயற்கை ஏளனம் செய்யுதடி

நம் உறவு இயற்கையாய் இயல்பாய்உடையது அல்ல என்கிறானா, தவறு என்கிறானா, ஆனால் அவனுக்குள்ளேயும் சமுத்திரம் பொங்குகிறதாமே.

நான் தனியொரு பாதையில்
உணர்வெனும் கூதலில்
யாத்திரை செய்பவனோ—தளர்ந்து
சாத்திரம் சொல்பவனோ

பின்னால் இந்த உறவை ஏதாவது சாத்திரம் காட்டி முறித்துக் கொள்ள நேரிடும் என்பதைக் குறிப்பிடுகிறானோ. 'உணர்வெனும் கூதல்' என்ன அழகான வரி. இவன் குரலில் கேட்டதும் பளீரென்று ஒரு வெட்கம்



கலந்த உணர்வு வெட்டுகிறதே. நடுக்கிப் போடுகிறதே. அதுதானா இது? என்னை மாதிரி இவனுக்கும் குழப்பம் தானா?

சங்கரா—நான் கிழவியாகி நரைச்சு, கண் மூழ்ந்சு சாகறச்சேகூட இந்தப் பாட்டு மறக்காது எனக்கு. உனக்கு மறக்குமோ என் முகம். என் நினைவு, இந்தக் கவிதை இந்த சந்தோஷம். சங்கரா உனக்கு மறக்குமோ?

சட்டென்று தேர்க்காலில் நசுங்கின நாய்க்குட்டியாய் உடம்பு முழுக்க ஒரு அழுத்தம் விழுந்து இறுகித் திணறி அசைந்து கொடுத்து குமுட்டி நெருப்பில் வாளி ஜலத்தை வீசி அடித்தாற் போல சட்டென்று வெப்பம் முழுவதும் லடிந்தது. ஆவியாக கண்களுக்குள் சாம்பல் பறக்க எதுவும் தோன்றாமல் வெறித்தபடி கிடக்க...

தூரத்தில் எங்கேயோ யார் வீட்டு ரேடியோவோ பகல் ஒலிபரப்ப ஆரம்பமாகிறதை தம்பூர் சுருதியாய் பரவிப் பரவி அறிவித்துக் கொண்டிருக்க, சம்பந்தமில்லாமல் சின்ன வயசில் பூஜை அறையில் பாடும் பாட்டு மனசுக்குள் ஓடிற்று. இங்கு வருக அரசே வருக முலையுண்க வருக. மலர் சூடிட வருக, இங்கு வருக, என தாருயிர் வருக...சியாமளி சந்தோஷம் தாங்காமல் விசும்பி அழத் துவங்கினாள்.

## 6

"இன்னிக்கு என்ன ப்ரோக்ராம் சாயங்காலம்?"

"மீட்டிங் போகணும்."

"என்ன மீட்டிங்?"

"யூனியன்"

"எங்க."

''கம்பெனி வாசல்ல, கேட் மீட்டிங்.''

''திரும்பியும் அங்கே போய் நிப்பானேன்? அதான் போலீசையும் ரௌடியையும் வைச்சு, அடிச்சுத் துரத்தினாளே?''

''அதுக்காக?''

''ஆபத்தில்லையா?'

''எனக்கு மட்டும்தான் ஆபத்தா? பத்தாயிரம் பேர் கூட்டம். ஆபத்துன்னா அத்தனை பேருக்கும்தான் வரும். எல்லோருக்கும் உண்டானதுதான் எனக்கும்...''

''எல்லோருமா குத்துப்பட்டா-யாரோ ஒருத்தனை அதுவும் ஒரு அப்பாவியை—குத்திக் கொன்னுடலையா அவர் பேர் என்ன, செத்துப் போனாரே!''

''கணேசன்.''

''எதுக்கு வீண் வம்பு. பேசாம வீட்டோடேயே இருக்கலாமே.''

''முதல் மீட்டிங், முக்கியமான மீட்டிங், லீடர்ஷிப்ல சேஞ்ஜ் வேற வந்திருக்கு. போய்தான் ஆகணும். என்ன கதியாறது கம்பெனின்னு தெரிஞ்சுக்க வேண்டாமா?''

''ஒண்ணும் வேண்டாம், சொல்றதைக் கேளுங்கோ.'' சங்கரன் பார்த்தான், விழிகளை உயர்த்தி சியாமளியை ஊடுருவிப் பார்த்தான். சியாமளி தாழ்த்திக் கொண்டாள்.

''சரி உங்க இஷ்டம். நான் யார் தடுக்க?'' சங்கரன் மெல்லச்சிரித்தான். சற்றுத் தொலைவில் சுவரோரம் உட்கார்ந்திருந்த சியாமளியை எட்டி அவள் மூக்கை மெல்லத் திருகினான்.

இப்போது மாடி அறையின் ஜன்னல்கள் பரக்கத் திறந்திருந்தன. கதவுகள் விரிந்து மூலையில் சாத்திக் கொள்ளாமல் இருக்க கற்கள் வைக்கப்பட்டுப் படுக்கை விரிப்புகள் சுத்தமாய் நீவப்பட்டு தலையணைகள்



அடுக்கப்பட்டு இயல்பாய் இருந்தன. சங்கரன் ஈஸிசேரில் உட்கார்ந்து மடியில் பேப்பரைப் பிரித்து வைத்துக் கொண்டிருந்தான். இறந்த வெளிக்கொடியில் உலர்த்தியிருந்த உடைகள் சியாமளிக்கு அருகே மடித்து வைக்கப்பட்டிருந்தன. சியாமளி தன் தோளைச் சுற்றிப் புடைவையைப் போர்த்திக் கொண்டிருந்தாள்.

''துணியை எடுத்துண்டு போகலாம்னு நேர மேல வந்தேன் மாமி, வெளியே வெயில் பொசுக்குகிறது இங்க உட்கார்ந்து மடிச்சேன். உங்க மச்சினர் 'கம்பெனியைப் பத்தி பேசிண்டிருந்தார் சாவி தரேளா-காபிக்கு நேர மாச்சு.''

தப்பித்தவறி சங்கரனின் மன்னி மேலே வந்தாலும்—பதில் தயாராய் இருந்தது. நான் இவனுக்குத்தான் காபி கொண்டு வந்தேன். வேணும்னா ஆளுக்குப் பாதி குடிங்களேன். சங்கரா! அவ வெயில்ல வந்திருக்காடா, அவளுக்கு ஒருவாய்கொடு—மன்னி வெகுளியாய் பேசுவாள் என்ற நம்பிக்கை இருந்தது. சியாமளி மடித்த துணியை மறுபடி பிரித்து நீவி மடித்தாள். தன் ஒவ்வொரு அசைவையும் உற்றுப் பார்த்துக் கொண்டிருந்த சங்கரனைப் பார்த்துச் சிரித்தாள்.

''என்ன பார்க்கறேள்?''

''எதுக்கு அழுதே அப்போ?'' சங்கரன் குனிந்து அவள் முகத்துக்கெதிரே தன்னை நிறுத்திக் கேள்வி கேட்டான்

''ப்ச்சு...தெரியலை.''

''தெரியாம ஒரு அழுகையா? இல்லை என்கிட்ட சொல்ல இஷ்டமில்லையா?''

''இரண்டும்தான்.''

''இரண்டும்தான்னா என்ன அர்த்தம்?''

''எதுக்கு அழுதேன்னு தெரியலை. இதுக்காவான்னு என்னைக் கேட்டுத் தெரிஞ்சிக்க 'எனக்கே இஷ்டமில்லை.''

''ஏன் அப்படி?''

''தெரிஞ்சுண்டு என்ன பண்ணப்போறேன். அழு வரைக்கும் அழு, சிரிக்கிற 'வரைக்கும் சிரின்னு எனக்குள்ளேயே ஒதுக்கியாச்சு.''

''யப்பா பெரிய பிலாஸபியா இருக்கே, நானும் கத்துக்கிறேனே?''

''ம்க்கும்...பிலாஸபி என்கிட்டதான் கத்துக்கணும்.''

''இத்தனை கத்துக் கொடுத்தியே—பிலாஸபியும் சொல்லிக் கொடுத்தா என்ன?''

சியாமளி சட்டென்று பயத்துடன் அவனை உற்று நோக்கினாள். கேலி செய்கிறானா?

''ஏன் இப்படி பயந்து முழிக்கிறே! இந்த ஸ்நேகம், அன்பு, ஸெக்ஸ் நீ கத்துக்கொடுத்ததுதானே, இதெல்லாம் இத்தனை சுலபமா எல்லாருக்கும் கிடைக்குமா?''

கேலி. கேலி. கேலிதான் செய்கிறான். 'சங்கரா ப்ளீஸ் கேலி பண்ணாதே என்னை அல்பமா நினைச்சுடாதே, என்னாலே தாங்கமுடியாது. ப்ளீஸ் நீ கேவலப்படுத்தினா என்னால சகிச்சுக்கவே முடியாது ப்ளீஸ்'' வார்த்தைகள் தொண்டைக்குள் சிக்கிக் கொண்டன.

''சியாமளி இது சரியோ, தப்போ, நல்லதோ கெடுதலோ, இந்தப் பதினைஞ்சு நாள் அனுபவம் எனக்கு உலகமே மாறிப்போயிடுத்து. வெட்கமில்லாம சொல்றேன் எனக்கு என்னமோ உன்னைப் பார்த்தா தேவதை மாதிரி படறது; விசித்திரக் கதைகளிலே வருமே, கைல மந்திரக்கோல் வச்சிண்டு வெள்ளைக் கவுனும்வைரக்கிரீடமுமா. அந்த மாதிரி படறது; உனக்கென்ன வரம் வேணும்னு கேட்கிற தேவதை மாதிரி ''

சியாமளி இல்லையெனத் தலையசைத்தாள் சரி நீ உனக்கு தேவதையா இல்லாத இருக்கலாம், உன்னை



ஏதோ ஒரு ஏக்கம் பிடிச்சு என்கிட்டத்தள்ளி இருக்கலாம். இப்பேர்ப்பட்ட பாவம் பண்றோமே—இது எங்க போய் முடியுமோன்னு ஒரு பயம் நிரந்தரமா வயித்துக்குள்ள இருக்கலாம். நாலு பேருக்குத் தெரிஞ்சா நம்ம கதி என்னன்னு தோணாம போகாது தோணும்'' சியாமளி ஆவலுடன் அவன் பேசுவதைக் கேட்டுக் கொண்டிருந்தாள்.

''மறுபிடி சொல்றேன் சியாமளி. இது நல்லதோ கெடுதலோ சரியோ, தப்போ அப்படி எங்கேயாவது மாட்டிண்டா எனக்குத் தெரியாதுன்னு நான் ஓடவே மாட்டேன். நான் ஒன்றுமே செய்யலை இவதான்னு கை நீட்டி உன்னைக் காமிக்க மாட்டேன். ஊர் மொத்தம் கூடினாலும் நானும்தான் காரணம்னு சொல்வேன் 'ஜலல் யூ'—புத்தி பூர்வமா, மனசு பூர்வமா நாம இரண்டு பேரும் சரியான ஜோடி! லீகலா சேர முடியாத ஜோடி இப்படி மாட்டிக்கறதுங்கறதும் சாதாரண விஷயம் இல்லை. உறவு மொத்தமும் கட்டை எடுத்துண்டு வரும். கத்தி கபடாவோட கலாட்டா பண்ணும் ஊர் முழுக்க நின்று பேசிப் பேசிச் சிரிக்கும். உசிரோடு கொல்லும். அப்படி மாட்டிக்கிறதுக்கு முன்னாடி நாம யோசனை செய்யலாம் இந்த உறவு எத்தனை நாள்? இதுக்கப்புறம் என்ன? உன் மனசுல ஏதாவது பட்டா இப்ப சொல்லு? இது இன்னும் எத்தனை நாள்?''

சியாமளி சுவரில் தலையைச் சாய்த்து எங்கேயோ வெறித்துக் கொண்டிருந்தாள். இவனிடம் எங்கேயோ சின்னதாய் அகல் விளக்கு மாதிரி ஒரு நல்ல குணம் இருக்கிறது என்று நினைத்துக் கொண்டாள்.

அவன் மறுபடியும் அவள் எதிரே குனிந்தான்.

''எங்கேயாவது ஓடிப்போயிடலாமா?'' ரகசியமாய்க் கேள்வி கேட்டான்.

''குழந்தை இருக்கே''

"அதையும் கூட்டிண்டு போயிடலாமா?"

சியாமளி பதில் சொல்லவில்லை. மறுபடி உடை களைப் பிரித்து நீவி மடிக்கத் துவங்கினாள். "பெண் குழந்தையைக் கூட்டிக் கொண்டு எங்கே ஓடுவது, ஓடிப் போய் என்னமாய் வாழ்வது? என்னமாய் வளர்ப்பது?"

"இது சரியா வரும்னு தோணலை இல்லையா?" சியாமளி அவனை வெறிக்கப் பார்த்தாள்.

"பதில் சொல்லு சியாமளி."

சியாமலி ஆமென்று தலையசைத்தாள்.

"ஓகே. அப்ப இன்னொன்னு செய்யலாம். இத் தோட எல்லாத்தையும் நிறுத்திடலாம். இதுவரைகொண் டதும், கண்டதும் போறும்னு நிறுத்திடலாம். ஒரு சின்ன ஈகோ தீர்ந்து போச்சுன்னு வச்சிக்கலாம். யாருக்கும் தெரியாம ரகசியமாக மனசு மூலைல ஒதுக்கி வச்சு வாழ் நாள் பூராவும் உள்ளுக்குள்ளேயே ஒரு திருட்டுச் சிரிப்பு சிரிச்சிண்டிருக்கலாம் ஆனா, இந்த க்ஷணம் தீர்மானம் பண்ணிடணும் இனிமே இது வேண்டாம்னு.

சியாமளி சட்டென்று முகத்தைப் பொத்தி அழத் துவங்கினாள். சங்கரன அயர்ச்சியுடன் ஈஸிசேரில் சாய்ந்தான்.

வெளியே பகல் காக்கைகள் குமுறிக் கொண்டிருந் தன. தென்னைமரம் சலசலவென்று காற்றுவழியே யாருக்கோ செய்தி அனுப்பிக் கொண்டிருந்தது. ஒற்றை மாவிலைச் சருகு ஓசையெழ மொட்டை மாடியில் நகர்ந்தது. குருவிகள் ஒன்றையொன்று துரத்திக் கொண்டு அறைக்கு நடுவே ஓடி மறைந்தன. மேலே தளத்தில் சின்ன சிலந்தி ஒன்று தனியே அறுந்த இழையை வயிற்றில் பரபரவென்று தேய்த்துப் பின்னிக் கொண்டி டிருந்தது.

"இப்ப என்ன பண்ணணும்ங்கறே சங்கர்?"



"நீ சொல்லு."

"சட்டுன்னு நிறுத்திட முடியுமா நம்மால?"

"முடியும் என்னால் முடியும். நிஜம்மாவே நாம ஒருத்தரை ஒருத்தர் நேசிச்சா முடியும்."

"எனக்குப் புரியலையே?"

"லவ்ங்கறது ஒருத்தர் கழுத்தை ஒருவர் கட்டிண்டு தொங்கறது இல்லை, ஒருத்தருக்கொருத்தர் உதவி செய் யறது."

"நிறுத்தறதுதான் உதவின்னா இதை முதல் நாளே செய்திருக்கலாமே?"

"அது மறக்கறதாதான் ஆகியிருக்கும். இதை வெளிப்படுத்தினவா, அவமானப்பட்டுச்சிறுத்துப்போகும் படியா ஆகியிருக்கும்."

"இத்தனை நாள் அனுபவிச்சிட்டு இப்படி திடீர்னு தட்டிக்கழிச்சா...அது..."

"ஸ்டாப் இட். அசிங்கமா பேசாதே, அனுபவம்ங் கறது இரண்டு பேருக்கும் பொதுன்னு புரிஞ்சிக்கோ. இந்த சுகம்ங்கறது உனக்கு ஏற்படதுன்றதை ஒத் துக்கோ. நாம வியாபாரமா பண்ணினோம் சியாமளி. ப்ளீஸ் பி கிளியர்"

சியாமளிக்குக் குழப்பம் அதிகமாயிற்று. ஏமாற்று கிறானோ என்று தோன்றிற்று. ஆண்கள் ஆண்கள் ஆண்கள் இந்த ஆண்கள் அத்தனைபேரும் இப்படித் தான் என்று கோபம் பொங்கிற்று. பொங்கின வேகத்தில் பின் வாங்குதலை செய்பவர்கள். 'சரி வா இந்த க்ஷணம் நான் தயார், என்று கிளம்பினால் இவன் என்ன செய் வான். நாலு நாள் பொறு என்று பதில் சொல்வானோ, நாலு நாள் கழித்து இன்னொரு முறை நன்னா யோசனை பண்ணு என்பானோ, என்னைக் குழப்பத்தில் ஆழ்த்தி

அதையே சாதகமாக்கி—ச்சீ இவன்கிட்டேபோய் அசிங்க பட்டேனே...

''என் மேல கோவம் கோவமா வருது இல்லைய சியாமளி.'' மனசைக் கண்களால் படிக்க முயற்சி செ கிறான், ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்.

''சியாமளி உன் கண்ணுல ஏன் இவ்வளவு அவநம் பிக்கை? வெறும் கனாவோட மட்டும் காலம் தள்ள முடி யாதுன்னு உனக்கு ஏன் புரியலை? கனா இல்லாத வாழ் கையே கிடையாது. கனவு சுகம்தான். சுயநினைவும் வேணும். சுயநினைவோட இருக்கிறபோதுதான் சு மான கனா சாத்தியமாகும். பைத்தியத்துக்கு நல்ல கன வராது தெரியுமோ? நாம தீர்மானமா ஒரு முடிவுக்கு வர்றது நல்லது சியாமளி'' சங்கரன் எழுந்து நின்றான், ஆணியில் மாட்டியிருந்த சட்டையை எடுத்து மாட்டிக் கொண்டான். ''உடனே முடிவுக்கு வர்றதும் நல்லது.''

சியாமளியும் மடித்த துணிகளை மார்போடு அடக் கியபடி எழுந்து நின்றாள். அவனிடம் நெருங்கிய மு வாயில் முத்தமிட்டாள். தீர்க்கமாய் அவன் கண்களை நோக்கினாள்

''நாம ரெண்டுபேரும் ஓடிப்போயிடுவோம்'' என் றாள்.

சங்கரன் முதுகுத்தண்டில் சில்லென்று ஒரு நரம்பு அதிர்ந்து அடங்கியது. லேசாய் வாயைப் பிளந்தபடி அவளை வியப்புடன் பார்த்தான்.

''முதல்லே நீங்க மீட்டிங் போயிட்டு வாங்கோ அப் புறம் பேசுவோம்'' அவன் பதிலுக்குக் காத்திராமல் மெல்ல நகர்ந்து முற்றத்து வெளியைத் தாண்டி மரப்படி கள் வழியே கீழே இறங்கினாள். இதுவரை தனக்குத் தெரியாத ஒரு சியாமளியைத்தான் இனிப் பார்க்கப் போகிறோம் என்று சங்கரன் மனசுக்குப் பட்டது.



கண்ணாடி எதிரே நின்று தலைவாரிக் கொள்கை யில் 'நீ உருப்படப் போறதில்லே' என்று தன் பிம்பத் தைப் பார்த்துச் சங்கரன் சபித்துக் கொண்டான்.

# 7

''காம்ரேட்ஸ்'' கோபாலன் பெரும் குரலெடுத்துக் கூவினான். கூட்டம் அந்தக் குரலில் இருந்த அழைப்பை ஒரு கணம் அமைதியாய் வாங்கிக்கொண்டது. மறுகணம் ஓவென்ற கூச்சலுடன் அதை அங்கீகரித்தது. ''காம்ரேட்'' எப்பேர்ப்பட்ட உச்சரிப்பு அது எல்லா தேசத்துக்கும் சொந்தமாகிவிட்ட வார்த்தை அது. எந்தப் பாஷையிலும் மொழி பெயர்க்க முடியாத வார்த்தை அது எல்லா பாஷையும் ஸ்வீகரித்த சொல் அது. உலகனைத்தும் பரவி உருவம் மாறாது. அர்த்தம் மாறாது. த்வனி மாறாது புழங்கப் பட்ட மந்திரம் அது. அத்தனை பேரும் வானை நோக்கி முஷ்டியை உயர்த்தினார்கள். அந்தச் சொல்லுக்கு உண்டான சின்னம் அதுதான் என்று உணர்ந்திருந் தார்கள். காம்ரேட் என்று அழைத்ததற்காகச் சந்தோஷப் பட்டார்கள். அந்த வார்த்தைக்குத் தாங்கள் முழு இலக் கணமாய் இருக்க ஆசைப்பட்டார்கள்.

கோபாலன் கையமர்த்தினான். கூட்டம் கீழ்ப்படிந் தது. மந்திரம்போல் வார்த்தைகளைத் தூவினான். கூட்டம் செவி மடுத்தது.

''நான் உங்களுக்கு ஒரு கதை சொல்ல விரும்புகின் றேன்! உங்களுக்குத் தெரிந்த கதையை இதுவரை தெரியாத அர்த்தத்தில் சொல்லப் போகிறேன். 'ஒரு குரங்கு தனக்குச் சொந்தமான மரத்திலே வசித்து வந்தது. அந்த மரத்தின் உச்சியில் பெரிய தேன்கூடு இருந்தது. தேனீக்கள் தேன் கூட்டை வளப்படுத்திக் கொண்டு இருந்தன. கூடு வளப்பமானவுடன் மரம்

தனக்குச் சொந்தமென்பதால் தேன்கூடும் தனக்குச் சொந்தம் என குரங்கு எண்ணியது. குரங்கின் பாஷை தேனீக்களுக்குத்தெரியவில்லை. அதைப்பற்றி யோசிக்க நேரமில்லை. கீழே சொட்டும் தேன் துளிகளைக் குரங்கு கையிலேந்தி நக்கித் தின்பதை ஆட்சேபிக்கவில்லை. தேனீக்கள் எப்போதும் போல் சுறுசுறுப்பாய் இருந்தன.

நக்கின ருசி மண்டைக்குள் ஏறிக் கூட்டில் கை வைக்கத் துவங்கியது குரங்கு. கொட்டின குழவிகள். சட்டம் பேச ஆரம்பித்தது குரங்கு. சட்டை செய்யவில்லை தேனீக்கள். கரடியிடம் ஆலோசனை கேட்டது குரங்கு. கொள்ளிக்கட்டையால் கூட்டைக் கலைக்கச் சொன்னது கரடி. கொள்ளிக்கட்டையைக் கையில் ஏந்திக் கூட்டைக்கலைக்க முற்பட்டது குரங்கு. தேனீக்களை அழித்துத் தேன் குடிக்க நினைத்தது. தேனீக்கள் சில பொசுங்கின. குற்றுயிரும் குலையுயிருமாய்க் கீழே விழுந்தன. இறகடித்து நாலாதிசையும் பறந்து குரங்கைக் கொட்டின. உச்சந்தலையில் துடிக்கக்கொட்டின. கடிதாளாத குரங்கு தன் தலையில் தானே கொள்ளிக் கட்டையைத் தேய்த்துக் கொண்டது. தேன் கூட்டை விட்டு வெகுதூரம் போய் நின்றுகொண்டது. இப்போது தேன் சேகரிக்க, தேனீக்களுமில்லாமல் நக்கித் தின்ன குரங்குமில்லாமல் தேன்கூடு அதோ அங்கே உலர்ந்து போகிறது. கோபாலன் தொழிற்சாலை பக்கம்கைகாட்டிப் பேசினான்.

கொள்ளிக்கட்டையைக் கீழே போடவும் தைரியமில்லாமல், கரடியை அப்புறப்படுத்தவும் தைரியமில்லாமல், தானும், அருகே போகமுடியாமல் பாதி மரத்தில் நிற்கிற குரங்கே, மரத்தை விட்டுக் கொஞ்சம் கீழே இறங்கேன்.

தோழர்கள் பலக்கக் கை தட்டினார்கள், மானேஜ்மெண்ட் குரங்கு ஒழிக, என்று கூச்சலிட்டார்கள்.



'சேர்மன் ரங்கசாமி ஒழிக' என்று கூவினார்கள். விசிலடித்தார்கள். கோபாலன் கையமர்த்தினான். கூட்டம் கட்டுப்பட்டது.

"நீங்கள் பெயரைச் சொல்லிக் கோஷமிட்டீர்கள். உங்கள் உணர்ச்சிகளைக் காட்டினீர்கள். அந்தப் பெயரை என்னால் உச்சரிக்கக்கூட முடியவில்லை. அந்தப்பெயரைச் சொல்ல என் நாக்கு கூசுகிறது தன் கொள்ளிக் கட்டையால் நானே தன் தலையைச் சொரிந்து கொண்டு அவதிப்படும் அந்த ஜென்மத்தை நினைக்கும் போதெல்லாம் அருவருப்பு வருகிறது. சிறகு பொசுக்கப்பட்ட தேனீயாய் நடுத்தெருவில் துடிதுடித்துச் செத்தானே எங்கள் தோழன் கணேசன், அவனை நினைக்கும் போதெல்லாம் உன் மேல் ஆத்திரம் வருகிறது. அறுந்த தாலியும் கலைந்த கூந்தலுமாய் கதறுகிற அவன் துணைவியைப் பார்க்கும் போது, ரௌத்திரம் வருகிறது. அநாதையாய் போன அந்தக் குடும்பத்திற்கு ஆயிரம் ரூபாய் முன் பணம் கொடுத்துச் சமரசம் செய்துகொள் என்கிறாயே, உன்னைக் கொட்டிக் கொட்டியே கொன்று விடலாமா என்று கோபம் வருகிறது.

கூட்டம் நுனி நாக்கால் சில்லிட்டது.

"உண்மையில் எரியும் கொள்ளிக்குப் பயப்படாமல் உன் பணபலம், ஆள்பலல் எதற்கும் பயப்படாமல் உன்னைப் பதிலுக்குப் பதில் பழிவாங்கலாமா என்கிற எண்ணம் எழுகிறது. ஆனால் குரங்கே, எனக்கு நீ முக்கியமில்லை உன் கையிலிருக்கிற கொள்ளிக்கட்டையுமில்லை. ஊருக்கு உதவாமல் உலர்ந்து போய்விடுமோ தேன்கூடு என்கிற கவலைதான் என்னை கட்டுப்படுத்தி வைக்கிறது. இடம் உன்னுடையதாய் இருக்கலாம். உழைப்புடைமை உன்னுடையதாய் இருக்கலாம். உழைப்பு என்னுடையது. குரங்கே நினைவில் வைத்துக்

கொள், ஒவ்வொரு துளி தேனும் என் உழைப்பு என்
தோழர்களின் இடைவிடாத பணி. கூடுகட்ட உன்னால்
முடியுமா குரங்கே?

''இந்தப் போராட்டம் தொடர்ந்து நடக்கும், நடக்க
வேண்டும். கொள்ளிக்கட்டைகளை நினைத்துக் குமுறா
தீர்கள். அவை கூலிப்பட்டாளங்கள். உங்கள் கவனம்
அதைக் கையிலேந்தித் தவிக்கும் குரங்கின் மீது இருக்
கட்டும். கொள்ளிக்கட்டைகளின் குணம் குரங்குக்குப்
போகப் போகப் புரியும். ஆகவே திசைமாறாமல் இருங்
கள் தனித்தனியே பிரிந்து போகாமல் இருங்கள். கூடு
நம்முடையது. கைகட்டிக் காக்க வேண்டிய குரங்கு
கட்டை ஏந்தியதாய் கலவரம் வந்தது ஒற்றுமையாய்
இருங்கள்.

''தோழர்களே, கதைக்கு நடுவே வந்த கரடியை நான்
மறந்துவிடவில்லை.'' தோழர்கள் மீண்டும் விசிலடித்
தனர். இரும்புத் தொப்பியும் மூங்கில் கழியும் கவசமும்
அணிந்திருப்பதால் தேனீ தன்னைக் கொட்டாது என்று
நினைக்கிறது கரடி. அதை எங்கே எவ்விதம் தாக்க
வேண்டும் என்று எங்களுக்குத் தெரியும்.

''கரடி, குரங்கை உந்துமானால் அதுவும் கடிபடும்.
உழைப்பது தேனீயின் பிறவிக் குணம், எங்களை ஒடுக்க
நினைத்தால் சீறிக்கடிப்பது இயற்கை தந்த வரம்
கரடியே ஒதுங்கியிரு.

''தோழர்களே...'' கோபாலன் மேற்கொண்டு பேசிக்
கொண்டு போனான். கணேசன் குடும்பத்திற்கு நிதி
கேட்டான். நாள் தவறாமல் சங்கக் கட்டடத்திற்கு
வரும்படி வற்புறுத்தினான். அரசியல் கலப்பு இல்லாமல்
நேரடியாய் வர்க்கப் போராட்டம் நடைபெற வேண்
மென்று வேண்டிக் கொண்டான் ரத்தமும் வியர்வை
யும் சிந்தி உழைப்பவர்களுக்குப் பொதுவான நிறம்
சிகப்பு என்று சுட்டிக் காட்டினார்கள். கூட்டத்தில்
சொல்ல முடியாத விவரத்தைச் சிறைசென்று மீண்ட
தோழர்கள் சொல்வார்கள் என்றான். கூட்டம்



அமைதியாய்க் கலைந்தது. டாக்சியில் ஏறும்போது
தோழர்கள் ஒரு துணிப் பையைக் கோபாலன் காலின்
கீழ் வைத்தார்கள். ''எவ்வளவு காசு? எவ்வளவு
சேர்ந்தது?''

''இரண்டாயிரத்து நாற்பத்தி நாலு ரூபா பதினாலு
காசு'' யாரோ பதில் சொன்னார்கள்.

''யாராவது நாலு பேர் கூட வாங்க...'' பார்த்த
சாரதி, சோமு, தேசிகன், குருமகாராஜ் வண்டியில் ஏறிக்
கொண்டான்.

கணேசன் வீட்டுக்குப் போகச் சொல்லி உத்தர
விட்டுக் கோபாலன் அதிர்ச்சியுடன் பின் சீட்டில் சாய்ந்து
கொண்டான்.

இப்படித் துணி மூட்டையாகக் காசைக் கொண்டு
போய் சாவித்திரியிடம் கொடுத்தால் சாவித்திரி என்ன
செய்வாள்? துக்கப்படுவாளோ?

அவமானம் என்று நினைப்பாளோ? தன் நிலை
இப்படி ஆயிற்றே? என்று நொந்து கொள்வாளோ?
ஆனால் இந்த மூட்டையைத் தன் அறைக்கு எடுத்துப்
போனால் சந்தேகம் வரும். இந்த நேரத்தில் அவ்வித
சந்தேகம் ஆபத்தில் முடியும் வேறு வழியில்லை. சாவித்திரி
வீட்டுக்குப் போய்த்தான் ஆகவேண்டும். இதை உடனே
அவளிடம் கொடுத்துத்தான் ஆகவேண்டும். அதுதான்
உத்தமம்.

கணேசன் இல்லாமல் அந்த வீட்டில் நுழையக் கூச்ச
மாய் இருக்கிறது. யாரிடம் இந்தப் பயம்? சாவித்திரி
யைப் பார்த்தா? இல்லை தன் மீதா? தன்னைக் கண்டதும்
சாவித்திரி ஏன் இப்படிக் கதறினாள்? போலீஸைக் கண்டு
பயப்படாத சாவித்திரி, கட்சிப் பிரமுகரைப் பார்த்துக்
கலங்காத சாவித்திரி, நாற்பது தோழர்களை உள்ளே
அழைத்துப் பாதுகாத்த சாவித்திரி, ரத்த விளாறாய்க்

இடந்த சுப்பையாவுக்கு மருந்து போட்டு கட்டின சாவித்திரி தன்னைக் கண்டதும் ஏன் அப்படிக் கதற வேண்டும்? பச்சைக் குழந்தை மாதிரி ஏன் அழ வேண்டும்? இரண்டு கைகளையும் ஏந்தி அகல விரித்து மார்பில் அறைந்து கொண்டு ஏன் குமுற வேண்டும். சாவித்திரி ஒரு வேளை உன்னைப் பற்றி உனக்குப் பயமாய் இருக்கிறதா? சீச்சீ...என்ன நினைப்பு இது? இன்னும் ஆயிரம் காரியம் இருக்கிறது எதிரே. மாமண்டையே மறந்து போ முதலில்.

கோபாலன் நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டான். ஜிப்பாவின் பாக்கெட்டில் கைவிட்டுப் பீடியை எடுத்துப் பற்ற வைத்துக்கொண்டான். ஆழ இருமுறை இழுத்து அணைத்தான். வயிறு பசி சப்தம் எழுப்பியது. வண்டி கணேசன் வீட்டெதிரே நின்றதும் உறுதியாய் வாசற்படியில் நின்று கதவைத் தட்டினான்.

சாவித்திரி கதவைத் திறந்தாள். இரண்டு பக்கத் தாழ்ப்பாள்களையும் அகற்றினாள். கூடத்துத் திரையை விலக்கினாள். எல்லா விளக்குகளையும் மடமடவென்று போட்டாள்.

''எல்லோரும் சாப்பிட வாங்கோ. சாதம் போடறேன்.''

தோழர்கள் வேண்டாமென்று சொல்ல அவசரமாய் எழுந்தார்கள். கோபாலன் கையமர்த்தினான். அஞ்சு பேருக்கும் அகோரப் பசி என்று தெரிஞ்சு வைச்சிருக்கையே மகாபாவி, உன்னைவிட்டுக் கணேசன் எப்படிப் போனான். மனசுக்குள் கேவினான். அந்த நிமிடத்தில் அவனுக்குள், என்னமோ ஒரு இடம் நெக்குவிட்டுப் போயிற்று.

தோழர்கள் சாப்பிட உட்கார்ந்தனர். சாவித்திரி பரிமாறினாள்.

''அதிலே ஒரு நூறு ரூபாய் நோட்டு இருந்தது தலைவரே. யாரு போட்டிருப்பாங்கன்னு யோசனை



பண்ணிப் பார்க்கிறேன் புரியமாட்டேங்குது. ஒருவேளை மானேஜ்மெண்ட் வேலையாயிருக்குமே?'—இடது கோடி பக்கம் சாப்பிட்டுக் கொண்டிருந்தவன் கோபாலனை எட்டிப் பார்த்துக் கேட்டான்.

''நல்லா போடுவாங்களே மானேஜ்மெண்ட்—ஊர் ஜனம் எவனாவது இருக்கும் வாசலண்டை புதுசா வட்டி கடை போட்டிருக்கான் பார் சேட் அவனா கூட இருக்கும்.''

''நோட்டு புதுசுப்பா? சேட்டுகிட்ட புது நோட்டு இருக்குன்றயா?''

''நம்ம ஆளுங்களிலேயே வசதியா இருக்கிறவன் கூட போட்டிருக்கலாம் இல்லையா?''

''நூறு ரூபா வசதியா...''

''ஏன் துட்டுக்கொழுத்தவன் நம்ம ஆட்களிலேயும் உண்டு. மீட்டிங்குக்கு டாக்சியில வராங்கப்பா.''

''பஸ் கிடைச்சிருக்காது பாவம் நேரத்துக்கு வரணுமேன்னு வந்திருப்பான்.''

கோபாலன் இந்தப் பேச்சு எதிலேயும் கலந்து கொள்ளாது சோற்றை அளைந்தபடி உட்கார்ந்திருந்தான். சாவித்திரி இந்தக் காசு பற்றி எந்த அக்கறையும் காட்டாதது ஆச்சரியம் இல்லைதான். ஆனாலும் அதை வாங்கி உள்ளே வைக்கிற கவனம் கூடக் காட்டாததும் வாங்கிக்க முடியாது என்று மறுப்புத் தெரிவிக்காமல் எதற்கு இவ்வளவு சிரமம் என்று பிகு பாராட்டாமல் இருந்ததும் நெருடலாய் இருந்தது. அவள் இயல்புக்கு மிஞ்சின அழுத்தத்துடன் இருக்கிறாள் என்று பட்டது. உங்களையெல்லாம் வெச்சு சோறு போடறதுக்கு வேறு காரணம் இருக்கு என்கிறது போல் தோன்றிற்று. ஆனால் இதைத் தெரிந்து கொள்வதைவிட வேறுவேலைகள் இருக்கின்றன. கட்சி அலுவலகத்திற்குப் போக

வேண்டும், வக்கீலைக் கலந்து ஆலோசிக்க வேண்டும். பெரிய ஊர்வலம் ஒன்று நடத்த வேண்டும்.

சாவித்திரியை அறிந்து கொள்வதைவிட ஆயிரம் காரியங்கள் இருக்கின்றன. தனக்கு அவளைத் தெரிவதைவிடத் தன் தோழர்களுக்கு அவளைப்பற்றி அதிகமாகத் தெரிந்திருக்கிறது. அவளைப் பற்றிக் கதை கதையாய்ச் சொல்கிறார்கள். அஜீதா என்கிறார்கள்.

"அந்த அம்மா சுப்பையாவுக்கு மருந்து கட்டினபோது அழுதுட்டேன் தலைவரே! அது ரணப்பட்டே அஞ்சு நாள் ஆவல இன்னொருத்தனுக்கு ஓடி ஓடி உதவுதே. என்னா தலையெழுத்தோன்னு தோணிப்போச்சு,—சொன்னவனுக்கு உடம்பெல்லாம் நடுங்கியது. ஆனால் சாவித்திரிக்கு என்ன விதமாய் உதவ முடியும்? அவளைத்தான் கேட்க வேண்டும். இந்த இரண்டாயிரத்துச் சொச்சம் கிடைத்த கலெக்ஷன். அந்த நூறு ரூபாய் யார் போட்டிருப்பார்கள்? கோபாலனுக்கும் அது ஆச்சரியமாய்த்தான் இருந்தது.

## 8

அந்த நூறு ரூபாய் போட்டது சங்கரன். கூட்டம் கலையுமுன்பு விறுவிறுவென்று நடந்து நாற்சந்தியில் ஒரு டாக்சி பிடித்தான். வீட்டுப் பக்கம் போகச் சொன்னான், யார் கண்ணிலும் படாமல் டாக்சி ஏறுவதற்காகக் கூட்டம் முடியும் முன்பே வந்துவிட்டான். கூட்டத்திற்கு வந்து இறங்கும்போதே நான்கைந்து பேர் உற்று உற்றுப் பார்த்தார்கள். இந்த உலகத்தில் ஒருவன் எதற்கெல்லாம் பயப்படவேண்டியிருக்கிறது? அல்ப



சாமாச்சாரத்திற்கு எவ்வளவு யோசிக்க வேண்டியிருக்கிறது. ஊரோடு ஒத்துவாழ். எப்படி வாழ முடியும்? இவர்கள் வாழுகிற மாதிரிதான் வாழவேண்டியது என்ன அவசியம்? இவர்கள் கல்யாணம் பண்ணிக் கொள்வது மாதிரி இவர்கள் குடித்தனம் பண்ணுவது மாதிரி, இவர்கள் பேசித் திரிவது மாதிரி, இன்னொருவர் ஏன் வாழவேண்டும்? வேறுவிதமான வாழ்க்கை பற்றிச் சிந்திக்க இவர்களுக்கு ஏது அவகாசம்? எங்கே புத்தி? மந்தைகள்—சரியான ஆட்டுமந்தைகள்.

கணேசனுக்கு உண்டி குலுக்குகிறார்கள். எல்லோரும் ஐந்து பைசா பத்து பைசா போடுகிறார்கள் இரண்டாயிரத்துச் சொச்சம் கலெக்ஷன் என்று கர்வப்படுகிறார்கள். கணேசன் விலை இரண்டாயிரத்துச் சொச்சமா? அந்தக் குடும்பத்துக்கு இது எத்தனை நாள் உணவு? கம்பெனி இறந்ததும் ஆளுக்கு ஐம்பது ரூபா சம்பளத்தில் நிதியாகப் பிடிக்க வேண்டும் என்றால் கோபப்படுவார்கள். அதிக பட்சம் பத்து ரூபாய் போதும் என்று முடிவு செய்வார்கள். ஆனால் இதே யூனியன் ஆட்கள் வெட்கமில்லாமல் இஞ்சினீயரையும் மானேஜரையும் இருபது கொடு. முப்பது கொடு என்று உலுக்குவார்கள். சங்கரனும் யூனியன் ஆள்தான். ஆனால் இவர்கள் பத்து ரூபாய் என்றால் முடியாது போ என்று மறுத்துவிட வேண்டும் எனக்குச் செய்யத் தெரியும் என்று சொல்லிவிடவேண்டும். ஒரு கூட்டத்தோடு கலந்து கொள்ள வேண்டும் என்கிற நினைப்பே சங்கரனுக்குக் குமட்டிக் கொண்டு வந்தது. ஓர் ஆணைக்குக் கட்டுப்படுவது என்பதே ஆத்திரமாய் இருந்தது. ஒரு தனி நபரின் விருப்புக்கு முக்கியத்துவம் கொடுக்காமல் இருப்பது அயோக்கியத்தனம் என்று பட்டது காம்ரேட்ஸ் என்று கத்தினால் 'ஜே' என்று முஷ்டியை மடக்கி உரக்கக் கத்தவேண்டுமாம். கூட்டம் மொத்தமும் கூவினபோது சங்கரன் கையைக் கட்டிக்கொண்டு பேசாமல் இருந்தான்.

இந்தக் கோபாலன் என்னை எப்படி காம்ரேட் என்று கூப்பிடலாம்? இவ்வளவு பெரிய வார்த்தையை எவ்வளவு சாதாரணமாய் உபயோகிக்கிறான்! பெரிய ரஷ்யப் புரட்சி நடப்பது மாதிரி பாவனை காட்டுகிறான். பேசி விட்டு இரவு சம்மணம் கட்டி உட்கார்ந்து தயிர் சாதம் சாப்பிடுவான். தின்றுவிட்டுத் திரும்பவும் காம்ரேட் என்று கூப்பிடுவான். புரட்சி இவ்வளவு சுலபமா? அது மனசின் காரியமில்லையா? உணவில்லாமல் உடையில்லாமல் உறவுகள் இல்லாமல், பிரிந்து தனித்தனியே அலைந்து மரணம் கண்ணெதிரில் கோரமாய்ச் சிரிக்க, மொழி இனம் ஜாதி அழிந்துபோய் மனிதனை மனிதன் கூப்பிட்ட வார்த்தையில்லையா காம்ரேட்! இந்தக் கம்பெனியில் எட்டணா அதிகம் கேட்கும் கூலிப் போராட்டததிற்குக் காம்ரேட் என்கிற வார்த்தையை உபயோகப்படுத்துவது எவ்வளவு ஆபாசம்?

ஆனால் இவர்கள் ஆபாசம் என்று தீர்மானித்து வைத்திருப்பதெல்லாம் வேறு விஷயங்கள். இவர்கள் சியாமளி என்கிற பெண்ணோடு தனக்கு ஏற்பட்டிருக்கும் உறவைச் சொன்னால் சிரிப்பார்கள். சீறுவார்கள் இது ஏன், எப்படி என்று கிஞ்சித்தும் பார்க்காமல் எகிறுவார்கள். ஏன் இந்த சாவித்திரி நாளைக்கு வேறு கல்யாணம் செய்து கொண்டால் சப்பென்று ஆகிவிடும் இவர்களுக்கு. தெய்வம் அந்த அம்மாள் என்று பேசின வாய் வேறு வார்த்தையைச் சொல்லும். இவர்கள் தெய்வம் என்று சொல்வதற்காகவே அவள் தனிமையில் தேய்ந்து கொண்டிருக்க வேண்டும். கற்புக்கும் தெய்வத் தன்மைக்கும் என்ன சம்பந்தம்? அன்பாய் இருப்பதற்கும், ஒழுக்கமாய் இருப்பதற்கும் என்ன சம்பந்தம்? ஒழுக்கமற்றவன் அன்பாய் இருக்கக்கூடாது என்று கட்டளையா? ஒழுக்கமுடையவன் அரக்கனாய் இருப்பது உத்தமமா? அன்பு என்பது உலகப் பொதுவிதி. ஒழுக்கம் என்பது காலத்துக்கு காலம் மாறுபாடு அடைகிற விஷயம் ஒழுக்கம் இவர்கள் தலையில் திணிக்கப்பட்ட சமாசாரம். அன்பு என்பது இயல்பாய் கிளறும் அம்சம். ஒழுக்கத்தை இடுப்பில் இறுகக் கற்பு பெல்ட்டால் கட்டிக் கொண்டு எப்படி அன்பு செய்ய முடியும்! ஹிம்ஸையில் இருக்கிறவன் எப்படிச் சிரிக்க முடியும்? சங்கரனுக்கு அதிர்ச்சியாய் இருந்தது.

வீட்டுக்குப்போய் இப்போது என்ன செய்வது? எல்லோரும் செய்வதுபோலச் சாப்பிட்டுவிட்டுத் தூங்க வேண்டும் அந்தப் பதினைந்து நாளாய் தூக்கமே வருவதில்லை. இரவு மகா ஹிம்ஸைப்படுத்துகிறது. இரவிலும் சியாமளி இருந்தால் சந்தோஷமா இருக்கும். பகல் பத்து மணிக்கு மேல்தான் அவளோடு பேச முடிகிறது. தண்டபாணி ஆபீஸுக்குப் போன பிறகுதான் பார்க்க முடிகிறது. சியாமளி மாதிரிப் பெண்ணுக்குத்தண்டபாணி மாதிரி புருஷன் வாய்த்தது இந்த தேசத்தின் இன்னொரு கொடுமை. இங்கே சாய்ஸ் என்பதே இல்லை தனக்கு வேண்டியதைத் தேர்ந்தெடுக்கும் உரிமை யாருக்குமே இல்லை. குறிப்பாய் பெண்களுக்கு இல்லை. தண்டபாணி அயோக்யன் இல்லை. ஆனால் ஒரு பெண்ணைச் சந்தோஷப்படுத்தாதவன், திருமணம் செய்து கொள்ளக் கூடாது. இந்த தேசத்தில் ஒரு பெண்ணைச் சந்தோஷப் படுத்துவது என்றால் இரவில் அவளை எலும்பு முறிய ஹிம்சைப்படுத்துவது என்று நினைத்துக் கொண்டிருக் கிறார்கள். பிறகு அடித்துப் போட்டாற்போல் அயர்ந்து தூங்குகிறார்கள். பெண்ணின் தேவையைக் கேட்டறிகிற சுபாவம் ஆணுக்கு அறவேயில்லை பெண்களுக்கும் இது தெரியவில்லை, தனக்குத் தேவையானது என்ன என்று தெரியவில்லை. ஒரு ஆளை வசப்படுத்தும் உபாயங் களைக் கையாளுகிறார்கள். தந்திரமாய் நடந்து கொள் கிறார்கள். கல்மிஷத்துடன் பேசுகிறார்கள் கண்ணெதிரே புகழ்ந்து தலை மறைந்ததும் நொடிக்கிறார்கள் போலி யாய்த் திரிகிறார்கள். இந்தச் சியாமளியும் தந்திரம் செய் கிறாள்.

'ஓடிப்போயிடலாம்' — சியாமளி — தீர்மானமாய்ச் சொல்லிவிட்டுத் திட்டமாய் நடந்து போவதுபோல் நடிக்கிறாள். ஒரு முடிவுக்கு வந்துவிட்டதுபோல் காட்சி தருகிறாள். ஊர் எல்லை தாண்டினதும்—நான் கெட்டுப் போயிட்டேனே என்று அழுவாள். திரும்பிப் போயிடட்டுமா என்று ஆலோசனை கேட்பாள். போனா தண்டபாணி ஏத்துக்குவாரா என்று சந்தேகம் கிளப்புவாள். மிஞ்சி மிஞ்சி எங்கேனும் யாருமறியாது குடிபெயர்ந்து குடித்தனம் வைத்தால் என் மனசு இப்ப எங்கேயோ இருக்கு என்று ஜன்னல் கம்பியைப் பிடித்துக்கொண்டு கண்ணீர் விடுவாள்.

சியாமளி—ஓடுவது என்பது எளிதல்ல. அறுத்துக் கொள்வது என்பது வேடிக்கை அல்ல. வலி, மரணவலி, சகித்துக்கொண்டு சிரிப்பதற்கு, சிரித்துக்கொண்டே மறப்பதற்கு உரம் வேண்டும். நிதானம்வேண்டும். எதற்கும் எதிராளியைக் குற்றம் சாட்டாத அமைதி வேண்டும். தத்தம் கருமமே கட்டளைக்கல் என்று தெரியவேண்டும். இவையனைத்தும் என்னால் முடியும். சியாமளி உன்னால் இயலுமா?

"இத்தனை நாள் அனுபவிச்சுட்டு..." சியாமளி பேசினது நினைவுக்கு வந்தது. எல்லா பெண்களும் ஏன் கூடல் அநுபவத்தை ஆணுக்கே சொந்தமாக்குகிறார்கள் என்பது தெரியவில்லை. எவனோ சொன்னது நினைவுக்கு வருகிறது When rape is inevitable like back and enjoy it இந்தத் தேசத்துப் பெண் எவளாவது இதைச் செய்வாளோ? கடைசிவரை போராடி இறந்தாள் சாவது உசத்தியானது. அப்பா—உயிர் எத்தனை அல்பம் இவர்களுக்கு, யோசிக்க யோசிக்க தலைக்குள் கனல் ஏறிக் கண்ணை அழுத்திற்று.

மவுண்ட்ரோடு திருப்பத்தில் பச்சை வட்டத்திற்குக் காத்துக்கிடக்கையில் யாரோ தெரு விளிம்பிலிருந்து டாக்சியை நோக்கி ஓடிவந்தார்கள்,



"சங்கரன்... யாரு சங்கரன் தானே! குட் மார்னிங் சாரி குட் ஈவினிங். நான் ஏறிக்கட்டுமா, விட்டுக்குத் தானே, நான் கூட வந்துடட்டுமா?"

மெர்க்குரி வெளிச்சத்தில் முகம் இருட்டடித்து குரலைக் கண்டு அடையாளம் தேடுகையில்—சட்டெனத் தெரிந்தது நாராயணசுவாமி. டெஸ்ட்பேட்ச் நாராயணசுவாமி.

"க்விக்..."

"நான் ஏறிக்கட்டுமா பஸ்ஸே கிடைக்கல."

"ஐ ஸே க்விக், சீக்கிரம் ஏறுங்கோ."

முன்பக்க பின்பக்க கதவுகள் இரண்டையும் அசைத்து பதற்றமாக—ஆம்பர் விழுந்து சரி, சரி, நீ போப்ப சிக்னல் விழுந்துடுத்து. பின்வாங்கி...

"ஏறுங்க நாராயணசுவாமி."

முன் கதவைத் திறந்து விட்டதும் தடேரென்று உள்ளே விழுந்தது...ஐம்பது வயசுக்கு என்ன பதற்றம், சின்ன விஷயத்தில் எத்தனை குளறுபடி. எது கேட்டாலும் எஸ் சார் நோ சார் என்று இரண்டு பதிலும் சொல்வது மாதிரி எப்படி இவர் எல்லாக் காரியமும் அமைகிறது.

"ரெண்டு முழங்காலும் ரொம்ப வலி... நல்ல வேளை நீ கிடைச்சே. பாவம் உனக்குத்தான்."

பொய் வந்து உட்கார்ந்தவுடனே பொய் போலித்தனம் வாயை மூடிக் கொண்டு வராமல் தன் வாயால் தானே கெடுகிற அசட்டுத்தனம் உனக்குப் பிறக்கிற குழந்தைகள், நீ வளர்க்கிற குழந்தைகள் எப்படி நிஜம் பேசும்? பாவம் உனக்குத்தான் செலவு என்ன பசப்பு சொற்கள். உன் பெண்ணும் மனைவியும் இதே பசப்பை ஐயோ பாவம் என்று அலட்டிக் கொள்ளும் போலியைக் கைக் கொள்ளாமலா போவார்கள்? ஒரு வேளை பெண்

களின் எல்லாக் குணங்களுக்கும் ஆண்களின் அல்ப புத்தி தான் காரணமோ?''

''ரொம்ப தூரத்திலேர்ந்து வரயா?''

''ம்ப்ம்...''

''மீட்டர் பன்னெண்டு ரூபா காட்றதே.''

''ம்ம்ம்''

''முக்கியமான காரியம் போல இருக்கு.''

''ம்ம்ப்...''

''உங்கிட்டே நானே வந்து பேசணும்னு நினைச்சேம்பா ஒரு முக்கியமான விஷயமா. நல்லவேளை தேடிப் போன மூலிகை கால்ல சிக்கின மாதிரி நீயே கிடைச்சுட்டே.''

'பாஸ்ட்டர்ட்' மனசுக்குள் சங்கரன் உறுமினான். தமிழ்மொழி வேற...எதுக்கெடுத்தாலும், தேடிப் போன மூலிகை. பிதுக்கி வெச்ச கொட்டை... ச்சே...நான் ஏன் இவ்விதம் எனக்குள் எரிந்து போகிறேன்.

''என் பொண்ணு கல்யாண விஷயமா அலைய றேம்பா கம்பெனியை நம்பி நிச்சயம் பண்ணிட்டேன். கையில் சுத்தமா ரூவாயே கிடையாது. ப்ராவிடண்ட் பண்டு லோன் பேப்பரெல்லாம் உள்ள மாட்டிண்டுருக்கு என்ன பண்றதுன்னே தெரியலை. வட்டிக்கு விடறவன் கூட கம்பெனி பேரைச் சொன்னா போடா போன்னுட றான். என்ன பண்றதுன்னே தெரியலை.''

''உங்களுக்கு எத்தனை குழந்தைகள்?''

''நாலு பொண், இரண்டு பையன்கள். கடைசில நாலாங்கிளாஸ் படிக்கிறா. மூத்தவளுக்குத்தான் நிச்சயம் ஆயிருக்கு துரதிருஷ்டக் கட்டை. நிச்சயம் பண்ணி ஊருக்கு வரேன், கம்பெனி மூடிட்டான்.''



பதினெட்டு முடிந்து பத்தொன்பது வயசுப் பெண் மலங்க மலங்க முழிப்பதாய் ஒரு சித்திரம் சங்கரன் மனசை அழுத்திற்று. இவர் செய்த கேவலங்களுக்குப் பெண்ணைத் துரதிருஷ்டக் கட்டை என்கிறார்.

''முதல்ல நாலாயிரம் கைல கேட்டா, அப்புறம் மூவாயிரத்துக்கு ஒத்துண்டா—முதல் ஆயிரம் இன்னும் பத்து நாள்ல அட்வான்ஸா கொடுக்கணும். ரூவாயே இல்லே.''

''வரதட்சணை எதுக்குக் குடுக்கணும்? மாட்டேன்னு சொல்லிடுங்கோ.''

''கல்யாணம் நடக்காதே. கடனோ உடனோ வாங்கி- அதை கரையேத்தி விடணுமே. எத்தனை நாள் வீட்டோட வச்சுக்கிறது? இருபத்துமூணு வயசு பூர்த்தியாயிடுத்து. சர்வீஸ்ல இருக்கறச்சேயே எங்கயாவது முதல் இரண்டையும் தள்ளிவிடணும்னு பார்க்கிறேன்.''

சங்கரன் உள்ளுக்குள் நிம்மதியின்றி அலைந்தான்.

பெண்கள் இங்கே விற்பனைப் பொருள்கள். வரதட்சிணை வாங்குபவனைக் காட்டிலும், எப்படியாவது விற்க நினைக்கிறவன்தான் பாவி. இவன் குழந்தைகள் மீது அன்பில்லாத தகப்பன். அக்கறையில்லாதவன். அக்கறை உள்ளவன் அடுத்தடுத்துப் பெற்றுக்கொள்ள முடியுமா? பனிரெண்டு ஆண்டுகளுக்கு ஆறு குழந்தைகள். அழுத்திக் கேட்டால் ஆண்டவன் மேல் பழியைப் போடுவார்கள். அந்த இருபது வயதுப் பெண்ணை இவர் படிக்க வைத்திருக்க மாட்டார் சுயமாக நின்று சம்பாதிக்கவிட மாட்டார் சம்பாதிக்கிற இடத்தில் நாலு பேரோடு பழக விடமாட்டார் பழகி யாருடனோ மனம் ஒப்பி வாழ ஆசைப்பட்டால் வாழவிடமாட்டார். இப்படி கடனோ உடனோ வாங்கிக் கரையேற்றி—ஏற்றின கரை சேறா, சதுப்பா, கல்லா, மரமா, பாழ் வெளியா எதுவும் பார்க்

காமல்...கடவுளே. இந்தத் தேகம் ஏன் இவ்விதம் தன்னையே கடித்துக்கொண்டு ரத்தம் உறிஞ்சுகிறது.

எல்லா விஷயமும் ஏன் தவறாகவே இருக்கிறது. நானும் ஒரு தவறோ, தப்பான வித்தோ, அதனால்தான் ஊரான் மனைவியைத் தொட்டுவிட்டு உளைகிறேனோ? பிறன் மனை நோக்காப் பேராண்மை... My foot இருவத்தெட்டு வயசில் சினிமாப் போஸ்டரும், வாரப் பத்திரிகையும், ஸிந்தடிக் புடைவைகளும் என்னை வரிவரியாய்க் கிழித்துத் தோரணமிடப் பேராண்மைக்கு எங்கே போக?

பதினாறு வயசில் வில்லை வளைக்கும் தைரியமும், சொல்லிக் கொடுக்க முனிவனும், அண்ணலும் நோக்கினான் அவளும் நோக்கினாள் என்கிற வசதியும் இருந்தால் ஒரு வேளை பேராண்மை வருமோ என்னவோ?

வேதமும் ஸ்தோத்திரமும் பூணூலும் பின் குடுமியும் கொண்டிருந்தால் பேராண்மை நின்றிருக்குமோ என்னவோ?

எல்லாவற்றையும் அழித்தொழித்துவிட்டு, யோசிக்க இங்கிலீஷில் சொல்லிக் கொடுத்துவிட்டு, பேண்டையும் பெல்ட்டையும் கிராப்பையும் பாராட்டி விட்டு பாஸ்ட்டர்ட்ஸ்...பேராண்மை...

''என்னைக் கூப்பிட்டியா சங்கரா''—நாராயணசுவாமி கழுத்தைத் திருப்பி சங்கரனைக் கேட்டார்.

''நீங்க எங்க இறங்கணும்?''

''உனக்கெது வசதியோ... அங்கேயே... பாவம் உனக்கு என்னால் வீண் செலவு.

நாராயணசுவாமியை இறக்கின இடத்திலேயே தானும் இறங்கி வீட்டை நோக்கி மெல்ல நடந்து தோட்டக் கதவைத் தள்ளுகையில் மன்னி அவசரமாய் ஓடி வந்தாள்.



''சங்கரா சியாமளியைத் தண்டபாணி எதுக்கோ போட்டு அடிக்கிறான். நீ என்னன்னு போயிப்பாரு''—மன்னி பதற்றத்துடன் பேசினாள். சியாமளி அலறுகிற சத்தம் தெரு வரையில் கேட்டது. சங்கரன் மகா ரௌத்திரத்துடன் வீட்டுக்குள் பாய்ந்தான்.

## 9

துரைசிங்கப் பெருமாள் ஜட்டியுடன் கட்டிலில் படுத்துக் கொண்டிருந்தான் கட்டிலில் இருக்கும் நேரமெல்லாம் ஜட்டியுடன் மட்டுமே இருப்பதுதான் துரைசிங்கப் பெருமாளின் வழக்கம். தலையைத் திருப்பிப் பெருமாள் ஜன்னலுக்கு வெளியே பார்த்தான். மணி ஆறு இருக்குமா? ஏழா? கையைத் தூக்கிக் கட்டிலின் பின்புறம் இருந்த மேஜையைத் தடவிக் கைகெடிகாரத்தை எடுத்தான் மணி எட்டு பளிச்சென்று எழுந்தான். கைகளை அகல விரித்து மார்பு முழுக்கக் காற்றை நிரப்பிக் கொண்டான். மெல்ல கைகளை குறுக்கிச் சுவாசத்தை வெளியே விட்டான். பத்துப் பனிரெண்டு முறை இவ்விதம் செய்த பின் துரைசிங்கப் பெருமாள் நுரையீரல் புத்துணர்வு பெற்றது. முகம் தெளிவு பெற்றது. தளர்ந்து முறிந்து உடல் தசைகள் முறுக்கேற ஆரம்பித்தன. இது தகப்பனார் சொல்லிக் கொடுத்த பழக்கம். ஐயமார் புத்தியெல்லாம் பரபரன்னு இருக்கறதுக்கு இதுதான் காரணம் விடாம பண்ணு இது அவர் உபதேசம். ஒவ்வொரு முறை ப்ரமோஷன் போதும் அப்பாவின் முகம் மிகப் பெரிய தாய்ப் பெருமாளின் முன்பு தோன்றும். அப்பாவின் முகம்

அவ்விதம் தோன்றும் போதெல்லாம் துரைசிங்கப் பெருமாளின் கண்கள் சுருங்கிக் கொள்ளும். பெரிய பட்டாக்கத்தியை நெற்றிக்கு நேரே பிடித்து இது போதாது. என் தகப்பனே. நான் இன்னும் முன்னேற வேண்டும் என்று சொல்லத் தோன்றும், ஓங்காரமாய்த் தகப்பன் முகப் சிரிக்கிறபோது வாளை வீசிக்கொண்டு யுத்தத்துக்கு இறங்குகின்ற போர் போர் என்கிற அலறலுடன் கூட்டத்தில் மாய்கிற வீரனாய்த் தன்னை நினைத்துக் கொள்ளத் தோன்றும். நைனாவின் ஆசை அதுதான் அந்தப் பரம்பரையில் இனி யாரும் இடுப்பில் துண்டு கட்டக் கூடாது என்பதுதான். கால் செருப்பை கையில் ஏந்தி கூனிக் குறுகக் கூடாது என்பதுதான். நைனாவின் தகப்பன் பெருமாளின் தாத்தா கோவில் பாத்திரத்தைத் தொட்டதற்காக அடிபட்டிருக்கிறார்.

கோவில் பாத்திரம் எருமை கொம்பின் சிக்கிக் கொண்டு எருமையின் கண்கள் மறைக்கப்பட முட்டி மோதி மிரண்டு தவித்தது. ஊர் முழுக்க அந்த ஜீவனைக் கண்டு சிரித்தது நைனாவின் தகப்பனாரால் இந்த ஹிம்ஸையைப் பார்த்துச் சிரிக்க முடியவில்லை. மாட்டை மடக்கிப் பாத்திரத்தை விலக்கிய போது ஊர் ஜனம் எருமையை விட்டு விட்டது. அவரைப் பிடித்துக் கொண்டது. நடுத்தெருவில் கோவணத்துடன் நிற்க வைத்துச் செருப்பால் அடித்தது. நைனா கண்களில் நீர் தளும்ப இதைச் சொல்லும் போது பெருமாளுக்கு ரத்தம் கொதிக்கும். உடம்பு முழுக்க ஒரு வெறி பரவும்.

சின்ன வயதில் பெருமாள் எப்போதும் கையில் வைத்திருக்கிற பொருள் உண்டிக்கோல் இல்லை. பம்பரம் இல்லை, தட்டுச் செல்வி இல்லை. சின்னதா முறுக்கிப் பின்னிய சவுக்கை எப்போதும் கையில் வைத்திருப்பது பழக்கம். கண்ணில் பட்ட மரம் செடி கொடிகளை, மாடு கன்றுகளை சவுக்கால் விளாசுவதில் பெருமாளுக்கு உச்ச



கட்ட ஆனந்தம். கால்பந்து விளையாட்டில் வலது பக்கக் கோடியில் நின்றிருக்கும் பெருமாளுக்குக் காலுக்கிடையே பந்தும் சிக்கி, மனசுக்குள் இந்த நினைவும் பொங்கியது என்றால் நிச்சயம் கோல். ட்ரெயினிங் காலத்தில் கையில் துப்பாக்கிச் சனியனும் முதுகில் முப்பத்தாறு கிலோவும் கலந்து கோணிப் பையை நோக்கி வெறியோடு ஓடுகையில் நைனாவின் தகப்பனாரைச் சவுக்காலில் அடிக்கும் ஞாபகம் தோன்றும். தொண்டையிலிருந்து வெறிக் கூச்சல் கிளம்பும், உடம்பு முழுக்க அரக்கத்தனம் பரவும். கோணியில் துப்பாக்கியைச் சொருகி உருவி, மீண்டும் சொருகிப் பலமாய்த் திரிந்து வலக்காலால் சதிராடிச் சாய்த்து வீழ்த்துகிற போட்டியில்எப்போதுமே பெருமாளுக்குத் தங்கப்பதக்கம் தான்.

அவன் வெறியைக் கண்டு அப்போதிருந்த போலீஸ் மந்திரியே பயந்து போயிருக்கிறார். இந்தக் காட்டானை, கொண்டு எங்கேயாவது எல்லையில் போடு என்று உத்தரவிட்டிருக்கிறார்.

பெருமாளுக்கு அந்தக் கணம் அவன் அடிப்படைக் குணம் என்ன என்று தெரிந்துவிட்டது. அதை வெளியே காட்டுவது விவேகம் இல்லை என்று புரிந்துவிட்டது. இதை கிஞ்சித்தும் வெளியே காட்டிக் கொள்ளாமல்பவிச் சென்று வேஷம் போட வந்துவிட்டது. எல்லோரையும் போல் விரைப்பாய சல்யூட் அடித்தான். பிறகு எவரும் எதிர்பாராதபடி மௌனமாய் மண்டியிட்டு மந்திரியை வணங்கினான். அவர் பாதத்தைத் தொட்டுக் கண்ணில் ஒற்றிக் கொண்டான். மந்திரி இந்தச் செய்கையில் ஆடிப்போய் விட்டார். பெருமாளைப்பற்றி ஆதரவாய் விசாரித்தார். அவருடைய சொந்தப் பாதுகாவலனாக வைத்துக் கொண்டார். அவருடன் இருந்த மூன்று வருடங்கள் பெருமாளைப் பெரிதும் மாற்றின. ஒட்டகம் வயிற்றோரத்தில் நீர் சேமித்து வைத்திருப்பது மாதிரி

தன் கோபத்தை, அசுர வலிமையை மனசின் ஒரு ஓரத்தில் வைத்துக்கொள்ளக் கற்றுக் கொண்டான். தேவைப் பட்டபோது எடுத்து வீசவும், தேவையற்றபோது இழுத்து மூடிக் கொள்ளவும் தெரிந்து கொண்டான். உச்சரிப்புச் சுத்தமாய் மந்திரியிடமிருந்து ஆங்கிலம் பேசக் கற்றுக் கொண்டான்.

மந்திரி போய் அமைச்சர் வந்த பிறகு போலீஸ் காவல் துறை வந்த பிறகு, மதராஸ் போய்த் தமிழ்நாடு வந்த பிறகு கூந்தலை முடித்துத் தமிழ் எழுந்த பிறகு துரைசிங்கப் பெருமாளுக்கு இந்த அவையடக்கமும் தன்னைப் பற்றிய தாழ்வு மனப்பான்மையும் அவசியமில்லாமல் பட்டுவிட்டது. பிறப்புப் பற்றியும் பரம்பரை பற்றியும் கேள்விகள் மக்களிடமிருந்து இயல்பாய் மறைந்தன. அவ்விதத் தாழ்வுகள் உயர்வதற்கு முன்னேற்றப்படிகளாய் அமைந்தன. அவ்விதத் தாழ்வுகளுக்குச் சான்றிதழ் வழங்கப்பட்டன. அந்தச் சான்றிதழ்களை வாங்கியவர்கள் அவற்றை வாய்ப்புக்கிடைக்கும் போதெல்லாம் உபயோகப்படுத்தினார்கள். மடமடவென்று உயர்ந்தார்கள். துரைசிங்கப் பெருமாளுக்கு வாழ்க்கை சந்தோஷமாய் இருந்தது. கொஞ்சம் ஆங்கில அறிவும் உத்யோகத்தோரணையும் முகத்தை அழகுபடுத்தின. பரம்பரையாய் வந்த உடற்கட்டு உதவி செய்தது. எந்த எதிர்ப்புமின்றி வடக்கே இருந்து குமரி முனைவரை உருவிய வாளோடு விஜயம் செய்தமாலிக்காபூர் மாதிரி பெருமாள் முன்னேறிக் கொண்டிருந்தான்,

கண்ணாடி முன் நின்று, தன்னை ரசித்துக் கொண்டிருந்த பெருமாள் உவகையுடன் தனக்குத்தானே சல்யூட் அடித்துக்கொண்டான். தன்னை அந்த நிலையில் பார்க்க நைனா இல்லையே என்று வருத்தப்பட்டான்



வேலையாள் உள்ளே நுழைந்து கமிஷனர் ஃபோனில் அழைப்பதாகக் கூறியதும் அவசரமாய் வெளியே பாய்ந்தான்.

"வணக்கம் ஐயா, மூன்றாம் சரகம் இன்ஸ்பெக்டர் பெருமாள் பேசுகிறேன், உத்தரவிடுங்கள்" டெலிபோனைக் காதில் பொருத்திக் கொண்டு விறைப்பாய்ப் பேசினான். இப்போதெல்லாம் அரசு அலுவலகங்களில் தமிழ் கலபமாய் விளையாடியது.

"பெருமாள், இன்னும் அரை மணிலே வீட்டுக்கு வாய்யா. உங்ககூட பேசணும்." பெருமாள் குளித்து பவுடர் போட்டுக் கொண்டு முழு உடை உடுத்தி மோட்டார் சைக்கிளில், கமிஷனர் வீடு நோக்கிப் பறந்தான். கமிஷனரிடமிருந்து அழைப்பு வருவது சாதாரணமாய் இருந்தாலும் இன்று அவரிடம் பேச நிறைய விஷயம் இருக்கிறது. வடசென்னை விவகாரம் கண்ட்ரோலில் இருப்பது பற்றிச் சொல்ல வேண்டும். அதுபற்றி மொத்த பேப்பர் ஒர்க் முடிந்தது என்பதைச் சொல்ல வேண்டும். இந்தக் காரியங்கள் எல்லாம் அவர் இல்லாமலே செய்து விட முடியும். அவர் சொல்லித்தான் இதையெல்லாம் செய்தேன் என்றால் அவருக்குச் சந்தோஷமாய் இருக்கும். இந்த சந்தோஷத்துக்கு நடுவே அவனுடைய ப்ரமோஷன் பற்றியும் பேச முடியும்.

இந்தக் கமிஷனர், பதவி ஏற்று ஒரு மாதம்தான் ஆகிறது. அவரும் சான்றிதழ் வாங்கியவர்தான் அது பெருமாளுக்கும் சௌகரியமாய் இருந்தது. அவருக்கும் பெருமாளிடம் அந்த சௌகர்யம் கிடைத்திருக்க வேண்டும். டைனிங் டேபிளில் இருந்தபடி பெருமாளை உள்ளே வரச்சொன்னார். நுனி வாழையிலையில் பெருமாளுக்கு இட்லி பரிமாறச் சொன்னார். "தம்பி நல்லா சாப்பிடும். நெறையப் போடு" என்று சொன்னார்.

கமிஷனரின் மனைவி செக்கச்செவேல் என்றிருந்தாள். பெருமாளின் மனைவியைப் பற்றி விசாரித்தான்.

நாலாவது பிள்ளைபேறு சொன்னதும் முகத்தைச் சுளுக்கிக் கொண்டாள்.

"அதான் பச்சை பச்சையாய் கவர்மெண்ட் சொல்லிக் கொடுக்கறானே உபயோகப்படுத்திக் கொள்ளக் கூடாது?" என்று கேட்டாள். பெருமாள் தலைகுனிந்து உட்கார்ந்திருப்பதைப் பார்த்து ஆயாசப்பட்டாள்.

பாவம். நீதான் என்ன பண்ணுவே—ராத்திரி பகல்னு பார்க்காம ஊரைச்சுத்திட்டு வீட்டுல வந்து விழுவே. இப்படித்தான் ஒன்னு கிடக்க ஒன்னு ஆவும்."

கமிஷனர், மனைவியை அப்புறப்படுத்திவிட்டு அவனுடன் பேசத் துவங்கினார். இன்னும் பதினைந்து நாளில் சட்டசபை குளிர்காலக் கூட்டத் தொடர் ஆரம்பிக்கப் போவதை நினைவுபடுத்தினார். வட சென்னை விவகாரம் கேள்வி வரும் என்று கவலைப் பட்டார். கோட்டையிலிருந்து இன்று அழைப்பு வரும் என்று சொன்னார். கைது செய்யப்பட்டு ஜாமீனில் விடுதலையானவர் பட்டியலைப் பார்த்தார். கோபாலன் கூட்டத்தில் பேசியதைப் பற்றிய குறிப்பைப் படித்தார்.

"இவனைத் திருப்பிப் புடிச்சு உள்ளே போடறது தானே துரை. ஏன் இவனை வெளியே விட்டுட்டு அவஸ்தைப் படறே?"

"கட்சி சப்போர்ட் இருக்கு சார்." கோபாலனுக்கு ஜாமீன் எடுத்த வக்கீலின் பேரைச் சொன்னான்.

"அந்தப் பொம்பளகிட்ட கையெழுத்து வாங்கறது" அவ பேர் என்னா சாவித்திரி. 'இவன் மேல சந்தேகப் படறதா ஒரு பெட்டிஷன் வாங்கறதுதானே?', பெருமாள் சாவித்திரியின் மறுதலிப்பைப் கூறினான்' அவளைச் சந்தித்த கட்சிப் பிரமுகரின் பெயரைக் கூறினான். அவன் வீட்டு வாசலில் செங்கொடி ஏற்றப் பட்டதைச் சொன்னான்.



கமிஷனர் தீவிரமான சிந்தனையில் ஆழ்ந்தார்.

"அப்ப—நான் கோட்டைக்குப் போய் இது மொத்தமும் பாலிடிக்ஸ்ன்னு சொல்லிடறேன். உன்னைக் கேட்டா நீயும் அதையே சொல்லு. திருப்பி அந்த ஆள் எகிறினாக் கூசாம புடிச்ச உள்ள போடு! எகிறினவனையெல்லாம் தட்டிவை நான் இருக்கேன். ஒன்னுத்துக்கும் பயப்படாதே. நீயா எதையும் ஆரம்பிக்காதே, மாட்டினா விடாதே"—பெருமாளைத் தட்டிக் கொடுத்து விட்டு உடையணியப் போய்விட்டார்.

பேச்சுவாக்கில் கமிஷனர் பென்சிலால் அடிக்கோடிட்ட பிரேத விசாரணை ரிப்போர்ட்டைப் பெருமாள் மீண்டும் படித்தான்.

மெல்லிய உறுதியான கூர்மை மிகுந்த ஆயுதத்தால் மார்பு, வயிறு உள்பாகங்கள் மிக மோசமாய்ச் சேதமாக்கப்பட்டு மேற்படி நபர் கணேசன் இறந்திருக்கிறார். வெளிப்பகுதியில் சிறிய ரத்தக் கசிவும் உள்ளே நாளங்கள் துண்டாடப்பட்டு இருப்பதும் கவனிக்கையில்கொலைக்கு உபயோகமான ஆயுதம் மிகமிக விசேஷத் தயாரிக்கப் பட்ட கருவியாய் இருக்கலாம், எனத் தோன்றுகிறது. 'ஸ்டிலட்டோ' என்ற ஒரு விசேஷக் கத்தியைப்பற்றிப் பிரேத விசாரணை நடத்திய குழு நினைவுபடுத்திக் கொண்டது. மேற்கொண்டு ஸ்டிலட்டோவைப் பற்றித் தகவல் போலீஸுக்கு வேண்டியிருப்பின் தலைமை மருத்துவர் உத்தரவின் பேரில் தரப்படும் ஒப்பம்.

கேஸில் உதைக்கிற இடம் இதுதான். கோபாலனிடம் ஸ்டிலட்டோ-இருப்பதை நிருபணம் செய்ய வேண்டிய அவசியம் கமிஷனருக்கு முக்கியம் எனப்பட்டிருக்கிறது.

'ஸ்டிலட்டோ அது எப்படியிருக்கும்? யாரிடமிருக்கு
இதனாலேயே கேஸ் அடிபட்டுப் போய்விடுமா? அடிபட்
டால்—பிரமோஷன் மட்டுமில்லை, ரங்கசாமியின் நட்பு
போய்விடும். கோபாலன் கை உறுதியாகிவிடும்
டிராக்டர் கம்பெனி நிர்வாகத்தின் சிநேகிதம் பிரமோ
னைக் காட்டிலும் பெரிது. ஸ்டிலட்டோ—அது எப்ப
யிருக்கும். வெறும் கத்திக்குத்து என்று எழுதினா
என்ன? இவனுங்க ஞானம் படிப்பு எல்லாத்தையும்
போர்ட்டில் கொட்டிக் குழப்புறானுங்களே, பெருமா
ஆத்திரப்பட்டான். ஸ்டிலட்டோ, எஸ்டி ஐ எல்
டபின் டி ஓ ஈஸ்டிலட்டோ இங்கே யாரிடமிருக்கும்?

கமிஷனர் வீட்டில்ருந்து சரியாய் பதினாறு கிலோ
மீட்டர் தூரத்தில், அடர்ந்து குவிந்த குப்பத்தின் நடுவி
இரண்டு குடிசைகளுக்கு இடையே உள்ள ஆள் அகல
சந்தில் அறிவு என்கிற அறிவுக்கரசன் உட்கார்ந்திருந்தா
சின்னதாய் ஒரு ஏப்பம் விட்டான். ஒரு கிளாஸ் இரண்
ரூபாய் வீதம் காலையிலிருந்து ஆறு ரூபாய்க்குச் சாப்பி
டிருந்தான். அவனிடம் இன்னும் பதினோரு ரூபா
இருந்தது. கசங்கின ரூபாய் நோட்டுக்கு மத்தியில்-
சுருட்டி அதை நிக்கர் சைட் பாக்கெட்டில் உறையோ
கூடிய ஸ்டிலட்டோ இருந்தது. அறிவு வசதியா
சாய்ந்து கொண்டு உறையை நீக்கி அதை வெய்யில்
பிடித்தான். அந்த ஸ்டிலட்டோ கோரமாய் மின்னிற்று

## 10

அறிவுக்கரசன் பிறந்தபோது அவனுக்கு அவ
அம்மா] வைத்த பெயர்; பாவாடை, முழம் நீள



துணியை மார்பிலிருந்து பாதம் வரை அணிந்து முட்டை கண்களுடன் உருவின கத்தியுடன் இருக்கும் கடவுள் காலில் அவனைக்கிடத்தி அவன் அம்மா நாலணா சூடம் கொளுத்திக் கும்பிட்டாள். கடைசிவரை துணையிருக்க வேண்டினாள்.

முள் முள்ளான தாடியும், குடித்துச் சிவந்த கண்களுமுடைய தகப்பனின் முகம் மெல்லிய புகை யாதிரி எப்போதாவது அறிவுக்கரசனுள் தோன்றும். அவன் மூன்றாவது வயதில் தகப்பன் எவளுடனோ பம்பாய்க்கு ரயில் ஏறிவிட. அறிவுக்கரசனின் தாய் அந்தக் குப்பத்திலேயே வேறு ஒருவனுக்குத் துணையானாள். நிறைய குழந்தைகள் பெற்றாள் நாயாய் அடிபட்டாள் கூலிவேலை செய்தாள். பசித்தபோது குழந்தைகளை அறைந்து விட்டு தான் மட்டும் சாப்பிட்டாள்.

சின்ன வயதில் அறிவுக்கரசனுக்கு எப்போதும் பசி இருந்து கொண்டேயிருந்தது. நிறைய சாப்பிடவேண்டும் என்று தணியாத ஆசையிருந்தது. திடீரென்று குப்பத்தில் புதிய கல் கட்டிடம் தோன்றியது. சிலுவைக் குறியுடன் திருச்சபை என்று எழுதப்பட்டது. அந்தச் சபை திறந்ததும் ஏழைக் குழந்தைகளுக்கென பால் வழங்கினார்கள் ரொட்டித் துண்டுகள் கொடுத்தார்கள். இருக்கும் ஒரே அறையில் பாதி இடத்தை நூற்றுக்கணக்கான பால் டின்கள் அடைத்துக் கொண்டிருந்தன. ஆனால் முதல் வாரம்தான் எல்லோருக்கும் பால் கிடைத்தது. அடுத்த வாரம் கடவுளுக்குப் பிரியமானவர்கள் மட்டுமே சபையிலிருந்து பால் வாங்க முடியும் என்று சொல்லி விட்டார்கள். பாவாடை பாதிரியார் முன்பு மண்டியிட்டான். பட்டுக்கயிற்றில் சிலுவை கோர்த்து அணிந்து கொண்டு கடவுளுக்குப் பிரியமானான். பால் தாமஸ் என்று அன்புடன் பாதிரியாரால் மட்டுமே அழைக்கப்பட்டான்.

அவன் புதிய தகப்பனுக்கு இது பிடிக்கவில்லை. ஆனால் சில சமயம் காலையில் பசிக்கும்போது அவனுக்கு பவுடர்பால் தேவையாய் இருந்தது. இரண்டு மூன்று முறை பாவாடை என்கிற பால் தாமஸை வரிசையில் நிற்கச் சொல்லிக் குவளை நிறையப் பால் வாங்க முடிந்தது. ஆனால் இதுவும் சிறிது நாள்தான். பாதிரியார் ரோஜாப்பூ மாலை அணிந்து கப்பலேறி வெளிதேசம் போக, புதிதாய் வந்த பாதிரியார் பால்வேண்டுமென்றால் தகப்பனும் தாயும் கிறிஸ்துவுக்குப் பிரியமாக வேண்டும் என்று சொல்ல, பாவாடையின் புதியதகப்பன் 'போடா போ' என்று சொல்லி விட்டான். பாவாடைக்கு ஒரு வயதாகி விட்டது. சைக்கிள் கடையில் பம்ப் அடிக்க முடிந்தது.

பாவாடையின் புதிய தகப்பனுக்குத் தமிழ் படிக்கத் தெரியும். படங்கள் நிறைந்த காலைப் பத்திரிகையை அவன் குப்பத்து ஜனங்களுக்குத் தினமும் படித்துக் காட்டுவான். அந்தப் பத்திரிகை கொடுத்த உற்சாகத்தில் ஒரு அரசியல் கட்சியில் தொண்டனாகச் சேர்ந்தான். தனக்கென்று ஒரு தலைவன். தனக்கென்று ஒரு கட்சி, தனக்கென்று ஒரு கொடி, தனக்கென்று ஒரு தேசம் எல்லாம் வேண்டும் என்று கேட்டான். கேட்டவர்களோடு, தீவிரமாய் கலந்து கொண்டான்.

குப்பத்து மீட்டிங் பேச வந்த பெரியவரிடம் பாவாடையை அழைத்துப் போய் ஐந்து ரூபாய் கொடுத்துப் பெயர் வைக்க வேண்டும் என்றான்

''அறிவு கெட்ட மூண்டம்! இவ்வளவு பெரிய பையனுக்கு இப்பத்தான் பேர் வைக்கிறதா? போ! அறிவுக்கரசன்னு பெயர் வை-அறிவுன்னு கூப்பிடு'' என்றார்.

பாவாடை என்கிற பால்தாமஸ் என்கிற அறிவுக்கரசன் வாயெல்லாம் பல்லாய் நிற்கிற போட்டோ



இன்னும் ஒரு சைக்கிள் கடையில்-சட்டமிடப்பட்டுத் தொங்குகிறது. சைக்கிள் கடை முதலாளியும் அந்தப் போட்டோவிலே ஒரு ஓரத்தில் களைப்புடன் நின்றிருந்தார்.

பெரியவர் கட்சி இரண்டாய்ப் பிளந்தவுடன் தகப்பனும் மகனும் குழப்பமடைந்தார்கள், எதிர் எதிராய் பேசினார்கள். கெட்ட வார்த்தைகளில் திட்டிக் கொண்டார்கள். பிரிந்து போனார்கள்.

பிரிந்து போகும்போது அறிவுக்கரசனுக்குப் பதினாறு வயது. சைக்கிள் கடை முதலாளி சோறு போட்டார். வேலை வாங்கினார். இரண்டு திருட்டு சைக்கிள்களை விலைபேசி எண்பது ரூபாய்க்கு வாங்கி, போலீஸ் பிடித்தவுடன், 'எனக்குத் தெரியாது, இவ்விரண்டும் இந்தப் பையனின் சொத்து'' என்றார். அறிவுக்கரசன் முதன் முறையாக போலீஸ் ஸ்டேஷன் போனான். மீசை முளைத்து இரண்டு வருட தண்டனை முடிந்து வாலிபனாய் வெளியே வந்தான். இந்தச் சின்னப் பையன் சிறையில் இருந்தபடிவெளி உலகம் தெரிந்து கொண்டான் அவன் வெளியே வரும்போது அம்மா வேறு ஒருவனுடன் இருந்தாள். பழைய தகப்பன் பத்தாயிரம் வாக்கு அதிக வித்தியாசத்தில் கவுன்சிலராகி இருந்தார். கல் வீட்டில் புதிய மனைவியோடு வசதியாய் இருந்தார்.

அறிவுக்கரசனை ''உள்ளே வராதே'' என்றார். அறிவு அவர் கழுத்தில் துண்டைப் போட்டு முறுக்கி நியாயம் கேட்டான். இருநூற்று ஐம்பது முன் பணமாகவும் மெல்ல மெல்ல இரண்டாயிரம் ரூபாயும் கொடுத்து, தகப்பன் அறிவோடு சமாதானமானார்

அறிவு சொந்தக் காலில் நிற்கப் பழகிக் கொண்டான். வலியையும் அவமானத்தையும் கவலையின்றி ஏற்கக் கற்றுக் கொண்டான்.

தேசம் சுதந்திரம் அடைந்த பிறகு அந்த குழந்தைக்கு இருபத்து இரண்டு வயதில் எழுபது வருட அநு

பவத்தைத் தன்னுள்ளே கொண்டு, இனி யாரும் எதுவும் எவ்விதமாகவும் அவனை மாற்ற முடியாதபடி உறுதி யாய் பூமியில் நின்றான். கடவுள இந்த தூணில் நிற்கி றாரா என்று அறைந்து சிரிக்கும் இரண்யன் என பயமின்றி வளர்ந்தான்.

எதனால், எதைநோக்கி எவ்விதம் என்ற கேள்விகள் இன்றி—தேசம், கல்வி, கட்சி. கலை, தனி மனிதர்கள் தலைவர்கள் எல்லோரும் வளர்ந்தார்கள். அதேவிதமாய் அறிவும் வளர்ந்தான்.

அறிவு என்கிற அறிவுக்கரசன் கையில் இருந்த ஸ்டிலட்டோவை மெல்ல முத்தமிட்டான். முழங்காலில் அழுத்தி நிதானமாய் இழுத்தான். ரோமங்கள் மழிந்தன. உறையிலிட்டான். அரை நிக்கர் அடிப்பாகத்தில் உள்ள சின்னக் கிழிசல் வழியே மடிப்பில் செருகிக் கொண்டான். மறுபடி எழுந்து குடிப்பதற்குப்போனான்.

ஒரு நாளைக்கு இருபது ரூபாய் கூலி. இன்றோடு இருபத்து எட்டு நாள். அறிவால் மொத்தம் எத்தனை ரூபாய் என்று கணக்குப் போட முடியவில்லை ஆனால் கையில் பன்னிரண்டு ரூபாய்தான் இருந்தது அடுத்த கிளாஸுக்குக் கடன் சொல்ல வேண்டும் என்றுதீர்மானம் வந்தது.

குப்பத்து மத்தியில் பொதுக்கழிவிடம் அதன் உள்ளே சாராயம் கிடைக்கும். கழிவறைக்கு உள்ளேயோ வெளி யிலேயோ 'ஒன்றுக்கிருந்தால் உதை கிடைக்கும். வியா பாரம் நடக்கும் இடத்தைச் சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும். உள்ளே ஒட்டடைக் கொம்பு சின்னி, இரண்டாவது கிளாஸ் குடித்துக் கொண்டிருந்தான்.

''சின்னி கணக்கிலே எனக்கொரு க்ளாஸ் கொடு.''



''ஏன் உன் துட்டு என்னாச்சு?'' —சின்னி கோபமாப் முறைத்தான்.

''எல்லாம் குடிச்சிட்டேன்.''

''நம்மகிட்டையே டாவ் காட்றயே''— சின்னி கிளாஸை டக்கென்று வைத்துவிட்டு அறிவை மடமட வென்று தடவிக்காசு வைத்திருக்கிறானா என்று பார்த்த போது ஸ்டிலட்டோ தட்டுப்பட்டது.

''என்னா மச்சி அது?''

''முதல்ல வாங்கிக் கொடு.''

அறிவு இன்னொரு கிளாஸ், சின்னி மூணாவது கிளாஸ்.

வெளியே வரும்போது நிறைய ஏப்பம் வந்தது. நெஞ் சுக்குழி தீயாய் எரிந்தது. கண் இரப்பை கனத்து, ஒலி கள் அதிகமாகி உடம்பில் ஒரு ஜில்...தெரிந்தது.

''எங்கேடா புடிச்சே இதே''—சின்னி பயத்துடன் அதைத் தூக்கிப் பிடித்தான். அதன் திண்மையும் பள பளப்பும் பயமுறுத்தியது. விரலால் தடவி வளைத்து விட்டபோது 'ஸ்ரீங்' என்று பாடியது. பிடியை வாகாய் இறுக்கி அறிவை நோக்கி ஸ்டிலட்டோவை சின்னி நீட்டி னான்—''இப்ப சொல்லு. துட்டு இல்லே உன்னாண்ட''

இது தமாஸ்தான்—ஆனால் அறிவுக்கரசன் முகத்தில் சட்டென்று ஒரு பயம் படர்ந்தது. சின்னியின் மணிக் கட்டை இறுக்கி மார்பை பின்னுக்குத் தள்ளி காலை இடறி உதைத்தான். ஸ்டிலட்டோ மறுபடி அறிவுக் கரசன் கையில் வந்தது.

''கொஞ்சம் விட்டா ஏறிடுவியே.''

''உனக்கென்னா தெரியும் இதுபத்தி?''

சின்னிக்கு விளங்கவில்லை ஒரு கத்திக்கு, அறிவு இவ்வளவு கலவரப்படுவது புரியவில்லை

''எங்கடா புடிச்சே இதே?''

''மூர்மார்க்கெட் ''

''துட்டுப்போட்டா வாங்கினே?''

''ஒரு ஆப்பக்காரன் வேணுமான்னு கேட்டான். கையில் எடுத்துப் பிரிச்சுப் பார்த்தேன் சர்க்குன்னு அவன் சட்டையிலே ஒரு கோடு போட்டேன் சுவரு ஏறிகுதிச்சு காவாகரையில் இறங்கி ஓடிப்பூட்டான். எடுத்துகினு வந்துட்டேன்.''

''பழங்காலத்துக் கத்தி மாதிரி''

''கத்தியில்ல கண்ணு: இது போக்கே தினுசா இருக்குது, கொஞ்சம் வேடிக்கை பாரேன்.''

குடிசை வாசலில் எருமை ஒன்று மண்ணில் முளையடித்துக் கட்டப்பட்டு, வெய்யிலில் வாலை வீசியபடி நின்று கொண்டிருந்தது. அறிவு மாட்டைத் தடவிக் கொடுத்தான், மாடு சிலிர்த்து நிமிர்ந்தது. சுற்றிலும் தலையைத் திருப்பி யாரேனும் கவனிக்கிறார்களா என்று நோட்டமிட்டான். சட்டென்று ஸ்டிலட்டோவைப் பிரித்து மாட்டின் அடிவயிற்றில் சொருகி இழுத்தான். மாடு ஒரு முறை பயங்கரமாய் குரல் கொடுத்தது ஸ்டிலட்டோவில் ரத்தம் கொட்டியது. நிக்கரில் துடைத்து உறையிலிட்டு சட்டென்று நகர்ந்து இருவரும் மாட்டினிடமிருந்து பத்து கஜம் தள்ளி உட்கார்ந்து கொண்டார்கள்.

மாடு தவித்தது. கால்களை உதைத்துக் கொண்டது. தொடர்ந்து பெருங்குரலெடுத்துக் கத்தியது. குடிசையிலிருந்து சொந்தக்காரி வெளியே வந்தாள். மாட்டைச் சுற்றிப் பார்த்தாள்.



'இரண்டு மணிக்கே தவிட்டுக்கு அலையுது பொணம் என்று சொல்லிவிட்டு உள்ளே போனாள். மாடு அலைக்கழிந்தது. கயிற்றை அசைத்து அசைத்து முளைகளைப் பிடுங்கியது. அதன் கண்களில் ஜலம் வரத்துவங்கியது. விடுபட்டவுடன் நாலுமுறை துள்ளி பளிச்சென்று தடேலென விழுந்தது. அதன் கடைவாயில் பொங்கின ரத்தம் தரையை நனைத்தது.

மாட்டுக்காரி தலையில் அடித்துக்கொண்டு அழத் துவங்கினாள் சின்னி பயந்து போனான், கும்பலோடு கும்பலாய் மாட்டைப் பார்வையிட்டான். குத்தின இடம் வானம் பார்க்க இருந்தாலும் குத்தப்பட்டது யாருக்கும் தெரியவில்லை. சின்ன மெல்லிய கீறல் முக்கியமாய் படவில்லை. தோஷம், குலைக்கட்டி, செய்வினை விஷஜுரம், ஆளுக்கு ஆள் காரணம் கூறினார்கள். உண்மை புலப்படவில்லை. ஆசனவாய் ரத்த ஒழுகலைப் பார்த்து விட்டு ஒரு கிழவன் மாட்டின் வயிற்றை அழுத்தினான். காயம் பிளந்து ரத்தம் பீறிட்டது அட கத்தில குத்திட்டாங்க, என்றான்.

சின்னியும், அறிவும் கும்பலிலிருந்து பளிச்சென்றுபின் வாங்கினார்கள். சந்து பொந்துகளைக் கடந்து தெருவுக்கு வந்தார்கள்.

அறிவு சின்னியைச் சட்டென்று நிறுத்தினான். ''வெளியே சொன்னே எருமாட்டு கதிதான் உனக்கும்.'

சின்னி பலமாகத் தலையசைத்தான். ஒரு மைல் தொலைவில் உள்ள தொழிற்சாலை வாசலில் குத்தப்பட்டுக்கிடந்த ஒரு ஆளை நினைத்துக்கொண்டான். இந்த ஆயுதம் அறிவுக்கரசனிடம் இருக்கும் வரை அவனை எதுவும் செய்ய முடியாது என்று தெரிந்து கொண்டான். இந்த ரகசியம் தனக்குத் தெரிந்ததால் தன்னை அறிவு எந்நேரமும் சந்தேகமாய் கவனிப்பான் என்பதைப் புரிந்து கொண்டான்.

''அந்த ஆபீஸாண்ட இருபது ரூபா போறாதுன்னு சொல்லப்போறேன். நீ வறியா என்று அறிவைக் கூப்பிட்டான்.

அறிவு மறுககவே தனியே நடந்தான். தெரு திரும்பியதும் ஓட ஆரம்பித்தான். எதிர்ப்பட்ட பஸ்சில் ஏறி தொழிற்சாலை ஸ்டாப்பிங்கில் இறங்கி பாலம் தாண்டுகையில் பின்னால் ஆட்கள் வரும் ஓசை கேட்டது. ஓடலாமா என்று எத்தனித்தபோது இரண்டு பேர் அவனுக்கு முன்னால் ஓடி நின்று கொண்டார்கள். எதிர்பக்கத்திலிருந்து இன்னும் இரண்டுபேர் உருட்டுக்கட்டையுடன் வந்தார்கள். இவன் என்ன என்று கேட்கும் முன் பளிரென்று முழங்காலில் அடித்தார்கள். தபதபவென்று பாலத்துக்குக் கீழே தள்ளிக்கொண்டு போனார்கள்.

ஒரு லாரி கடந்து போயிற்று. சைக்கிளில் போனவர் பயத்துடன் திரும்பித் திரும்பிப் பார்த்துக்கொண்டு போனார். எதிர்க்கடை மலையாளி மடமடவென்று பாட்டில்களை உள்ளே அடுக்கிக் கதவை மூடினான். தெரு மாலை வெய்யிலில் மின்னியபடி இருந்தது.

சுப்பையா சின்னியின் முகத்தில் மாறிமாறி குத்தினான். சேற்றில் மல்லாக்காகத் தள்ளி மிதித்தான். எச்சப் பொறுக்கி பசங்களா. துட்டு வாங்கிக்கினா, அடிக்கிறீங்க?'' விலாவில் எட்டி உதைத்தான் சின்னியின் இரண்டு கணுக்காலிலும் ஏறி நின்று, முறுக்கிய ஒயரால் மார்பில் அடித்தான். மட்டமான சரக்கு பயத்தில் வெளியே வந்தது குபுக்கென்று சுப்பையாவின் காலில் விழுந்தது சுப்பையா அருவருப்புடன் நகர சின்னி கை கூப்பி அழுதான். ''நான் இல்லீங்க நான் இல்லீங்க, அறிவுதாங்க செய்தான். நான் இல்லீங்க.''

பயம், சாராயம், அடி, உதை, சேறு தனிமை கேட்க படாமல் உண்மை அந்த ஆறு தொழிலாளர்களுக்கிடையே ஜலத்தில் தெரிந்த சூரியனாய் மின்னியது.



அடுத்த அரை மணியில் சங்கக் கூட்டத்தில் கோபாலன் காதோடு சுப்பையா செய்தியைச் சொன்ன போது கோபாலன் உக்கிரமானான்.

''போ — எல்லோரையும் உடனே வரச்சொல்லு. நாலு டாக்சி புடி, கணக்குத் தீர்த்துடலாம் உடனே கிளம்பு.''

செருப்பை மாட்டிக் கிளம்பின கோபாலனை சுப்பையா அழுத்தி உடனே உட்கார வைத்தான். அறை கதவைத் தாழ் போட்டான்.

''நான்தான் தலைவரே கடன்பட்டிருக்கேன். இதை நான்தான் தீர்க்கணும், பேசாம என்னாண்ட வுடு.''

''என்ன சொல்றே நீ?''

''கணேசன் வீட்டு வாசல்ல பெருமாளு என்னை அடிச்சுப் போட்டபோது அந்தத் தெய்வம் மருந்துபோட்டுச்சு, சுடுதண்ணி வச்சி ஒத்தடம் கொடுத்தது. கூடப் பொறந்தவகூட செய்ததில்லை எனக்கு இவ்வளவோ. என் தங்கச்சி தாலி அறுத்தவனை நான்தான் அறுக்கணும் இது என்னோட காரியம். நீ வுடு. சொல்றதைக் கேளு''

கோபாலன் அவனை வெறித்துப் பார்த்தான்.

''ஆமா தலைவரே, நீ பேசாம இரு அந்தப் பையனை எனக்குத் தெரியும். எனக்குத்தான் தெரியும் உன் வேலையை நீ கவனி. இசகு பிசகா நீ இதுல மாட்டின, ஸ்டிரைக் மொத்தமும் திரும்பிப்பூடும், நீ பாட்டுக்கு உன் வேலையைக் கவனி. இதை என்னாண்ட வுடு, வாயைத் திறக்காதே ''— சுப்பையா கதவைத் திறந்து கொண்டு வெளியேறினான்.

குத்திட்டு உட்கார்ந்து கொண்டிருந்த சாவித்திரி திடுக்கிட்டு நிமிர்ந்தாள். அவள் இடது கண் அமானுஷிகமாய்த் துடித்தது.

# 11

"நீங்க அந்த அம்மாவுக்கு என்ன வேணும்?"

"............"

"தம்பியா?"

"இல்லை."

"கொழுந்தனா?"

"இல்லை"

"அதுக்கில்லீங்க. இந்த மருந்து டோஸ் கவனமா நீங்க சொல்லி அனுப்பணும் அதுக்கோசரம் கேட்கிறேன். என்ன வேணும். அந்த அம்மாவுக்கு?"

"அவங்க பக்கத்துப் போர்ஷன். எங்க வீட்ல அந்த அம்மா குடியிருக்காங்க." கம்பௌண்டர் பளிச்சென்று சங்கரனைத் திரும்பிப் பார்த்தான். அவன் கண்களில் இரண்டு கொக்கிகள் தோன்றி சங்கரன் கழுத்தை இறுக்கின. உலகமே இவ்விதம் தங்கள் இரண்டு பேரையும் திரும்பிப் பார்க்கும் காலம் நெருங்கிக் கொண்டிருப்பதாக சங்கரன் உணர்ந்தான்.

பீரியட்ஸ் தள்ளிப் போச்சுன்னு சொன்னாங்க—அதுக்கோசரம் இந்த மாத்திரை. மூணு வேளை மூணு மாத்திரை இது வலி குறைய. இதுவும் மூணு வேளை மூணு மாத்திரை, இது ஜுரத்துக்கு மருந்து.

சங்கரன் மருந்துகளுடன் தெருவில் இறங்கினான். வீச்சு இல்லாமல் மெல்ல ஊர்ந்து இவ்விதம் நடப்பது அவனுக்கே விநோதமாய் இருந்தது. தன்னுள் ஏதோ ஒரு வலிமை மெல்ல மெல்ல செத்துக் கொண்டிருப்பது தெளிவாய்த் தெரிந்தது.



இப்பவும் தனக்கு ஒரு வாய்ப்பு எதனாலேயோ கொடுக்கப்பட்டிருக்கிறது. தப்பிச்சிக்கோ என்று ஏதோ நின்று அறிவுறுத்திவிட்டுப் போயிருக்கிறது.

நேற்று மாலை தூள் தூளாகியிருக்க வேண்டிய கௌரவம், அந்தஸ்து, கம்பீரம் இன்றும் எதன் காரணமாகவோ ஒட்டிக் கொண்டிருக்கிறது.

சியாமளியின் அலறல் கேட்டு ராக்ஷஸன் மாதிரி உள்ளே நுழைந்த கணம் சற்று பிசகியிருந்தாலும், சங்கரனுடைய உலகம் மொத்தமும் மாறிப் போயிருக்கும். நல்லவேளை, சங்கரன் உள்ளே நுழைந்த நேரத்தில் தண்டபாணி அழத் துவங்கி விட்டான். அழுது கொண்டிருக்கும் தண்டபாணியைப் பார்த்ததும் சங்கரனின் ரௌத்திரம் பொசுக்கென்று போய்விட்டது. சறுக்கின சமயத்தில் யாரோ தாங்கிப் பிடித்த செயலாய் இவன் ஆத்திரத்தைத் தண்டபாணியின் அழுகை நிறுத்தி விட்டது.

சாதம் குழைந்திருக்கிறதே ஏன் என்று சாதாரணமாய் தண்டபாணி கேட்டிருக்கிறான்.

அப்படித்தான். இருக்கும் என்று சியாமளி பதில் சொல்லியிருக்கிறாள்.

கரிசனத்துடன் சமைக்க வேண்டும் என்று தண்டபாணி முணுமுணுத்திருக்கிறான்.

கரிசனம் உள்ளவளா பார்த்துக் கல்யாணம் பண்ணிக் கொண்டிருக்க வேண்டும் என்று பதில் பேசியிருக்கிறாள்.

சாதம் வேண்டாமென்று நகர்த்தியிருக்கிறான்.

நகர்த்தின தட்டைக் குனிந்து எடுத்து, நின்றவாக்கிலேயே வீசி பற்று தேய்க்கும் இடத்தில் எறிந்திருக்கிறாள். ஆத்திரம், ஆத்திரம் ஆத்திரம், உலகத்தில் உள்ள அத்தனை பேர் மீதும் ஆத்திரம்.

மட்டை பிளந்த மாதிரி தண்டபாணியிடம் அடிபட்டிருக்கிறாள்.

'அடி, அடி, என்னை அடிச்சுக்கொல்லு. விதலைக்குப் பிறந்த பிள்ளைதானே நீ. உனக்கு பொம்மனாட்டி மனசு தெரியுமா? அடிச்சுக் கொல்லு' என்று சீறியிருக்கிறாள்.

தன் மனைவியே தன் அம்மாவை இகழ்வது தாங்காத பிள்ளை அழுதுவிட்டிருக்கிறது. சங்கரன் தண்டபாணியின் கைகளைப் பிடித்துக் கூடத்தில் உட்கார வைத்தான். மின்விசிறியைப் போட்டான். மன்னி அவனைச் சமாதானப்படுத்தினாள். பகவான் மீது பாரத்தைப் போடு என்றாள்.

ஆனால் பாரம் சங்கரன் தலையில் இறங்கிற்று. இரண்டு பக்கமும் வாக்கு மூலங்கள் கேட்டு நியாயம் சொல்ல வேண்டியதாயிற்று. சங்கரன் கூசாமல் நியாயம் வழங்கினான். சியாமளியைக் குற்றவாளி என்றான். அவன் தீர்ப்பு தந்தபோது சியாமளி பெரிதாய் அழத் துவங்கினாள். அதுவரை மிரட்சியோடு நின்று கொண்டிருந்த குழந்தை அலறத் துவங்கியது. தண்டபாணி குழந்தையைச் சமாதானப்படுத்த சட்டையை மாட்டிக் கொண்டு குழந்தையுடன் வெளியே போனான். மன்னி அலுத்துக் கொண்டே வாசல் பக்கம் போனாள். அவர்கள் இரண்டு பேரும் நகர்ந்ததும் சியாமளி இவன் மடியில் விழுந்து குலுங்கினாள்.

''உனக்கு என்மேலே ஆத்திரம் சியாமளி. என் மூஞ்சிலே தட்டு வீசணும்னு வெறி. இதைப்போய் தண்டபாணி மேல் ஏன் காமிக்கிறே? என்னோட பரிதாபத்தை எதிர்பார்த்து எதுக்கு அடிபடறே? உனக்கு என்ன வேணும்னு நீ புரிஞ்சுக்கிற வரைக்கும் உனக்கு வாழ்க்கை நரகம்தான். உன்னைச் சுற்றி இருக்கிறவாளுக்கும் நரகம்தான். உன்னையே நீயே ஹிம்சைப் படுத்திக்காதே.



ஹிம்சை ஆசை வந்துடுத்துனா மீளவே முடியாது. இரண்டு நாள் பொறுமையா இரு. அப்புறம் உன் மனசுல என்ன இருக்கோ அதை வெளிப்படையா சொல்லு. கொஞ்சம்கூட பொய்யில்லாம, நேரடியா வா.''

சியாமளி அழுவதை நிறுத்தினாள். ஜுரத்தில் படுத்தாள். இரண்டு நாளாய் டாக்டர் வீட்டுக்கும், சியாமளி அறைக்கும் சங்கரன் அலைய ஆரம்பித்தான்.

மன்னி மாடியில் வடகம் உலர்த்திக் காவல் காத்துக் கொண்டிருந்தாள். ''சியாமளியைப் பிடிவாதம் பிடிக்காம மருந்தைக் குடிக்கச் சொல்லு.''

சியாமளி கசங்கின படுக்கையில் அமர்ந்தபடி சுவரோரம் முதுகைச் சரித்தபடி கண்களை மூடியபடி இருந்தாள். கறுப்பு ரவிக்கையும் கருநீலப்புடவையும் கலந்த தலையுமாய் இருந்தாள். ஜுரம் முகத்தை வாடச் செய்திருந்தது. எந்தக் கோலத்திலும் எந்த நேரத்திலும் இவள் அழகிதான் என்று ஓர் எண்ணம் மனசுக்குள் வந்தது. 'சீரான மூக்கும், செதுக்கின முகவாயும், மெல்லிய உதடுகளும், எழுதாமல் வளைந்தபுருவங்களும்... இப்படி ஒரு அமைப்பு எல்லாப் பெண்களுக்குமா கிடைத்து விடுகிறது. வெறும் அழகி மட்டும் தானா சியாமளி? இல்லை? இல்லவே இல்லை. மெல்லிசு மெல்லிசாய் ரசனையும், சரக்கென்று பற்றிக் கொள்ளும் புத்தியும், தன் எல்லா அபூர்வங்களைத் தானே பாராட்டிக் கொள்கிற கர்வமும், எதிராளி பாராட்டமாட்டார்களா என்கிற ஏக்கமும் நிறைந்த பெண். பாராட்டுகிறவனாய் தண்டபாணி இருந்திருந்தால் இந்தப் பழுது நேர்ந்திருக்காதோ. எட்டு வருஷம் குடித்தனத்தில் ஒரு எழவும் இல்லை என்று இவள் எரிந்திருக்க மாட்டாளோ. தண்டபாணி இல்லாமல் நானே இவளுக்குக் கணவனாய் வாய்த்திருந்தால் என்ன செய்திருப்பேன்?''

"இந்தப் பூ எம்பிராய்டரி நன்னா இருக்கான்னா?"

"எவ்வி, எப்படிப் போட்டே? வெறும் பூ மட்டும் போறாது சியாமளி சின்னதா இரண்டு இலை போடு. கரும்பச்சை எடுத்துக்கோ."

"ஸீட்டுக்குப், பின்னாடி இரண்டு பசங்க வழியெல்லாம் என்னமோ காமண்ட் அடிச்சிண்டே வந்தாங்க"

"யாரவன்?"

"ச்ச—பஸ் போயிடுத்து—கூச்சல் எதுக்கு?"

"என்ன சொன்னான்?"

"என்னமோ சினிமாப் பாட்டு, ஒருபக்கம் பார்த்தால் மிதிலையின் மைதிலி...?"

"ராத்திரி நான் பாடற பாட்டாச்சே. அது அவனுக்கெப்படித் தெரிஞ்சுது? ஒருவேளை பின்னாடி நின்னுண்டிருந்த நான்தான் ராத்திரி நினைப்பில் பாடிட்டேனோ."

"ச்சீ... பொல்லாது"

"என்னை உங்களுக்குப் பிடிச்சிருக்கானா?"

"இப்ப ஏன் இதைக் கேட்கிறே சியாமளி?"

"இப்படி அசந்து போயிருக்கிற நேரத்தில்தான் ஆம்பிளைகள் நெஜம் மனசு தெரியுமாம்."

"சொல்லுங்களேன்."

"எனக்கு இன்னொரு தடவை நீ வேணும்போல் இருக்கு."

"ஐயோ முரடே."

பொய்கள், பொய்கள், பொய்கள், சின்னதாய்ப் பொய்கள் வேணும் சியாமளிக்கு. பூ உதிர்க்கிற மாதிரி, ஜரிகைத் தூள் மாதிரி வீசிக்கொண்டே இருக்க வேண்டும் சியாமளிக்கு. தண்டபாணி, இதில் என்ன கஷ்டம் உனக்கு.



மருந்து பாட்டில்களைக் கீழே வைத்து விட்டுச் சங்கரன் சியாமளியின் நெற்றியைத் தொட்டுப் பார்த்தான்.

"இப்ப எப்படியிருக்கு?"

சியாமளி சின்ன திடுக்கிடலுடன் விழித்தாள். ஒருமுறை அவனை விழி விரியப் பார்த்து விட்டுக் கண்களை மூடிக் கொண்டாள். மறுபடி கண்களைத் திறந்து "மன்னி?" என்று வினவினாள்.

"மன்னி மாடில இருக்கா. சொல்லு. இப்ப எப்படி இருக்கு?"

"சாவு வரலையேன்னு இருக்கு."

"வரும், வராம போகாது. எல்லோருக்கும் ஒருநாள் நிச்சயமா வரும். வேண்டாம் வேண்டாம்னாலும் வலுக்கட்டாயமா வந்து நிற்கும்."

"வரட்டும் தாராளமாகவே வரட்டும். இந்த க்ஷணமே வரட்டும்."

"இப்ப நான்தான் வந்திருக்கேன். என் கேள்விக்குப் பதில் சொல்லு."

"கேள்விககு என்ன, யார் வேணா எதை வேணா கேட்கலாம்—அக்கறை இருக்கிற மனுஷா கேள்வி கேட்க மாட்டா"

"சரி கேட்கலை... இந்த மருந்தைக் குடி.

"எனக்கு வேண்டாம்."

"ஏன்?"

"எனக்கு வேண்டாம்?"

"சியாமளி, எனக்கு இந்த மருந்தைத் தூக்கி உன் மூஞ்சில் அடிக்கணும் போல இருக்கு.

"அடிங்கோ."

''அப்புறம் நான் தானே துடைக்கணும்''

''உங்களுக்கு என்ன தலையெழுத்து?''

''தெரியலையே, நீ தண்பாணி மேலே தட்டைத் தூக்கி எறிஞ்சே. அவன்மேல் இருந்த பருக்கையை நான் தான துடைச்சேன். அவன் உன்னைத் தூக்கி எறிஞ்சான். உன கண் ஜலத்தை நான்தான் துடைச்சேன். உங்க இரண்டு பேர் மேலேயும் கோபப்பட்டு இதைத் தூக்கி அடிச்சா, யார் துடைக்கறது? நான்தான் துடைக்கணும். நானே தூக்கியெறிஞ்சிட்டு நானே துடைக்கணும். பேசாம குடிச்சுடு, எனக்கு வேலை வைக்காதே.''

சியாமளி மருந்தை வாங்கிக் குடித்தாள். மருந்தை விழுங்கிக் கொண்டே சிரித்தாள். மருந்து புரைக்கேறியது தலையில் தட்டப்போன சங்கரனைத் தடுத்து வேண்டாமென்றாள்.

''ஏன்?''

''நான் வீட்ல இல்லை.''

சங்கரன் எழுந்து நின்றான். காலி டம்ளரை அலம்பி மேஜைமேல் கவிழ்த்தான்.

''சரி, அப்ப நான் மாடிக்குப் போறேன்'' என்றான்.

''அங்கே போய் கொட்டு கொட்டுன்னு மோட்டுவளைய பார்த்துண்டு உட்கார்ந்திருக்கணுமாக்கும்.''

''இங்கே படுத்துக்க முடியாதே?''

''அது வாஸ்தவம் படுக்கத்தானே சியாமளி.''

''ச்சீ நாயே, ஒரே அறை— நீ கேட்ட சாவு உடனே வந்துடும்'' அவள் முகத்துக்கு நேரே நீட்டின கையை சியாமளி இழுத்து முத்தமிட்டாள்.

''கொன்னுடு, கொன்னுடு' சாகறதாவது என் இஷ்டப்படி அமையட்டும்.''—விழியோரம் நீர் பளபளக்க மூக்கை உறிஞ்சினாள்.

சென்னை-603 308



சங்கரன் மண்டியிட்டு அமர்ந்தான். சியாமளியின் தலையைத் தன் தோள்மீது சாத்திக் கொண்டான். இடுப்பை வளைத்து தனக்காய் இழுத்தான். அவளை மூச்சுத் திணறும்படி இறுக்கினான். தளர்த்தினபோது அவன் இறுக்கினது தாங்காமல் சியாமளி சுவர்மீது மீண்டும் சரிந்து கொண்டாள்.

''சொல்லு சியாமளி, உனக்கு என்ன வேணும் சொல்லு?''

சியாமளியின் கண்களில் நீர் கோடிட்டுஇறங்கி தோள் எலும்பில் சிதறி ரவிக்கையை நனைத்தது.

''சொல்லுடா உனக்கு என்ன வேணும்?''

''நீ வேணும் சங்கரா''

''பட் வொய்? நான் என்ன அப்படி உசத்தியா''

''பொம்மனாட்டியை இப்படி உள்ளங்கையிலே வச்சு தாங்கற ஆம்பிளைகள் ரொம்பக் குறைச்சல் சங்கரா. யாராவது என்னைத் தாங்கணும். தோள்ல வச்சிண்டு போகணும், மனசைப் புரிஞ்சிண்டு பேசணும் பேச்சே இல்லாத நினைப்பே பாஷையாகி நான் நினைக்கிறதையே நீ நினைச்சு நீ நினைக்கிறதையே நான் நெனைச்சு நினைக்கிற போதே ஒருத்தருக்கொருத்தர் உதவியா காரியம் பண்ணி...பொம்மனாட்டி ஆடோ மாடோ இல்லை சங்கரா. கொல்லை மாடு கத்தறதே குவளைய எடுத்துண்டு போய் சுரப்புபுடின்னு சொல்றது பாவம். மாடு கார்த்தால கத்தினா பால் கறக்கும் மத்தியானம் கத்தினா தவிடு கேட்குங்கிற மாதிரி பொம்மனாட்டியை நடத்தப்படாது. மாடு வளர்க்கிற மாதிரி பொம்மனாட்டியை வளர்க்க படாது. அவளுக்கும் மனசு உண்டு. ருசி அருசி உண்டுன்னு இங்கு யாருக்காவது தெரியுமா? உனக்குத் தெரியறது சங்கரா. உனக்கு இது தெரியும்னு

எனக்குத் தெரிந்த பிறகு பிரிஞ்சு போறதுக்குக் கஷ்டமா இருக்கு. அறுத்துக்கோன்னு என் மனசும் சொல்றது. முடியலையே ஒரேயடியா எல்லாத்துலேர்ந்தும் அறுக்க முடியலையே''

சியாமளி சோர்வுடன் படுக்கையில் சரிந்தாள். முழங்கையால் முகத்தை மூடிக்கொண்டு விசும்பி விசும்பி அழுதாள்.

''உனக்கு நான் கெடுதல் பண்றேன்னு எனக்குத் தெரியாதா. ஆனா உனக்கு நான் நல்ல துணையாக இருக்க முடியும் சங்கரா. கெட்டுப் போனவளாச்சே எச்சில் பண்டமாச்சேன்னு உனக்குள்ளேயும் நினைப்பு வரும். ஆனாலும் சொல்றேன், சாகறவரைக்கும் உன் கால் நிழல்ல நான் நாயா இருக்க முடியும். எனக்கு சிநேகம் வேணும் சங்கரா, ஓட்டைச் செம்புல குளிக்கிற மாதிரி இவரோட குடித்தனம் பண்றேன். தடேர்னு விழற அருவி மாதிரி நீ கிடைச்சப்போ அருவியை விட்டுட்டு வெளியே வர முடியலை. உடம்பெல்லாம் கீறி ரத்தமானாலும் சரி அருவியோடு அடிச்சுண்டு போனா என்னன்னு தோணறது சங்கரா, நாம் ஓடிப்போயிடலாமா? குழந்தை வேண்டாம் குடித்தனம் வேண்டாம். நீயும் நானும் மட்டும் ஓடிப்போயிடுவோம். கண் காணாம எங்காவது தூர தேசமா ஓடிப்போயிடுவோம். சொல்லு இப்ப சொல்லு. நாம ஓடிப் போயிடலாமா?''

''பக்தியால் யான் உனைப் பலகாலும்
பற்றியே மாதிரு புகழ்பாடு
உத்தம தானசப்பெரு வாழ்வில்
வெற்றியே சேர்வதற் கருள்வாயே
வித்தகா ஞானசத் குணநேயா...''

சங்கரன் மனசுக்குள் வரிசை வரிசையாய் சிறுவர்கள் நின்று கைகூப்பிப் பாடினார்கள். சின்னப் பையனாய் அரை டிராயரும் வெள்ளைச் சட்டையும் விபூதிக்கீற்றுமாய் அவர்களுக்கு நடுவே சங்கரனும் நின்று கொண்டிருந்தான். தொண்டைக்குள் பாட்டு கமறிக் கமறி எழுந்தது.



கண்களில் ஜலம் கட்டிற்று. உன்னையா நான் சின்னச் சின்னப் பொய்களைத் தேடுபவன் என்று நினைத்தேன்! இத்தனை பாரமா உன் மனசில்! சங்கரன் மனசுக்குள் பாட்டை நிறுத்தினான். கண நேரம் சலனமின்றி மனசை நிறுத்தினான். இது இவ்விதம் இருக்குமாயின் இருக்கட்டும் என்று முடிவு செய்தான்.

''இன்னும் பத்து நாட்களில் நாம் இரண்டு பேரும் இந்த வீட்டை விட்டு வெளியே போகிறோம். இது சத்தியம்'' என்றான். வலது உள்ளங்கையை விரித்து அவள் தலையில் வைத்தான்.

சியாமளி விசுக்கென்று எழுந்தாள். அவன் மடியில் விழுந்தாள். புடைவை நெகிழ சந்தோஷத்துடன் அவனை அணைத்துக் கொண்டாள். தன் மூக்கை, உதடுகளை, அவன் மார்பு முழுக்க இழைத்து கிளர்ச்சியுடன் முத்தமிட்டாள். ''தேங்க்யூ தேங்க்யூ சங்கரா.'' என்றாள். சங்கரன் உதடு கரித்தது.

ஒருக்களித்த கதவினூடே உள்ள இடைவெளி வழியாய் கூடத்தில் நின்றபடி, இவர்கள் இருவரையும் பார்த்துக் கொண்டிருந்த மன்னி வெளிறிப் போனாள்.

## 12

''அரசியல் கலப்பே வாணாம் நம்ம போராட்டத்துலேன்னு சொன்னீங்க. இப்ப உங்க பார்ட்டி ஆளுங்க

கிட்ட யோசனை கேட்கணும்னு போறீங்க. நீங்க செய்யறது எனக்குப் புரியலை.''

—டாக்ஸிக்குள் கோபாலனை அடுத்தபடி உட்கார்ந்திருந்த பார்த்தசாரதி கேள்வி கேட்டான்.

''ஒரு அரசியல் கட்சிக் கொடிக்குக் கீழே நாம போகப் போறதில்லைன்னு சொன்னேன். சப்போர்ட் வாணாம்னு சொல்லலை. ஒரு தொழிற்சங்கப் போராட்டத்துக்கு அரசியல் கட்சி ஆதரவு கொடுத்தா என்ன தப்பு?''

''நமக்கு எதுக்குக் கட்சி சப்போர்ட் வேணும்?''

''இது நல்ல கேள்வி, ஒரு போராட்டம்னா உடனே அது மேனேஜ்மெண்டை எதிர்க்கறது மட்டுமில்லை. மறைமுகமா அரசாங்கத்தையும் எதிர்க்கிற மாதிரிதான்.''

''இப்ப ஆளும் கட்சிக்கு நாம எதிரின்னு சொல்றீங்களா?''

''நான் சொல்லலை, ஆளும் கட்சியே சொல்லும். போராட்டத்தை விடு. வேலைக்குப் போ. பேசித் தீர்த்துக்க. உற்பத்தி கொடுன்னு கட்டளை போடும்.''

''அதுகிட்டயே நியாயம் கேட்கலாமே?''

''கேட்கலாம். கிட்ட போய் கேட்டு நியாயம் கிடைக்காட்டா? அப்புறம் எதிர்க்ட்கசிக்குப் போக முடியலை. சட்டசபைல இருக்கிற எதிர்க்கட்சி கிட்ட முதல்ல போய் நம்ம குறையைச் சொல்லி அது மூலமா ஆளும் கட்சிக்கு விவரம் போய் ஆளும் கட்சி நம்மை நல்லபடி அணுகினா ஆளும் கட்சியை நமஸ்காரம் பண்ணலாம். எடுத்தவுடனே ஆளும் கட்சியைப் பிடிக்க முடியாது நடுத்தெருவுலதான் நிக்கணும். தனியா மாட்டணும் தனியா மாட்டினா துண்டு போட்டுருவானுங்க.''

''மத்த எல்லா எதிர்க்கட்சியையும்விட்டு விட்டு நீங்க ஏன் தலைவரே கம்யூனிஸ்ட் கட்சிகிட்ட போனீங்க? நீங்க முன்னாடி மெம்பரா இருந்தீங்கறதிலாலயா—?'' சுப்பையா இடையில் புகுந்தான்.



''ஆமாம்.''

டாக்ஸிக்குள் மறுபடி மௌனம் நிலவியது. முன் பக்கம் சுப்பையா, தேசிகன், பின் பக்கம் சுந்தரம், பார்த்தசாரதி, கோபாலன், மெர்க்குரி விளக்குகள் ஒளி, நாலு விநாடிக்கொரு முறை டாக்ஸிக்குள் விழுந்து ஆட்கள் முகபாவத்தை அடையாளம் காட்டியது.

''எதிர்க்கட்சிகிட்டப் போறமே, அதனாலேயே ஆளுங்கட்சி நம்மை விரோதியா நினைச்சுடாதா? கெடுதல் பண்ண நினைக்காதா?'' பார்த்தசாரதி மீண்டும் கேள்வி கேட்டான்.

''ஒவ்வொருத்தர் நினைப்புக்கும் பயந்துகிட்டு இருந்தா காரியம் பண்ண முடியாதுபார்த்தசாரதி. ஏதோ ஒரு பக்கமா முடிவு எடுத்தாகணும். ஆளுங்கட்சி நம்மை ஏன் அங்க போனேன்னு கேட்கட்டும். அப்ப பதில் சொல்லலாம். இது நாள் வரைக்கும் ஏன் போராட்டம்னு கேட்காமயே இருந்தானே, அது ஒரு விஷயமா படலையா உனக்கு?''

பார்த்தசாரதி சங்கடத்துடன் நெளிந்தான்.

சிந்தாதிரிப்பேட்டைக்குள் டாக்ஸி நுழைந்ததும் சந்து பொந்துகளைக் கடந்து இருட்டில் நின்றது. ''இறங்கி தனித்தனியே நில்லுங்க. இது ரகசிய சந்திப்பு; இடம் எதுன்னு எனக்கே தெரியாது. சரியா ஒரு மணி நேரம் பன்னிரெண்டரை மணிக்கு வெளியே வரேன். டாக்ஸி அங்கேயே இருக்கட்டும்.''

தோழர்கள் மெல்லப் பிரிந்தனர் கோபாலனை மெல்லிய விசில் கொடுத்து யாரோ கூப்பிட்டார்கள். ஒரு அச்சாபீஸ் பின்பக்கச் சந்து வழியே நடந்து இரண்டு கட்டடங்களைத் தாண்டி மாடியேறி ஒரு

அறைக்குள் நுழைந்து கதவைச் சாத்தி—மறுபக்கக் கதவைத் திறந்த போது வெளிச்சம் சூழ்ந்த பெரிய ஹாலில் பத்து பேர் நாற்காலியில் உட்கார்ந்து மெல்லிய குரலில் பேசிக் கொண்டு இருப்பது தெரிந்தது கோபாலனுக்கு நாற்காலி கொடுக்கப்பட்டது. கூட்டத்தில் காரணம் சொல்லி முடிக்கப்பட்டது.

கோபாலனைப் பேசச் சொன்னார்கள். அரசியல் ரீதியான உதவி, பண உதவி, வழக்குகளில் வாதாட வக்கீல் உதவிகள் கேட்டான். போராட்டக் காரணங்களைத் தெளிவுபடுத்தினான். தன் மீதும் தன் தோழர்கள் மீதும் போடப்பட்ட வழக்கு விவரங்களைச் சொன்னான். தொழிலாளர் விரோதப் போக்கை மேனேஜ்மெண்ட் கொண்டிருப்பதைச் சுட்டிக் காட்டினான். கதவடைப்பு பற்றி அரசு கவலைப்படாததை எடுத்துரைத்தான். மேற் சொன்ன உதவிகள் அனைத்தும் உடனே வேண்டுமெனவும் செய்திப் பத்திரிகையின் துணை பெற முயற்சி செய்யப் போவதாகவும் சொன்னான்.

உதவிகள் தர பொதுவாய்க் கட்சி காரியக் கமிட்டி உறுதி சொல்லிற்று. அதற்கு முன் சில கேள்விகள் கேட்க வேண்டும் என்று இருவர் சொல்ல கோபாலன் தயார் ஆனான்.

''பத்து தினம் முன்பு நடந்த பொதுக் கூட்டத்தில் நபர் எவ்வளவு?''

''பத்தாயிரம் இருக்கும்.''

''வசூலான தொகை.''

''இரண்டாயிரத்து சொச்சம்.''

''என்னவென்று வசூலித்தீர்கள்.''

''கணேசன் என்ற ஊழியர் குத்தப்பட்டு இறந்தார். அவர் குடும்பத்து நிதிக்கென்று.''

''நிதி கொடுக்கப்பட்டு விட்டதா.''



''ஆம்''

''உங்கள் நிதி நிலைமை மோசமாயிருக்கிறபோது, தொழிலாளியிடம் பிடுங்கிக் குடும்ப நிதி கொடுப்பது அவசியமா.''

''அவசியம், அவர் குடும்பத்திற்கு யூனியன் சார்பான உதவி இது மேனேஜ்மெண்ட் வலை விரிப்பை இது தடுக்கும்.''

''இவ்விதம் வசூலிப்பு யூனியன் .கமிட்டி மீட்டிங்கில் பேசப்பட்டுச் செய்ததா.''

''இல்லை''

''யார் ஏற்பாடு இது''

''என்னுடைய ஏற்பாடு.''

''என்று நிதி கொடுக்கப்பட்டது.''

''உடனே—அன்று இரவே.''

''அந்த வீட்டில் உணவு அருந்தினீர்களா.''

''ஆமாம்.''

''நீங்களுமா.''

''ஆமாம்''

''அது தவறென்று உங்களுக்குப் படவில்லையா.''

'உபசரிப்பை மீற முடியவில்லை.''

''மீற எத்தனம் செய்தீர்களா.''

''இல்லை.''

''ஏன்.''

''அதில் தவறு ஏதும் தெரியவில்லை.''

கோபாலன் அவர்களே சொந்த விவகாரங்களில் கட்சிக் கமிட்டி தலையிடுவதைப் பொறுத்துக் கொள்

ளுங்கள். இந்த நிதி கொடுத்தவரை போகட்டும். அந்த வீட்டிற்குள் நீங்கள் போவது நல்லதல்ல. கட்சி அதை விரும்பவில்லை."

"காரணம் என்ன."

திரு. கணேசன் அவர்களின் மனைவியை உங்களோடு சம்பந்தப்படுத்தித் தொழிலாளர்கள் பேசிவிடலாம். இது போராட்டத்தைச் சிதறடிக்கும் விஷயமாய் மாறிவிடலாம்."

"இது அபத்தம் சான்றுகள் இல்லாத விஷயம்."

"சந்தேகம் இல்லாத வரை உயர்வு. இருப்பினும் கட்சி இதைக் கவனமாய்ப் பார்க்கிறது. நீங்கள் நிதி கொடுத்ததே அதிகப்படி விஷயம்."

"யார் அவ்விதம் சொன்னது."

"கட்சி சொல்கிறது. கோபாலன் குரலை உயர்த்திப் பேசாதீர்கள், இது ரகசியக் கூட்டம்."

"கட்சியில் கீழ்த்தரமான ஆட்கள் இருக்கிறார்கள். சம்பந்தமின்றிக் குற்றச் சாட்டுகள்..."

"மன்னிப்புக் கேளுங்கள்."

"எதற்கு."

"காரியக் கமிட்டியை எதிர்த்துப் பேசினதற்கு."

"நியாயமில்லாத குற்றச் சாட்டு."

"மன்னிப்புக் கேளுங்கள் "

"ஏன்."

"மன்னிப்புக் கேளுங்கள்."

"நான் செய்த தவறென்ன."

"மன்னிப்புக் கேளுங்கள்."



கோபாலன் குறுகினான். இரண்டு கைகளையும் தொண்டையிடுக்கில் வைத்துக்கொண்டு தலையைக் குனிந்து கொண்டான்.

"மன்னிப்புக் கேட்காவிடில்...?"

"உதவிகள் மறுக்கப்படும். காரியக் கமிட்டி உடனே கலையும்."

"எங்கள் போராட்டத்தைவிட என்னை அவமானப் படுத்துவது முக்கியமா உங்களுக்கு?"

'தவறு கோபாலன். நீங்கள் இல்லாது போனாலும் போராட்டம் நடக்கும். தனியொரு நபரை நம்பி எந்தப் போராட்டமும் நடப்பதில்லை. இது அடிப்படை விதி. நீங்கள் அடிப்படைகளை மறந்திருக்கமாட்டீர்கள் என்று நினைக்கிறோம்."

"சிதறிக் கொண்டிருந்த தோழர்களை நான் ஒன்று சேர்த்தேன். மேனேஜ்மெண்ட் ஏமாற்றுதலைத் தனியொருவனாய் எதிர்த்தேன், ஆசை காட்டிப் பெரிய ஒப்பந்தம் போட்டபோது இரு ஏமாற்று வேலை, நம்ப வேண்டாம் என்று சொன்னேன். ஏமாந்த தொழிலாளிகளை, சிறையில் அடைக்கப்பட்டவர்களைத் தனியொருவனாய் உற்சாகப்படுத்தினேன்!"

"தனியொரு நபராய் மேற்கொண்டு செயல்பட வேண்டியதுதானே! உதவி கேட்டு வருகிறீர்களே!"

"நான் உதவி கேட்ட காரணத்தினால் தானோ இவ்விதம் என்னைக் கொடுமைப்படுத்துகிறீர்களோ!"

"தவறு... கோபாலன் உதவி உங்களுக்கல்ல போராட்டத்திற்கு. நாங்கள் செய்யும் உதவி தனி நபருக்கல்ல. தொழிலாளத் தோழர்களுக்கு. பாட்டாளி வர்க்கத்தின் நன்மைக்கு! ஆசாபசாங்களுக்கு. இதில் நன்மை கிடைக்கும் என எதிர்பார்ப்பது நல்லதல்ல."

"எனக்கு ஆசாபாசங்கள் என்று யார் சொன்னது?"

"கட்சி சொல்கிறது. கட்சி எல்லாப் பிரச்சினைகளையும், நபர்களையும் மிகக் கவனமாய்ப் பார்ப்பது உங்களுக்குத் தெரியும்."

"தயவு செய்து என் தவறை கட்சி விளக்க வேண்டும். நிதியளித்தது தவிர அங்கு ஒருவேளை உணவு எடுத்ததைத் தவிர நான் ஏதும் பாச உணர்வைக் காட்டி விடவில்லை."

"சிறையிலிருந்து ஆறுதல் கடிதம் எழுதியிருந்தீர்கள் வீட்டைச் சுற்றித் தொழிலாளர்களை நிறுத்திக் காவல் வைத்திருக்கிறீர்கள். உணர்ச்சி வசப்பட்டு பழிக்குப்பழி என்று கிளர்ந்த தொழிலாளர்களை உற்சாக மூட்டியிருக்கிறீர்கள். வெகு சமீபத்தில் கொலை செய்தது யார் என்று உங்களுக்குத் தெரிய வந்திருக்கிறது. அதற்குப் பதில் காரியமாய் ஒரு தொழிலாளியை ஏவிவிட்டிருக்கிறீர்கள். இது எதுவும் நல்லதல்ல. அந்தத் தொழிலாளி நாளை போலீஸின் கொடுமை தாங்காமல் உங்களைக் காட்டிக் கொடுத்தால் என்ன ஆகும்? போராட்டத்தின் கதியென்ன? இதனால் திசை திரும்பித் தொழிலாளிகள் மீண்டும் அடிமைப்பட வாய்ப்பிருக்கிறதில்லையா?"

"ஆகவே..."

"மன்னிப்புக் கேளுங்கள்."

கோபாலன் அயர்ந்தான், நாற்காலியில் சரிந்தான். தன்னைக் கட்சி துல்லியமாய் வேவு பார்த்திருப்பதைத் தெரிந்து கொண்டான். தான் இதில் இறங்கும் முன்னரே கட்சி இறங்கித் தன் ஆட்களைத் தன்னோடு கலக்கவிட்டிருக்கிறது என்பதைத் தெரிந்து கொண்டான்.

"என் தவறுகளுக்குக் கட்சியிடம் மன்னிப்புக் கேட்கிறேன். இனி இவை நேராவண்ணம் பார்த்துக் கொள்கிறேன்."



கட்சி மன்னிப்பை அங்கீகரித்தது.

அந்த க்ஷணத்திலிருந்து எல்லா உதவிகளும் வழங்கப்படும் என்று சொல்லப்பட்டது.

கட்சியைக் கலக்காமல் நிதி வசூலோ—கூட்டமோ-ஊர்வலமோ வேறு எந்த முயற்சியும் கோபாலன் செய்யக் கூடாது என்று நிபந்தனை போட்டது. கட்சி ஆதரவு தரும். நாளைக் காலைப் பத்திரிகையில் விவரம் வெளியாகும் என்று சொல்லிற்று

இனி எக்காரணம் கொண்டும் கோபாலன் ஒரு தனி நபர் அல்ல, அவன் ஒரு கருவி. போராட்டம் என்கிற வாளின் கூரியமுனை. கட்சி கைப்பிடியாய்ச் செயலாற்றும்.

"வாழ்க தொழிலாளர்கள்."

"வெல்க போராட்டம்."

"வாழ்க கம்யூனிஸ்ட கட்சி."

கூட்டம் கலைந்தது. கோபாலன் லேசான ஜுரத்தோடு வெளியே வந்தான். தோழர்கள் டாக்ஸிக்குள் ஏறிக் கொள்ள டாக்ஸி மறுபடி மெர்க்குரி விளக்கு வெளிச்சங்களுடே பறந்தது. "என்ன ஆச்சு தலைவரே?"

"உதவி கிடைக்கும்."

சிந்தாதிரிப்பேட்டை ரகசியப் போலீஸ் ஏட்டு முனுசாமி நாயுடு துரைசிங்கப் பெருமாள் எதிரே நின்று விரைப்பாய் சல்யூட் செய்தார். இரவு நடந்த ரகசியக் கூட்டத்தில் கலந்துகொண்ட நபர்களின் பெயர் டாக்ஸி நெம்பர், நேரம்-அங்கு பேசப்பட்ட விஷயங்கள் எல்லாவற்றையும் தான் தமிழில் எழுதியிருந்ததைக் கொடுத்தார்.

துரைசிங்கப் பெருமாள் வேகமாய் ரிப்போர்ட்டைப் படித்தான் டெலிபோனைத் தட்டி கமிஷனரைக் கேட்டான். கமிஷனர் இரண்டு நாள் லீவாம்; செங்கல்பட்டு அடுத்த கிராமத்தில் மகளுக்குச் சீமந்தமாம். பெருமாள் யோசனை செய்தான், மோட்டார் சைக்கிள் ரிப்பேரோடு கோட்டைக்குப் பறந்தான். சி.எம். இருக்கிறாரா என்று பணிவுடன் கேட்டான். அவசரம் என்றான்.

இவன் பெயரைக் கேட்டதும் சி.எம். அவனை உள்ளே அனுமதித்தார். உள்ளே இருந்தவர்களை வெளியே போகச் சொன்னார். பத்து நிமிடம் நின்றபடியே முதலமைச்சரிடம் பேசிவிட்டுச் சந்தோஷம் பொங்க வெளியே வந்தான்

சி எம்மின் ரகசிய போன் நெம்பர்கள் அவனுக்குக் கொடுக்கப்பட்டன. எந்நேரமானாலும் அவருடன் நேரடித் தொடர்புகொள்ள அனுமதி கொடுக்கப்பட்டது.

அன்று மாலை ஒரு திருமண விருந்தில் முதலமைச்சர். நகரில் நக்ஸலைட்டுகள் ஊடுருவல் அதிகம் உள்ளதென்றும் அரசு அதைக் கவனத்துடன் நின்று முறியடிக்கும் என்றும், போராட்டம் என்கிற பெயரில் நகரில் சலசலப்பு உண்டு பண்ணுவது நல்லதல்ல என்றும், பொதுஜன வசதிக்குக் குந்தகம் நடக்கும் சம்பவம் எதையும் அரசுதிடமாய் மறுக்கும் என்றும், பிரச்சனைகளைப் பேசித் தீர்ப்பதே நல்லதென்றும் தெளிந்த தமிழில் சுவையான உபமானங்களோடு பேசினார்.

மணமக்கள் மாலை மாற்றிக் கொண்டு முதலமைச்சரை வணங்கினார்கள்.

அன்று இரவு சுப்பையா வீட்டு வாசலில் ஒரு ஆள் நின்று. 'தான் சுப்பையா சம்பந்தி வீட்டு மூத்தாள பிள்ளை என்று ,சொல்லி, சுப்பையா இருக்கிறாரா என்றும் கேட்டான். சுப்பையா அவனைத் தொலைவிருந்தே புரிந்து கொண்டான். வீட்டுப் பின் பக்கம் போய் சுவர் ஏறிக் குதித்து இருளில் மறைந்து போனான். சுப்பையா ஓடிப் போன பத்தாவது நிமிடம் அவன் வீட்டைப் போலீஸ் சூழ்ந்து கொண்டது. அவன் மனைவியும், பதினாறு வயசு மகனும் போலீஸ் ஸ்டேஷனுக்கு அழைத்துப் போகப் பட்டார்கள். சுப்பையா வீட்டு வாசலில் மாடு வாங்க வந்த ஆந்திராக்காரன் மாதிரி வேஷத்தில ஏட்டு முனுசாமி நாயுடு உட்கார்ந்து கொண்டார்.



## 13

**சா**வித்திரி எழுந்து நின்றாள். இடது கண்ணை அழுத்திப் பொத்திக் கொண்டாள். விரல்களுக்கிடையே மெல்லிய நரம்பு கண்ணுக்குள் துடிப்பது தெரிந்தது. என்ன நேர்ந்தது இந்தக் கண்ணுக்கு? என்ன நல்லது வரப் போகிறது எனக்கு? இனி நல்லது கெட்டது என்பதுக்கு அர்த்தம் உண்டா? சந்தோஷம் என்பது இனி வருமா? ஒரு விஷயம் பற்றி நான் எதிரொலிப்பது தானே சந்தோஷமும் சங்கடமும். குறைந்து இறுகிப் போன எனக்கு எது வந்தால் என்ன?

சுற்றி நின்று எல்லோரும் கதறினார்கள். வீணா போயிட்டியேடி என்றார்கள். கதறின நேரம் புரியவில்லை. இப்போதுதான் புரிகிறது, அந்த உறவுமுறைப் பெண்கள் கதறினதுக்கு அர்த்தம், இப்போதுதான் புரிகிறது. மடத்தனம். குடித்தனம் பற்றி, குடும்பம் பற்றி கொஞ்சம் கூடத் தெரியாத மடத்தனம். அவர்கள் வீணா

யிடுத்து என்று கதறினது என் உடம்பைப் பார்த்து இனி நீ பெண்டாட்டியில்லை என்பதை உத்தேசித்து, நான் இரண்டு குழந்தைகளுக்கு அம்மா இல்லையா, உலகம் தெரிந்த பெண் இல்லையா, என் தமையனுக்குச் சகோதரி இல்லையா, இது அத்தனையும் மீறி பெண்டாட்டியாய் இருப்பது கௌரவம்தானா. மங்கலச் சின்னங்களுடன் வளைய வருவது பெருமைதான். ஒரு இனிமையான கணவனுடன் சல்லாபித்துச் சண்டை போட்டு மனசு பரிமாறி வாழ்வது உத்தமம்தான். இனி சாவித்திரி என்கிற ராணி பதவி துறந்து கௌரவச் சின்னங்களை நீக்கி சாதாரணப் பிரஜை ஆனது மாதிரி தான்.

''வீணே போயிட்டியேடி.''

சாவித்திரி இப்போது காதுகளைப் பொத்திக் கொண்டாள். உடலென்பது கூடலுக்கு மட்டுமேயா? புருஷனை இழைத்து அயரத்தானா? முட்டாள் பெண்களே உப்பைக் குறைச்சுக்கோ என்கிறாள் பாட்டி. சரக்கென்று கோபம் வந்தது. உப்பும் இனிப்பும் கொஞ்சம் கொஞ்சமாய்த் தவிர்க்க வேண்டுமாம் உடம்போடு சண்டை போடும்படி நேர்ந்து விடுமாம். சக பெண்ணிடம் எவ்வளவு அவநம்பிக்கை.

''முன் காலத்தில் யுத்தம் வந்தா பெண்களைத் தூக்கிண்டு போய்டுவா. தடுக்கறதுக்கு ஆம்படையான் இல்லாத பெண்களை யாரும் எதுவும் பண்ணப்படாதுன்னு தலையை மழிச்சிடுவா'' பாட்டி சூசகமாய்ப் பேசுவது நெஞ்சில் கல்லை வைத்து அழுத்தியது போல் வலித்தது. 'ஐயோ' என்று அயர வைத்தது. தலைமுடி பர புருஷனை வசீகரித்து விடும் விஷயமாம்.

கூடல் என்பதில் உடம்பு மட்டும்தானா? மனசு இல்லையா? சாதுர்யமும், சிநேகமும், கம்பீரமும்



நிறைந்த புருஷனை இழந்த பிறகு, கிடைத்தற்கரிய கணவனை இழந்த பிறகு இன்னொரு ஆளுக்கு உடம்பு அலையுமா? உவ்வா...குமட்டிற்று சாவித்திரிக்கு.

கணேசன்—கணேசன் என் இனிய புருஷன். அவனை நினைக்கும்போதெல்லாம் முதுகுக்கும் வயிற்றுக்கும் நடுவே மின்னல் மாதிரி ஒன்று விதறிக் கொண்டு ஓடிற்று.

என்னவோ பண்டிகையென்று ஒரு நாள் ஒன்பது கஜம் உடுத்தியிருந்தாள். தானே நிதானமாய் மடிப்பு எண்ணி இடுப்புக் கணக்குப் பார்த்து உடுத்தியிருந்தாள். பட்டென்று ரொம்ப பாந்தமாய் அமைந்து விட்டது. ஒன்பது கஜ சூட்சமம் பளிச்சென்று தெரிந்துவிட்டது. மூத்தவள், வயிற்றில் மூணுமாதம் இடுப்பு அகல ஆரம்பித்த நேரம் சிடுக்கென்று புடவை உட்கார்ந்து விட்டது. நீவி உடுத்தி ஹாலுக்கு வருகையில் எதிரே கடைச் சாமான்களோடு வந்த கணேசன் திகைத்துப் போனான். ''யம்மா. இத்தனை அழகா நீ. தெரியவில்லையே சாவித்திரி 'கொஞ்சம் உட்காரேன். சித்த பெஞ்சிமேல் உட்காரேன்.'' அவளைப் பெஞ்ச் மீது உட்கார வைத்து எதிரே சம்மணம் கட்டி அமர்ந்து தாமரை இலையில் சுற்றியிருந்த உதிரிப்பூவைக் கைகளில் ஏந்தியபோது சாவித்திரி ஓடிவந்து அவன் அருகே அமர்ந்து கைகளைப் பிடித்துக் கொண்டாள்.

''ச்சு என்ன அது அசட்டுத்தனம்.''

''கையை விடு.''

''முடியாது.''

வலுக்கட்டாயமாய் இழுத்து அத்தனை பூக்களையும் தலையில் சொரிந்தான்.

இன்னொரு கை வரும்போது அவள் பிடுங்கி பூவத்தனையும் அவன் தலையில் சொரிந்தாள்.

ஸ்வாமியாவது, பண்டிகையாவது, புருஷன்தான் ஸ்வாமி. பெண்டாட்டிதான் தேவதை.

''ரொம்ப வலிக்கிறதோ சாவித்திரி?''

''அப்படித்தான் வலிக்கும்னா...''

''ரொம்ப அவஸ்தைப்படறயே கண்ணம்மா...?''

''ப்ச்சு''

''டாக்டர்கிட்ட சொல்லி பெதடின் கேட்கட்டுமா?''

''வேண்டாம் இசகு பிசகா ஆகும்.''

''ஒண்ணும் ஆகாது. டாக்டர்கிட்ட கேட்கறேன், இப்படித் தவிக்கிறியே சாவித்திரி.''

சாவித்திரிக்கு வலி ஒரு புறம், நர்ஸுகள் அலட்சியம் ஒரு புறம். இவன் முகவேதனை, எல்லாம் கோபத்தை வரவழைத்தன.

''எழுந்து முதல்ல ஆபீஸுக்குப் போங்கோ. இங்கென்ன கூத்து. சொன்னாலும் புரியாது. தனக்காகவும் தெரியாது போங்கோ வெளில. இன்னும் நாலுமணி நேரம் உள்ளே வரப்படாது. மீறி வந்தேள் கன்னா பின்னான்னு வைவேன். போங்கோ வெளில.''

நர்ஸிங்ஹோம் வாசல் வராந்தாவில் பேயறைந்தது மாதிரி உட்கார்ந்து கொண்டிருந்தான். இரண்டு மணி நேரம் கழித்து சிவந்த பிள்ளையும் வெள்ளைப் போர்வையுமாய் கிடக்கிற சாவித்திரியைப் பார்க்கத் தயங்கித் தயங்கி வந்தவனை சாவித்திரி அருகே அழைத்தாள். டாக்டர், நர்ஸ், அப்பா, அம்மா, மாமனார் அத்தனை பேருக்கும் நடுவே அவன் முகத்தைத் தனக்காய் இழுத்து நெற்றியில் முத்தமிட்டாள்.

''ரொம்பக் கோவிச்சுண்டேளா?''

''இல்ல சாவித்திரி.''



புருஷனும் மனைவியும் விசும்பி விசும்பி அழுததை அந்த டாக்டர் எப்போது போனாலும் கேலி பண்ணுவாள். குழந்தையின் உடம்பு பற்றிக் கவலையுடன் கேட்கையில் ரெண்டுபேரும் கண்ணுல ஜலம் வுட்டு புள்ளை பெத்திருக்கீங்க, ஒண்ணும் வராதுபோ என்பாள்.

''அறைஞ்சு இழுத்துப்புடுவேன் சாவித்திரி. வாசல்ல மண்ணைக் கிளறிண்டிருக்கான். உள்ள என்ன வேலை உனக்கு? அறிவு கெட்ட ஜென்மம்.''

''உங்களுக்குத்தான் தோசை வார்த்திண்டிருந்தேன்.''

''எவன் அழுதான் தோசை இல்லைன்னு. பெத்துண்டா போறுமா, வளர்க்கத் தெரிய வேண்டாம்.''

''ஆஹா உங்ககிட்டதான் குழந்தை வளர்க்கப் பாடம் கேட்கணும். குழந்தைகள் அப்படித்தான் ஓடும். விஷமம் பண்ணும். உள்ள நுழைஞ்சதும் நுழையாததுமா என்ன குதியல்? கால் அலம்பிண்டு சாப்பிடவாங்கோ.''

''எனக்கொரு எழவும் வேண்டாம்.''

''எல்லாம் இந்தக் கடங்காரனால் வந்த வினை. இடுப்பைச் சுற்றிக் கயித்தைக் கட்டிப் போட்டுடறேன்.''

''சாவித்திரி, குழந்தையை வைசே, கெட்ட கோபம் வரும் எனக்கு.''

''பெரிய கோவம் விடுங்கோ அவனை.''

''விடமுடியாது, இன்னும் ரெண்டு மணிநேரத்துக்கு அவனை நீ தொடப்படாது, இதுதான் பனிஷ்மெண்ட்.''

பிடுங்க யத்தனித்தவளை விலக்க அவன் முழங்கை இவள் மூக்கில்பட்டு சில்மூக்கு உடைந்து ரத்தம் பொங்கி சொம்பு சொம்பாய் ஜலம் ஊற்றி அலம்பி, ஆபீஸ் பேண்டோடு வெளியே ஓடி ஐஸ்கட்டி வாங்கி வந்து முகமெங்கும் ஒற்றினான். குழந்தை நடுக்கூடத்தில் வாயில்

விரல் வைத்துத் தனக்குத்தானே பேசிக்கொண்டிருந்தது.

"குழந்தையை எடுத்து மடியில விடுங்கோ. பால் கொடுக்கணும். அடுப்பை மூட்டி வெந்நீர் போடுங்கோ. இடது பக்கம் டிகாஷன் இருக்கு. இன்னிக்கிக் காய் பண்ணவேண்டாம். கார்த்தால குழம்பு இருக்குபோதும். அரிசி மட்டும் களைஞ்சு போடுங்கோ."

அத்தனையும் செய்து இரண்டு காபி தம்ளருடன் கூடத்துக்கு வந்து "ஐயம் ஸாரி சாவித்திரி" என்றான்.

"போனா போறதுன்னா... தெரியாமத்தானே பட்டுடுத்து."

"பேயாண்டி தனைக்கண்டு நீயேண்டி மையல் கொண்டாய்..." மடியில் உறங்கும் குழந்தையைக் கலைக்காமல் காதோரம் பாடுபவனை அணைத்துக் கொண்டு பதிலுக்குப் பாடினாள்.

"பெண்ணாகப் பிறந்ததினால் மாறாத காதல் கொண்டேன்"

பெண்ணை ஸ்நேகிதியாய் நடத்தியவன். வெட்கமின்றி, தெருடல், இன்றி மனைவியிடம் மன்னிப்புக் கேட்டவன். மனைவிக்கு உபசரணை செய்யத் தயக்கம் காட்டாதவன்.

"வீணா போட்டியேடி,"

"நான் எங்கே வீணாய்ப் போனேன். வீண் வாழ்க்கையா இது."

அடுத்த பிரசவத்திற்கு எல்லா விஷயமும் அத்துப்படியான மாதிரி இரண்டு பேரும் நடந்து கொண்டார்கள்.

டாக்ஸிக்கு முன்கூட்டியே சொல்லி வைத்திருந்தார்கள். நிஜவலி எடுத்த உடன் வண்டியில் ஏறி டாக்டர் கேட்கும் முன்னரே பஞ்சுப் பொட்டலம், ஸ்லைன்



டாட்டர், விட்டமின் மாத்திரைகள். வயிற்று பெல்ட் எடுத்துப் போயிருந்தார்கள்.

"அடி சக்கை. கணேஷு நீயே நர்ஸிங்ஹோம் வச்சிடுவே போல இருக்குதே"—டாக்டரம்மா வழக்கம் போலக் கேலி பண்ணினாள்.

"இப்படியெல்லாம் ஆசை உண்டுங்க டாக்டர். அவ பேர்ல நர்ஸிங்ஹோம் எம்பேர்ல பள்ளிக்கூடம், எங்க ரெண்டு பேர் பெயர்லயும் கல்யாணச் சத்திரம் நெறைய ஆசை உண்டுங்க டாக்டர். காசு இல்லையே."

"இந்த மனசு போதும் கணேஷு உனக்கு ஒரு குறையும் வராது."

குறைவில்லாத வாழ்க்கைதான் அது. குணமுள்ள கணவனோடு கொஞ்ச காலம் வாழ்ந்தாலும், குறைவில்லாத வாழ்க்கைதான் அது. எத்தனை பேருக்குக் கிடைக்கும்? தேசம் முழுக்க பொம்மனாட்டியை வரிசையாய்ப் பண்ணினாலும் பத்து விரல்களுக்குள் அடங்கிப்போகும்.

"இரண்டு போறும்னா."

"பொண் குழந்தை வேண்டாமா?"

"வேணும்தான். இப்ப வேண்டாம்."

"ஏன் பெத்துக்கறதுக்கு பயமா இருக்கா?"

"அதொண்ணுமில்லை. தாராளமாய்ப் பெத்துக்கலாம். பாவம் நீங்கதானே அல்லாடறேள்."

"ம்ம்ம் என்ன பண்ணலாம் இதுக்கு?"

"எதுக்கு?"

"பெத்துக்காம இருக்கறதுக்கு."

"மாத்திரை வெச்சிருக்கனே. டக்குன்னு போட்டுக்க வேண்டியதுதானே."

"ச்சீ பைத்தியம் உடம்பு கெட்டுப் போயிடும், சும்மா இட."

'எந்தப் புருஷன் சொல்வான் இதை. இத்தனை அக்கறை படுகிற புருஷன் உண்டா உலகத்தில்?"

"வேறென்ன செய்யறதுன்னா?"

"நான் கணக்குதான்."

"ஐயோ."

"எதுக்கு ஐயோ?"

"ஒரு நா கிடக்க ஒரு நா தப்பித்துன்னா?"

"அடி போடி புத்தி கெட்டவள், நாம இரண்டு பேரும் நம்மை மீறி நடக்குமா?"

"நடந்துடுத்துன்னா?"

"நடக்காது."

"ஹ...மனசை முடிக்கிற ஆளைப் பாரு."

'ம்ம்ம்...தள்ளிப்படு."

"முடியாது."

"சரி"

நெருங்கி இழைத்து கொஞ்சி முத்தமிட்டு உடம்பு முழுக்க வருடி ஒன்றும் முடியவில்லை.

கைகளை மார்பின் குறுக்கே கட்டி கட்டை மாதிரிக் கிடக்கிறவனை ஏதும் செய்ய முடியவில்லை.

"நெஜம்மாவே பெரிய ஆள் தான்னா நீங்க."

"தப்பு சாவித்திரி. நான் குடும்பத்துல அக்கறை உள்ள ஆள் அவ்வளவுதான். உன்னை, குழந்தைகளை உண்மையா நேசிக்கிற ஆள் அவ்வளவுதான்."



அன்று முழுக்க அதிசயத்தில் பொட்டு தூக்கமில்லை. அயர்ந்து தூங்குகிறவன் கால்களை மடிமேல் வைத்து விடிய விடியப் பிடித்து விட்டு பாதங்களில் முகம் புதைத்து,

ஸ்வாமி எத்தனை ஜென்மம் எடுத்தாலும் இவனே எனக்குப் புருஷனாய் வரட்டும் என்று வேண்டிக் கொள்வதைத் தவிர வேறொன்றும் செய்யத் தோன்றவில்லை.

"வீணா போயிட்டியேடி."

"போங்கடி அறிவுகெட்ட சனியன்களா."

சாவித்திரி மெல்லிய கோபத்துடன் எழுந்தாள். ஸ்டூலைஎடுத்துப் போட்டு ஷெல்ப் மேல் தட்டு உயரத்தில் வைத்திருந்த பெரிய ஜாடியை எடுத்தாள். ஜாடிக்குள் கோபாலன் கொடுத்த சில்லறைகள் இருந்தன. ரூபாய் இரண்டாயிரத்துச் சொச்சம் எண்ணக்கூட இல்லை. எதுக்கு எண்ண வேண்டும் அவசியமில்லை. ஒரு துண்டை விரித்து அத்தனையும் கவிழ்த்தாள்.

"இந்தக் காசு எனக்கு வேண்டாம். எவருடைய இரக்கமும் எனக்கு வேண்டாம். எவருடைய துணையும் அனுதாபமும் வேண்டாம்."

"நான் நன்றாய் வாழ்ந்தவள் நல்ல புருஷன் தொட்டுத்தடவி வளர்ந்தவள். என் புருஷனை நான் அவமானப் படுத்த மாட்டேன் இந்தக் காசை விரலால் கூடத் தொட மாட்டேன். இது எனக்கு வேண்டாம்."

மொத்தமும் கவிழ்த்து உள்ளே பார்த்தபோது ஜாடிகுள் ஒரு நூறு ரூபாய் நோட்டு ஒட்டிக் கொண்டிருந்தது. முன்புபுளி வைத்திருந்த ஜாடி, நோட்டு ஒட்டிக் கொண்டு விட்டது.

'இந்த நூறு ரூபாய் நோட்டைப் பற்றித்தான் பேசிக் கொண்டிருந்தார்கள். யார் போட்டது என்று அதிசயத்தார்கள்."

நீல நூறு ரூபாய் நோட்டு நடுவே புளிக்கறை படிந்து இருந்தது.

'பாவம் எவன் மனசோ நெகிழ்ந்து நீராகி கஷ்டசனையும் தன்னையும் நினைத்து உருகி நூறு ரூபாய் நோட்டாய் நிற்கிறது காசின் மதிப்புக் கிடக்கட்டும். இத்தனை அஞ்சு பைசாவும், பத்து பைசாவும் நாலணாவும் எட்டணாவும் வெறும் காசு? அத்தனையும் மனசில்லையா? நூற்றுக்கணக்கான மனிதர்கள் இல்லையா புறக்கணிக்கலாமா.'

'புறக்கணிக்கத்தான் வேண்டும், மெல்ல மனசு நோகாமல் வேண்டாம் என்று சொல்லிவிட வேண்டும் நமஸ்கரித்து விட்டு நகர்த்தி வைத்துவிட வேண்டும் என் புருஷனுக்கு இது பிடிக்காது என்று சொல்லிவிட வேண்டும். எது நியாயமாய் வர வேண்டுமோ அது வந்தால் போதும் என்று சொல்லிவிட வேண்டும்.'

புடைவைத் தலைப்பால் அந்த நூறுரூபாய் நோட்டில் உள்ள கறையை அழுத்தித் துடைத்தாள். நகத்தால் மெல்லச் சுரண்டிச் சுத்தப்படுத்தினாள். மடித்துக் கண்ணால் ஒற்றிக் கொண்டாள். இதைப் போட்டவன் க்ஷேமமாய் இருக்க வேண்டும் என்று வேண்டினாள்,

எல்லாக் காசோடும் அதையும் போட்டு மூட்டையாய்க் கட்டினாள்.

சங்கரன் தெருவில் யோசனையோடு நடந்து கொண்டே சிகரெட் டப்பாவைப் பார்த்தான். காலி டப்பாவை, வீசியெறிந்தான். சுற்றும் முற்றும் பார்த்து கடையைத் தேடினான். எதிர் சாரிக்கு நடந்து இரண்டு பாக்கெட் சிகரெட் வாங்கினான்.

சங்கரன் எப்பவாவது சிகரெட் பிடிப்பவன். இப்போது சிகரெட் இவனைப் பிடித்துக் கொண்டு விட்டது.



நெஞ்சு நிறைய புகையை இழுத்து விடும்போது வேதனை குறைந்த மாதிரி இருந்தது. கூர்மையாய் யோசனை பண்ண உதவுவது மாதிரி பட்டது. ரொம்ப ரொம்பக் கூர்மையாய் யோசனை செய்யத்தான் வேண்டும். கொஞ்சம் பிசகு வராமல் வீட்டைவிட்டு நகர வேண்டும். பேங்கில் இவன் சேமிப்பு எட்டாயிரம் இருக்கிறது. அண்ணா இவன் பேரில் போட்ட ஐந்தாயிரம் பிக்ஸட் டெபாசிட் இருக்கிறது. ஒரு தங்கச் சங்கிலி, இரண்டு மோதிரங்கள், வெள்ளி அரைஞாண், தங்கப் பூணூல், வெள்ளிப்பூணூல், இறக்கும் முன்பு அம்மா கொடுத்த தங்கடாலர். ஒரு வெள்ளிப் பாத்திரம். வெள்ளி உத்தரணி, டேப் ரெக்கார்டர், டிரான்சிஸ்டர், ரேடியோ ஸீகோ வாட்ச் மொத்தமாய் சங்கரன் மதிப்பு இருபதாயிரம் தேறும். இந்தியாவின் ஏதோ ஒரு மூலையில் சியாமளியோடு குடித்தனம் நடத்த இதுபோதும். வேறு வேலை தேடுவதற்குள் அடுத்த வருமானம் பார்ப்பதற்குள் இந்தக் காசு போதும்.

நீலகிரி எக்ஸ்பிரஸில் முதல் வகுப்பு கூஃப்ப டிக்கெட் வாங்கி விட்டான். கோயம்புத்தூரில் நண்பர் வேலாயுதம் அண்ணாச்சிக்குச் சுருக்கமாய் ஒரு சிக்கலில் இருக்கிறேன் எந்த நேரமும் நீங்கள் உதவிக்கு வேண்டும் என்று எழுதினான். வேலாயுதம் அண்ணாச்சி விவேகம் உள்ளவர். தவறு தவறில்லை என்பதற்கப்பால் விஷயங்களை பார்ப்பவர். இரண்டு நாள் கோவையில் தங்கியபிறகு வடதேசம் போய்விட வேண்டும் இந்தப் பரந்த தேசத்தில் காணாது போய்விட வேண்டும்.

தண்டபாணி போலீசுக்குப் போவானோ? அண்ணாவும் மன்னியும் புகார் கொடுப்பார்களோ? தினத்தந்தியில் கொட்டை எழுத்தோடு முகம் பிரசுரமாகுமோ. இழுத்துக்கொண்டு ஓடினாராம். இவன் கம்பெனியில் வேலை செய்யும் சங்கரன் என்பவர், இன்னொருவருடைய மனைவியோடு கள்ளக்காதல் கொண்டிருந்தாராம்

காதலர்கள் இரண்டுபேரும், வீட்டை விட்டு நகையோடு ஓடிப்போய் விட்டார்களாம்.

மேற்படி நபர்களைப் போலீஸார் வலை வீசித்தேடி வருகிறார்கள். சங்கரன் வேலை செய்யும் கம்பெனி இழுத்து மூடப்பட்டிருப்பது தெரிந்ததே

சங்கானுக்கு உடம்பு நடுங்கிற்று. இனம் தெரியாத வேதனை வயிற்றைப் பிசைந்தது. இரண்டு கால்களும் நடக்கும் சக்தியை இழந்து சதா ஒரு நடுக்கத்துடன் இருப்பது போலப் பட்டது. விளக்குக் கம்பத்தைப் பிடித்தபடி சங்கரன் சற்று நேரம் நின்றான். ஏதோ ஒன்று குமட்டிக்கொண்டு வர நெஞ்சில் காரம் ஏறிற்று. சங்கரன் கம்பத்தைப் பிடித்தபடி வாந்தி எடுத்தான். தெருவில் நடந்து போனவர்கள் திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டு போனார்கள். மூக்கிலும் காரம் ஏறி அவஸ்தையூட்டிற்று. நடை தள்ளாடிற்று, தலை சுற்றிற்று.

மனசு மனசுதான். இத்தனை பயமுறுத்துகிறது. மனசு தைரியம் காட்டாமல் உடம்பைப் படுத்துகிறது. நில். நில், உரமாய் நில், அர்ஜுனா, குந்தியின் மைந்தனே எழுந்திரு. போர் செய்.

''இது என்ன இடம். என்ன தெருவு? ஏன் இங்கு வந்தேன்? எனக்கு என்ன ஆயிற்று?

''சங்கரா சங்கரா, என்னப்பா வாந்தி எடுக்கறே. எங்க விட்டுக்குத்தான் வரையோன்னு நினைச்சேன். எதிர்ப்பக்கம் போயிட்டியே, உடம்பு சரியில்லையா? என் கூட வாப்பா.''

குரல் பழக்கப்பட்ட குரல், தனக்குத் தெரிந்த குரல். தான் தனியாக இல்லை. யாரோ துணையிருக்கிறார்கள் எல்லாச் சமயங்களிலும் தனக்கு யாரே பின்பலமாய் நின்று சரியும்போது பிடித்துக் கொள்கிறார்கள்.

ஈஸ்வரா உனக்கு வந்தனம், எனக்கு உரம்கொடு பலம்கொடு, பலம் கொடு, பலம் கொடு.



குரல் கொடுத்தவரை சங்கரன் பிடித்துக் கொண்டான். அரை நினைப்புடன் அவர் வீட்டு நாற்காலியில் சரிந்தான்.

''தண்ணி கொண்டு வா சீக்கிரம் சீக்கிரம் கொண்டு வாடி.''

ஜில்லென்று முகத்தில் ஜலம் பட்டது. கொஞ்சம் கொஞ்சமாய் வாய் வழியே காய்ந்த வயிற்றில் இறங்கியது.

''குடிக்கக் கொடு, இன்னும் கொடு. நான் விசிறியை எடுத்துண்டு வரேன்.''

சங்கரன் மெல்ல கண்களைத் திறந்தான்.

எவர்சில்வர் செம்போடு ஒரு இருபது வயசுப் பெண் மெலிந்த தேகமும், வாயில் புடவையும் பெரிய நெற்றியும் சாந்துப் பொட்டும் மூக்குத்தியுமாய் நின்று கொண்டிருந்தாள். அவன் தலையை இடது கையால் சரித்துத் தண்ணீர் ஊற்றினாள்.

''இப்பத் தேவலாமா?'' என்று கீச்சுக் குரலில் கேட்டாள்.

சங்கரன் அவளை நோக்கிக் கை கூப்பினான்.

''தள்ளிக்கோ. கொஞ்சம் விசிறினா சரியாப் போயிடும். பாழாப்போன கம்பெனி எல்லாரையும் என்ன பாடு படுத்தறது பார். சிங்கம் மாதிரி நடப்பான். உடம்பு தேஞ்சு கண் குழிஞ்சு... பகவானுக்கே அடுக்காது இவா பண்றது, எத்தனை கஷ்டம் மனுஷாளுக்கு.''

காற்று வந்த திக்கிலிருந்து குரல் வந்தது. சங்கரன் தலையைத் திருப்பிப் பார்த்தான்.

டெஸ்பேட்ச் நாராயணசுவாமி.

முட்டை கட்டுகிறபோது மறுபடி அந்த நூறு ரூபாய் நோட்டு வெளியே வர சாவித்திரி சிரித்துக் கொண்டே அதை முட்டைக்குள் சொருகினாள். இழுத்துக் கட்டினாள்.

## 14

ரங்கசுவாமிக்கு ஏகமாய் வியர்த்தது.

எங்கோ நட்ட நடு சாலையில் கார் நின்று போய் விட்டது. எந்த இடம் என்று தெரியவில்லை. ஊகூம ஊகூம் என்று என்ஜின் முழு வேகத்தில் உறுமுகிறது ஆனால் சக்கரங்கள் சுழலவில்லை. இம்மி கூட கார் நகரவில்லை. ஏதோ சின்னக் கோளாறு. சின்ன சுவிட்ச் மாதிரி இடத்தில் தகராறு. எந்த சுவிட்ச் எந்த இடம் தெரியவில்லை. விளக்குகள் எரிகின்றன. வைப்பர் அசைகிறது தட்டினால் பானெட், டிக்கி இரண்டும் தானாய் திறந்து மூடிக்கொள்கின்றன. ஆனால் வண்டி நகரவில்லை. வேகமாய்ப் போக வேண்டும். நிறைய வேலை இருக்கிறது என்ன செய்வதென்று தெரியவில்லை. இறங்கித் தள்ளலாமா? ஹாரன் அடித்து யாரையும் கூப்பிட்டு உதவி கேட்கலாமா? இன்னொரு முறை முழு வேகத்தில் என்ஜினை ஓடவிட்டு எல்லா பட்டன்களையும் தட்டி அசைத்து, மாற்றி மாற்றி மிதித்து, ஸ்டிரியங்கை உலுக்கி... எதுவுமே நடக்கவில்லை. வண்டி அசையாமல் நின்றது, பெரிய கோயில் நந்தி மாதிரி.



''மே ஐ ஹெல்ப் யூ?''

''யார்?''

'மார்ட்டின் லூதர் கிங்''

''ஹல்லோ''

''ஹல்லோ''

''எங்கே இவ்வளவு தூரம்?''

''இங்கே ஒரு சின்ன வேலை.''

''மெட்ராஸிலா?''

ஆமாம் சட்டென்று என்னவோ ஒரு விழிப்பு வருகிறது. அதெப்படி மார்ட்டின் லூதர் கிங் தமிழ் பேசுகிறார்? நான் காண்பது கனவா? கனவுதான்—நிச்சயம் இது கனவுதான். தமிழ்க்கனவு. கனவுக்குள் தமிழ் மார்ட்டின் லூதர் கிங்...நீங்கள் ஒரு தமிழரா, உங்கள் சொந்த ஊர் கும்பகோணமா—ஆங்கரையா. கரூரா? மார்ட்டின் லூதர் கிங் நீங்கள் எங்கே போய்விட்டீர்கள். ஹெல்ப் மீ மார்ட்டின்...ஹெல்ப் மீ...

மீண்டும் என்ஜின் உறுமுகிறது. ஊர் முழுக்க புகையடிக்கிறது. நாசி நுனியை அறுக்கிறது. ''மார்ட்டின், நீங்கள் எங்கேயிருக்கிறீர்கள்? ஹெல்ப் மீ மார்ட்டின் ஹெல்ப் மீ...''

சட்டென்று ஒரு நிசப்தம்.

புகைக்கு நடுவே யாரோ சிலர் நடந்து வருகிறார்கள். கைகளைக் கோர்த்துக்கொண்டு படை படையாய் வரிசை வரிசையாய் தெருவை அடைத்துக் கொண்டு காரை நோக்கி வருகிறார்கள்.

''மார்ட்டின்...''

மார்ட்டின் லூதர் கிங், எதிரே அந்தப் படை வரிசையின் நடு நாயகமாய் வருகிறார் கூட்டம் மொத்தமும் பாடுகிறது.

"வில் ஷல் ஓவர்கம்..."

நீக்ரோக்கள் சம உரிமை கேட்டு நடந்த லாங் மார்ச் மாதிரி இவரை நோக்கி வருகிறார்கள்.

"நோ...நோ...நான் உங்கள் எதிரியில்லை, மார்ட்டின் நீங்கள்தான் எதிர்ப்பக்கம் போய்விட்டீர்கள்-ப்ளீஸ் சொல்வதைக் கேளுங்கள். நான் யாருக்கும் எதிரியில்லை மார்ட்டின். லிஸன் டு மீ..."

"வி ஷல் ஓவர்கம்..."

எதை ஓவர்கம் பண்ண இந்தப் படையெடுப்பு என்னையா...என் காரா, நான் உங்கள் எதிரி?

கூட்டம் எதிர்ப்பட்டு மெல்லத் திரும்பி வளைந்து வேவறங்கோ, எதை நோக்கியோ போகிறது.

"வி ஷல் ஓவர்கம்..."

வியர்க்கிறது, அதிகமாய் வியர்க்கிறது. வேதனையே வியர்வையாய்' வியர்வையே வேதனையாய் கூட்டத்து நடுவே முண்டியடித்துக் கோபாலன் ஓடி வருகிறான். முகம் முழுக்க கேலிச் [சிரிப்பு. வேட்டியை மடித்துக் கொண்டு—கருப்பு தாடியுடன் இவர் எதிரே டப்பாங் குத்து ஆடுகிறான்.

"இந்தப் படை போதுமா?"

"இன்னும் கொஞ்சம் வேணுமா... போதுமா போதுமா இன்னும் கொஞ்சம்?"

வேதனை, வியர்வை, பயம். கலவரம்...அயோக்கிய ராஸ்கல். இவன்தான் மார்ட்டின் லூதர் கிங்கை எதிர்ப் பக்கம் கூட்டிப் போயிருக்க வேண்டும்.

"அடிச்சுத் துரத்திடட்டுங்களா?"

யாரோ பின்னாலிருந்து கேட்கிறார்கள். திரும்புகிறார் துரைசிங்கப் பெருமாள்.



"அடிச்சு நொறுக்கு மேன்! கேள்வி வேற கேட்கற. சார்ஜ் தெம்... கில் தெம் கில் எவ்வரிபடி...கில் எவ்வரி படி இன் திஸ் வேர்ல்ட்."

இந்தத் தடவை சக்கரம் சுழல ஆரம்பித்து விட்டது. முழுவேகத்துடன் என்ஜின் இயங்க, சக்கரம் சுழல மணல் பறக்க மெல்ல மெல்ல வண்டி கீழே அமிழ்ந்து போகிறதே தவிர நகரவில்லை? புதைமணலா? மெட்ராஸில் ஏது புதை மணல்? மார்ட்டின் கொண்டு வந்து கொட்டி விட்டானா?

"மார்ட்டின்... மார்ட்டின்..."

துரைசிங்கப் பெருமாள் லத்தியை ஆட்டிக்கொண்டு கூட்டத்தை நோக்கிப் போகிறான்.

வண்டி மெல்ல அமிழ்ந்து கொண்டிருக்கிறது. பெருமாளின் தலைமட்டும் தெரிகிறது. இனி இந்த வண்டி ஓடவே செய்யாதோ பூமிக்குள் ஓடி தன்னோடு அமிழ்ந்து விடுமோ.

"அம்மா நான் சாகப் போறேனோ... வண்டியோட சமாதி ஆயிடுவேனோ அம்மா... அம்மா" ஸ்டியரிங்கில் தலை சாய்த்துக் குலுங்கி குலுங்கி அழுகிறார்.

கலைந்து விட்டது.

இல்லை யாரோ கலைக்கிறார்கள். "துரை, துரை எழுந்திருங்க துரை" முனுசாமி உலுக்கி எழுப்புகிறான். "கம்பளத்து மேல சிகரெட் நெருப்பு புடிச்சிகிச்சே, என்னா ஆவும் நான் பார்க்கலேன்னா" தம்ளர்களை, பாட்டிலை அப்புறப்படுத்துகிறான்.

வீடு—

என் வீடு. நான் ரங்கசுவாமி. என் வீட்டில்தான் இருக்கிறேன்.

வீடென்று எதனைச் சொல்வீர்? முனுசாமி சிப்ஸ் வாங்கி வந்த நியூஸ் பேப்பர் கவரில் இந்த வரிகள்

அச்சடிக்கப்பட்டிருந்தன. தமிழ் படித்து எவ்வளவு நாளாயிற்று என்று யோசித்தபடியே குடிக்க ஆரம்பித்தது இப்போது நினைவுக்கு வருகிறது.

முனுசாமி எப்போது சிப்ஸ் வாங்கி வந்தான்? நாலு மணிக்கு. இப்போ என்ன மணி? கண்களைக் கசக்கித் துடைத்த போது கன்னத்தில் ஜலம் வழிந்திருப்பது தெரிகிறது. நிஜமாகவே அழுது விட்டேனா வாட் எ ஷேம். முனுசாமி என்ன நினைத்துக் கொள்வான். இன்னிக்கு ஜாஸ்தியாயிடுத்தோ?

''மொத்தமும் குடிச்சிட்டிங்களா துரை, நேத்திக்கும் முழுசு சாப்டீங்க. இன்னிக்குமா? வாணாந் தொரை வவுறு கெட்டுப்பூடும்.''

''மணி என்னா முனுசாமி?''

''பதினொண்ணே கால்.''

''மை காட். ஏழு மணி நேரமா குடித்திருக்கிறேன். வாட் எ ஷேம்.''

எழுந்திருக்கும் போது உடம்பு நடுங்கியது. குப்புறத் தள்ளியது.

மேஜையில் கை ஊன்றித் கொள்ளும் போது அந்த நியூஸ் பேப்பர் கவர் தென்பட்டது. கண்ணாடியைத் தேடி அணிந்து கொண்டார். பேப்பர் கவரை நீவித் துடைத்தார். இது நியூஸ் பேப்பரில்லை. ஏதோ பத்திரிகை, வாரப் பத்திரிகை.

வீடென்று எதனைச் சொல்வீர்? அது இல்லை எனது வீடு. ஜன்னல் போல் வாசல் உண்டு. எட்டடி சதுரம் உள்ளே பொங்கிட மூலை ஒன்று. புணர்வது மற்றொன்றில். நண்பர்கள் வந்தால் நடுவிலே குந்திக் கொள்வர். தலை மேலே கொடிகள் ஆடும். கால் புறம் பாண்டம் முட்டும். கவி எழுதி விட்டுச் செல்ல



கால்சட்டை மடித்து வைக்க வாய் பிளந்து வயிற்றை எக்கிச் சுவரோரம் சாய்ந்த பீரோ.''

பேரா முடிந்த இடத்தில் சிப்ஸ் எண்ணெய் பெரிய வட்டம் போட்டிருந்தது. மேற்கொண்டு படிக்க எழுத்து தெளிவில்லாமல் இருந்தது.

வீடென்று எதனைச் சொல்வீர்? இதென்ன கவிதையா கதையா? தெரியவில்லை. மடிப்புப் போட்டு கோந்து ஒட்டின பேப்பர் பை. மடிந்த இடத்தில் 'கிழும் பூக்கள்' 'மாலன்' என்று அச்சிடப்பட்டிருந்தது.

கிழும் பூக்கள்? என்றால் என்ன அர்த்தம்? காலுக்குக் கிழும் பூக்கள்? வேருக்குக் கிழும் பூக்கள்? நீருக்குக் கிழும் பூக்கள் தெரியவில்லை. மெல்ல கோந்து ஒட்டின இடத்தைக் கிழிபடாமல் நகத்தால் பிளந்து எடுக்க, பேப்பர் முழுதும் பிரிபட்டு ஒற்றைத் தாளாகி மேஜையில் விரிந்து...யோசித்தது எல்லாம் தவறு. இது கல்லிற்குக் கீழும் பூக்கள் மாலன் ஏதோ வாரப் பத்திரிகையில் வந்த கவிதை. மாலன் என்பது எழுதியவர் பெயராய் இருக்க வேண்டும்.

''வீடென்று எதனைச் சொல்வீர்?
அது இல்லை எனது வீடு
ஜன்னல் போல் வாசல் உண்டு
எட்டடிச் சதுரம் உள்ளே
பொங்கிட மூலை ஒன்று
புணர்வது மற்றொன்றில்''

எவ்வளவு இனிமையான வரிகள், தமிழில் இத்தனை அழகாய் எழுத முடியுமா என்ன, என்ன துள்ளல், என்ன லயம் இந்த மொழியில்.

வீடென்று எதனைச் சொல்வீர்? அது இல்லை எனது வீடு. நிச்சயம் என் வீட்டைவிட அந்த எட்டடிக் குச்சு உசத்தியாய்த்தான் இருக்க வேண்டும். நண்பர்கள் வரும்

வீடு நல்ல வீடாய்த்தான் இருக்க வேண்டும். என் வீட்டிற்கு யாரும் வருவதில்லை. என் அம்மா கூட வருவதில்லை. பொங்கி, புணர்ந்து, குழந்தைகள் பெற்று 'ஜோ ஜோ' என்றுபாடி, சோறு ஊட்டி, கோபம் காட்டி, கதைகள் சொல்லி, நிமிஷத்துக்கு ஒரு ட்ராமா நடக்கும் இடம் நல்ல இடமாகத்தான் இருக்க வேண்டும்.

என் வீடு மட்டும்தான் எப்போதும் அமைதியாய்க் கிடக்கிறது. பேரமைதி. குண்டூசி விழுந்தால் கூட சப்தமாய்க் கேட்கும் அமைதி சலவைக் கல் மண்டபம் மாதிரி சமாதி மாதிரி அமைதி. ஆனால் என் மூளை மட்டும் பேய் மாதிரி இரைகிறதே.

இத்தனை அமைதியில் அந்தக் கனா எப்படி வந்தது? 'வி ஷல் ஓவர்கம்' பாட்டு கேட்டதே, 'இந்தப் படை போதுமா இன்னும் கொஞ்சம் வேண்டுமா?' கேட்டதே. கோபாலன் துள்ளித் துள்ளி ஆடினானே. அப்புறம் அந்த மார்ட்டின் லூதர்கிங். தமிழில் பேசின மார்ட்டின் லூதர் கிங்-போச்சுடா சாமி. எனக்குப் பைத்தியம்தான்.

ரங்கசாமி மெலிசாய் சிரித்துக் கொண்டார்.

இந்த முறை ஆடாமல் நேராக நிற்க முடிந்தது. கடவுளுக்கு வந்தனம். நைட் கவுனைப் பிரித்துக்கொண்டு பின்பக்கம் போய் வந்தார். குளிர்ந்த ஜலத்தில் முகத்தை அலம்பிக் கொண்டார். வாயைக் கொப்பளித்தார். தலை முடியை நீவிக் கொண்டார். மீண்டும் ஹாலுக்குள் நுழைந்து அறைகளைத் தாண்டி பால்கனிக்கு வந்தார். சிகரெட்டைப் பற்ற வைத்தார். அரை நிலவுக்கு மேகம். சுடர்கள் வேப்பமரம் மெர்க்குரி விளக்குகள் தார்ச்சாலை தூசு படிந்த நடைபாதை. பேர்கன்வில்லா வெள்ளிநிறக் கம்பிக் கதவுகள் கட்டமிடப்பட்ட சிமெண்ட் நடைபாதை. லான் பூந்தொட்டிகள். குரோட்டன்ஸ்கள். போர்டிகோ நடுவே அவ



வழுக்கமாய் போகும் வெள்ளை பியட்கார். இதுதான் நான் வசிக்கும் இடம். என் வீடு.

வீடென்று எதனைச் சொல்வீர். இது இல்லை எனது வீடு. மறுபடி கண்ணில் ஜலம் கட்டிற்று. விசும்பி விசும்பி அழ வேண்டும் போல் இருந்தது. சட்டென்று மனதை நிறுத்திக் கொண்டார். ஓ, என் கடவுளே என்னை என் சுய பரிதாபத்திலிருந்து காப்பாற்று. எதையும் ஆங்கிலத்திலேயே யோசித்துப் பழக்கப்பட்ட நான் எவ்விதம் தமிழில் கனவு காண்கிறேன். எது எனது மொழி—தமிழா ஆங்கிலமா? எது என் தேசம்—இதுவா இல்லை நியூயார்க்கா? மார்ட்டின் லூதர் கிங் ஏன் என் கனவுக்குள் வர வேண்டும். எனக்கும் அம்மனிதருக்கும் என்ன சம்பந்தம்? எட்டு வருடம் முன் அமெரிக்க நீக்ரோக்களின் லாங் மார்ச் நேரே பார்த்தது. இன்று வெளியாகிறதா.

'கில் தெம் ஆல்' என்று கட்டளையிட்டிருக்கிறேன். கனவில் என்ன பைத்தியக்காரத்தனம் எவ்வளவு மிருக உணர்ச்சி. யார் மீது கோபம் எனக்கு? கோபாலன் மீதா அவன் நடனம் ஆடியது கோபமுறச் செய்து விட்டதா? என்னைக் கோபப்படுத்துவது எது? கூட்டமா இல்லை தனிமனிதனின் கேலி செய்யும் காரியங்களா? போதுமா. இந்தப் படை போதுமா. இந்தப் படை போதுமா. இன்னும் கொஞ்சம் வேணுமா? இதுவும் தமிழ்தான். ஆனால் எவ்வளவு பயமுறுத்தல் இதில். எதிரே இருப்பவனை இளக்காரம் பண்ணும் தொனி.

வீடென்று எதனைச் சொல்வீர்? இது இல்லை எனது வீடு. இதை எழுதினது யார் பெயர் மறந்து விட்டது. பட் ஐ லவ் ஹிம். ஜன்னல் போல்வாசல் உண்டு எட்டடி சதுரம் உள்ளே. பொங்கிட மூலை ஒன்று. புணர்வது மற்றொன்றில். வறுமையைச் சொல்கிற எழுத்தா இது இல்லை வேறென்னவோ இந்தக் கவிதை சொல்கிறது. இது என்ன கவிதையா, கதையா? வீட்டில் ஒரு சின்ன மர பீரோ இருக்குமாம். காற்சட்டைகள், கவிதைகள்

எல்லாம் அடைக்கப்பட்டிருக்குமாம். நண்பர்கள் வந்தால் நடுவில் உட்கார்ந்து கொள்வார்களாம்.

என்னிடம் எத்தனை பீரோ இருக்கும். பத்துப் பன்னிரண்டு, தெரியவில்லை. ஆனால் எதிலும் கவிதையில்லை வேறு என்னமோ இருக்கிறது.

ஒருவேளை என்னிடம் இல்லாதது இந்தக் கவிதைதானோ? கவிதை மாதிரி உணர்ச்சிதானோ. உலகத்தில் கவிதை மாதிரி உணர்வுதரக் கூடியவைகள் என்னென்ன? பெண். மனைவி. குழந்தைகள், தாயார், உண்மையில் என்னிடம் இல்லாதது என்ன? என்னவிதமாய் குறைபட்டிருக்கிறேன் நான், ஒரு கவிதை மாதிரி எனக்கும் பிடித்தது எது, எது?

ஐ லைக் டிராக்டர்ஸ்.

என் டிராக்டர் மாதிரி கவிதை எதுவும் உண்டோ? ரூம் ரூம் என்று முனகி ருருரும் என்று ஓடுமே, பலம் கொண்ட குதிரையாய் சேற்றில் அமிழ்ந்து மண்ணைக் கிளறி கடுமையாய் உழைத்துக் கரையேறுமே. இது கவிதையில்லையே யந்திரம் கவிதையாகாதா?

ஏன், டிராக்டர் ஒரு கவிதைதான். ஆனால் அது யாருக்குப் புரியும்.

என் உளைச்சல் எவருக்குக் கேட்கும்?

என் டிராக்டர் கவிதை என்றால் நானும் ஒருகவிஞன் இல்லையா? பட் ஹூவில் அக்ஸெப்ட் மீ ஆஸ் எ பொயட்? எவருமில்லை. நான் முதலாளி. பணத் திமிர் பிடித்தவன். மனிதர்களை நசுக்கிப் பிழிந்து வேலை வாங்குகிறவன். கொலைகாரன் பேய் பிசாசு, பூதம், சுரண்டல் வர்க்கம். என் கடவுளே. இது என்ன விந்தை



உலகம் எதனால் எவ்விதம் நாங்கள் இவ்வாறு பிரிக்கப்பட்டோம். டிராக்டரை உற்பத்தி பண்ணி வானத்திலா எறிகிறேன்—? மனிதர்களுக்குத்தானே கருவிகள். இங்கே கருவிகளைச் செய்ய வேண்டியதும் மனிதர்கள்தானே இதில் பாகம் பிரிக்கப்பட்டது எப்போது? எதனால்?

ஒருவேளை இந்த வீடு அவர்களை என்னிடமிருந்து பிரித்துவிட்டதோ? பத்து அறைகள் கொண்ட பங்களாவும், காரும், பாண்ட்டும், சூட்டும் டை பின்னும் க்ரோம்ஷூவும் வித்தியாசத்தின் அளவுகோல்களாகமாறிற்றோ? இந்த வீடுதான் காரணமா?

வீடென்று எதனைச் சொல்வீர்?
இது இல்லை எனது வீடு.

எட்டடிக் குச்சுக்கு நான் இறங்கி வந்துவிட்டால் எல்லாம் சரியாகிவிடுமா? நானும் அவர்களும் சமதையாகிவிடுவோமோ? பிறகு சண்டையே கிடையாதா?

செல்வம் என்பதில் சட்டையைப் பிடித்து இழுத்துக் குப்புற வீசுவதுதான் போராட்டமா? ஆனால் நண்பர்களே—டிராக்டர்களை யார் உற்பத்தி செய்வது? அரசா செய்யும்?

செய்யட்டும். ஆனால் அரசை சட்டையைப் பிடித்து இழுக்க மாட்டீர்கள் என்பது என்ன நிச்சயம்? மல்லாக்க வீழ்த்தி போதுமா போதுமா என்று நடனமாட மாட்டீர்கள் என்பது என்ன நிச்சயம்?

அரசு என்பது மக்களால் மக்களை, மக்களுக்காக—வெல். நான் யார். அந்நியமா? தேவனா? வேறு உலகமா செவ்வாய் கிரகவாசியா? என்னை எதிர்த்து முஷ்டியை உயர்த்துவானேன்? அரசு என்பதற்குள் நானும் அடக்கம் தானே? ஒரு தேசத்து அரசாங்கம் எந்திரம் என்பதில் நானும் ஒரு கருவிதானே. நீ இழைக்கும்.

கருவி நான் இணைக்கும் கருவி. எதை எதிர்த்து இது? இது அற்று, அது இயங்குமா? சுவிட்ச்பாக்ஸ் பளபளப்பாய் இருக்கிறது என்று க்ரைண்டிங் கூச்சல் போடலாமா? ச்சே என்ன உலகம் இது? எவ்வளவு உழைப்பு, நேரம் வீணாகிறது.

எட்டணா காசு கொடுத்துவிட்டால் எல்லாம் சரியாகிவிடும். க்ரைண்டிங் வீல் சுவிட்ச் பாக்ஸுக்கு வந்தனம் சொல்லும் ஒட்டு மொத்தமாய் அடிப்படைகளை மாற்றாமல் இங்கே எதுவும் உருப்படப்போவது இல்லை.

எது அடிப்படை என்பதுதான் யாருக்கும் தெரியவில்லை அவரவர்க்கு சௌகர்யமாய் அடிப்படைகள் விதித்து அவரவர் பலம் பெறுகையில் அடுத்தவனை அழித்து, என்றுதான் நாம் முழுவதும் அறிந்து வேலை செய்யப் போகிறோம்? ரங்கசுவாமி தீர்க்கமாய் புகையை இழுத்து வெளியே செலுத்தினார்.

ஃபோன் மெல்ல கிணுகிணுப்பது கேட்டது. யார் இந்த நேரத்தில்? பாலுவா? பர்ஸனல் மானேஜரா. முனுசாமி விசாரிப்பது கேட்டது.

''திருச்சிலேர்ந்து அம்மா பேசறாங்க. துரை கம்பெனி திறந்திடுச்சான்னு கேட்கறாங்க.''

அம்மா, அம்மாவா? எதற்கு இந்த நேரத்தில்?

''ரங்கு—ரகுவா? நான் அம்மா [பேசறேன். இன்னும் கம்பெனி திறக்கலையா? கத்திக் குத்தெல்லாம் நடந்திருக்காமே. என்னத்துக்கு இப்படி?''

இவனுக்கு இப்போது என்ன பதில் சொல்வது? சுவிட்ச் போர்ட்—க்ரைண்டிங் வீல் சண்டையை யாருக்கு புரிய வைப்பது.



''சீக்கிரம் திறந்துடும். கவர்மெண்ட்கிட்ட விஷயம் போயிருக்கு. திறந்துடும். நீ எப்படி இருக்கே? உடம்பு தேவலியா.''

ரொம்ப தேவலை, உன்னைப் பார்க்கணும் போல இருக்கு. நேத்திக்குக் கேட்டேன் முனுசாமிகிட்ட, நீ தூங்கறேன்னான். இன்னிக்குக் கேட்டேன் தூங்கறேன்னான். ரொம்பக் குடிக்கிறியா. நான் ஒரு வாரம் உன்னோட வந்து இருக்கட்டுமா''

''வரட்டுமே இவளாவது கொஞ்ச நாள் இந்த வீட்டில் கவிதை மாதிரி இருக்கட்டும். உருட்டி உருட்டிக் கையில சாதம் போட்டவளாயிற்றே. முதன் முதலில் வெளிநாடு போகையில் விமான நிலையத்தில் விபூதியிட்டுத் தலையில் ஊதி அழுதவளாயிற்றே. திரும்பி வரும்போது கஸ்டம்ஸ் வாசலில் காத்திருந்து, கண்ணு இரப்பையெல்லாம் பளபளன்னு இருக்கே. குடிக்கக் கத்துண்டையா?'' ன்னு முகத்தை வருடி நெட்டி முறித்தவளாயிற்றே வரட்டுமே.

''வாம்மா, நான் கார் அனுப்பறேன்.''

''வேண்டாம், நான் ட்ரெய்ன்லேயே வரேன்''

லைன் சட்டென்று கட்டாயிற்று. ஹலோ... ஹலோ அம்மா வரப்போகிறாள். வரட்டும், ஒரு மாறுதல் எனக்கும் இப்போ தேவைதான். வரட்டும்.

வீடென்று எதனைச் சொல்வீர்? இது இல்லை எனது வீடு. வொய்? இது என் வீடுதான். என் அம்மாவுக்காக அப்பா கட்டின வீடுதான். இதுதான் என் வீடு எதற்காக நான் இதை மறக்க வேண்டும்?

''நோ. என் வீட்டை நான் மறக்க மாட்டேன்-நான் மாற மாட்டேன்.

# 15

பசித்தது. இந்த நட்ட நடுநிசியில் இரண்டு மணி இரவில் எந்தக் கடை, எந்த ஹோட்டல் திறந்திருக்கும். பானை ஜலம்தான் இன்று இரவும் ஆகாரம். லேசாய் ஒரு வலி இடதுபக்க வயிற்றில் உருண்டு வேதனை செய்தது. பகல் ஒரு மணிக்குச் சோறு தின்றதுதான். மீதி நேரமெல்லாம் காஃபியும் பீடியும்தான் வயிற்றை அடக்கும் விஷயமாய் ஆகியிருக்கின்றன

அளவுக்கு அதிகமாய், தேவைக்கும் கூடுதலாய் அலைகிறோமோ? இத்தனை ஹிம்ஸை தேவையில்லையோ? பத்தாயிரம் தொழிலாளிகள் நலனுக்கு உழைக்கிற சந்தோஷம் இத்தனை விலை கொடுத்து வாங்க வேண்டியதில்லையோ? நான் தலைவனாவது இந்த சந்தோஷம் கருதியா? தலைவன் என்று பத்துப் பேர் அழைக்கும் கர்வம் எனக்குப் பிடிக்கிறதா? லீடராய் இருப்பது ஒரு கௌரவமா? வசதியான வாழ்க்கை என்ற பெரிய பாதையில் கிடைக்கும் மலர்க்கிரீடமா? எதையோ அணிந்துகொள்ள ஆசைப்பட்டு அவஸ்தைப்படுகிறேனோ. அடிப்படைத் தேவைகளைக் கூடப் புறக்கணித்து எவ்வளவு நாள் அலைய முடியும்? உணவும் உடையும்கூட இல்லாமல் என்னத்தை நான் சாதிக்க முடியும்?

பசிக்கிறது பசி வலியாய் மாறிவாட்டுகிறது இரண்டு நாளாய் ஒரே உடை. காலர்ப்பக்கம் எண்ணெய்க் கசடு தட்டி கைமடிப்பில் பட்டை அழுக்குப் படிந்து தன் மீதே சட்டென்று ஒரு வெறுப்பு ஏற்பட்டது கோபாலனுக்கு.

பசிக்கிறது அம்மா... இது என்ன வலி வயிற்றில்? இந்த இரவில் யாரிடம் போய் சோறு கேட்பது. சுப்பையா வீட்டுக்குப் போகலாமா வேண்டாம். அவன் பையனை அடித்திருக்கிறார்கள். பயமுறுத்தி இருக்



கிறார்கள். சுப்பையா எங்கே என்று கேட்டுத்துளைத்திருக்கிறார்கள் அங்கே போனால் கலவரம் வரும் சுப்பையாவை நானா ஏவிவிட்டேன்? தானாய்த் தானே போனான். என் காரியம். என்னுடைய கடமை என்று என்னை அடக்கி விட்டுத் தானே போனான்.

யார் இந்த அறிவுக்கரசன்? சுப்பையா அவனை என்ன செய்யப் போகிறான்? மீண்டும் ஒரு கொலையா? இதனால் போராட்டம் திசை தப்பிப் போகுமோ? கட்சி சொல்வது நியாயம்தானே? சுப்பையா பிடிபட்டால் நிச்சயம் நானும் கைதாவேன். இன்னொரு கொலைக்குக் காரணம் என்று குற்றம் சாட்டப்படுவேன். மீண்டும் அடி, உதை, ஜெயில், கீரைச்சோறு, கடலை உருண்டை, கறுப்புக் கம்பிகள். கல்சுவர்கள். தாக்குப் பிடிப்பேனா? என்னால் எதிர்க்க முடியுமா. இல்லை ஒரேயடியாய் முறிந்து போவேனா? ஏன் இந்தச் சோர்வு மனசுக்குள், கட்சி மிரட்டலுக்குப் பயந்து விட்டேனா? அது மிரட்டல் தானா? கவனமாய் யோசித்தால் கமிட்டிக் கூட்டம் சொன்னதில் தவறில்லை என்றுதான் படுகிறது எந்தக் காரணம் கொண்டும் போராட்டம் திசை தப்பிப் போகக் கூடாது. அடிப்படைகளை மறந்து விட்டாயா என்று கட்சியில் கேட்கிறார்கள். தனி மனிதரைவிடப் போராட்டம் முக்கியம் என்று சொல்லிக் கொடுக்கிறார்கள்.

ஆனால் எனக்குப் பசிக்கிறது. இந்தத் தெருவில் தனிமையான சாலையில் நான் மட்டுமே நடந்து கொண்டிருக்கிறேன். ஒரு போராட்டத்தின் கூரிய முனையான நான் தளர்ந்து கொண்டிருக்கிறேன். என் பசி பற்றி, என் வேதனை பற்றி யார் கவலைப்படுகிறார்கள்? யார் வீட்டில் எனக்குச் சோறு போடுவார்கள்? பசிக்கிறது பசி வயிற்றில் வலியாய் மாறி வேதனை செய்கிறது. சாவித்திரி வீட்டுக்குப்போகலாமா? சோறு கிடைக்குமே.

"நோ-கட்சி போகக் கூடாது என்று சொல்லியிருக்கிறது, கட்டளையிட்டிருக்கிறது. சே—என்ன கேவலம், எனக்கு மட்டுமா கேவலம்? அந்தப் பெண்ணுக்கும் இந்தக் கட்டளை கேவலமில்லையா. சாவித்திரி அன்று அழுததைக் கட்சிக்கு யாரும் அநீதமாக்கிச் சொல்லியிருப்பார்களோ.

ஆனால் பசிக்கிறது. தெருமுனையில் வெளிச்சம் தெரிகிறது. வெற்றிலைப் பாக்குக் கடையா, வாழைப் பழம் பிஸ்கட் கிடைக்காதா! சூடான சுக்குக் காபி கிடைக்கும். தனியே போர்டு தொங்க விட்டிருக்கிறான். பழம் பிஸ்கட், காபி போதும். இப்போதைக்குப் பசி அடங்கும்.

"பழம் எவ்வளவுப்பா."

"எடுத்துக்குங்க"

"பிஸ்கட் ஒரு பொட்டலம் கொடு."

"இரண்டு தரட்டுங்களா?"

"வேண்டாம், ஒண்ணு போதும், பழம் எவ்வளவு விலை?"

"விலை இருக்கட்டுங்க எடுத்துக்குங்க"

"ஏம்பா...விலை சொல்லு"

"ஐயாகிட்ட எப்படி விலை சொல்றது."

"என்ன?"

"பத்தாயிரம் தொழிலாளருக்குத் தலைவரு பெரிய கம்பனில லீடர். விலை சொல்வாங்களா. எடுத்துக்குங்க."

"என்னைத் தெரியுமா உனக்கு"

"மீட்டிங் கேட்டேனே. கடைக்கு வந்த ஆளுங்களும் பேசறாங்களே. நம்ம கம்பனில வேலை செய்யற ஆளுங்க நிறைய பேர் இந்தப் பேட்டை தாங்க. கணக்கு



வெச்சிருக்காங்களே. அந்தக் கதை ஒன்னு சொன்னீங்களே மீட்டிங்ல டாப் ஐயா."

"ரொம்ப சந்தோஷம்...விலை சொல்லு."

"வேணாம் சார்."

"ஏம்பா?"

"உங்ககிட்ட காசு வாங்க மாட்டேன் சார்."

"என்னையா இது சத்திரமா நடத்தற? வேண்ணா நியாய விலையா சொல்லு இனாமா இப்படிக் கொடுத்தா போண்டி ஆயிடுவே."

"நல்லா மனுஷாளுக்குக் கொடுத்து யாரும் கெட்டுப் போறதில்லீங்க, பழம் எடுத்துக்குங்க" பழத்தை உரித்து விண்டு பாதியைக் கோபாலன் வாயில் போட்டுக் கொண்டான். மென்று கொண்டே கடைக்காரன் பெயரைக் கேட்டான்.

"எம்பேரு சம்பந்தமுங்க. என் மச்சான் ஒருத்தன் டிங்கர் வேலை கொடுத்தீங்கன்னா விளக்கு ஏத்தின புண்யங்க உங்களுக்கு."

கோபாலன் சொல்லுவதை நிறுத்தினான். உறுத்து கடைக்காரனைப் பார்த்தான். லஞ்சம், தலைவனான பிறகு தன்னிடம் பேசப்பட்ட முதல் லஞ்சம். பாதிப் பழத்தையும், பாக்கெட்டில் கைவிட்டு ஒரு நாலணாவையும் கடையில் வைத்தான்.

தெரியாத்தனமா வெற்றிலை பாக்குக்கடை வெச்சிட்ட சம்பந்தம். உன் திறமைக்கு நீ வேற வேலை செய்யணும். ஒரு நிமிஷம் என்னையே ஏமாத்திட்டியே நல்லா இரு."

வேட்டியை மடித்துக் கட்டிக் கொண்டு தெருவில் இறங்கி எதிர்ப்பக்கம் போய் விறுவிறு என்று நடக்கத் துவங்கினான்.

கடைக்காரனுக்குத் தான் சொன்னது புரிந்திருக்குமா, இல்லை இன்னும் பச்சையாய்ச் சொல்லியிருக்க வேண்டுமா?

இனாமாய்ப் பழம் கொடுக்க முன்வந்த போதே தனக்கு ஏன் பொறி தட்டவில்லை? 'இனாம்' என்ன அழகான வார்த்தை அது. எவ்வளவு பாலீஷ் அதில். பதிலுக்கு எதுவும் பெற்றுக் கொள்ளாமல் இலவசமாகக் கொடுப்பது என்பது வெளி அர்த்தம். ஆனால் எல்லாவற்றையும் பயங்கரமாய் வாயைப் பிளந்து கொண்டு எதிர்பார்க்கிறேன் என்பதுதான் உள் அர்த்தம் தூண்டில் முள் விசைப்பொறி வலை. யானைப் பள்ளம். இனாம் எவ்வளவு நைச்சியமாய் பேச்சை ஆரம்பித்தான்? எவ்வளவு மிருதுவாய்ப் பேசினான். பாராட்டினான். யாரெல்லாம் இவ்விதம் பேசியிருக்கிறார்கள் என்னோடு? யாரெல்லாம் இவ்விதம் எதிர்பார்ப்புடன் உதவியிருக்கிறார்கள் எனக்கு? பசிக்கிறது என்று கடையில் நின்றது பிசகா? பசிக்குச் சோறு போட்டாலும் அது இனாமா. எதிர்பார்ப்புகளுடனா? வேறு எங்கெல்லாம் இப்படிச் சாப்பிட்டிருக்கிறேன். கணேசன் வீட்டில். சாவித்திரி வீட்டில், கணேசன் வேறு சாவித்திரி வேறா? கணேசன் இருந்த போது கணேசன் வீடு. இல்லாதபோது சாவித்திரி வீடு தானே. கணேசன் ஏன் இரண்டு முறை கூட்டிக்கொண்டு போய்ச் சோறு போட்டான்? என்ன எதிர்பார்த்தான், என் நட்பையா? நான் தலைவனாவேன் எனத் தெரிந்தா? அது முன் யோசனையான நடவடிக்கையா? அயிரை இட்டு வரால் வாங்குவதா, ச்சே...செத்துப் போனவனைப் பற்றி ஏன் இவ்விதம் இழிவாய் யோசனை செய்ய வேண்டும்.

சாவித்திரியும் போட்டாளே. எதை எதிர்பார்த்து?

கேட்காமல் சோறு போட்டாளே. இரண்டாயிரத்துச் சொச்சம் கலெக்‌ஷனுக்கு நன்றி அறிவிப்பாய் கலெக்‌ஷன் நடக்கும் என்று அவளுக்கு எப்படித் தெரியும்? கூட்டம் பார்த்தவுடன் என் மனசில் ஏற்பட்ட உத்தி அல்லவா அது? சாவித்திரிக்கு எவ்விதம் இது தெரிய முடியும்? எதை எதிர்பார்த்து அந்த உணர்வு. கோபாலன் துணை வேண்டுமென்றா? பாதுகாப்பு கருதியா. ஒரு மாரல் சப்போர்ட் வேண்டுமென்றா? அனாதையாவள் இரண்டு குழந்தைகள், தகப்பன், தமையன். வேறு என்ன கருதி போட்டிருப்பாள்? ஆனால் அன்று பசி நேரத்தில் அந்த உணவு எப்படியிருந்தது அமிர்தமாய்.



இப்பவும் இவ்விதம் யாராவது உணவு போட்டால், எவ்வளவு நன்றாய் இருக்கும்? போய்ப் பசிக்கிற இந்த நேரத்தில் சாவித்திரி கையால் சாப்பிட்டால் எப்படியிருக்கும்? மனசும் வயிறும் எவ்வளவு நிம்மதியடையும்?

பசிக்கிறது. மறுபடியும் தெருத் திருப்பத்தில் வெளிச்சம். மிலிட்டரி ஹோட்டல் உள்ளே போய்விடலாமா? பிரியாணிதான் இருக்கும். பேசாமல் போய்அதைச் சாப்பிட்டு விடலாமா? கறித்துண்டுகளை ஒதுக்கிவிட்டுச் சாப்பிடலாமா? கோபாலனுக்குச் சிரிப்பு வந்தது. ஏன் நம்மால் மாமிசம் சாப்பிட முடியவில்லை? பழக்கமின்மையா? பிராமணன் என்கிற எண்ணமா? இன்று எந்த விதத்தில் நான் பிராமணன்? பூணூல் இல்லாமல், மந்திரம் தெரியாமல், சடங்குகளை மதிக்காமல், கடவுள் நம்பிக்கையில்லாமல் நான் என்னமாய் பிராமணன் ஆவேன்? எதை மீறினாலும் இந்த உணவுப் பழக்கத்தை ஏன் மீற முடியவில்லை? ஏன் மாமிசம் பிடிபட வில்லை. கறித்துண்டுகளை நினைக்கிற போதே வயிற்றைப் புரட்டுகிறது. சற்று நேரம் முன் இது உயிரோடு அலைந்து கொண்டிருந்த வஸ்து என்று நினைப்பு வருகிறது.

உணவென்பதென்ன? வயிறும் வாயும் ஏற்றுக் கொள்வதனைத்தும் உணவுதான். இதை ஏன் ஏற்றுக்

கொள்ள முடிவதில்லை? இதுவும் பக்குவப்படுத்தப்பட்டது தானே. உள்ளுணர்வு இதை மறுக்கிறதே ஏன்? பழக்கமற்றதில் ஏற்படும் பயம் கருதியோ? சோதனையாய் இன்று மாமிசம் சாப்பிட்டுப் பார்த்தால் என்ன? வேண்டாம் இப்போது, சோதனை வேண்டாம்.

கறித்துண்டுகளை ஒதுக்கிவிட்டுச் சோறு முழுவதையும் ஒரு பருக்கை விடாமல் கோபாலன் ஆவலுடன் சாப்பிட்டான்.

''இன்னொரு ப்ளேட் கொண்டு வாப்பா. கறித்துண்டு வேணாம்.''

''வெஜிடபிள் பிரியாணி கொண்டு வரட்டுங்களா?''

''அடப்பாவி, இதை முதல்ல சொல்லமாட்டே. இதை தொட்டிருக்க மாட்டேன்.''

சர்வர் பையன் வாய் நிறையச் சிரிப்போடு போனான். கோபாலனுக்கும் சிரிப்பு வந்தது. உணவு பற்றி இத்தனை ரசனை வைத்துக் கொண்ட நான் எல்விதம் கம்யூனிஸ்ட்டாவேன்? வெறும் நத்தையும் கடலைமையும் உணவாமே ராமநாதபுரம் விவசாயிகளுக்கு. பூனைகளும் நாய்களும் உணவாயிற்றாமே சீன தேசத்தில். எனக்குக் கம்யூனிசம் ஒரு போர்வையோ. என் உள்ளுணர்வில் கலக்கவில்லையோ. சிலர் சொல்லுவது போல் நான் கைபர் கணவாய் ஆளா, தன்னை வடதேசத்து வடமன் என்று அப்பா சொல்லிக் கொள்வார், எனக்கு எந்தத் தேசம்? வடதேசமா, தென் பகுதியா? சொந்த ஊர், மக்கள் சீனம் என்று சொல்லிப் பெருமாளிடம் அடிபட்டது நினைவுக்கு வந்தது கோபாலனுக்கு. பொய்தானே அது.

அறிவுதான் மக்கள் சீனத்தை ஆதரித்து, பாராட்டியது. கார்ல் மார்க்ஸையும் தோழர் லெனினையும் ஸ்நேகமாக்கியது. ஆனால் எனக்கென்று ஏதேதோ குணங்கள் இருக்கின்றன. குங்குமம் இல்லாத சாவித்திரி முகம் வேதனைப்படுத்துகிறதே.



மனிதன் கூடிவாழும் இயல்பினன். கூட்டமாய் வாழ்பவன் நான் வேறு கூட்டம். கார்ல் மார்க்ஸ் வேறு கூட்டம். தோழர் மா சே துங் வேறு கூட்டம் அவரவர் கூட்டத்துக்கு அவரவர் நிபந்தனைகள். செயல் முறைகள் பழக்கவழக்கங்கள். அவர் நிபந்தனை எனக்குவராது என் பழக்கம் அவருக்குச் சரிப்படாது. உலகத் தொழிலாளர்களே ஒன்றுபடுவீர். சரிதானா அது. ஒன்று படமுடியுமா? கனவுதானா. எட்டாத இடம்தானா. உலகம் சுருங்கிவிட்டது. வாஸ்தவம்தான். ஆனால் ஒன்றாகிவிடவில்லை. கூறுகள் கலைந்துவிடவில்லை, ஒன்றுள் ஒன்றாகிக் கலந்துவிடவில்லை. இறுகிக் கட்டி கட்டிப்போய் திடப்பொருளாகவில்லை. ஆகவே ஆகாதோ. ஆகாத கனவுக்குத்தான் இத்தனை ஆவேசமா. ஒன்றாய் ஆகும் என்றால் அத்தனை இனமும் கை விட்டுப்போய் விடுமோ. உண்மையாகவே உலகம் ஒன்று படுமா? வர்க்க பேதமின்றி வாழ்க்கை நிச்சயம்தானா. எனக்கின்னும் ஏன் அடிப்படையே குழப்பமாகி வருகிறது. அதிகம் யோசிக்கத் துவங்கியதாலா.

சின்ன ஏப்பம் வெளிப்பட்டது. டீயின் சூடு நெஞ்சு முழுவதும் பரவியது, அம்மா உயிர் வந்தது எனக்கு. பசி-பசி-பசி- உலகத்தில் யாருக்கும் பசிக்கக்கூடாது. பசியோடு எவரும் அலையக்கூடாது, பசிக்குப் பலியாகக்கூடாது. ராமநாதபுரம் விவசாயியாகட்டும், மக்கள் சீனத்துத் தொழிலாளியாகட்டும். உணவின்றி மடியக்கூடாது. நாளையோடு நாற்பது நாள் தொழிற்சாலை முடி எத்தனை பேர் பசியோடு கிடக்கிறானோ. எத்தனை குழந்தைகள் அரை வயிறு கஞ்சியோடு தூங்குகிறதோ. முடித்து விடுவோமா. கிடைத்தவரை போதும் என்று நிறுத்தி விடுவோமா எட்டணா உயர்வுக்கு எத்தனை நாள் பட்டினியாய் இருப்பது.

இனி முடிப்பதும், நிறுத்துவதும், என் கையிலா? யாரோ கூட்டம் போட்டுத் தீர்மானம் செய்து, ஓட்டுக்கு விட்டு மெஜாரிட்டி முடிவுசெய்து—

ஊர்வலம் நடத்திக் காட்டுவோம். பிரச்சனையை மக்களுக்குப் புரியவைப்போம். அரசு நிச்சயம் தலையிடும் நல்ல முடிவு பிறக்கும். எல்லோரும் நம்பிக்கையுடன் பேசினார்கள். கட்சி உதவி செய்யும் என்றவுடன் கைதட்டிச் சந்தோஷப்பட்டார்கள். ''கட்சித் தலைவரையே ஊர்கோலத்துக்குத் தலைமை தாங்கச் சொல்லுங்க, கோபாலன்' என்றார்கள்.

கட்சித் தலைவர் வரமாட்டார். கட்சியின் ஆட்கள் வரமாட்டார்கள். பின்னணியாய் இருந்து செயல்படுவார்கள். போலீஸ் குறுக்கீடு. மக்களுக்குக் கம்பெனி பிரச்னையை ஊர்வலம் சொல்லும்.

எழுந்து பில்லுக்குப் பணம் கொடுத்து யார் மீதோ இடித்துக் கொண்டான். இடிபட்டவன் தடுமாறி பாய்ந்து அவனை நிறுத்தினான்.

''கோபாலன் நீங்களா தேங்க்யூ.''

''ஆமாம் நீங்கள்.'

''சங்கரன் அக்கௌண்ட்ஸ்.''

''ஓ. ஸ்டெனோ சங்கரன் என்ன இப்படி இளைத்து விட்டீர்கள். உடம்பு சரியில்லையா''

''இல்லை, ஆமாம் கொஞ்சம் உடம்பு சரியில்லை. டீ சாப்பிடலாமா''

''இப்பத்தான் முடிச்சேன்.''

''டீ தானே.''

கோபாலனுக்கும் யாருடனாவது பேசவேண்டும் போல இருந்தது. தனியே இருந்தால் இன்னும் குழம்பிக் குழப்பி யோசனை வரும்போலப் பட்டது.

''சரி.''

''இரண்டு டீ...''

''அதென்ன நோட்டுப் புத்தகம்?''



''ஒன்றுமில்லை. சில கவிதைகள்.''

''இலக்கிய ரசிகர் இல்லையா நீங்கள். கேள்விப்பட்டிருக்கிறேன்.''

''அப்படியொன்றுமில்லை. பரிச்சயமுண்டு.''

''என்ன இலக்கியம்?''

''ம்ம்ம்...''

''என்ன வித இலக்கியம். சிவப்பா பச்சையா?''

''அப்படி ஒன்று உண்டா என்ன?''

''மக்களுக்காக எழுத்தா? இல்லை மனசுக்குப் பிடித்த விஷயமா?''

''எனக்குப் பிடித்தது மக்களுக்குப் பிடிக்காதா என்ன? நானும் மக்களில் ஒருவன் தானே.''

''அதைச் சற்றுக் கொடுங்கள். படித்துப் பார்க்கலாம்.''

''ம்ம்... இது வேண்டாமே.''

''ஏன் மக்களுக்கானது இல்லையா?''—கோபாலன் வாய்விட்டுச் சிரித்தான், சட்டென்று ஒரு சந்தோஷம் தன்னிடம் ஒட்டிக்கொண்டு லேசானதாய் உணர்ந்தான்.

''சின்ன விழிகளில் நீல சமுத்திரம் கொண்டு அடக்கி விட்டாள், என்னை இங்கு நிறுத்தி விட்டாள்.''

கோபாலன் பக்கங்களைப் புரட்டினான். 'தவம்' என்ற தலைப்பில் நிறுத்தினான்.

''உனக்கென்ன கோவில் குளம்,
சாமி பூதம் ஆயிரம் ஆயிரம்
இனிமையாய்ப் பொழுதும் போகும்
வலப் பக்கம் கடல் மணலை
இடப் பக்கம் இறைத் திரைநத்து
நகக் கணுக்கள் வலிக்கின்றன.

அடியே

நாளையேனும் மறக்காமல்

''வா.''

இன்னும் பக்கங்கள் புரண்டன. தெளிவான கையெழுத்தில் சித்திரங்களுக்கு நடுவே கவிதைகள் எழுதப் பட்டிருந்தன.

கடைசி பக்கத்தில அன்றைய தேதி போட்டு 'நான்' என்று ஒரு கவிதை எழுதப்பட்டிருந்தது.

எனக்குள்ளே ஒரு மிருகமுண்டு. அதை உன்னிடம் சொல்வதெப்போ?

நாளை, நாளை மறுநாள், நாலு நாள் கழித்து, மெல்ல ஒரு ஞாயிறு மாலை வெளியில், அதை உன்னிடம் சொல்வதெப்போ?

எனக்குள்ளே ஒரு மிருகமுண்டு அதைச் சொல்ல ஏன் இத்தனை தயக்கம்?

வால் தூக்கி தசைகள் காட்டிப் பல்லிளித்துக் குளம்பால் கீறும் எனக்குள்ளே இருக்கும் மிருகம் உனக்கொரு கால் பிடித்துப் போனால்.

''எனக்குள்ளே ஒரு மிருகமுண்டு கோபாலன் மென்மையாய் புன்னகை செய்தான். சபாஷ், இந்தக் கவிதை நன்றாய் இருக்கிறது. இதை எழுதக் காரணம் என்ன சங்கரன்.''

கோபாலன் தலையைத் தூக்கி, சங்கரன் கண்களை ஊடுருவினான். ''பிறகு?''

''சின்ன உதவிகள் செய்தாள். அடிக்கடி வீட்டுக்கு வந்துபோகச் சொன்னாள். தெரிந்த பெண். நண்பரின் மகள். யூ நோ—அடிக்கடி வந்து போனாள்.''



''என்ன ஆகும் என்று உங்களுக்குத் தெரியும். அந்த வெகுளிப் பெண்ணுக்குத் தெரியாது அப்படித்தானே.''

சங்கரன் கண்களில் சோர்வும் சோகமும் தட்ட தலையசைத்தான்.

''ஒரு இடம் எனக்குப் பிடித்திருக்கிறது. இந்தக் கவிதையில் உள்ளே மிருகம் இருக்கிறது. ஜாக்கிரதை என்று தனக்குத்தானே உணர்வது இருக்கிறதே உண்மையைச் சொல்வது இருக்கிறதே அது பிடித்திருக்கிறது மனசுக்குள் இருப்பது என்ன என்று தெரிந்த பின் வரை மறுப்பது சுலபம் சங்கரா.''

''சுலபம் என்று தோன்றவில்லை கோபாலன் சார்.''

''சரி, இதற்குமேல் நான் பேச விரும்பவில்லை. தானாய் உணர்ந்து கொள்வீர்கள். அந்தப் பெண்ணைக் காதலிக்கிறீங்களோ?''

''இல்லை...''

''முன்னால் நிறைய காதல் கவிதைகள் இருக்கிறதே.'

''அது...அது...''

''வேறு பெண்ணா...?''

சங்கரன் ஆமென்று தலையசைத்தான்.

''போகலாமா?'' கோபாலன் முன்னே நகர்ந்து டீ குடித்ததற்குக் காசு கொடுத்தான். சங்கரன் அவனைத் தடுத்து பாக்கெட்டிலிருந்து காசெடுத்தபோது கசங்கலாய் நூறு ரூபாய் நோட்டுகளும் பத்து ரூபாய் நோட்டுகளும் வெளிப்பட்டன.

''வேண்டாம் சங்கரன் நாற்பது பைசாதானே.' வெளியே வந்து இரவில் குளிரில் நனைந்து பிரியக் கை குலுக்கினபோது இந்தப் பையன் எங்கேயோ அல்லாடுகிறான் என்பது கோபாலனுக்குத் தெரிந்து போயிற்று.

''காதல் என்பது நல்ல விஷயம் சங்கரா. ஆனால் அது ஒரு பெண் மீது ஏற்படுவது மட்டுமில்லை. பெண்

ஒரு ஆரம்பம், சுலபமான ஆரம்பம், சுகமான ஆரம்பம். இது பரவ வேண்டும் மனைவி, குழந்தை குடும்பம் அண்டை அசல் நண்பர், நாடு என்று பரவ வேண்டும்."

"காதல் என்பதற்கு அர்த்தம் விட்டுக் கொடுப்பது. கல்மிஷமின்றி விட்டுக் கொடுப்பது. சுலபமாய் விட்டு கொடுப்பது, வளைப்பதல்ல. பிறரைத் தன் விருப்பத்துக்கு வளைத்துப் போடுவதல்ல. நீ யாரையோ வளைத்துக் கொண்டிருக்கிறாய். அல்லது வளைக்கப்பட்டிருக்கிறாய் காதலில் இத்தனை அழுகை இல்லை சங்கரா அஜீரணம் பிடித்த குழந்தை மாதிரி சிணுங்கிச் சிணுங்கி அழுவது காதல் அல்ல, சுயநலம். உன்னிடம் எங்கேயோ சின்ன தவறு இருக்கிறது. யோசனை செய். வரட்டுமா" மறுபடி கை குலுக்கிவிட்டுக் கோபாலன் இருளில் மறைந்தான்.

சங்கரன் மனசு இன்னுமொரு கவிதையாய் டைப் பண்ணத் துவங்கியது.

"இடுப்பை விட்டு எங்கானாலும் இறங்க மாட்டேன் என்கிறதாய் அவனின் நினைப்பை இடுக்கிக்கொண்டு அடங்கள் செய்யுது மனக்குழந்தை."

## 16

நகரமெங்கும் போஸ்டர்கள் ஒட்டப்பட்டிருந்தன. வெள்ளைத்தாளில் சிகப்பு எழுத்துகளில் அரை ஆள் உயரப் போஸ்டர்கள் வெயிலில் இருந்தன.

மாபெரும் ஊர்வலம். "பொது மக்களே, பேராதரவு தாரீர். பத்தாயிரம் குடும்பங்கள் இன்றோடு



நாற்பத்தெட்டு நாள் பட்டினி. அரசின் மெத்தனத்தைக் கண்டித்து, சுரண்டல் வர்க்கத்தின் எதேச்சாதிகாரத்தை எதிர்த்து, வரும் ஞாயிறு மாலை மூன்று மணி அளவில் தொழிற்சாலை வாசலிலிருந்து கோட்டையை நோக்கி மாபெரும் ஊர்வலம். பொது மக்களே பேராதரவு தாரீர்"

எல்லா தினசரிப் பத்திரிகைகளிலும் செய்தி வெளியாகியிருந்தது ஒரு ஆங்கிலப் பத்திரிகை கூட கட்டம் கட்டி சின்ன துணுக்காய் செய்தி வெளியிட்டிருந்தது.

முன்னாள் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினரும் இந்நாள் தொழிற்சங்கத் தலைவருமான திரு. கோபாலன் அவர்கள் தலைமையில் கொடிகள் தாங்கி மாபெரும் ஊர்வலம் தொழிற்சாலை வாசலில் ஆரம்பித்து இங்கே திரும்பி அங்கே கடந்து கோட்டையை நோக்கி ஊர்வலம் போகும் பாதைகளைக் காட்டி விவரமாய்ச் செய்தி வெளியிடப்பட்டிருந்தன. ஒரு மாலைப் பத்திரிகை, இவர்தான் கோபாலன்—இதுதான் தொழிற்சாலை என்று படங்கள் போட்டிருந்தது.

சாவித்திரி காற்றுவாக்கில் செய்தியைக் கேள்விப்பட்டு பையனைக் கடைக்கு அனுப்பிப் பத்திரிகை வாங்கி வரச் சொன்னாள். கண்களில் ஜலம் கட்ட செய்தியைப் படித்தாள்.

இந்த மனுஷன் இருந்திருந்தால் உடனே சைக்கிளை துடைத்து, காற்று அடித்து, 'ஊர்வலத்துக்குப் போணும் ஊர்வலம் இருக்கு, போகணும்' என்று தொணதொணக்க ஆரம்பித்திருப்பார். வாசலில் நின்று யாருடனாவது உரத்த குரலில் சர்ச்சை செய்து கொண்டிருப்பார். வாசலும், சைக்கிளும் வெறுமையாய் நின்று கொண்டிருக்கின்றன.

"அம்மா, நான் போட்டா ஊர்வலத்துக்கு?" மூத்த பையன் கேட்டான்.

''வேண்டாண்டா ராஜா.''

''அப்பா இருந்தா என்னையும் கூட்டிண்டு போவா, இல்லையா.''

சாவித்திரி பையனை நிமிர்ந்து பார்த்து விட்டுக் கண் ஜலத்தை அடக்கப் பேப்பரை நோக்கிக் குனிந்து கொண்டாள்.

''இதுதான் அப்பா ஆபீஸா, தெனோம் இது வழியா தான் போயிருப்பா இல்லையா? நான் அப்பா ஆபீஸ் பார்த்ததே இல்லைம்மா. நீ பார்த்திருக்கியோ?''

சாவித்திரி படத்தை உற்றுப் பார்த்தாள் அவன் தினம் போய்ப் புழங்கின இடம் இது என்ற ஆவலோடு பார்த்தாள்.

துரைசிங்கப் பெருமாள் பேப்பரைத் தூக்கி அடித்தான்.

''மட்டிப்பசங்க, எவனைக் கேட்டுய்யா ரூட்டு கொடுத்தீங்க? அத்தினி மெயின் ரோடும் ப்ளாக் ஆவுது. எவன்யா சாவுறது வெயில்ல? ட்ராபிக் லைஸென்ஸிங் கைக் கூப்புடு. எஸி யாரு இப்போ—ஜான் ராஜுவா? முட்டாள்...''

''ட்ராபிக்ஸ் கமிஷனரைக் கேட்டு செய்தாங்களாம் சார்...''

''கமிஷனரு என்னைக் கேட்கலையே.''

''தெரியலை, சார்.''

''கமிஷனருக்குப் போன்போட்டுக் கொடு.'' பத்து நிமிடம் கண்ட்ரோலிடம் பேசி விட்டுக் கமிஷனர் முக்கிய அலுவலாக இருக்கிறார் என்றும், பிறகு பேசிக் கொள்ளலாம் என்றும் தெரிய வந்தது.

''என்னப்பா ஆச்சு அவருக்கு? நான் கூப்பிடறேன்னு சொன்னியா?''



''என்னாண்ட கண்ட்ரோலைக் கொடு.'' அதே பதில்தான் பெருமாளுக்கும் வந்தது. கண்ட்ரோலிடம் பெருமாள் சீறினான். ''என் பேரைச் சொன்னியா? என்ன சொன்னார் அதுக்கு?''

''டோண்ட் டிஸ்டர்ப் மீ நௌ.'' துரைசிங்கப் பெருமாள் லேசாய் எங்கோ தான் சறுக்குவதை உணர்ந்தான். முதன் மந்திரி போன் நம்பரை நினைவுபடுத்திக் கொண்டான். நேரே பேசிடுவோமா... சட்டென்று உள்ளுக்குள்ளே விளக்கெரிந்தது.

ஸி.எம்.மிடம் நான் பேசினது கமிஷனருக்குப் பிடிக்கவில்லையோ அடடே தப்பு பண்ணிட்டனே போலீஸ் ஸ்டேஷனுக்குள் குறுக்கும் நெடுக்குமாய் அலைந்து யோசனை செய்யத் துவங்கினான்.

கமிஷனர்—குளித்துவிட்டு, பூஜையறைக்குப் போய் பட்டையாய் விபூதி அணிந்து கொண்டார். உதிரிப் பூக்களை ஸ்வாமி படத்திற்குப் போட்டுவிட்டுக் கை கூப்பிக் கண் மூடினார். ''அவனருளாலே அவன் தாள் வணங்கி சிந்தை மகிழ சிவபுராணம் தன்னை'' என்று பாடினார்.

ஹாலுக்கு வந்து காஃபி குடித்தார். கண்ட்ரோல் வழியாய் ஏட்டு முனுசாமி நாயுடுவை வரச்சொன்னார். பேத்தியைத் தோளில் தூக்கிக்கொண்டு வராண்டாவுக்கு வந்தார். ஆனை ஆனை அரசர் ஆனை என்று வேடிக்கை காண்பித்தார், குட்டி யானைக்குக் கொம்பு முளைச்சுதாம் பட்டணம் எல்லாம் பறந்தோடிப் போச்சாம் என்று குழந்தையோடு கும்மாளமிட்டார்.

ஏட்டு முனுசாமி நாயுடு சல்யூட் அடித்ததும் ''சாப்டியா'' என்று கேட்டார், மனைவியைப் பொட்டலம் கட்டி தோசை கொண்டு வரச் சொன்னார்.

''கப்பையா கிடைத்தானா?'' என்று விசாரித்தார். ஸ்டிலட்டோ பற்றி மெடிக்கல் ரிப்போர்ட் குறிப்பிட்டதைச் சொல்லி அந்தப் பக்கம் யாரெல்லாம் கறுப்புப் புள்ளி என்று கேட்டார். ''வீட்டு வாசல்ல உட்கார்ந்தா கிடைப்பானா—குத்தினவன் யாருன்னு தேடிப் போயிருப்பான்—நீ வீட்டு வாசல்ல உட்காராதே. சைக்கிள் எடுத்துக்கோ? பேக்டரி பக்கம் ரவுண்ட் போய்கிட்டே இரு. சுப்பையா வீட்லேர்ந்து அவன் போட்டோவை எடுத்தாந்தாங்களா? அதை பிரிண்ட்டுப் போட்டு எல்லா ஸ்டேஷனுக்கும் அனுப்பறேன். நடமாடறது தெரிஞ்சா ஒண்ணும். செய்யாதே. எனக்குப் போன் பண்ணு இனிமே நீ பெருமாள்கிட்டே ரிப்போர்ட் பண்ண வாணாம். நேரா என்கிட்டேவா.''

முனுசாமி நாயுடு தோசைப் பொட்டலம் வாங்கிக் கொண்டார். விறைப்பாய் சல்யூட் அடித்தார் அதில் நன்றி உணர்ச்சி தெரிந்தது

ரங்கசுவாமி வீட்டில் எல்லாப் பத்திரிகைகளும் வாங்கப்பட்டன. பால்கனியிலிருந்து போஸ்டர் தெரிந்தது. ''போராடுவோம்'' போராடுவோம் இறுதிவரை போராடுவோம்'' யாரும் கோஷமிடாமல் ஒரு கூச்சல் அவருக்குள்ளே கேட்டது.

அம்மா மூன்று பெக்குக்கு மேல் கூடாது என்று சொல்லி விட்டாள். எல்லாப் பாட்டில்களையும் உள்ளே வைத்துப் பூட்டிவிட்டாள்.

ஊர்வலம் பற்றிய செய்திகளை அவளும் படித்தாள்

ரங்கசுவாமி பெர்ஸனல் மேனேஜரைக் கூப்பிட்டார். பாலுவை வரவழைத்தார். அதிக போலீஸ் பாதுகாப்பு தேவையெனில் கமிஷரைத் தவிர சட்டப்படி முதல் அமைச்சருக்கும் விண்ணப்பம் செய்து கொள்ளலாம். தொழிற்சாலைகள் தேசத்தின் கண்கள் போன்றவை.



அவைகளைப் பாதுகாக்கும் கடமை முதலமைச்சருக்கும் உண்டு.

இதை நளினமாய் எடுத்துக் காட்டி, கோட்டைக்கு ஒரு கடிதம், கமிஷனருக்குத் தனியே ஒரு கடிதம் டைப் செய்யப்பட்டது.

பெர்ஸனல் மேனேஜர் தானே நேரில் கொண்டு போய்க் கொடுப்பது நல்லது என்றார். எந்தக் கலர் டை பொருத்தமாயிருக்கும் என்று உடனே யோசித்துக் கொண்டார்.

''நான் காலையிலேயே தொழிற்சாலைக்குப் போய் விடப் போகிறேன். ஊர்வலம் எத்தனை பெரியது பார்த்துவிட வேண்டும். நீங்க முதலமைச்சரைப் பார்த்துவிட்டு எனக்குச் செய்தி சொல்லுங்கள்'' என்றார் ரங்கசுவாமி.

முதலமைச்சருக்கு அகலமான டையும், நீளமான தலை மயிரும் உடைய பர்ஸனல் மேனேஜரை முதல் பார்வையிலேயே பிடிக்காது போயிற்று கடிதத்தை வாங்கி, ''அரசு ஆவன செய்யும்'' என்றார்.

''நாலு வார்த்தை சேர்ந்தா மாதிரி தமிழ்ல பேசத் தெரியல. வந்து கதை அடிக்கிறாங்க. பேரச் சொல்லுய்யா. போலீஸ் பாதுகாப்பாவது, புடலங்காயாவது'' அறையை விட்டு வெளியே வந்து படிகளில் இறங்கி வெராண்டாக்களைக் கடந்து சட்டசபை குளிர்கால தொடரில் கலந்து கொண்டார்.

காவிரி நீர் பங்கீடு பற்றி நேற்றைய விவாதம் அன்றும் தொடர்ந்தது. தஞ்சைத் தரணி வடகோடியில் நாற்பதாயிரம் ஓட்டு வித்தியாசத்தில் வெற்றி பெற்ற ஒரே கம்யூனிஸ்ட் கட்சி எம். எல். ஏ. அவசரமாய் உள்ளே நுழைவதைக் கவனித்துக் கொண்டார்.

எதிர்பார்த்தது போல விவாதத்தின் இடையில் ஒத்திவைப்புத் தீர்மானம் ஒன்று தாக்கலாயிற்று. கம்யூனிஸ்ட்

கட்சி எம். எல். ஏ. வுக்கு ஐந்து நிமிடம் பேச அனுமதி அளிக்கப்பட்டது.

சுமாரான தமிழ். கனமான சரீரம். ஆணித்தரமான பேச்சு.

"பாலம் திறக்க ஒரு அமைச்சர், பள்ளிக்கூடம் திறக்க ஒரு அமைச்சர், பண்பாடு கலைக்கழகம் என்று எதையோ திறக்க ஒரு அமைச்சர். ஆளுக்கொரு பக்கம் பறக்கிறீர்களே. நகரில் மூடப்பட்ட தொழிற்சாலை பற்றி ஏதும் தெரியுமா இந்த அரசுக்கு? பிறந்த நாளுக்குச் சோறு போட்டீர்களே பத்தாயிரம் குடும்பம் பட்டினி கிடப்பது தெரியாதா உங்களுக்கு என்ன முடிவு செய்தீர்கள்? ஏன் இந்தக் கதவடைப்பு? அரசின் நிலை என்ன இங்கே காவிரியைப் பங்கு போடுவது இருக்கட்டும். ஒரு தொழிலாளி இங்கே கொன்று போடப்பட்டானே தெரியுமா உங்களுக்கு?"

மணியடித்து மணியடித்து பதினாறு நிமிடம் அந்த எம். எல். ஏ. பேசினதும் நிதானமாய் முதலமைச்சர் எழுந்து நண்பர் ஆத்திரப்பட ஏதுமில்லை என்றும், இன்று காலைகூடத் தொழிற்சாலை நிர்வாகியுடன், அரசு பேச்சு நடத்திற்று என்றும், அரசுக்கு எதிராய் கொள்கை செய்தவர் கும்பல் ஒன்று சதிவேலை புரியுதென்றும், ஆயினும் இதற்காக அப்பாவித் தொழிலாளர்கள் ஊர்வலம் நடத்தத் தடையேதுமில்லை என்றும், நகரில் பலத்த போலீஸ் பாதுகாப்பு உண்டு என்றும், கோட்டைக்கு வந்து முறைப்படி மகஜர் கொடுக்கப்பட்டால் அரசு தீர விசாரிக்குமென்று பதில் சொல்லி, ஒத்திவைப்பு தீர்மானம் மறுக்கப்பட்டது.

எம்.எல்.ஏ கடும் கோபத்துடன் தனியே வெளிநடப்பு செய்தார், குளிர்காலக் கூட்டம் தொடர்ந்து நடந்தது. பத்திரிகை நிருபர்கள் அவரைச் சூழ்ந்து கொண்டார்கள். டெலிபோனை நோக்கி ஓடினார்கள்



குறுகலான நோட்டுப் புத்தகத்தில் நிறைய குறித்துக் கொண்டார்கள்.

காரில் ஏறின பிறகு வியர்வையைத் துடைத்துக் கொண்டு எம். எல். ஏ. பேசினார். இவனுங்களை ஒண்ணும் அசைக்க முடியாது. கோபாலனை ஊர்வலம் நடத்தச் சொல்லு பப்ளிக் சப்போர்ட் வேணும், நாலு மணி நேரமாவது ட்ராபிக் நிக்கணும்.

சங்கரன் நடுநிலை நாளோடு வாங்கியிருந்தான். ஊர்வலத் தேதியைப் பார்த்ததும் திக்கென்று இருந்தது. நீலகிரி எக்ஸ்பிரஸில் போக டிக்கட் அவனுக்கும் சியாமளிக்கும் அன்றுதான் எடுத்திருந்தான். இப்போது என்ன செய்வது? ஊர்வலம் போக முடியாது. கான்ஸல் செய்து விடலாமா. இரண்டு நாள் கழித்து ஓடிப் போகலாமா.

எப்படி முடியும். ஓடிப்போவது என்று முடிவு செய்த பிறகு வேறெந்த விஷயம் முக்கியம்? அப்பா, எப்பேர்ப்பட்ட ஊர்வலம் நடக்கப் போகிறது நகரையே கிடுகிடுக்க வைக்கும் ஊர்வலம். சியாமளியிடம் பேசிப் பார்ப்போமா? மாடியிலிருந்து எட்டி முற்றத்தைப் பார்த்தான். சியாமளி பற்று தேய்த்துக் கொண்டிருந்தாள். இவன் நிழல் தெரிந்ததும் மேலே நோக்கி உதடுகளை முத்தமிடுவது போல் குவித்தாள். பதிலுக்கு இன்னும் குவித்து விட்டு மறுபடி பின் வாங்கி பேப்பரைப் படிக்கத் துவங்கினான்.

இன்றைக்குச் சனிக்கிழமை சியாமளியின் குழந்தைக்குப் பள்ளிக்கூடம் இல்லை. சியாமளி மேலே வருவாளா மாட்டாளா?

மன்னி வேறு இப்போதெல்லாம் சரியாகப் பேசுவதே இல்லை. 'ரஸம் நன்னாயிருக்கு மன்னி' என்று சொன்னபோது ஏனோ பொலபொலவென்று அழுதுவிட்டாள்.

'ஏன்' என்று கேட்டபோது ''ஒன்றுமில்லை உன் அம்மா ஞாபகம் வந்தது. அழுதேன்'' என்றாள். மன்னிக்கு ஏதாவது தெரிந்து போயிற்றா, தெரியவில்லை.

எப்படியும் ஊர்வலத்துக்குப் போவது சரியில்லை, மூன்று மணிக்கு மன்னி தூங்கும்போது பெட்டியை எடுத்துக் கொண்டு போய்விட வேண்டும். தண்டபாணியையும் குழந்தைகளையும் வெளியே அனுப்பி விட்டு மன்னி அயரும்போது சின்னப்பெட்டியோடு சியாமளி வந்து விடுவாள். ஐந்து மணிக்கு நீலகிரி எக்ஸ்பிரஸில் நகர்ந்து விட்டால் இரண்டு பேருக்கும் விடுதலை. கைப்பற்றி ஓடின பிறகு யார் எங்கு மடக்கினாலும் கவலை இல்லை, ஆமாம் ஓடிவந்து விட்டோம் என்று டிக்ளேர் செய்து விட முடியும், வருவதை எதிர்கொள்ள முடியும். ஓடும் வரை எதுவும் தடைபடாது இருக்க வேண்டும்.

# 17

இடுப்பை விட்டு எங்கானாலும் இறங்க மாட்டேன் என்கிறதாய்.

அவளின் நினைப்பே இடுக்கிக் கொண்டு அடங்கல் செய்யுது மனக் குழந்தை.

நான்கு நாளாய் இதற்கு மேல் வரிகள் ஓடவில்லை. இது கவிதையாய் எழுத முடியுமா என்று தெரியவில்லை. சோனியாய், சோம்பலாய் தலைபெருத்து. உடல்குறுகின குழந்தை உருவம் தோன்றித் தோன்றி மறைகிறதே தவிர, வார்த்தைகள் மேற்கொண்டு பின்ன முடியவில்லை. என்ன வேண்டுமென்று கேட்கத் தெரியாமல், எது



தெரியாமல், எது கொடுத்தாலும் சமாதானமாகாமல் சிணுங்கிக் கொண்டிருக்கிற குழந்தையைப் போல, பல முறை வரைந்து வரைந்து அழித்த பிறகும் அடுத்த வரி தொடர முடியவில்லை.

சங்கரன் அறைக்குள் குறுக்கும் நெடுக்குமாய் அலைந்தான். விட்டத்துக் காரைச் சிதைவுகளை அண்ணாந்து வேடிக்கை பார்த்தான். ஜன்னலோரம் நின்று தெருவரை நோட்டமிட்டான். மூன்று நான்கு தாவணி அணிந்த பெண்கள் கையில் சுருட்டின பேப்பருடன் டைப்ரைட்டிங் இன்ஸ்டிடியுட் போகிறது தெரிந்தது. நடுவே போகிறவளின் இடுப்பு மிகுந்த லயத்துடன் அசைவது கண்களை அதிகம் ஈர்த்தது. அவள் அழகான பெண் பின்புறம் மட்டுமே தெரிந்தாலும், வாளிப்பான பெண். ஆனால் அவளைக் காதலிக்கச் சொன்னால் அவளே இவளிடம் வந்து ஐ லவ் யூ என்றால் காதலிக்கத் தோன்றுமா? முடியாது என்றுதான் படுகிறது. தசைகளின் ஈர்ப்புக்கு அப்பால் ஏதோ ஒரு ஈடுபாடு வேண்டியிருக்கிறது, அவள் யார்? பெயர் என்ன? அவளுக்குத் தமிழ் தெரியுமா? தமிழுக்கப்பால் கவிதை புரியுமா, கவிதைக்கும் கலைகளுக்கும் அப்பால் மனிதர்களை அறியும் குணம் உண்டா! தனக்கிருப்பதுபோல் தேடல் இருக்குமா—என்றெல்லாம் கேள்வி கேட்டுத் தெளிந்த பிறகு ஒருவேளை... .நோ, அப்பவும் கூட சட்டென்று காதலித்துவிட முடியாது. இணையான யோசனைகளும்? குணமும் மட்டும் போதாது. நடுவே போன பெண், சியாமளியை விட இளமையானவள். அவளைவிடக் கெட்டிக்காரியாகவும் இருக்கலாம். ஆயினும் சியாமளி என்று அவள் பெயரைச் சொல்லும்போது வரும் சந்தோஷம் மற்றவள் நினைப்பில் வராது. இரண்டாவது சந்தோஷம் மற்றவள் நினைப்பில் வராது. இரண்டாவது முறை காதலிக்க முடியாது. முதலாவது தோற்றுப் போய் இரண்டாவது என்று துவங்கும்போதே கணக்கிடுதலும், கவனமும் அதிகமாகி மனசு நேர்மையை

மழுங்கப் பண்ணி விடும். இரண்டாமவனாய் கற்பனை பண்ணி மனசு ஏமாற்றிக் கொள்ளும். எல்லாப் பெண்கள் முகத்திலும் சியாமளியைத் தேடி துளிச் சாயல் கிடைத்தாலும் அதை பிரிவு பண்ணி பாதி கற்பனையும் மீதி கசப்புமாய் காலம் தள்ளும். சாகிறவரை சியாமளியைக் காதலியாய் கொள்ளும். தெருவோடு போகும் பெண்களில் யார் யார் சியாமளி என்று தேடினாலும் தேடும்.

சட்டென்று உள்ளே கவிதை டைப்ரைட்டர் உயிர் பெற்று வரிகளைக் கொப்பளித்தது.

தெருவின் விளிம்பில் மெல்ல நிறுத்தி
பறவைகள் போகுது பாரென்றால்
கண்ணை விரித்து கணங்கள் தயங்கி
மீண்டும் தாவுது அவளுக்காய்
அதட்டிப் பார்த்து அன்பாய்ச் சொல்லி
அசிங்கம் என்பினும் பயனில்லை
இறுக்க அவளை இறுக்கிக் கொண்டு
ஜொள்ளை உறியுது மனக்குழந்தை.

கவிதை நோட்டுப் புத்தகத்தில் எழுதி முடித்து மறுபடி படிக்கும்போது அறைக்குள் வெளிச்சம் மங்கி நிழல் படர்ந்து யாரோ உள்ளே நுழைவதை உணர்த்தியது.

"என்ன எழுதிண்டிருக்கு இது கவிதையா?" அவன் இரண்டு தோள்களிலும் கையை வைத்துப் பின்பக்கமிருந்து எட்டி, கன்னத்தோடிழைந்து, தோளில் பதித்த கைகளை முன்னே இறுக்கி அவன் மார்பில் மாலையாகி, வயிற்றில் கிசுகிசு மூட்டி, அவள் உடம்பு மென்மை முழுக்க முதுகுப் பக்கம் அழுந்த "என்னிக்குக் கிளம்பறோம். நாளைக்குச் சாயந்திரமா? சாயந்திரம் ட்ரெய்ன் உண்டா?" என்றாள்.



சங்கரன் பேனாவைக் கீழே வைத்துவிட்டு அவள் வலக்கையை எடுத்து முத்தமிட்டான். லேசாய் சாம்பலும் ஊசின ரசமுமாய் பற்று பாத்திர நெடி அடித்தது. லேசாய் அவன் புருவம் சுருங்கிற்று.

"ஓல் ஐ யம் ஸாரி சோப்பு போட்டு அலம்பிக்கணும்னு நினைச்சேன், மறந்து போயிடுத்து. ஒரு செகண்ட் அலம்பிண்டு வந்துடறேன்." விலகி வெளியே போனவளைப் பட்டென்று இழுத்து மடியில் அமர்த்திக் கொண்டான்.

"சகல நேரமும் மனுஷா, வாசனையாவே இருக்க முடியுமா?"

"வாஸ்தவம், எல்லா நேரமும் வாசனை வீச முடியாது. பற்று தேய்க்கிறதும், சாக்கடை அலம்பறதும் செய்துதான் ஆகணும். ஆனா இந்த வாசனையோடையா? அட்லீஸ்ட் இந்த மாதிரி நேரத்திலாவது வாசனையோட இருக்கிறது இரண்டு பேருக்கும் நல்லதில்லையா?"

"நீ என்ன சொல்ற?"

"நீங்க என்ன அர்த்தத்தோட கேட்கறேளோ அதுக்கு பதில் சொல்றேன். இத்தனை நாள் அனுபவிச்சிட்டுன்னு அன்னைக்கு நான் சொன்ன உடனே சரக்குன்னு கோபம் வரது இல்லையா? தேவடியாத்தனமா பேசறளேன்னு வேதனை வந்தது இல்லையா? ரொம்பசீப் பொம்மனாட்டின்னு தோணித்து இல்லையா? அப்படித்தான் தோணும் ஆனா அது அப்படி உங்களுக்குத் தோணினது சரியில்லை பொம்மனாட்டி பத்தி உங்களுக்குப் புரியலை."

"சந்தோஷப்படுத்தறதுல பொம்மனாட்டிக்கு சந்தோஷம் உண்டு தெரியுமோ? பசிச்சவாளுக்குச் சாதம் போடறமாதிரி ஏந்திக் குடிக்கிற கைக்கு ஜலம் ஊத்தற மாதிரி. முதுகு தேச்சு, சொம்பு சொம்பா வெந்நீர்

ஊத்திக் குளிப்பாட்டி விடற மாதிரி. உடம்பு பிடிச்சு விடற மாதிரி, உபசரணையா. உனக்குப் பிடிச்சிருந்தா எடுத்துக்கோயேன்னு வழங்கறதுல ஒரு நிம்மதி உண்டு தெரியுமோ?''

''இப்படிப் பண்ற உதவியை, வாரி வழங்கறதை இப்படிப் பற்றுத் தேய்க்கிற நாற்றத்தோட பண்ணலாமோ? பவுடரும், கண் மையுமா மினுக்குறான்னு பொம்மனாட்டியைச் சில பேர் சொல்றது கேட்டிருக்கேளா சங்கர், ரஸனை கெட்டவா பேசற பேச்சு அது. உலகத்தில் இனிமே உசிரோட இருக்கிறது பொம்மனாட்டி மட்டும் தாயின்னு ஆயிடுத்துனா இங்க யாரும் பவுடர்போட்டுக்க மாட்டா நறுவிசா உடுத்திருக்க மாட்டா, பொம்மனாட்டி உடம்புக்கு இயல்பா ஒரு மென்மை இருக்கே, அது உடனே உடஞ்சு போயீடும். வறட்டுத்தனம் வந்துடும்.''

உங்களைச் சந்தோஷப்படுத்தறபோது பாடி, பேசி, ஆடி அணைச்சு உங்களைக் கிறங்க அடிக்கிறபோது உங்க கிறக்கத்தைப் பார்க்கிறபோதுதான் எனக்கும் கிறக்கம் வருது. யம்மா இந்த ஆம்பளைக்கு எத்தனை சந்தோஷம் என்னாலங்கறபோதுதான் எனக்குள்ளும் திருப்தி வருது, இதுக்குமேல் விரிவா இதைச் சொல்ல முடியாது சங்கர்.''

''வழங்கினவா வாசனையா இருந்தாப் போதுமா, வாங்கிக்கிறவன் வக்கணையா இருக்க வேண்டாமா வயிறு நிறைய ஜலம் குடிசசுட்டுக் கடுக்கறதேங்கற போதுதான் எட்டி உதைக்கணும்னு தோன்றது தன்னோட வயிற்றில் வாயுவும் முறுக்கலும் வச்சுண்டு ரசம் ஊசிப் போயிடுத்துங்கறபோதுதான் தட்டை வீசணும்னு தோண்றது. நான் சொல்றது புரியறதா சங்கர் ''

''உன் பேச்சுப் பிரகாரம் வாங்கிக்கிறவன் யோக்கியதை என்ன?''



''வெரிகுட்—நல்ல கேள்வி கேட்டேள். முதல் காரியம் கொடுக்கிறவாளை மரியாதையோட பாக்கணும் ராத்திரி ராத்திரி கப்பம் கட்டறதா நினைச்சுக்கப் படாது. சொம்பு ஜலத்தைப் பிடுங்கிண்டு போய் குடிச்சுட்டு நீ என்னடி கொடுக்கறதுன்னு கேட்கப்படாது. பசிச்சபோது மட்டுமே திங்கறதுங்கறதை மீறப்படாது. பசிக்காம திங்கறது பெரிய பாபம் சங்கர் ஒரு வாய் ஜலம் கொடுத்துக் குடிச்சா தேங்க்யூன்னு உடனே சொல்லத் தோன்றதோ இல்லை இப்படி யாராவது தேங்க்யூ சொல்றது உண்டோ? வார்த்தையா வேண்டாம், வெட்கமா இருக்கும்! சைகை உண்டோ?''

''சியாமளி, கொஞ்சம் எழுந்திரேன்.''

''எதுக்கு?''

''பளிச்சுன்னு உனக்கு ஒரு நமஸ்காரம் பண்ணனும் போல இருக்கு. எழுந்திரேன்.''

''தோ, முடியாது.'' அவன் மடியிலிருந்தபடி அவனை அணைத்து அழுத்தினபடி பேசின வேகத்தில் மெல்லிய தாய் மூச்சிரைத்தபடி வெட்கப்பட்டாள்.

''இதை ஒரு தேங்க்யூ மாதிரி வச்சுக்கோயேன் எழுந்திரேன்.''

''மறுபடியும் தப்பா யோசிக்கறேன். கால்ல விழுந்து நமஸ்காரம் பண்ணிட்டா பொம்மனாட்டி பிரகாசமாயிடுவாளா? அதென்னவோ மன்னிப்பு கேட்கிற மாதிரி ஆயிடலையா? கெஞ்சறவாளை பொம்மனாட்டிக்குப் பிடிக்காது சங்கர். மதிக்கிறவாளைத்தான் ரொம்ப ரொம்பப் பிடிக்கும்.''

சங்கரன் அவளை மெல்ல இறுக்கிக் கொண்டான்.

நெஞ்சுக்கு நீதியும் தோளுக்கு வாளும்
நிறைந்த சுடர் மணிப்பூண்

பஞ்சுக்கு நேர்பல துன்பங்களாம் இவள்
    பார்வைக்கு நேர் பெரும் தீ
வஞ்சனையின்றிப் பகையின்றி சூதின்றி
    வையக மாந்தரெல்லாம்
தஞ்சமென்றே உரைப்பீர் அவள் பேர் சக்தி
    ஓம் சக்தி ஓம் சக்தி ஓம்.

உணர்ச்சியோடு பாட்டுப் பாடினான்.

''இது எனக்குப் பிடிச்சிருக்கு சங்கர். இது தேங்க் மாதிரிதான். இயல்பாகவே மத்தவங்களுக்குப் பிடிக் கறதை நெருடல் இல்லாம செய்ய உங்களுக்கு முடியுறது. நான் உனக்கு மனசுல சந்துஷ்டியும் உடம்புல உரமு தரேன் நீ போய் ஜெயிச்சுட்டு வான்னு சொல்றது தேவதையா பீடம் போட்டு உட்கார்றது பிடிச்சிருக்கு இது எனக்கு மட்டுமே இல்லை. எல்லா பொம்மனாட் டிக்கும் இருக்குமோ தெரியலை. வெளியே நாலு பே கிட்ட சொன்னா அடக்கமில்லாம அலையறாளேன்னு வைவாளோ தெரியலை. ஆனா பொம்மனாட்டியை போற்றி வச்சு காபந்து பண்ணினா படி தாண்ட மாட் டாங்கறது நிச்சயம். அடி வாங்கி சிலிர்த்து சடை விரிச்சு ஆட ஆரம்பிச்சா யாரும் பிடிக்க முடியாதுங்கறது நிஜம். நாளைக்கு எத்தனை மணிக்குப் போகிறோம்?''

''மூணு மணிக்கு நான் கிளம்பறேன். அடுத்த ஒரு மணி நேரத்தில் நீ கிளம்பி பையோட தனியா சென்ட்ரல் வந்துடறே. அஞ்சு மணிக்கு வண்டி. சென்ட்ரல் ஸ்டேஷன் ஆறாவது ப்ளாட்பாரம்.''

''போற போது இந்த ரூமுக்கு ஒரு தேங்க்யூ சொல்லி விட்டுப் போகணும். நாம சந்தோஷமா இருந்த இட மில்லையா இது?''

''ரூமுக்கு எப்படி தேங்க்யூ சொல்றது?''

''எனக்குத் தெரியலை...ஆனா சொல்லணும்.''



''இந்த ரூம்ல கடைசியா இன்னொரு தடவை சந் தோஷமா இருக்கறதுலயா.''

''எனக்குத் தெரியலை—சியாமளி உதட்டைப் பிதுக் கினாள்.

''இரண்டு பேரும் கையைப் பிடிச்சுண்டு இதைச்சுற்றி வலம் வந்துசுவரோரமா நின்னு இரண்டுபேரும் ஒண்ணா குனிஞ்சு தேங்க்யூ சொல்வோமா?''

''கரெக்ட் சொல்வோம்'' துள்ளி எழுந்திருந்தாள். புடவை பறக்கச் சுற்றி தட்டாமலை ஆடினாள். சுற்றிக் கொண்டே ஜன்னலோரம் போனாள். புடவை விளிம் பைப் பிடித்து, மெல்ல விரித்து, அரைக்கால் மடக்கி குனிந்து ராஜகுமாரி போல் வணங்கி ஜன்னலுக்கு தேங்க்யூ என்றாள். சங்கரனும் அவள் அருகே நடந்து ஜன்னலுக்குக் குனிந்து வணக்கம் சொன்னான்.

கைகளைக் கோர்த்துக் கொண்டபடி அரசனும் அரசி யுமாய் பிரதானிகளைப் பார்வையிட்டபடி வரும் கம்பீர மாய் இருவரும் அறையைக் சுற்றி வந்தார்கள்.

''அரசி இந்தக் கண்ணாடி பீரோவை உங்களுக்கு நினைவிருக்கிறதா?''

''இருக்கிறது மன்னரே, நம்மிருவருக்கும் உற்ற நண்ப ராய் இருந்தவரல்லவா இவர். என் விரல்களை முத்தமிட அனுமதிக்கிறேன் நண்பரே.'' கண்ணாடி பீரோவை விரலால் தொட்டு மேலே நகர்ந்தாள்.

''ஆ—அரசி இந்தப் புத்தக அலமாரி.''

''ஆமாம், நமது மன்னரின் இன்னொரு காதலி.''

''தவறு அரசி. இனிய ஸ்நேகிதி. விடை பெறு கிறோம் ஸ்நேகிதி'' மன்னர் குனிந்து வணங்கினார்.

''மன்னரே, இந்தக் கதவுகளுக்கு நன்றி சொல்ல வேண்டாமா?''

''அவை கதவுகளல்ல அரசி. நம்மைப் போலவே நல்ல காதலர்கள்.''

''காதலர்களா புரியவில்லையே மன்னா...

''ஆமாம் அரசி. நாம் கூடும் போது கூடி, நாம் பிரியும் போது பிரிந்து நம்மைப் போலவே...புரியவில்லையா அரசி?''

''புரிகிறது மன்னா... இந்தக் கவிதை மனசுக்குத் தானே அடிமையானேன்.''

''மன்னரே கடைசியாய் இந்தக் கட்டில்.''

''ஆமாம் முதிர்ந்த தந்தையைப் போல நம்மை மடியில்ருத்தி அணைத்துக் கொண்ட கட்டில்.''

மன்னரும் அரசியும் கட்டில் முன் மண்டியிட்டார்கள். விளிம்பில் முத்தமிட்டார்கள். மன்னன் படுக்கை மீது கன்னத்தைப் பதிய வைத்துக் கொண்டான். கைகளைப் பரக்க வீசிப் பொட்டு வருடிக் கொடுத்தான். தளர்ந்து, துவண்டு, சரிந்து, திரும்பி அதன் கால் மீது சாய்ந்து கொண்டான். அசதியுடன் கண்களை மூடிக்கொண்டான். சோர்ந்து கிடக்கும் மன்னன் மார்பை அரசி வருடிக் கொடுத்தாள்.

''நாம ரெண்டு பேரும் ரொம்ப நல்லவா இல்லையா சங்கர் நமக்கேன் வாழ்க்கை இத்தனை வேதனையா அமைஞ்சிருக்கு புத்தியும் மனசும் ஒண்ணா இருக்கிற இரண்டு பேர் ஏன் முன்னாடியே சந்திக்க முடியாம—சந்திச்சு, காதலிக்க முடியாம, காதலுக்கப்புறம் கல்யாணம். குடித்தனம் பண்ண முடியாம போனது. இப்படி இஷ்டத்துக்கு மாறா ஏகப்பட்ட விலங்கை மாட்டிட்டு இப்ப சந்திக்கவச்சு ரணமா ஆக்கறது. விலங்கு பூட்டிட்டா விடுதலை கேட்கப்படாதே? வெட்டி உடைச்சுண்டு ஓடப்படாதோ?''



''ஒரு விளையாட்டுக்கு சித்த நாழி முன்ன ராஜாவும் ராணியுமா இருந்தோம். ஆனா எத்தனை நெகிழ்ந்து போச்சு மனசு ரெண்டு பேருக்கும் நெஜமாகவே இந்தக் மொத்தமும் கட்டியணைச்சு அழணும்போல இருக்கு நெஞ்சுல. இது என்ன சங்கர், இதுவெல்லாம் என்ன, நாம பைத்தியமா, பித்து பிடிச்சவாளா, போக்கிரிகளா, சுயநலக்காரர்களா, இப்படிக் கட்டிலையும், மேஜையையும் லவ் பண்றோமே. மனுஷாள பண்ண முடியாதா?''

''நானு நாளா மண்டையை உடைச்சுக்கறேன்'' சங்கர்—யார் மேலயாவது கோவம் ஆத்திரம் வருதான்னு பழிக்குப் பழி தோன்றாதுன்னு இல்ல சங்கர், அவர்மேல கூட கோவம் வரல. ஆத்திரம் வரல. அலுப்பு வருது. நான் மரக்கட்டையையும் மண் சுவரையும் லவ் பண்றனே உனக்குத் தெரியலையேன்னு அடிச்சுக்கத் தோண்றது. மத்தவா மனசைத் தெரிஞ்சுக்கணும்னு ஒரு சின்ன யோசனை கூட இல்லாம, சோறு திங்க உட்கார்றையே நீ என்ன ஜென்மமோன்னு ஏக்கம் வருது.

''போய்டுவோம் சங்கர். கண்காணாம போய்டுவோம். எங்கயாவது ஓடிப்போய் கட்டையையும், கல்லையும், காக்காயையும், குருவியையும் லவ் பண்ணிண்டு இருப்போம். கிடைக்கிற காசுல கொஞ்சுண்டு சாப்பிடுவோம் என்ன இருக்கோ அதை உடுத்திக்குவோம். எது ஹிம்சையில்லாத இடமோ அங்கு தங்குவோம். அப்படி இடம் ஏதாவது உண்டா? உங்களுக்குத் தெரியுமா?''

''உன் குழந்தையைப் பத்தி நீ பேசவேயில்லையே யாமினி''—சங்கரன் கண்களை மூடிக்கொண்டபடியே கேட்டான்.

''ஹூம்ம், குத்திக் காமிக்கிறேளா சங்கர். நீ அம்மா தானேடி, அந்தக் குழந்தையை எப்படி விட்டுடுவேன்னு

கேட்கறேளா. அவ அவள் அப்பா மாதிரி. அவரோட அசல் ஜீன்.

"ஒரு நா அவளை உனக்கு அப்பாவைப் புடிக்குமா அம்மாவைப் புடிக்குமான்னு கேட்டேன்.

"உங்க ரெண்டு பேரையும் புடிக்காது. எங்க டீச்சரைத்தான் பிடிக்கும்'ன்னு சொன்னா. ஏன்டின்னு அதிசயமா கேட்டேன். கிளாஸ் நடுவில் யார் பேசினாலும் தலையில குட்றதுக்கு இவளைத்தான் டீச்சர் அனுப்புவாளாம். வலிக்க குட்டுவியாடின்னு கேட்டேன். பல்லைக் கடிச்சு, முஷ்டியை மடக்கி காத்துல அது வீசற வேகம் காட்டறபோது ரத்தமே உறைஞ்சு போச்சு. தப்பு கண்ணம்மா. யாரையும் வலிக்கப் பண்ணப்படாதுன்னேன். உனக்கொன்றும் தெரியாதுன்னு ஓடிப் போயிடுத்து. அவ என் பொண்ணு இல்லை சங்கர், என் மனசு இல்லை. அவள் முன்கை முழுக்க இப்பவே பூனை மயிராய் கிடக்கு. எங்க வீட்டுப் பெண்களுக்கு இப்படி உடம்போ மனசோ கிடையவே கிடையாது."

"அவ குழந்தை சியாமளி. குழந்தைகள் செடி மாதிரி, நாம வளர்க்கிற விதமா வளரும்."

"அது சரி அதுக்காக அரளியை ரோஜான்னு கொண்டாட முடியறதா "

"ச்சு...இதென்ன பேச்சு—உன் பெண்ணில்லையா அவள்?"

"இதை எப்படிச் சொல்றதுன்னே தெரியலை. உண்மையிலே தாய்ப்பாசம் ஒரு பொய்யின்னு தோன்றது சங்கர் உடைச்சு உடைச்சு இப்படி உங்ககிட்டதான் பேச முடியும். உங்களுக்குத்தான் புரியும். அதனால சொல்றேன் உயர்ந்த டூப் அது. பெத்து இறக்கினதுமேலெல்லாம் பாசம்னு ஒண்ணு வட்றதில்லை. ஊர் மொத்தமும் சேர்ந்து கட்டின கதை அது என்னைப்



பிரதிபலிக்கிறது. நான் என் வம்சம். இல்லையா? என் மாதிரியே யோசிக்கிறவாதான் என் மனுஷா இல்லையா என் எதிரே நின்னு முஷ்டியை ஓங்கினாலும் என் பொண்ணு என் புள்ளைன்னு நான் ஏன் கொஞ்சணும். என்னால முடியாது சங்கர் "

"அப்பா—எவ்வளவு தீர்மானமா பேசறே சியாமளி"

"எனக்குப் புரிஞ்சதைப் பேசறேன் சங்கர். நான் பொய்யே சொல்லலை. நான் பேசறது புடிக்கலையா, மத்தவாளுக்குப் பிடிக்கும்னு கடைசிவரை பொய்யைச் சொல்லிண்டே..."

"வேண்டாம் பொய் சொல்ல வேண்டாம்."

சங்கரன் அவளை அணைத்துக் கொண்டான். முதுகை வருடினான். நெற்றியில் முத்தமிட்டான். இடக் கையால் காது குழலை ஒதுக்கிவிட்டான்.

"நீ இந்த ரூமுக்கு வந்து ஒரு மணி நேரமாச்சு"

"ம்ம்ம்"

"இன்னும் பேசிண்டுதான் இருக்கோம்னு இது அதிசயமா படலை."

"இல்லை ரொம்ப நேச்சுரலா இருக்கோம்னு படறது—இப்ப துணிய அவுத்துட்டு உங்களோட புரளணும்னு தோணவேயில்லை. உங்களுக்குத் தோண்றதா சங்கர்."

"ஹூம் எனக்கு வேணாம்."

"எனக்கும் வேணாம்."

"அப்ப என்ன பண்றது"

"பேசாம எதிரும் புதிருமா உட்கார்ந்திண்டிருப்போம்."

"ஓடிப்போன பிறகு கூட நாம இப்படித்தான் இருக்கப் போறோம்னு படறது."

''நல்லதாப் போச்சு. அப்படியே இருப்போம். அது தான் உத்தமம்.''

''ஒரு வேளை நாம இப்பத்தான் லவ் பண்ணவே ஆரம்பிச்சிருக்கோமோ சியாமளி.''

'கரெக்ட். நான் சொல்லணும்னு நினைச்சேன்.''

''ரொம்ப அற்புதமா, லேசா மனசு இருக்கு இந்த க்ஷணமே புசுக்குன்னு மூச்சு விடறபோது இப்பபிராணம் போய்ட்டா தேவலாம் போல இருக்கு சியாமளி''

''எனக்கும்தான் சங்கர். சந்தோஷமான சாவும் பானே அது இப்ப நடந்தாதான் உண்டு.''

''எல்லாத்து மேலேயும் விட்டேத்தியா ஒரு பாவனை மனசுக்குள்ள வந்துடலை இப்ப?''

''உலகமே முழுவிப் போனாக்கூட சரின்னு ஏத்துக் கற பாவனை.''

''பிடிப்பில்லாம போற நிலை.''

''எல்லாம் தெரிஞ்சுடுத்துங்கற மாதிரி ஒரு விடுதலை.''

''உனக்கு தேங்க்ஸ் சொல்லணும் கண்ணம்மா.''

''நான்தான் உங்களுக்குச் சொல்லணும் சங்கர்.''

''தேங்க்யூ டியர்.''

''தேங்க்யூ சங்கர்.''

''நாளைக்கு சாயங்காலம் ஸ்டேஷன்ல பார்ப்போம். பதட்டப்படாம வா.''

''சரி.''

''எல்லாத்தையும் வாரிக்க வேண்டாம். கொஞ்சமா எடுத்துண்டு வா.''

''போய் நிம்மதியா சித்த நாழி குழந்தையிடத்தில் போய்த் தூங்கு. நாப்பது நாள் பகல் முழுக்க அல்லாடி



யிருக்கோம். போய்த் தூங்கு நிம்மதியா? நானும் சித்த தூங்கறேன்.''

''சரி''

''சியாமளி...'' காதலும் குழைவுமாய் சங்கரன் கூப்பிட்டான்.

சியாமளி மண்டியிட்டு அவனெதிரே நின்று அவன் முகத்தை இழுத்து மார்பில் அழுத்திப் பலமாய் தலையைக் கோதிக் கொடுத்துக் கண்களில் முத்தமிட்டு தொண்டை கரகரக்க, ''என் செல்வமே'' என்றாள். மெல்ல எழுந்து வெளியேறி பின்படிக்கட்டுகள் வழியாகக் கீழிறங்கிப் போனாள். சற்று நேரத்திற்கெல்லாம் சங்கரன் தரையில் படுத்தபடி கண்ணயர்ந்தான்.

## 18

வெயில் கொளுத்திக் கொண்டிருக்கிற அந்த ஞாயிறு பிற்பகலில் ரேடியோ மட்டும் 'விண்ணோடும் முகிலோடும் விளையாடும் வெண்ணிலவே' என்று அசட்டுத்தனம் பண்ணிக் கொண்டிருந்தது. மன்னி நடு ஹாலில் உட்கார்ந்து கேட்டுக் கொண்டிருந்தாள் சரியாய் இரண்டு மணி பகலில் மல்லாக்க சிகப்புச் சிமெண்ட்த் தரையில் சாய்ந்து தூங்கி விடுகிறவள், அன்று அசையாமல் தூண் மீது சாய்ந்து சுவரை வெறிக்கப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

தண்டபாணி குழந்தையைக் கூட்டிக்கொண்டு கிண்டி பார்க் போய்விட்டான். குழந்தைக்குத் தலையை இழைத்து வாரி, பொட்டு இட்டு, பௌடர் பூசி, வளை

யல் அடுக்கி, ஷூவைத் தூசு தட்டி மாட்டி விட்டு ஒரு க்ஷணம் எதிரே நிறுத்தி அழகு பார்த்த போது வயிறு கலங்கிற்று.

"அப்பா கையை கெட்டியா புடிச்சிக்கோ" என்று சொன்ன போது குரல் உடைந்தது.

"நீயும் வாயேன் ஜாலியா போகலாம்" என்று தண்டபாணி கூப்பிட்டபோது விழியை விரித்து அவனை உறுத்துப் பார்க்கச் சொல்லிற்று. "வரலேன்னா சரி. அம்மாவைக் கூட்டிண்டு போகலாமா வேண்டாமா" என்று குழந்தையிடம் பேசுவதுபோல முகத்தைத் திருப்பிக் கொண்டவனைப் பார்த்துக் கேலியாய் சிரிப்பு வந்தது. "அம்மா வேண்டாம். நாம் மட்டும் போலாம்பா அப்புறம் வீட்ல யார் சமையல் பண்றது" என்று தகப்பனுக்குப் பதில் சொல்லிக் கொண்டே நடக்கும் குழந்தையை க்ஷேமமாய் இரு என்று மனசு வாழ்த்திற்று.

படியிறங்கி தன்னை ஒரு முறை ஏறெடுத்துப் பார்த்துவிட்டு நகர்ந்து மறைந்த கணவன் முகம் இரண்டு நிமிடம் மனசில் படமாய் உறைந்தது.

யாருமற்று தான் மட்டும் தனியாய் விடப்பட்ட தன் போர்ஷனில் நடுவே நின்று தன் நெஞ்சில் கரம் வைத்து விடிவு வேண்டும் என்று தேடி நான் தைரியமாய் ஒரு முடிவு எடுத்திருக்கிறேன். நெஞ்சே என்னோடு கடைசி வரை தைரியமாய் நீயும் வா என்று புத்தி அழைப்பு விடுத்தது.

ஏர் பேக் மாதிரிபெரிய பையில் தினப்புடவைகள் எட்டும், பட்டு இரண்டும், ஜோடி சேரும் ரவிக்கைகளும், உள் ஆடைகளும், ப்ரஷும் பேஸ்டும், குங்கும டப்பாவும் அகலச் சீப்பும், அப்பா கொடுத்த வெள்ளித் தட்டும் எடுத்து வைத்தாகி விட்டது. கொஞ்சம் யோசனைக்குப் பிறகு டம்ளரோடு கூடிய எவர் சில்வர் கூஜாவையும் நுழைத்துத் திணித்து இறுக்க முடியாயிற்று.



மூன்று மணி வெளியே காலி பால் பாட்டில்கள் சப்தம். கார்டையும் காலி பாட்டிலையும் கிழவனிடம் கொடுத்து விட்டு "சீக்கிரம் வா" என்று சொல்ல வைத்தது. பால் வந்தவுடன் காய்ச்சி இறக்கி பத்திரமாய் மூடி வைக்க வேண்டும் என்று யோசனை வந்தது.

கம்பிக் கூடையிலிருந்து உருளைக்கிழங்குகளை எடுத்து மடமடவென்று சின்னத் துணுக்குகளாய் நறுக்கி எண்ணெய் விட்டு வதக்கி சூடு ஆறாமல் இருக்க இன்னொரு பாத்திரம்போட்டு மூடிவைத்தாயிற்று.

மூன்று பதினைந்து. மன்னி அந்த நேரத்தில் பெரிய பெட்டியைச் சங்கரன் வாசற்குறட்டில் ஒளித்துவிட்டுத் திரும்பினதைக் கவனிக்க முடிந்தது. மீண்டும் மாடியேறி பிறகு திரும்பிவருகையில்கண்களால்ஒருக்ஷணம்வரட்டுமா என்று ஒருமுறை விடைபெற்ற, சங்கரன், மன்னியிடம் 'ஊர்வலத்துக்குப் போறேன்' என்று சொல்லி விட்டு வெளியே அவசரமாய் நகர்ந்ததைக் கனவில் நடக்கிற காட்சியாய்ப் பார்க்க முடிந்தது.

மன்னி பதில் சொல்லாமல் துணிகளை மடித்துக் கொண்டிருந்தாள். சங்கரன் போன பிறகு என்னவோ முணுமுணுக்க ஆரம்பித்தாள்.

மூன்று ஐம்பது மணி எழுந்திருக்கிறவளாய் தெரியவில்லை. அடுப்பு மூட்டி காபி போட்டாளா தெரியவில்லை, சமையல் ஆரம்பிக்கிறவளாய் படவில்லை. விடாப்பிடியாய் வக்கிரமாய் ஏதோ கறுவிக் கொண்டு உட்கார்ந்திருக்கிறவளாய் தெரிகிறதே ஒழிய அவளிடம் இன்று சகஜபாவம் காண முடியவில்லை.

சுத்தமா தெரிஞ்சுடுத்தோ? தெரிஞ்ச பிறகு என்னமாய் இதைத் தடுப்பது என்று அலைமோதுகிறாளோ?

மூன்று ஐம்பத்து ஐந்து ஏர்பேகுடன் வெளியேறி வண்டி பிடித்து சென்ட்ரல் போகச் சரியாக இருக்கும்.

ஆனால் மன்னியைத் தாண்ட வேண்டும். மன்னி நகர வில்லை. மறுபடி சியாமளி தன் போர்ஷனுக்கு போனாள் கண்ணாடி முன் நின்று தன்னைக் கவலையோடு பார்த்தாள். இரண்டு முறை அறையைச் சுற்றி வந்தாள். நகத்தைக் கடித்தாள். தோளில் ஏர்பேகை மாட்டிக் கொண்டாள். பூட்டும் சாவியும் எடுத்து வெளியே வந்து செருப்பை அணிந்துகொண்டு கதவை பூட்டினாள். திரும்பி சிரித்தபடி மன்னியிடம் வந்து சாவிக்கொத்தை நீட்டினாள் ''இன்னும் அரை மணியில வந்துடறேன் மாமி அவர் வந்தா சாவியைக் கொடுத்துடுங்கோ ''—சலனமில்லாமல் சொன்னாள்.

மன்னி நிமிர்ந்து சியாமளியைப் பார்த்தபோது அந்தப பார்வை பரட்டென்று வயிற்றில் ஒரு கிழிசலை ஏற்படுத்தியது. மன்னிக்கு எல்லாம் தெரிந்திருக்கிறது. மன்னி மடக்கப் போகிறாள். பேயாய் அலறப் போகிறாள். மன்னி கண்கள் இடுக்கி, தலை கலைந்து உதடு பிதுங்கி அழத்துவங்கும் முகம் பார்த்ததும் சியாமளிக்கு இருட்டிக் கொண்டு வந்தது.

''அடிப்பாவி இது உனக்கே நன்னாயிருக்கா, உன்க்கே நன்னாயிருக்கா சொல்லுடி, நான் என்ன கெடுதல் பண்ணினேன் உனக்கு? இப்படி குடித்தனத்தை அழிக்கிறியே, 'பாவி சண்டாளி இது உனக்கே நன்னாயிருக்கா?''

துந்துபியின் சப்தம்கேட்டதும் குதிரைகள் சிலிர்த்துக் கொண்டன வீரர்கள் பரபரப்பாய் ஆயுதங்களை எடுத்தார்கள். நெற்றியைச் சுருக்கி, முஷ்டிகளை மடக்கி குரல் வளையில் கனம் ஏற்றி ஓவென்று கூச்சலிட்டார்கள். யுத்தம் ஆரம்பமாயிற்று. சம்பந்தமில்லாமல் மனசில் ஓடின வரிகளைச் சியாமளி அடக்கினாள். ஏர்பேக்கை மறுதோளுக்கு மாற்றிக் கொண்டாள்.



''என்ன மாமி?''

''உன் வாயால் அப்படிக் கூப்பிடாதடி. நம்மூரில மாமா, மாமிங்கறதுக்கு ரொம்ப உயர்ந்த அர்த்தம்டி. பெத்தவாளைவிட பெரிய மனுஷான்னு சொல்ற உறவுடி. மாமி மாமின்னு என்னை ஏமாத்திட்டியேடி என் மூஞ்சில கரிய தேச்சுட்டியேடி.. நல்ல பொண்ணு, நறுவிசா குடித்தனம் பண்றான்னு பாராட்டி பாராட்டி வச்சிண்டேன். நடுவீட்ல அசிங்கம் பண்ணிட்டியே பொம்மனாட்டியா நீ. அறுத்தெறி உன்னதை. வீணாப் போனவளா. விலக்கி வச்சுட்டவளா வெவரம் கெட்ட ஆம்பிளை பிடிச்சிண்டவளா—இல்லையே அப்படியிருக்கும் எங்காத்துக் குழந்தையை...அவனுக்கு என்னடி தெரியும். எதை நம்பிண்டுடி படியிறங்கறே? எத்தனை நாளைக்குடி ஆம்பிளை உரம் காட்டுவான்? எத்தனை நாளைக்குடி உனக்குத் தாங்க முடியும்? எச்சல் இலை நாயே. போ உள்ளே போ. படியிறங்காதே. போ—கல்லு மாதிரி ஆம்பளையைக் கல்யாணம் பண்ணிண்டு அடியே—அந்தப் பெண் குழந்தையை விட்டுட்டா போப்போற பொம்பளையாடி நீ உள்ளே போ உள்ளே போ சொல்றேன்.''

''மாமி...''

''ச்சீ. அலம்புடி வாயை. நாலு பேர் காது பட்டு என் வீடு அசிங்கப்படப்படாது. வாயை மூடிண்டு போ. இத்தோட அவனை மற. மார்ல மயிரும் மூஞ்சில மீசையுமா ஒரு பையனைப் பார்த்தா பிச்சிப் பிடுங்கறதா உனக்கு. துடப்பத்தை எடுத்து நீயே தலையில நாலு சாத்திக்கோ.. அடங்கிப் போகும். என்ன கேவலம், எத்தனை இழிவு, எவ்வளவு பேருக்கு அவமானம்? நீ பையை எடுத்து ஓடிட்டா முடிஞ்சு போச்சா உன்கதை, கண்ட துண்டமா வெட்டச் சொல்வேன்—உன் வீட்டுக்காரனை விட்டு மன்னியைச் [சாதுன்னு நெனைச்சிண்டிருக்கையா போக்கிரி நாயே— போ முதல்லே.''

"முடியாது."

பழைய ஆத்திரம், எதிர்ப்பு காட்டினாள். தன்னுள் திரளும் எதிர்வேகம் சியாமளியைப் பற்றிக் கொண்டது. சியாமளி தன் கைச் சாவியை வீசி எறிந்தாள். திரும்பி வாசலை நோக்கி நடந்தாள்.

"நில்லுடி, போகாதே நில்லுடி."

மன்னி எட்டிப் பிடிக்கும் இடைவெயில் அவளிடம் ஓடி வந்தாள். முன்னே நின்று மறித்துக் கொண்டாள்.

"வேண்டாண்டி சியாமளி படியிறங்காதே. உனக்கு நல்லதில்லை வேண்டாம்."

சியாமளி மன்னியைத் தாண்டி படியில் கால் வைத்தாள். கைகளைப் பற்ற வந்த மன்னியை விலக்கினாள்.

"சொல்றதைக் கேளுடி."— மன்னி பெருங்குரலில் உடைந்து சரிந்து. தடேரென்று தரையில் விழுந்து பருத்த சரீரம் குலுங்க சியாமளியின் கால்களைப் பிடித்துக்கொண்டு அழுதாள். "என்னைக் கொல்லாதடி... என் குடும்பத்தைக் குலைக்காதடி. அம்மா இல்லாத புள்ளைடி அவன். புள்ளை இல்லாத பொம்மனாட்டி நான். என் குழந்தையை எங்கிட்டேர்ந்து பிரிக்காதடி. அது மகா பாவம்டி, சியாமளி, உன்னை கெஞ்சிக் கேட்கிறேன் போதாத சியாமளி. அவன்கிட்ட அழுதது உனக்குத் தெரியுண்டி தெரிஞ்சுண்டே இப்படி பண்றயே நியாயமா? விவரம் தெரியாத பையனைக் கிளப்பிவிட்டு அவனை வீணா அடிச்சு உன்னையும் வீணாக்கி எதுக்குடி இந்த விபரீதம்? நீ வேற யாரையாவது கூட்டிண்டு போ என் குழந்தையை விடு என்கிட்டே அவனைத் திருப்பிக்கொடு. குடித்தனம் பண்ண இடம் கொடுத்தேன் குலத்தையே நாசம் பண்றயேடி. அவனை விட்டுடுடி. எனக்காக விட்டுடுடி பொம்மனாட்டிக்கிட்டேர்ந்து ஆம்பளையை வாடான்னு பிரிக்க முடியாது.



அதுக்குப் புரியாது உனக்குப் புரியும்டி. என் வேதனை உனக்குத் தெரியுண்டி. அவனை எனக்குக் குழந்தையா விட்டுடுடி."

சியாமளி நிலையில்லாது தள்ளாடினாள். மன்னியிடமிருந்து கால்களை மெல்ல உருவிக்கொண்டு சுவரைப் பிடித்து நின்றாள், வியர்வை பொங்கிப் பொங்கி வந்தது. மனசில் மலர்ச்சியும் மணமுமாய் மின்னின. ஒன்றை ஏதோ பெருங்கல்லால் அரக்கித் தேய்த்து யாரோ நசுக்கின மாதிரி இருந்தது.

மன்னி திட்டமிட்டுத் தன்னை மடக்கியிருக்கிறாள். சங்கரன் எதிரே இருந்தால் ஆமாம் என்று சொல்லி தன்னை இறுக்கிக் கொண்டு ஓடிவிடுவான் என்று பயந்து, தனியே தன்னை மடக்கியிருக்கிறாள். மலைப் பாம்பாய் வழியை மடக்கி சீறுகிறாள். காலைப் பிடித்துப் பிழிந்து முடமாக்க முயல்கிறாள். முடியாது. இவ்வளவு தெரிந்த பிறகு இங்கே நிற்பது நியாயமாகாது இவ்விதம் இவர்கள் தெரிந்து கொண்டதே கூட ஓடுவதற்கு ஒரு நல்ல காரணம். இனி இருப்பது என்பது முடியாது. சங்கர்...சங்கர்...உடம்பு முழுக்க சியாமளிக்குப் பரபரத்தது.

மீண்டும் படி தாண்டுகையில் மன்னி விசுக்கென்று எழுந்திருந்தாள்.

"போ—நீ கேட்கமாட்டேயடி, உன் இஷ்டபடியே போ ஆனா நான் உன்னை விடமாட்டேன். என் குடும்பத்தை அழிச்ச உன்னைச் சும்மா விடவே மாட்டேன் என் கொடியை அறுத்துட்டு நீ படர்ந்து சிரிச்சிடுவியா. போ அதையும் பார்க்கறேன். போடி. மனுஷர்களுக்கு மானம்தாண்டி பெரிசு. இத்தனை வயசுக்குப் பிறகு என் பிள்ளையை உயிரோட உன்கிட்ட கொடுத்துட்டு நான் வாழ மாட்டேண்டி."

மன்னி ஹாலுக்கு ஓடினாள், மடமடவென்று மேஜையை நடுவே இழுத்துப் போட்டாள். சமையல்

அறைக்கு ஓடி வாளியிலிருந்து தாம்புக் கயிற்றைப் பிரித்து மின்விசிறி கொக்கியில் வீசினாள். சடாரென்று இழுத்துச் சுருக்காக்கினாள்.

''நீ என்னடி நிக்கற, வெளியே போ. ஓடுகாலி. எம் புள்ளையை வெச்சு ஊர் முழுக்க மேய ஆரம்பி. ஆம்பளைக்குத்தானேடி அலையற, வேணுங்கற மட்டும் தேடிக்கோ. என் குடித்தனத்தைச் சேறாக்கிட்டு அதுல சிரிச்சிண்டே குளி.

வெளியே போடி. போய் தெரு திரும்பமாட்டே. நானும் வருவேன், பேயாய் வருவேன். என் நெஞ்சுல நெருப்ப வெச்சுட்டுப் போனா சிரிச்சுட முடியுமா; நீ நடக்கிற இடம் முழுக்க எரிப்பேன். வெளியே போடி. உன்னால ஆறதைப் பாரு.'' கழுத்தில் சுருக்கை மாட்டிக் கொண்ட வினாடியில் மன்னி இடத்தோடு மேஜையை உதைத்தாள். மேஜை எகிறி, தடாரென்று மன்னி குலுங்கி விழும்போது சியாமளி ஓடிப்போய் மன்னியின் கால்களைத் தாங்கிக் கொண்டாள். சுருக்குத் தப்பாய் இறுகி, மன்னியின காதை அறுத்து, கன்னத்து மேட்டிலும் மூக்கு பள்ளத்திலும் தாம்புக் கயிறு இறுகி, ரத்தம் சிந்தியது. வலது புஜத்தில் மன்னியைத் தாங்கி, இடது கரத்தால் மேஜையை இழுத்து ஒரே தாவலில் மேலே ஏறி சுருக்கை தளர்த்தி தலையை விடுவித்து, துவண்டு மேலே சரியும் மன்னியை அணைத்தவாறு அமர்ந்து நழுவி, கீழே இறங்கி தரையில் மன்னியைக் கிடத்தினபோது வைரக் கம்மலோடு காது தசை கயிற்றில் ஒட்டிக் கொண்டிருக்க மன்னி தோள் முழுவதும் ரததமாகிக் கிடந்தாள்,

'நெஞ்சுக்கு நீதியும் தோளுக்கு வாளும்
நிறைந்த சுடர்மணிப் பூண்
பஞ்சுக்கு நேர்பல துன்பங்களாம் இவள்
பார்வைக்கு நேர் பெருந் தீ'

மனசுக்குள்ளே சங்கரன் பாடும் குரல் கேட்டது.



துன்பங்கள் மட்டுமில்லை சங்கரா. சகலமானதும் எரிந்து போய்விட்டது என்று மனசுக்குள் பதில் தோன்றிற்று. கைக்கெட்டின துணியை ஈரத்தில் முக்கி, மன்னியின் காதில் வைத்து அழுத்தி மேஜை மீது மறுபடி ஏறி, கயிற்றை அவிழ்த்துச் சுருட்டிச் சமையலறையில் எறிந்து, எரியும முன் துண்டுத் தசையை இன்னொரு ஈரத் துணியில் பொதிந்து, கீழே கிடந்த தன் விட்டுச் சாவியில் விடுஇறந்து, ஏர்பேக்கை வீசி உள்ளே போட்டுவிட்டுத் தடதடவென்று வெளியே ஓடி, எதிர் வீட்டு மனிதரிடம் மன்னி தடுக்கி விழுந்து ரத்தமானாள் என்று சொல்லி, டாக்டரை அழைக்க வைத்து டாக்டர் வருவதற்குள் மீண்டும் ஈரத் துணி மாற்றி, மன்னியை மடியில் போட்டுக் கொண்ட போது அரை நினைவுடன் 'வேண்டாண்டி சியாமளி, போகாதே சியாமளி' என்று மறுபடி மன்னி கையைப் பிடித்தபடி வேண்டுகையில்.

''போகல மாமி, போகல மாமி'' என்று பதில் சொல்லிவிட்டு, விநோதமான குரலில் வயிற்றிலிருந்து சப்தம் எழ, நெஞ்சு முழுவதும் பொங்கும் வேதனையோடு சியாமளி வாய்விட்டு அழுதாள்.

சங்கரன் காத்துக் கொண்டிருந்தான்.

நாலு நாற்பது—

சியாமளியைக் காணவில்லை. பெட்டியைக் கூபேக்குள் வைத்தாகி விட்டது. செக்கிங் இன்ஸ்பெக்டரிடம் டிக்கட் காட்டியாயிற்று.

''உங்க மிஸஸ் வரல்ங்களா?''

''வருவாங்க.''

''என்ன சார்.''

''வந்தாச்சு...உள்ளாற போயிருக்காங்க'' பெட்டி படியில் நின்று எட்டி எட்டி வழி படகுமட்டும் பார்த்தாயிற்று, வரவில்லை.

யாரோ இடித்துக் கொண்டு ஏறினார்கள். இவ
கூபே காலியா என்று இவனிடம் கேட்டார்கள். அடுத்த
பெட்டி ஆள் 'கொஞ்சம் சாமான்கள் பார்த்துக்க
களேன்' என்று சொல்லிவிட்டுப் போனார். புத்தகம்
விற்கிறவன் மாலை பேப்பர் வேண்டுமா என்று கேட்
டான். யாரோ இரண்டு இளைஞர்கள் கூபே எப்படி
யிருக்கும் என்று சிரிப்போடு பார்த்துவிட்டுப் போனார்
கள்

நாலு நாற்பத்து ஐந்து
சியாமளி வரவில்லை.
வயிற்றில் அயிலம் படர்ந்தது.

கால்கள் ஆடிற்று. வயிறு கலங்கி, இயற்கை உபாதை
அதிகமாயிற்று. வியர்த்தது. தெளிவில்லாத குரலில் ஒலி
பெருக்கி அலறிற்று. ஸ்டேஷனில் கடைசி பரபரப்பு
தலையைச் சுற்ற வைத்தது 'ணங்ணங்' என்று அடைப்புக்
குரலில் மணி அடிக்கத் துவங்கியபோது சங்கரன் பெட்டி
யைக் கூபேயிலிருந்து எடுத்துப் படியோரம் வைத்துக்
கொண்டான்.

''அப்ப நீங்க போவலீங்களா?''

''என் பிரண்ட் வாராரான்னு பார்க்கிறேன்.''

''அவரு வரலேன்னா போவமாட்டீங்களா?''

சங்கரன் பதில் சொல்லாது எட்டி எட்டி சியாமளிக்
காகத் தவித்தான். வண்டி குலுங்கிற்று. சடக்கென்று
முன்புறம் இழுத்தது. மெல்ல அசைந்து நகரத் துவங்
கிற்று.

''ஹாப் ஹாப் ஹாப் ஹாப் ஹாப்' ஹாப்' யாரோ
கல்லூரி மாணவர்கள் கும்பலாய் கை தட்டினார்கள்.
நிறைய பேர் கைவீசி விடை கொடுத்தார்கள். ஓவென்று
ஏதோ கேலிக்கு ஒட்டுமொத்தமாய் பெரிதாய் சிரித்
தார்கள்.



சியா-மளி சியா—மளி சியா—மளி சியா—மளி
அவள் பெயரைச் சொல்லிச் கொண்டே நகரத் துவங்
கிற்று. கம்பங்கள் விரைவாக நகர்ந்தன சங்கரன்
பெட்டியை பிளாட்பாரத்தில் தள்ளினான் தொப்பென்று
எகிறிக் குதித்தான் குதித்த வேகத்தில் கையூன்றியபடி
விழுந்தான். மெல்ல எழுந்து நின்றான். சோர்வோடு
போய் பெட்டியைப் பற்றிக் கொண்டான். வாயைப்
பிளந்தபடி தன்னைக் கடக்கும் ரயில் வண்டியை வேத
னையோடு பார்த்தான்.

பெட்டி கனத்து கையைத் தோளிலிருந்து பிடுங்
கிற்று.

ஏமாத்திட்டியே சியாமளி

சங்கரன் பெட்டியைத் தூணோரம் வைத்தான்.
அதன் அருகில் அமர்ந்தான். சியாமளி தடுக்கப்பட்
டிருக்க வேண்டும். சியாமளி அவ்விதம் தடுக்கப்பட்
டிருந்தால் உடனே அதை உடைத்தெறிய வேண்டும்.
மன்னி தடுத்திருப்பாளோ சியாமளியை? தண்டபாணி
இடையே புகுந்திருப்பானோ? குழந்தை அழுது மடக்கி
இருக்குமோ? இனி சியாமளி வந்தால் கூட தன்னால்
கூட்டிக் கொண்டு போவது முடியுமோ, தெரியவில்லை.

## 19

''எனக்கென்னமோ இந்த ஊர்வலம் ஒப்பேறும்னு
தோணல. பயம்மா இருக்குது.''

''ஏம்பா?''

"பவரேன், நானு மணிக்கு ஊர்வலம்னு படிச்சு படிச்சு சொல்லியிருக்கோம். இருநூறு பேர் கூட தேறலை."

"மணி மூணுதான் ஆச்சு துரை. வருவாங்க."

"சொன்னா நம்பமாட்டே—பல்லவர்க்குக்கூட காசு வையப்பா. தண்டையார்பேட் டைலேர்ந்து நடந்து வரேன். இப்பத்தான் தெரியுது முப்பது பைசாவுக்கு எவ்வளவோ தொலைவு கூட்டிக்கினு வரான்னு."

"சிகரெட் இருந்தா கொடு."

"பீடி இருக்குது வேணுமா?"

"வேணாம் புலி புல்லு தின்னாது."

"இன்னும் இரண்டு மாசம் காஞ்சதுனா மண்ணு கூட தின்னும்."

"இன்னும் ரெண்டு மாசம் ஆவுன்றாயா கம்பெனி தொறக்க."

"சொல்றப்பவே பகீர்னு இல்லே?"

"உனக்கென்னப்பா, பொண்டாட்டி டீச்சர் உத்யோகம் பார்க்கறா. நீ ஜுட்ட தொடச்சு, பெருக்கி சுத்தமா வெச்சிருந்தா சாயந்திரம் வந்து இரண்டு ரூபா கூட கொடுத்து சினிமா பாருன்னு சொல்லுவா. என் குடும்பத்துல நான் மட்டும்தான் சம்பாத்தியம்."

"அப்படி ஒண்ணுமில்லை கண்ணு. என்னான்ட நேத்திக்கு காலைல செமத்தியா அடி வாங்கினா. எனக்கே ஏண்டா இப்படி பண்ணிட்டோம்னு ஆய்டுச்சு."

"எம்பா?"

"துட்டு இல்லாத வெறுப்புதான் நீ சொன்ன இரண்டு ரூபா காசுக்குத்தான் சண்டை, அவளும் வாய் பேசாம இருந்திருக்கலாம். துடுக்கா இத்தோட எட்டு இரண்டு ரூபா வாங்கிட்டேன்னு கணக்கு சொன்னா,



சக்கி மூஞ்சில அடிச்சேன் வெட்கம் கெட்டுப்போய் நாளைக்கு மறுபடி நீங்கள கேட்பீங்க. அப்ப சொல் றேன்னு பதில் வேற சொன்னா, போட்டேன் பொடனியிலே நானு அறை பாவம் அழுதுகினே பள்ளிக்கூடம் போச்சு—எனக்கு ஊர்வலம் வர்றதுக்கே பிடிக்கலை. வராதபோனா தப்புன்னு வந்திட்டேன். மனுஷனுக்குத் துட்டு இல்லேன்னா குணமே மாறிப்பூடுதப்பா"

"நீ அடிச்சிருக்கக் கூடாது."

"நானா அடிச்சேன், உள்ளுக்குள்ள என்னமோ ஆத்திரம். கையாலாகாத ஆளா பூட்டமேன்னு வெறுப்பு அக்கிரமெண்டு போட்டு கதவை மூடிட்டானேன்னு கோவம். அவமேல காமிச்சேன். வேறெங்க காமிக்கிறது."

பேசிக்கொண்டிருந்த இரண்டு தொழிலாளிகளுக்கு நடுவே டேஸ்பேச் நாராயணசுவாமி அவசரத்துடன் புகுந்தார்.

"எம்பா சங்கரன் வரலையா?"

"வாங்க நாணா அய்யரே. பார்த்து நாளாச்சே. வண்டி எப்படி ஓடுது?"

"சங்கரனைப் பாத்தியா?"

"நாராயணசுவாமி அய்யருக்கு என்னப்பா. இன்னும் முகம் நிகு நிகுன்னு இருக்குது. வாட்டமே காணமே பட்டை பட்டையாய் திருநீறு. சாந்துப் பொட்டு. நல்ல நாள்லியே உளர்த்துன சொக்காதான். இப்ப கம்பெனி வேற இல்லையா, இன்னும் சுத்தமா, சலவைத் தோச்சி தும்பைப்பூ மாதிரி. ஏன் அய்யரே? நீதானே உன் சொக்காவைத் தோய்க்கறே? இல்ல வீட்ல செய்யறாங் களா?"

"சங்கரனை அவசரமா பார்க்கணுமே சங்கரனைப் பார்த்தியா? நீ சொல்லுப்பா."

"இந்த ஜாதி முன்னேற்றத்துக்கே இந்தக் குணம் தாம் காரணம், அவங்க வேலைதான் முக்கியம். நீ

என்னா கேளு, மாறமாட்டாங்க. அவங்க காரியம்தான் ஏன் அய்யரே நான் சொல்றது சரிதானே?''

''நான் போய் சங்கரனைப் பார்த்துட்டு வரேன்.''

''அய்யரே. சங்கரன் வரமாட்டாரு. எங்கியோ ஊருக்குப் போறாப்பல, சென்ட்ரல் ஸ்டேஷன்ல பார்த்தேன். கைதட்டிக் கூப்பிட்டேன். கேட்காத மாதிரி ஓடிட்டாரு.''

''எந்த ஊருக்கு?''

''ம்ம்ம...போய் திரும்புனா புளிய மரத்தடில இரண்டு பொட்டைக்கிளி வச்சிகினு ஒருத்தன் உட்கார்ந்திருப்பான். பத்து பைசா குடுத்தா சகலமானதும் சொல்வான். கவர்மெண்டு மாறுமா, கம்பெனி தொறக்குமா. சங்கரன் எந்த ஊரு போனாரு. எப்ப திரும்புவாரு எந்த ட்ரெயின், எல்லாம் சொல்லுவான் அய்யரே. பத்து பைசா வச்சிருக்கையா?''

''எங்கிட்ட சொல்லவேயில்லியே?''

''இப்பத்தான் சொல்லிட்டேனே, போய் பாரேன்.''

''நான் போய் சங்கரனை வீட்ல பார்த்துட்டு வரேம்பா. நடுவுலவந்து ஜாயின் பண்ணிக்கிறேன்.''

''நகர்ந்தே, காலை உடைச்சிடுவேன். இங்கேயே ஆள் இல்லாம கவலைப்பட்டுக்கினு இருக்கோம். வந்த ஆளை, வுடறதாவது.''

''ஏம்பா உங்கிட்ட பத்து பைசா இல்லையா?''

''ஏன் அய்யரே?''

''ஊர்வலத்துக்குக் கூட்டம் சேருமா. நேரத்துக்குக் கிளம்புமா. கிளம்பினா, கிளம்பினபடி போய்ச் சேருமா. கேட்டுண்டு வரப்படாது பொட்டை கிளிகிட்டே இல்லேனா கவலைப்படறியே ஊர்வலம்பத்தி.''



''அட்சாருயா அய்யரு. அவருகிட்டே போய் வாய் கொடுத்தா, டேய் துடைச்சிக்கடா மூஞ்சிய. நல்லா கொடுத்தே அய்யரே?''

ஆனால் கூட்டம் சேர்ந்தது. மெல்ல மெல்ல ஒன்றிரண்டாய், பல நூறாய் ஆயிரமாய் சுத்தமற்ற மிலிட்டரி ஹோட்டல் மேசை ஈக்கள் மாதிரி கும்பல் கும்பலாய் சோம்பலாய் ஆட்கள் சேர்ந்தார்கள் குழுக்குழுவாய் பிரிந்து பேசிக் கொண்டார்கள். பரஸ்பரம் மனக் கவலைகளை இறக்கிக் கொண்டார்கள். பேசிப் பேசி அதிகம் கவலைகளை ஏற்றிக் கொண்டார்கள். நிலையில்லாது அலைந்தார்கள். நிறைய பெருமூச்சு விட்டார்கள். அயர்ந்தார்கள். பணம் மிகவும் முக்கியம் பணம் உயிர் மாதிரி. உயிர் உள்ள உடலில்தான் கண்கள் மினுமினுக்கும் கன்னம் மெருகேறும், உதடு புன்னகைக்கும் தோள்கள், கனம் தாங்கும். கருணை பொங்கும், இரக்கம் காட்டும். அன்பு செய்யும், நியாயம் சொல்லும், ஸ்நேகம் கொள்ளும்.

இன்றோடு ஐம்பதாவது நாள். யாரோ பெரிய அட்டையைத் தூக்கிக் கொண்டு போனார்கள். அந்த அட்டை நிறையப் பேரை தொந்தரவு செய்தது வேதனைபடுத்திற்று. ஏதாவது ஒரு முடிவு வேண்டும் என்று எல்லோர் மனசுக்குள்ளும் ஏக்கம் வந்தது வெறும் ஏக்கமாய் போய் விடுமா இது என்கிற எண்ணம் கோபத்தை கொடுத்தது. எதிரி மறைவிலிருந்து துன்புறுத்தினான். அவனை எதுவும் செய்துவிட முடியவில்லை என்பதும் நினைவுக்கு வந்தது.

இன்றோடு ஐம்பதாவது நாள். மறுபடியும் யாரோ அட்டையைத் தூக்கிக்கொண்டு அலைந்தார்கள். ஒரு சின்ன டெம்போ வண்டி ஓரம்கட்டி மர நிழலில் நின்றது அதைத் தொடர்ந்து டாக்ஸியிலிருந்து கோபாலன். பார்த்தசாரதி, சுந்தரம், சந்திரன், தேசிகன், குருமகராஜ்

கீழே இறங்கினார்கள். சுந்தரம் மடித்து வைத்திருந்த சிகப்புத் துணிக்கொடியை விரித்து டெம்போவுக்கு அருகே போய் நீளமான கழியை எடுத்து அதில்கட்டி உயரத் தூக்கினான். கலைந்திருந்த கூட்டம் நடுத்தெருவில் குழுமியது.

''மூவாயிரம் பேர் இருக்குமா?'' கோபாலன் கேட்டான்.

''நாலாயிரம் இருக்கும் தலைவரே.''

''ஆரம்பிச்சிடலாமா?''

'செய்துடுங்க தலைவரே. ஆரம்பிச்சா இன்னும் வரும்.''

''கொடி குடுத்துடு எல்லாருக்கும்.''

டெம்போ வண்டியிலிருந்து மடமடவென்று கொடிகளை விநியோகம் செய்தார்கள். நல்ல சவுக்குக் கட்டை முழங்கை நீளம். சிகப்புக் கலர் காகிதம் அரை அடி அகலம் ஒட்டப்பட்டு பரபரவென்று காற்றசைப்பில் சப்தமிட்டபடி கிட்டத்தட்ட எல்லோரும் கொடுக்கப் பட்டது.

''இந்தா அய்யரே கொடி, கைல பிடி.''

''சும்மா ஒரு தைரியத்துக்கு வச்சுக்க அய்யரே.''

''இந்தா உன்கொடி, எனக்கு வேண்டாம்.''

''ஏன் அய்யரே?''

''அடி தாங்கறவன்தான் கொடி பிடிக்கணும் என்னால முடியாது.'' அவர் நீட்டின கட்டையை



யாரும் வாங்கவில்லை. நாராயணசுவாமி அருவருப்போடு விறகுக் கட்டையைத் தொப்பென்று கீழே போட்டார்.

தொலைவிலிருந்த கோபாலன் கண்களில் இந்தக் காட்சி பட்டதும் தேசிகனை அனுப்பி விசாரிக்கச் சொன்னான்

''தலைவர் என்ன சமாச்சாரம்னு கேட்கிறார். ஏன் கொடி பிடிக்க மாட்டேன்றீங்க?''

''தலைவர் அனுப்பிச்சாரா நீங்க யார் தளபதியா? பட்டாக்கத்தி ஏதுவும் வெச்சிருக்கேளா இடுப்புல. ஓஹோ உங்களுக்கும் விறகுக் கட்டைதானா?''

''அய்யர், கேலி வேண்டாம். கொடி பிடிச்சுட்டுத் தான் வரணும்.''

''இது கொடி இல்ல தேசிகன், தடி. இது ஊர்வலத்துக்கு நல்லதில்லை.''

''என்ன சமாச்சாரம் தேசிகன்?''—கோபாலன் இடையில் புகுந்தான்.

''அய்யா கொடி வாண்டாம்னாரு.''

''ஏன்?''

''நமஸ்காரம் என்பேர் நாராயணசுவாமி. டெஸ்பேச் செக்ஷன் ஐ விஷ் யூ ஆல் த பெஸ்ட்.''

''பேச்சு மாதிரி நடத்தையில்லையே. மாட்டேன்னு சொல்றீங்களாமே?''

''தடி எடுத்து ஊர்வலம் போறது நல்லதில்லை கோபாலன் சார். இவாள்ளாம் தொழிலாளிகள். இயல்பா முரட்டுத்தனம் உண்டு. ஈர்க்குச்சி கொடுத்தாக் கூட குத்திப் பார்க்கணும்னு சுலபமா இவாளுக்குத் தோணும். இது மாஸ் சைகாலஜி.''

''எனக்குப் புரியுது, நீங்க வர வேண்டாம். விலகிக்கலாம்.''

''தேக்யூ சார், ஐ விஷ் யூ ஆல் த பெஸ்ட்.''

''அய்யரே, வொயிட் காலர் புத்திய காமிச்சுட்டியே, ரூபா வாங்கறதுக்கு மட்டும் முதல்ல வந்து நில்லு.''

''ஸ்ஸ்.''

''பின்ன என்னா தலைவரே''

''பிரிச்சுப் பேசாதிங்க. நம்ப தேசிகன் கூடத்தான் வொயிட் காலர் முன்னாடி நிக்கல வரிசையா நில்லுங்க. மூணு மூணு பேரா போகணும். பின்னாடி வந்தவங்க பின்னாடி போய் நில்லுங்க. தேசிகன் சுந்தரத்தை நகரச் சொல்லு.''

''தொழிற்சங்க ஒற்றுமை...''

''ஓங்குக.''

''தொழிலாளர் தலைவன் கோபாலன்...''

''வாழ்க.''

''போராடுவோம் போராடுவோம்.''

''இறுதிவரை போராடுவோம்.''

வில்லின் நாண் அதிர்வு மாதிரி குரல் ஒலிகள் மேலெழுகையில் அனிச்சையாய் கைகளும் எழும்பி செடி கொடிகளைத் தலைக்கு மேல் ஆட்டின.

சரக்கென்று திரும்பி மோட்டார் சைக்கிளைவிட்டுக் கிழிறங்கின பெருமாளின் கண்களில் முதல் அலைகள்தான் தென்பட்டன.

மோட்டார் சைக்கிளைத் தொடர்ந்து வெள்ளை வேன்கள். மூன்று மண் லாரிகள். அத்தனை வண்டிகளிலும் அடைத்துக்கொண்டு போலீஸ்காரர்கள்.

பெருமாள கண்ட்ரோலை நிமிண்டி, கூட்டத் தொகையை அறிவித்தான். ஐந்தாயிரம் இருக்கும் என்று



கூறினான். முக்கிய நபர்கள் பெயரைச் சொன்னான். கமிஷனர் வேண்டுமென்று கேட்டான்.

''என்ன பெருமாள் நான்தான் நேரே வரேன்னு சொன்னேனே.''

''குட் ஈவினிங் சார், ஸ்பாட்லேர்ந்து பெருமாள் பேசறேன் சார், கொடின்ற பேர்ல விறகுக் கட்டை வச்சிருக்காங்க சார்.''

''என்ன பண்ணணும்றே?''

''டேஞ்ஜர் சார் லெத்தல் வெப்பன் மாதிரி அவங்க உபயோகப்படுத்திடலாம்.''

''பிடுங்கிப் போடு, நான் வரேன் நேர.''

''எஸ் சார்—ராஜர்.''

கோபாலனைத் தன்னிடம் வரச்சொல்லி ஒரு போலீஸ்காரனை அனுப்பினான்.

''கமிஷனர் உத்தரவு கொடிகள் கூடாது.''

''பூச்செண்டா ஊர்வலத்துல எடுத்துக்கிட்டுப் போக முடியும். கொடி அவசியம் எங்களுக்கு.

''உன் கழுத்துல கயிறு மாட்டி தொங்கவிடறப்போ பூச்செண்டு மலர் வளையம் எல்லாம் உண்டு. இப்போ கொடி எடுத்துப் போகக் கூடாது. கமிஷனர் உத்தரவு.''

''மிரட்டாதே பெருமாள் நீ அடிச்சே நான் சாவலை. கயிறு மாட்டியா செத்துப் போறேன். அதுக்கு வேற ஆளைப்பாரு.''

''நீ மாட்டற பாரேன் இன்னிக்குஉன் திமிர்மொத்தமும் அடக்கறேன் பார் கோபாலன்.''

''கொடியேந்தித்தான் ஊர்வலம் போகும்.''

''முடியாது. ஒரு அங்குலம் நகர விடமாட்டேன்.''

''பார்த்துடலாம்.''

''பார்த்துடலாம்.''

பெருமாள் மறுபடி கண்ட்ரோலை அழைத்தான். மடக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னான். இன்னொரு டியர் காஸ் பிரிகேட் வேண்டுமென்று கேட்டான். அதை ஊர்வலத்துக்குப் பின்புறம் ரிப்போர்ட் பண்ணச் சொன்னான்.

மண் லாரிகளில் அடைத்துக்கொண்டு நின்ற போலீஸ்காரர்கள் தரையில் குதித்தார்கள். இன்ஸ்பெக்டர்கள் சொல்படி கூட்டத்துக்கு முன்னே நடுத்தெருவில் மறித்துக் கொண்டு நின்றார்கள். இரும்புத் தொப்பி போலீஸ்காரர்களுக்கும் கூட்டத்தாருக்கும் இடையே ஐம்பது கெஜதூரம் இருந்தது.

கோபாலன் நண்பர்களோடு விவாதித்தான். பார்த்தசாரதியைக் கட்சி அலுவலகத்துப் போன் போட்டு விவரம் சொல்லச் சொன்னான், கட்சிக் காரியாலயம் ,'செங்கொடி ஓங்குக'' என்று பதிலளித்தது.

சுந்தரத்தை முன்னேறு என்று கோபாலன் சைகை செய்தான் கூட்டம் அசைந்து உரத்த கோஷங்களோடு கொடிகளை வீசி நகரத் துவங்கியது. ஊர்வலத்துக்குப் பின்பக்கம் மற்றுமொரு டியர் காஸ் பிரிகேட் ''ரிப்போர்ட்டிங் சார்'' என்றது.

''ஸ்பெரட் அப்... ரெடி பார் ஆக்ஷன்... பெருமாள் பதில் கொடுத்தான்.

கமிஷனர் கண்ட்ரோல் வழியாய் பெருமாளின் குரலைக் கேட்டார். '-பாதி தூரம் வந்துவிட்டேன் என்ன செய்கிறாய்'' என்று கேட்டார்.

''ஊர்வலம் ''நகரத் துவங்கிவிட்டது'' கொடிகள் விலக்கப்படவில்லை'' என்று பெருமாள் பதில் கொடுத்தான்.



தனக்குப் பின்னே தான் அழைத்து வந்த டியர் காஸ் பிரிகேடைத் தொழிற்சாலை ஒற்றைக் கதவு வழியாய் உள்ளே போகச் சொன்னான். வெள்ளை வேன்களில் வந்த போலீஸ்காரர்களை இரண்டு குழுவாய்ப் பிரித்து ஒன்றைத் தொழிற்சாலை இரும்புக் கதவுக்கு முன்னேயும் மற்றொன்றை அதன் எதிர்ப்புறமும், தெரு தாண்டியும் நிற்க வைத்தான்.

''தலைவரே, ஏன் மடக்கராங்க ஊர்வலத்தை?''

''கொடி எடுத்துக்கிட்டு போகக்கூடாதாம்.''

''யார் அவன் சொல்றது?''

''துரைசிங்கப் பெருமாள்''

''த்தா டேய் பெருமாளு''

கூட்டம் ஒரு சின்னத் தயக்கத்துடன் 'போலீஸ்காரர்களை நெருங்கி நின்று கொண்டது. இடது புறம், வலது புறம், முன் பக்கம் வெகு கடைசியில் பின் புறமும் போலீஸ் அழுத்தமாய் நின்றது. பெருமாள் முன்னேறி சுந்தரத்திடம் நெருங்கி இனி போகக் கூடாது என்று தடுத்தான்.

''இந்தாடா பெருமாளு'' யாரோ ஒரு தொழிலாளி சட்டென்று பேண்ட் ஜிப்பை அவிழ்த்து கெட்ட சைகை செய்ய பெருமாள் கண்ணில் பச்சை நிறம்மின்னிற்று! ஒரு கிழவரை அம்மணமாக்கி யாரோ செருப்பால் அடிக்கும் காட்சி கனவாய்ப் படர்ந்தது. தன் தகப்பன் "விம்மலோடு இதைச் சொல்லும்போது வரும் துக்கம் தொண்டையை அடைத்தது.

''எய்ய்ய்...பெருமாள் பல்லைக் கடித்துக்கொண்டு பேண்ட் ஜிப்பை அவிழ்த்தவனை முறைக்கையில் ஒரு விறகுக்கட்டை நடுக்கூட்டத்திலிருந்து கிளம்பி போலீஸ் பட்டாளத்துக்கு நடுவே விழுந்தது.

காரில் விரைந்து கொண்டே கண்ட்ரோல் வழியாக கமிஷனர், முதலமைச்சரிடம் கொடி பற்றிக் கேட்டார்.

"எடுத்துக்கிட்டு போகட்டும். விடுங்க. அந்த மீதியை பார்ப்போம் தாயா மடக்க வேணாம்."

கண்ட்ரோலை மாற்றி பெருமாளை அவசரமாய்க் கூப்பிட்டார்.

பெருமாள் மோட்டார் சைக்கிளிலிருந்து வெகு தூரத்தில் இருந்தான். ஒரு இன்ஸ்பெக்டர் கண்ட்ரோலுக்குப் பதில் சொல்லி, பெருமாளிடம் தகவல் தெரிவிக்க ஓடியபோது, தொழிலாளிகள் அவர் ஓட்டத்தைத் தவறாய் எடுத்துக் கொண்டார்கள் "அடிக்க வராங்க அடிக்கவரான்" என்று சிதறினார்கள்.

பெருமாளிடமிருந்து பத்து கஜம் பின் வாங்கினார்கள். ஒரு கட்டை உயரப் பறந்து பெருமாளுக்கு அருகே விழுந்தது. இன்னொரு கட்டை அவன் தோளை நோக்கி வந்தது. பெருமாள் குனிந்து கொண்டான். பின்புறமிருந்து சரசரவென்று கற்கள் பறந்தன. போலீஸ்காரர்கள் பிரம்பால் முடைந்த கவசத்தை உயர்த்திக் கொண்டார்கள். பெருமாள் இரும்புத் தொப்பியைக் கேட்டு மாற்றிக் கொண்டான். பேச வந்த இன்ஸ்பெக்டரை விலக்கி விட்டு கூட்டத்தை வெறியோடு பார்த்தான்.

"ஊர்வலத்தைக் கொடியோட விடச் சொல்றாரு கமிஷனர்."

"ஊர்வலம் போறதுக்கா வந்திருக்கானுங்க. எத்தினி கல்லு அடிக்கிறான் பாரு."

கண்ட்ரோல் மறுபடி அலறியது. இன்னொரு இன்ஸ்பெக்டர் அலைசி வாங்கிக் கொண்டார். கற்கள் வீசப்படுவதைச் சொன்னார். பெருமாள் குறிவைக்கப்பட்டு அவன் மீது தடிகள் வீசப்படுவதைச் சொன்னார்.



நிலைமை கட்டு மீறுகிறது என்றார். பெருமாள் வெகு தொலைவில் "டியர் காஸ் பிரிகேட் முதல்ல விடு. லத்தி சார்ஜ் வேணாம்."

"பெருமாள் தொலைவா இருக்கார் சார்."

"நான் ஆர்டர் தரேன். மூணு ரவுண்டு போடச் சொல்லுயா முதல்ல."

சட்டென்று தொழிற்சாலைக்கு உள்ளே இருந்த கண்ணீர்ப்புகை பிரிகேட் சிகப்பு அடையாளம் வீசி, நீண்ட குழல் ஊதியது.

பெருமாள் திகைத்தான்.

இன்ஸ்பெக்டர் ஓடி வந்தார். "மூணு ரவுண்டு கமிஷனர் போடச் சொன்னார் சார்." கூட்டம் ஓவென்று கூச்சலிட்டது. கற்கள் மேலும் பறந்து சிதறின. லத்தி சார்ஜ் வேண்டாம் என்பது யார் காதிலேயும் விழவில்லை.

தூமகேது மாதிரி வெடிப்புக் குழல் ஒன்று டோபக்கென்ற சப்தத்துடன் உயர்ந்து புகையுடன் கூட்டத்துக்கு நடுவே விழுந்தது பசும்புகை நெடியுடன் உயர்ந்து படர்ந்தது. அடுத்த குழல் இன்னும் தள்ளி அதிகம் உயர்ந்து கூட்டத்தைத் தாக்கியது. பின்பக்க ஊர்வலக் கூட்டம் முற்றிலும் ஒழுங்கு கலைந்து பக்கத்துச் சந்துகளில் பதுங்கிக் கொள்ள அதிகம் கற்கள் வானத்தில் பறந்தன. மூன்றாவது குழல் தனியே ஆள் இல்லாத தெருவில் விழ யாரோ ஒருவன் துண்டால் முகத்தைப் போர்த்திக் கொண்டு விழுந்த குழலை பளிச்சென்று வாரி எடுத்து தொழிற்சாலைக்குள் வீசினான். கண்ணீர்ப் புகை பிரிகேடும் முன்பக்கக் கதவு அருகே நின்றிருந்த போலீஸாரும் திணறத் துவங்கினார்கள்.

பெருமாள் கதவுக்கு முன்னே நின்று கொண்டிருந்த போலீஸ் குழுவைத் தடியடி செய்ய உத்தரவிட்டான்.

கொடியுடன் திடமாய் நின்று கொண்டிருந்த இரண்டாயிரம் தொழிலாளிகளைப் போலீசார் தாக்கத் துவங்கினார்கள். சந்துகளில் புகுந்து, சாக்கடைகளைக் கடந்து, மழைக்கால மிகுதி நீர் போகும் சிறிய கால்வாய் போன்ற பகுதிக்குச் சில தொழிலாளர்கள் தப்பித்துப் போகும் எண்ணத்துடன் விரைந்தார்கள்.

கமிஷனரின் கார் அந்தக் கால்வாய் பாலத்தைக் கடந்து நின்றது. தொலைவில் தடியடி நடப்பது தெரிந்தது.

"ஏன்யா, பெருமாள் லத்தி சார்ஜ் பண்றான்."

கால்வாயில் ஓடிவந்தார்கள் சட்டென்று கமிஷனரின் வெள்ளைக் கார் நிற்பதைப் பார்த்ததும் பயந்து பதுங்கினார்கள்.

"கமிஷனர் மாதிரி தெரியுதுப்பா."

"இவன்தான் லத்தி சார்ஜ் பண்ணச் சொல்லியிருப்பான், ஒதுக்கமா உட்கார்ந்துகினு."

"ம்மாள, கல்லு கொண்டா..., கிழ்சிடலாம்." பரபரவென்று கற்கள் பறந்து கார்மீது விழுந்தன.

பயம். பயம்தான் வன்முறைக்குக் காரணம். பாதுகாப்பைத் தேடித்தான் பலாத்காரம் ஏற்படுகிறது. வன்முறை ஒரு இயல்பான உணர்வு என்பது உண்மையாயினும் அதன் உந்துதல் தன் இருப்பைப் பலப்படுத்திக் கொள்வதற்கே. நமக்கு எதிரியாய் இருப்பவன் அநேக நேரங்களில் நமக்கு அதிகம் பரிச்சயமில்லாத நபராய் இருக்கிறான். பாம்புக்கு மனிதனிடம் பயம், மனிதனுக்குப் பாம்பிடம் பயம். தாக்குதல் உடனே துவங்கி விடுகிறது. சந்திப்பு தற்செயலாய் நின்றாலும் யுத்தம் தவிர்க்க முடியாததாகி விடுகிறது.

கமிஷனர் பலமாகத் தாக்கப்பட்டார். கைக்குட்டையால் தலையைப் பொத்திக் கொண்டார். கண்ட்ரோல்



மூலமாய் மேலும் போலீஸ் படைக்கு உத்தரவிட்டார். பின்புறம் முன்புறம் வலப்புற சந்துகள் வழியாகவும் அவைகள் பிரிந்து தாக்க ஆணையிட்டார்.

கோபாலன் பதறினான், மூன்று பக்கமும் போலீஸ் மடக்கித் தாக்குவதை உணர்ந்தான். மடமடவென்று ஓடித் தொழிற்சாலைச் சுவரில் ஏறி உள்ளே குதித்தான். இப்போதைக்குப் பாதுகாப்பான இடம் இதுதான். போலீசைவிட தனக்கும், தன் தொழிலாளிகளுக்கும் இந்த இடம் நன்கு தெரியும். நேரே உள்ளே நுழைந்து கோபாலனைத் தொடர்ந்து நிறையத் தொழிலாளிகள் உள்ளே குதித்தார்கள். கதவுகளை வரிசையாய் உடைத்துக் கொண்டு வழி செய்தார்கள். தெருவில் நின்று சண்டை போடுபவர்களை உள்ளே வரச் சொன்னார்கள். தப்பித்துப் போகும் எண்ணத்துடன் நீண்ட சுவரில் தொழிலாளர் கூட்டம் உள்ளே குதித்தது. கட்டைகளை வீசிவிட்டு தைரியத்துக்கு வலுவான இரும்புக் கழிகளை எடுத்துக் கொண்டது. பின்பக்கக் கதவைப் பிளந்து வெளியே வழி செய்து கொண்டது.

எத்தனை நாளாயிற்று உள்ளே நுழைந்து இது அத்தனையும் ஒருவன் சொத்தா எனக்கு இதில் பங்கில்லையா? எனக்குப் பங்கில்லையெனில் எவனுக்கும் பங்கில்லை. இது இருந்தும் பயனில்லை. உடை, உடைத்தெறி நாசமாக்கு அழித்துவிடு. தகனம் செய் கண்ணில் பட்ட கண்ணாடிகள் அனைத்தும் நொறுக்கப் பட்டன. மிஷின்கள் மூளியாயின. அச்சும் உருட்டி உடைக்கப் பட்டன. "லேபரெடரிக்குப் போய் ஆஸிட் கொண்டா எல்லா மேஜையிலும் ஊத்து." —எவனோ உத்தரவிட்டான், யாரோ நாலுபேர் நிறைவேற்றினார்கள்.

பழக்கப்படுத்தப்படாத பட்டாளம் சேதம் அதிகமாகும், அதிகம் சேதமாக்கும். ஆயிற்று நுண்ணிய

மைக்ரோ வேவ் மெட்டல் க்ராக் டிடக்டர்கள் ஒரே அடியில் சரிந்து பிளந்தன. மேஜைகளை அமிலம் அரிக்கத் துவங்கியது. டயர் இல்லாமல் கட்டைகளில் நின்று கொண்டிருந்த டிராக்டர்கள் தரையில் உருட்டப் பட்டன.

## 20

"செய்திகள், வாசிப்பது ஜெயா பாலாஜி"—மிருதுவான கரகரப்புடன் ஒரு பெண் குரல் ஆர்வத்துடன், சுத்தமான உச்சரிப்புடன் செய்திகளை நாடு முழுவதும் தெரிவித்தது.

இன்று மாலை வடசென்னையில் நடந்த தொழிலாளர் பேரணி வன்முறையில் முடிந்தது. இது தொடர்பாக ஆயிரத்து நூற்று நாற்பது பேர் கைது செய்யப் பட்டிருப்பதாகத் தெரிகிறது.

இதில் முப்பத்து ஆறுபேர் பலத்த காயங்களுடனும், நூற்று எழுபது பேர் லேசான காயங்களுடனும் மருத்துவ சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டார்கள்.

இருபத்து ஏழு போலீஸார்களும் நான்கு இன்ஸ் பெக்டர்களும், சென்னை நகர கமிஷனரும் இதில் காய மடைந்தார்கள்.

ஊர்வலத்தினர் தடிகளை ஏந்திச்செல்வதைப் போலீஸார் தடுத்தபோது கைகலப்பு ஏற்பட்டதென்றும் அதைத் தொடர்ந்து தடியடி, கண்ணீர்ப்புகைப் பிரயோகம் செய்ய நேரிட்டதென்றும் போலீஸ் அறிக்கை ஒன்று கூறுகிறது.



நகரில் தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. இந்த உத்தரவு இன்று மாலை ஆறு மணியிலிருந்து வரும் பதினைந்தாம் தேதிவரை அமுலில் இருக்கும்.

சட்டசபை அங்கத்தினர்கள் அவசரக் கூட்டம் ஒன்று கூட்டி, தமிழக அரசின் வன்முறைப் போக்கைக் கண்டித்து மகஜர் ஒன்றை ஆளுநரிடம் கொடுத்திருப்பதாகத் தெரிகிறது.

தமிழகத்தில் மூன்று அனல் நிலையங்கள் நிறுவ மத்திய அரசு மறுப்பது உள்நோக்கம் கொண்டது என்று முதலமைச்சர் குற்றம் சாட்டினார்

நீங்கள் கேட்டுக் கொண்டிருப்பது—

கோபாலன் பிடரிபட ஓடினான். ரயில்வே லைன் இருட்டில் பதுங்கிக் கொண்டு நூறு அடிக்கு ஒரு முறை ஒளிந்து கொண்டு தொழிற்சாலையிலிருந்து வெகுதூரம் வந்து விட்டான்.

நகரத் தெருக்களில் சந்தடி அடங்கியதும் விடுவிடு வென்று நடந்து விளக்கு வெளிச்சம் அதிகமில்லாத இடங்களில் ஓடி, ஒரு குறிப்பிட்ட இடம் வந்ததும் சுவர் ஏறிக் குதித்து ஒரு வீட்டின் கொல்லைப்புறக் கதவைத் தட்டினான்.

"யாரு?"—பயத்துடன் ஒரு பெண் குரல் கேட்டது.

"நான்தான் கோபாலன்"—இரைந்தபடி பதில் சொன்னான்.

சட்டென நாதங்கி அவிழும் ஓசை கேட்டது. மெல்ல கதவு இடைவெளியில் அவனை உள்ளேயிருப்பவர் கவனிப்பது தெரிந்தது. பிறகு பளிச்சென்று கதவு திறந்தது.

சாவித்திரி கடுமையான முகத்துடன் நின்று கொண்டிருந்தாள். "என்ன?" என்று கேட்டாள்.

கோபாலன் அவளை நோக்கி கைகளைக் கூப்பினான்.

ஸ்ரீ கிருஷ்ண உவாச

ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா சொன்னார். ஒருகுலத்திற்கு ஹானியுண்டாகும்போது, அதற்கு 'ஹேதுபூதனானவனை விட்டுவிட வேண்டும். ஒரு கிராமத்தின் நிமித்தமாய் ஒரு குலத்தையும் விட்டுவிடலாம். தனது சௌக்கியத்தின் நிமித்தமாய் தனக்குள்ள பூமியையும் விட்டு விடலாம் தவறில்லை.''

விட்டு விடலாமா? சரி இது போதும் என்று உதறி எழுந்து விடலாமா? இந்தக் கம்பெனியும் டிராக்டர்களும் பெரும் நிலப்பரப்பும் எனக்கு வேண்டாம், என்று புறங்கையால் நகர்த்திவிட்டுப் போய்விட லாமா? இரண்டு கை ஜலம் அள்ளி எடுத்து, எவனிடமோ இது உனக்கே என்று ஊற்றிக் கொடுத்துவிட்டுப் போய் விடலாமா? எப்படி வேண்டுமானாலும் போகட்டும் என்று விட்டு விடலாமா?

ஸகதேவ உவாச—

ஸகதேவன்சொன்னான். ''சம்பாதிப்பதிலும் துக்கம். அவற்றைக் காப்பதிலும் துக்கம். அவற்றின் அழிவிலும் துக்கம். ஆகையால் துக்கத்திற்கு மூலமான தனம் என்ன பிரயோஜனம், ஒன்றுமில்லையென்றபடி.''

உண்மைதான். இப்படிக் கண்ணெதிரே சில்லு சில்லாய் என் கம்பெனி உடைவதை நான் பார்த்துக் கொண்டிருக்கும் பாபம் எனக்கேன் வந்தது. வாழ்க்கையே இதுதான் என்று நான் சுட்டிக் காட்டிக் கொண்டிருப்பதை குரூரப்படுத்திவிட்டுப் போய்விட்டார்களே. என்னால் என்ன செய்ய முடிந்தது? யாரை எதிர்க்க முடிந்தது? மறைந்திருந்து அத்தனையையும் வேதனையோடு வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தேனே.

அர்ஜுன உவாச—



ஆனால் அர்ஜுனன் சொன்னான்: ''சாயான்ய பிராமணருக்கு பரான்னம் சந்தோஷகரமானது. பசுக்களுக்குப் பசும்புல் சந்தோஷகரமானது. பதிவிரதைகளுக்குத் தூரதேசம் போயிருந்த தம்முடைய கணவரது வருகை சந்தோஷகரமானது. ஹே கிருஷ்ணா, யுத்தம் எனக்கு சந்தோஷகரமானது. எதன் பொருட்டாவது நான் கடைசிவரை சண்டையிட்டுக் கொண்டே இருக்க விரும்புகிறேன்'' என்றான்.

ரங்கசுவாமிக்கு மறுபடியும் ஒரு சண்டை என்று நினைக்கும் போதே அயர்ச்சியாய் இருந்தது. அப்பா சொல்லிக் கொடுத்த சுலோகங்கள் மறுபடி மறுபடி உள்ளே பொங்கிற்று. ஆனால் சண்டை போடத்தான் வேண்டும், கடைசிவரை யுத்தம் செய்யத்தான் வேண்டும். அழிக்கட்டும் அத்தனையும் பொசுக்கட்டும். எனக்கும் வல்லமை உண்டு. பதிலுக்குப் பொசுக்கும் தைரியமும் உண்டு. நசுக்கி மொத்த பேரையும் தீர்த்து விட முடியும். இனி அதுதான் முடிவாய் செய்ய வேண்டிய காரியம்.

அர்ஜுனனை மூடன் என்று கீதை சொல்கிறது. ஆனால் கிருஷ்ணனுக்கு அர்ஜுனனைத்தான் கொண்டாட முடிகிறது ஏன்? அர்ஜுனன் காரியம் சண்டையிடுதல். அது அவனது கர்மா. எந்தத் தத்துவமும் சொல்லி, அதனின்றும் அவன் பின் வாங்கவில்லை. தன் காரியத்தை மறுக்கவில்லை. ஆனால் இங்கு என் காரியம் என்ன? சண்டையிடுதலா? காண்டீபம் தாங்கி, தெருத் தெருவாய் அலைதலா? நான் யார் அர்ஜுனனா. க்ஷத்திரியனா? சண்டையிடுதலா' என் தொழில்? நான் பிராமணன். திருச்சியில் கொடிகட்டிப் பறந்த வக்கீலின் பிள்ளை வேதம் அறிந்தவரின் வித்து என் கர்மம் என்ன? எது என் காரியம்? ஒருவேளை தொழிற்சாலை ஆரம்பித்து நடத்துவது என் தொழில் இல்லையோ? நான் வாணிகம் படித்துவிட்டு இங்கே வந்திருக்கக் கூடாதோ? திசை தப்பிப்பறந்ததால் வழி தெரியவில்லையோ? நான்

இதற்கு லாயக்கில்லையோ? என்னால் வேதம் சொல்ல முடியுமா? அக்னிக்கு முன் அமர்ந்து ஸ்வாஹா என்று கரம்கூப்பி நிற்க முடியுமா? கை கூப்பவே மறந்து போனேனா. கூப்பித் தொழுதல் என்பதே இல்லாமல் போயிற்றா? மனசை ஒருமித்து புத்தியில் சுடர் தாங்கி, ப்ரம்பொருள் பரமன் பரமேசுவரன் என்று என்றாவது நின்றிருக்கிறேனா? அது செய்யாதது தவறா? அதன் விளைவுதான் இதுவா? அடக்கமற்றுப் போனேனா? அதனால்தான் துக்கமா?

தெரியலையே. தெரியலையே. கொலையும் கொலைத் தொழிலும் தெரியாதவன் நான். சண்டையிட முடியவில்லையே.

ரங்கசுவாமி தளர்ந்தார். அலைந்தார் தன் தந்தையின் உருவப்படத்திற்கு நின்று முகத்தைக் கைகளால் பொத்திக் கொண்டு நின்றார். தோள்கள் குலுங்கிற்று. வயிறு குழைந்தது. இடுப்பும் மார்த்தசைகளும் விசுக்கென்று இழுத்துக் கொண்டன. முழங்கால் தளர, படத்துக்கு முன் இருந்த மேஜையில் சரிந்தார்.

என் தேவனே என் தேவனே என்னை ஏன் கை விட்டீர்? இந்த வலியும் துக்கமும் எனக்கேன்? எதைக் கருதி இந்தத் தண்டனை? என்னைக் குரூரப்படுத்துவதில் உமக்கென்ன ஆனந்தம்?

ஊரும் தேசமும் உயரவகை செய்தேன். என்னை எதற்கு அழுத்திக்கொல்லுகிறார்கள் இவர்கள் இத்தனை ஆத்திரப்படும்படி நான் என்ன செய்தேன்? இவர்களை யார் தண்டிப்பது? யார் தட்டிக் கேட்பது? இது நியாயம் தானா இல்லை எல்லா தண்டனையும் எனக்கா? எனக்கு மட்டும்தான் சிலுவையா? கழுத்து நெறித்து வயிற்றைக் கிழித்து அத்தனை பேரும் பொன்முட்டை தேடுகிறார்கள், கிழிந்துபோன வாத்து மாதிரி என் தொழிற்சாலையை நாசம் பண்ணிவிட்டுப் போயிருக்கிறார்கள்.

‘வீட்டுக்கு விளக்கேற்றி வையுங்க சாமி, என்று பத்து வருடம் முன்பு காலில் விழுந்தவன். கண்ணெதிரே அமிலத்தைக் கொட்டி எரித்துவிட்டுப் போனான். எரியட்டும் அவன் வீட்டு விளக்கும் சேர்ந்து சாம்பலாகட்டும்.

விடென்று எதனைச் சொல்வீர் சீ...எந்த நேரத்தில் கவிதை வருகிறது? இந்தக் கவிதைகளால் என்ன லாபம்? யாருக்குப் புரியும்? காசு காசு என்று அலைகிறவர்களிடம் பேசி என்ன பிரயோஜனம்? எக்கேடும் கெட்டு ஒழியட்டும் அத்தனையும் விற்று விட்டு, வந்த விலைக்கு வாரிக் கொடுத்து விட்டுப் போய் விடுகிறேன். அம்மாவையும் கூட்டிக்கொண்டு போய்விடுகிறேன். போராடுங்கள். போராடுங்கள், இறுதி வரை போராடுங்கள். எனக்கெதிரே போராட வேண்டாம். உங்களுக்கெதிரே நீங்களே நின்று போராடுங்கள் லெட்மி ஸ்டாப் திஸ்ப்ளடி பிஸினஸ் உங்கள் மார்மீது தாக்கிப் பிரயோஜனமில்லை. வயிற்றைத் தான் தாக்கவேண்டும். உங்கள் கையாலேயே உங்கள் வயிற்றைத் தாக்கும்படி செய்ய வேண்டும்.

அப்பா ஐயம் ஸாரி, உம் புள்ளை ஒரு ஃபெயிலியர் டோட்டல ஃபெயிலியர். இதுக்குப் பதிலா நான் உன்னைப் போல வேதம் படிச்சிருக்கலாம். வக்கீல் தொழில் பண்ணியிருக்கலாம். நான் தெரியாம பாக்டரி ஆரம்பிச்சுட்டேன். மண்ணைப் பொன்னாக்கணும்னு நினைச்சேன். முதல்லே நிற்க ஆசைப்பட்டேன் ப்ரேக்த்ருன்னு நினைச்சேன் நோ இது தப்பு இங்க உடைஞ்சது நான் என் தொழிற்கூடம் என்னுடைய டிராக்டர் என்னுடைய மிஷின்கள், இது போதும் இந்த தேசம் கல்லு உடைக்கத்தான் லாயக்கு. இங்கே உற்பத்தி பண்றது பாவம். என்னை மன்னிச்சுடுப்பா. எனக்கு இதுபோதும்.

“ரங்கு...”

கண்ணாடி அறைக்கு வெளியே அம்மாவின் குரல் கேட்டது. பளிச்சென்று ரங்கசாமி நிமிர்ந்தார்.



அலுவலகம்
23 மே 20..

அம்மா அம்மா எப்படி இங்கே? இது அம்மாவின் குரலா? என் பிரமையா? ஏதோ வெளியே சந்தடி கேட்கிறது. திறக்கலாமா? சாவி எங்கே? வெளியே இருப்பது யார்? அம்மாவைக் காட்டி என்னைக் கட்டிப் போட்டு அடிக்கப் போகிறார்களோ?

என்னா சொல்றே நைனா. கூலி ஜாஸ்தி பண்றயா உங்க அம்மாவைக் குத்தி கொன்னுடட்டுமா.

"ரங்கு."

மறுபடியும் அம்மாவின் குரல். அம்மா தான் அது. வேறு சில ஒலிகளும் கேட்கின்றதே? நிறையபேர் நடப்பது மாதிரி தெரிகிறதே அலுவலகத்துப் பெரிய மரக் கதவை உடைக்கிற சப்தம் நிறைய ஆட்கள் நகரும் ஒலி ரங்கசுவாமி சுற்றும் முற்றும் பார்த்தார்.

கைக்கு வாகாய் ஏதும் இல்லையே? தடிமாதிரி ஏதாவது உண்டா? அவசரமாய்த் தேடினார். பூ ஜாடியைக் கவிழ்த்து விட்டு, கையில் இறுகப் பிடித்துக் கொண்டார் வரட்டும் உள்ளே வரட்டும்.

சரி, இது என்ன புத்தி? நான் அர்ஜுனனா? காண்டீபம் பிடிக்கிற வயசா இது? நான்சென்ஸ், பூ ஜாடியைக் கீழே எறிந்தார், சாவியைப் போட்டுத் திருகினார்.

"ரங்கு" அம்மாவின் குரல்.

"ரங்கசுவாமி சார்" பாலுவின் குரல். பாலு இருக்கிறான். அம்மாவோடு அவனும் இருக்கிறான். அம்மாவுக்கு ஆபத்தில்லை. பளிச்சென்று கதவைத் திறந்தார்.

துரைசிங்கப் பெருமாள் எதிரே நின்றிருந்தான். இவரைக் கண்டதும் விறைப்பாய் சல்யூட் அடித்தான்.

உடைந்த கதவு வழியாய் அம்மா ஓடி வந்தாள். இரும்புத் தொப்பியும் லத்திக் கம்புகளுமாய் போலீஸ் நுழைந்தது.



"ரங்கு..." அம்மா நெருங்கினபோது ரங்கசுவாமிக்கு தலை சுற்றியது. தோளைத் தொட்டபோது நெஞ்சை அடைத்தது. கைகளைப் பற்றியபோது துக்கம் உடைத்துக் கொண்டது அவர் இடுப்பைச் சுற்றி கைகளை வீசி அணைத்து, ரங்கு என்று கூப்பிட்டபோது கதறல் வெளிபட்டுவிட்டது.

"பார்த்தியா, பார்த்தியா எல்லாத்தையும் உடைச்சு எறிஞ்சுட்டாளே பார்த்தியா" சாவு வீட்ல அலங்கோலமாய் மனசு மாறிப் போயிற்று.

பாலு பெருமாளை விரலைக் காட்டி வெளியேறச் சொன்னான் போலீஸ்காரர்களை அப்புறப்படுத்தினான். உடைந்த கதவுக்கு அப்பால போய் வாயைப் பொத்தி நின்று கொண்டான்.

ஒரு கம்பெனியில் சேர்மன் சாதாரண மனிதர்தான். ஆனாலும் அவர் கதறி அழுவதை யாரும் வேடிக்கை பார்க்க வேண்டிய அவசியமில்லை. உடைந்து தவிப்பதை, கண்ணீர் தளும்ப நிற்பதைப் பார்க்க தனக்குக் கூட யோக்கியதை இல்லை.

இது அம்மா பிள்ளை விவகாரம். இங்கே மூன்றாம் மனிதர் அனாவசியம்.

"உனக்கு ஒண்ணுமில்லையே ரங்கு."

"பாக்டரி உடைஞ்சுடுத்தேம்மா."

"உன்னை யாரும் எதுவும் பண்ணலையே? காயம் ஒன்றும் இல்லையே."

"மிஷின் அத்தனையும் உடைச்சிட்டாளே. அத்தனை வண்டியையும் கவிழ்த்துட்டாளே."

"போனா போறது போ. இரும்பும் கட்டையும் தானே, சரி, பண்ணிக்கலாம் போ."

"இது வெறும் இரும்பு இல்லேம்மா. இதுல உசிர் இருக்கு, உனக்கு தெரியலையா?"

''எனக்குத் தெரியும். பெரிசு பண்ணாத விடு. வீட்டுக்கு வா.''

''தா பெரிச பண்ணலம்மா. சிறிசு பண்ணிடறேன் அத்தனையும் வித்து ஒழிச்சுக் கட்டிடறேன்.''

''கோபப்படாதே வா —உனக்கு ஒண்ணுமில்லேன்னதும் நிம்மதியாயிடுத்து வா.''

''இடம் இடமா நொறுக்கியிருக்கான். கண்ணாடி கண்ணாடியா பேத்துருக்கான்.''

''ஜனங்களுக்குக் கோபம் வந்தா மூடத்தனம் வந்துடும். போனா போறது வா.''

''எதம்மா போனா போறதுங்கறே.''

''பொதுவா சொல்றேன்.''

''எதைப் பொதுவா சொல்றே.''

''உன்னை, இந்த பாக்டரியை, இந்த ஜனங்களை போனா போறதுங்கறேன்.''

''இந்த பாக்டரி போனா போறதுங்கறியா?''

''வேறென்ன சொல்றது?''

''இதைப் பத்தி ஏதாவது தெரியுமா உனக்கு?''

''இதுவும் உனக்குத் தெரிஞ்சு பிறந்து வளர்ந்தது தானேடா ரங்கு. வேறென்ன சொல்றது?''

''இது உன் சொத்துமா.''

''போனா போறது.''

''அம்மா.''

''ஸ்ஸ' ஆத்திரப்படாதே, எழுந்திரு, விட்டுட்டு வா, போலிஸ் கார்லயே போயிடலாம் வா''

''நோ...''



''ரங்கு...''

''நோ...''

''நான் சொல்றதக் கேள்.''

''நோ...''

பாலு உள்ளே நுழைந்ததும் அவருக்கருகே நின்று கொண்டான்.

''என்னைத் தனியா விடு.''

''ரங்கு...''

''நோ என்னைத் தனியா விடு.''

''ஏன் இப்படி அவஸ்தைப் படுத்துக்கிறே அமைதியா இரு.''

''உனக்கு இந்த பாக்டரி மறந்து போயிடுத்தும்மா, ஷரோட உட்கார்ந்து இதனுடைய ஜ்வலிப்பே மறந்து போச்சு உனக்கு.''

''மறந்து போனது நீரங்கு. உனக்குத்தான் மறந்து போச்சு.''

''என்ன அது?''

''கொடுக்க மறந்து போச்சு. நாலணா காசு கூட கேட்டா சரின்னு சந்தோஷமா சொல்லத் தெரியாம போச்சு.''

''எதுக்குக் கேட்டா தெரியுமா?''

''ஏதோ கேட்டா. காரணமா முக்கியம். காசுதான் முக்கியம்.''

''காசு மட்டும்தான் முக்கியமா?''

''இல்லாதவாளுக்கு காசு மட்டும்தான் முக்கியம். உனக்கு என்ன தெரியும் காசு பத்தி.''

''வாட் நான்சென்ஸ்...''

''ஸ்ஸு. இது யார் சொத்துன்னு நீ நினைச்சிண்டிருக்கே?''

''யார் சொத்து?''

''என்னுடையது ரங்கு. எங்க அப்பா காக மஞ்சக்காணி சொத்து. கிழக்குத் தோப்பு நஞ்சையும் சவுக்குத் தோப்பும் வித்த பணம், உப்பளத்தை அடமானம் வச்சி, ஷேர் வாங்கி, வட்டில போட்டு, மறுபடி வித்து மறுபடி ஷேர் போட்டு பொங்கின காசு. உங்க அப்பாவுக்கு வித்தை தெரிஞ்சுது. உனக்குத் தெரியலே.''

''அம்மா...''

''கோவப்படாதே ரங்கு, நீ உழைச்சு பொங்கிடலைப்பா. பெரிசு பெரிசா உத்திரக்கட்டை இருந்தது. நீ நிறுத்தி கட்டினே. அவ்வளவுதான். எனக்குத் தாலி கட்டினப்போ உங்க அப்பா டைப்பிஸ்ட்தான் தெரியுமோ அப்புறம் படிச்சு, பாஷை கத்துண்டு. ஒண்ணை இரண்டாக்கி இரண்டை நாலாக்கி, எட்டு பதினாறு முப்பத்து ரெண்டா பெருக்கி உன்கிட்ட கொடுத்துப்போனார், நீ தகரக் கூரை அடிச்சு பாக்டரி பண்ணினே. நாலணா காசு பெரிசுன்னு உனக்கு யார் சொன்னாப் புரியும்.''

''எல்லாரும் என்னையே குத்தம் சொல்றேளே கடவுளே.''

''ரங்கு.''

''என்னை ராட்சசன்னு நீயும் சொல்றியே அம்மா.''

''ரங்கு...''

''நான் முடியாதுன்னு சொன்னது மட்டும்தான் பெரிசா படறதா?''

''பசிக்கிறவாகிட்ட ஏன் சாதம் போடலைன்னு காரணம் சொன்னா பசி போகுமா ரங்கு?''



''அதுக்காக அடிச்சு உடைக்கறதோ?''

''இவாள்ளாம் பசிச்ச ஜனங்கள் ரங்கு. இரண்டு மாசம் காசு இல்லாத கோவம். இனி இல்லாமலே போயிடுமோங்கற பயம். வித்துட்டு நீ போயிடலாம் இதுகள் எங்கு போகும்? தரேன்னு சொல்லிடு—உடனே சொல்லிடு.''

''என்கிட்ட இனி கொடுக்கறதுக்கு ஒன்றுமில்லை. உடைஞ்ச மிஷினும் உதிர்ந்த கண்ணாடியும் இருக்கு.''

''இருக்கிறதைக் கொடு உடனே கொடு.''

''வாங்கிண்டு உடைப்பான்.''

''தப்பு ரங்கு. கறக்கிற மாட்டை யாரும் வெட்ட மாட்டா.''

''ஒரே ஒரு நாள் கறக்கலேன்னா வெட்டிடுவான்.''

''இல்லை இரண்டு அடி அடிப்பான் தன் தலையிலியும் போட்டுக்குவான். அப்படித்தான் இதுவும் நடந்திருக்கு. உன் கம்பெனியையும் உடைச்சு அவனும் நாயா அடிபட்டுருக்கான். லாரி லாரியா தூக்கிண்டு போனா, ரத்தம் வழிய. வா—வீட்டுக்கு வா.''

''எத்தனை பேருக்குக் காயம்?''

''இருநூத்து இருபத்து நாலு பேருக்கு சார். போலீஸ்காரர்களுக்கும் நல்லா அடிபட்டிருக்கு. கமிஷனர் காரை உடைச்சிட்டாங்க. அவருக்குத் தலையில் நாலு தையல் போட்டிருக்கு சார்''—கதவோரம் நின்ற துரைசிங்கப் பெருமாள் விறைப்புடன் பதில் சொன்னான்.

ரங்கசாமி மெள்ள எழுந்தார். டையைத் தளர்த்தி, அவிழ்த்து பாலுவிடம் கொடுத்தார். வெளியே நகர்ந்து படியிறங்கி தோட்டத்துப் பக்கம் நடந்தார். தீயணைப்பு பக்கெட்டை தரையில் வீசி ஊற்றினார். பாலுவும் சில

போலீஸ்காரர்களும் பக்கெட்டுகளை எடுத்துக் கொண்டார்கள்.

"நாளைக்கு வீட்டுக்கு வந்து இன்ஷுரன்ஸ் ஆபீஸுக்குப் போன் பண்ணு பாலு."

இரவும் பகலும் அற்ற அந்த நேரத்தில் மெர்க்குரி விளக்குகள் பளிச்சென்று மின்னி எரியத் துவங்கின.

# 21

"என்ன?"

இரண்டாம் முறையாய் சாவித்திரி கேட்டது கூட காதில் விழவில்லை. பன்னெடுங் காலமாய் இப்படியே கைகூப்பி நிற்பது போல் பட்டது கோபாலனுக்கு மறுபடி ஏன் இங்கு வந்தேன் எது துரத்திற்று என்னை. இன்னொரு முறை இவளைச் சந்திக்க, தன்னை எது கொண்டு வந்தது இங்கே? விதியா? உள் மனசா? போலீஸா என் புத்தி பிசகா? எவ்வளவு அன்னியமாக்கினாள் ஒரே வினவலில்? எவ்வளவு இடைவெளியைக் காண்பிக்கிறாள் ஒரே கேள்வியில்.

"என்ன?"

என்ன வேண்டும், எதற்கு வந்தாய். ஏன் இந்த நேரத்தில். எதுவுமில்லை, நேரடியாய் தெளிவாய் 'என்ன?' ஒரு சிறிய கேள்வி கேட்டு எப்படிச் சிறகு அடிக்கிறாள். அபயம் என்று கைகூப்புவதோ—மூச்சிரைப்பதோ, முகத்தில் ரத்தமும் பயமும் உறைந்திருப்பதோ கவனமின்றி, உனக்கெதுவானாலும் அது எனக்கு முக்கியமில்லை என்கிறதாய் சின்னக் கேள்வியாய் நிற்கிறாள். என்னவென்று சொல்வது இவளுக்கு?



"ஊர்வலம் கலைஞ்சு போச்சு. போலீஸ் துரத்தறது. என்னால இதுக்கு மேல ஓட முடியல."—நெஞ்சுக்கு நேரே கூப்பின கையைப் பிரிக்காமல். வயிற்றில் இறக்கி மூச்சிரைப்புடன் கோபாலன் பதில் சொன்னான் வலது கையால் இன்னொரு கதவை விலக்கி, வீட்டு விளக்கின் முழு வெளிச்சமும் அவன் மீது படரவிட்டாள். சலனமின்றி வெறித்துப் பார்த்தாள்.

"கொஞ்சம் இருங்கோ," அவனை வெளியிலேயே நிறுத்தி, மறுபடியும் இரண்டு கதவுகளையும் மூடித் தாழிட்டாள். கோபாலன் பயந்தான். அசடே யாரையாவது உதவிக்குக் கூப்பிடறயா? ஆம்பிளை ஆட்களைத் துணைக்குக் கூட்டிண்டு வரப் போறயா? இவளை நம்பி வந்தேனே இது பெரும் பிசகோ? பெருமாளை வரச் சொல்லி, ஆள் அனுப்பி, பிறகு கதவைத் திறப்பாளோ?

எல்லா இடத்தையும் விட்டுவிட்டு இதையேன் தேர்ந்தெடுத்தேன், ஒளிந்து கொள்ள? சாவித்திரி ரொம்ப நல்லவள். உதவி நிச்சயம் செய்வாள் என்று எவ்விதம் நம்பினேன்? பிசகு சாவித்திரியிடமா, என்னிடமா? என் கண்ணில் கபடம் வந்துவிட்டதா? இப்படி இருட்டில் நின்று கதவைத் தட்டுகிறவனை எந்தப் பெண்ணும் நம்ப மாட்டாளோ? கைகூப்பினாலும் இரக்கம் வராதோ? சாவித்திரியைப் பயமுறுத்துவது எது? நானா? என் கிழிசல் நிலைமையா? இருட்டா? ஓடிவிடலாமா? கட்சி காரியாலயம், உபதலைவர் வீடு, எம்.எல்.ஏ.வின் கார் ஷெட், எங்கேயாவதுபோய் ஒளிந்து கொள்ளலாமா? இவை எதுவும் சரியான இடமில்லை. பெருமாள் விடிவதற்குள் பிடித்துக் கொண்டு போய்விடுவான். இத்தனை

நேரம் அத்தனை இடத்திலும் ஆட்களை ஏவியிருப்பான். ஊரைத் தாண்ட முடியாமல் அத்தனை செக் போஸ்டிலும் ஆணி அறைந்திருப்பான்.

இந்த இடம் எவர் மனசிலும் சந்தேகம் விழாது என்பதால்தானே ஓடிவந்தேன். இப்படி பளிச்சென்று கதவைச் சாத்துவாள் என்று ஏன் எனக்கு உறைக்காமல் போயிற்று? இவள் வெறும் பெண் என்பதை எப்படி மறந்தேன்? தவறு என்னுடையது. பரபரவென்று எல்லா விளக்குகளும் போட்டு உள்ளே அழைத்துச் சோறு போட்ட நேரம் வேறு. இது வேறு. நான் செய்தது பிசகு தனியனாய் நேரம் கெட்ட நேரத்தில் கொல்லைக் கதவு வழியாய் அந்நியன் உள்ளே வர என்ன விளக்கம் சரிப்படும்? முட்டாளே முட்டாளே அவள் நிலைமை உனக்கேன் தெரியவில்லை? ஓடு, வேறெங்காவது ஓடு. பெருமாள் பிடிக்கு மாட்டாமல் துவண்டு சரிய, வேறு இடம் தேடு. ஆனால் எங்கே போவது? எந்த இடத்தில் சரிவது?

மறுபடி தாழ்நீக்கும், ஒலி கேட்டது. சாவித்திரி அசைவோடு வேறு யாரோ நடப்பதும் தெரிந்தது. கோபாலன் சுவர் பக்கம் ஓடத் தயாரானான். பளீரென்று டார்ச் விளக்கு முகத்தில் விழ, கடுமாறினான். இந்த முறை வீட்டின் பின்பக்க விளக்கு ஒளி விழவில்லை டார்ச் மட்டும்தான் அலைந்தது.

''உள்ளே வாங்கோ.''

சாவித்திரி இருட்டில் சிலை மாதிரி இருந்தாள்.

''இது என் மூத்த பிள்ளை ரமேஷ் ரமேஷ் இது கோபாலன் மாமா, அப்பாவோட பிரண்ட், ஞாபகம் இருக்கா? இவரைப் போலீஸ் துரத்தறதாம். நம்மாத்தில் இடம் கொடுக்கலாமா? உள்ளே வாங்கோ'' டார்ச்சை சட்டென்று அணைத்தாள், மறுபடி போட்டு படியைக் காட்டினாள்.

கோபாலன் உள்ள நுழைந்தான். பதின்மூன்று வயதுப் பிள்ளை, அரை நிக்கரும் வெறும் மார்பும்,



தூக்கக் கலக்கமாய் நின்றிருந்தான். உள்ளே நுழைந்ததும் கோபாலன் கைகளைப் பிடித்துக் கொண்டான்.

''எனக்குத் தெரியும்மா. அப்பாவை யாரோ கொன்னூட்டு இவரை ஜெயில்ல போட்டுட்டா. ஜெயில்ல இவரை நிறைய பேர் சேர்ந்து அடிச்சாளாமே. சுப்பையா சொன்னாரே, இப்பவும் போலீஸ்காரர் அடிச்சாளா சார்''

கோபாலனுக்கு என்ன செய்வது என்று விளங்கவில்லை. பதிமூன்று வயதுப் பையனை ஏன் உலுக்கி எழுப்பினாள் என்று தெரியவில்லை. இந்தப் பையனுக்கு இது தெரியலாமா என்று புரியவில்லை.

''உள்ளே அழைச்சிண்டு போ ரமேஷ் லைட் போட வேண்டாம். பெட் ரூம் விளக்கு ஏத்து போறும்.''

மடமடவென்று கொல்லைக் கதவுகளை அடைத்து தாழ்போட்டுவிட்டு ஒருமுறை டார்ச் வீசி இடம் தெரிவித்துவிட்டு உள்ளே நகர்ந்தாள். கோபாலன் பையனைத் தொடர்ந்து ஹாலுக்கு நகர்ந்தான். சமையல் அறைக்குப் போய் சாவித்திரி குத்துவிளக்கை ஏற்றினாள். கணேசன் தட்டை எடுத்து ஜலம்விட்டு அலம்பி நடுவே வைத்தான். நீர் ஊற்றின சாதம் எடுத்து தட்டில் அள்ளிப்போட்டான். வலை பீரோவைத் திறந்து, மோரைக் கலக்கி எடுத்து அருகே வைத்தான். சொம்பு நிறைய ஜலம் எடுத்து சமையலறைக்கும் ஹாலுக்கும் நடுவே வைத்தான்.

குத்துவிளக்கு அசைவில் சாவித்திரியின் நிழல் சுவர் முழுக்க அலைந்து கொண்டிருந்தது.

''உங்களுக்குச் சிரமம் கொடுக்கிறேன் ஆனா எனக்கு இந்த நேரம் வேற வழியில்லை. இதுக்கு மேல அடி தாங்க முடியலை. ஓடி ஓடி ரொம்பக் களைச்சுப்போய்—கொஞ்ச நேரமாவது சாயணும்னு தோன்றது. ஊர்வலம்

நடக்கும் மகஜர் போய்ச் சேரும். பேப்பர்ல செய்தி போட்டு விஷயம் பெரிசாகும். முடிவு வரும்னு திட்டம் போட்டது பலிக்கலை யாரும் முழுக்க முழுக்கத் துணையா இல்லை. போராட்டம் உடைஞ்சு போச்சு. இனி யாரைக் கூப்பிட்டாலும் மாட்டேன்னு சொல்லிடப் போறான்னு தெளிவா தெரியறது. கூப்பிடறதும் நியாயமில்லை. இரண்டு மாசம் பட்டினி, வேலையில்லாத அவமானம், கடன் சுமை, இதுக்கு மேல லத்தி சார்ஜ். ஜெயில், கோர்ட். கேஸ் தொழிலாளி தாங்கவே மாட்டான். இது தோத்துப் போயிட்ட போராட்டம் நான் எங்கயாவது மறைஞ்சிண்டு தொழிலாளியை வேலைக்குப் போன்னு சொல்லிடப் போறேன் கம்பெனி திறந்தா, வெளியே வந்து பழையபடி ஜெயிலுக்குப் போயிடப் போறேன் இதைச் சொல்றதுக்காவது கொஞ்ச நாள் தலைமறைவா இருக்கணும். கைது பண்ணி கூட்டுண்டு போயிட்டா, கொலை கேஸு, கலவரம் எல்லாம் தலைல திணிச்சு, யாரோடையும் பேச முடியாதபடி. பண்ணி, என்னோட இன்னும் இருபது பேரை வெளியே தொரத்தி இனி யாரும் எந்தக் காலத்துலியும் வாயே திறக்க முடியாதபடி அடைச்சு அடிமையாக்கிடுவான். எனக்காக இன்னும் இருபது குடும்பம் தவிக்கணுமான்னு தோண்றது. என்கூட இருக்கிறவாளையே சமாதானம் பேசச் சொல்லி, உள்ள போன்னு சொல்லணும். அது வரைக்கும் ஒரு இடம் வேணும். நான் பெரிய பாரம் உங்களுக்கு ரொம்ப சிரமம்'' கோபாலன் மறுபடி கை கூப்பினான். திக்கித் திணறிப் பேசினான்.

சாவித்திரி சமையலறை நிலைப்படியில் சாய்ந்தபடி கேட்டுக் கொண்டிருந்தாள். அவன் முடித்த பிறகும் ஏதும் சொல்லாமல் மௌனமாய் இருந்தாள். உள்ளே நகர்ந்து துடித்துக் கொண்டிருந்த குத்துவிளக்குக்கு எண்ணெய் ஊற்றினாள்.

விடிஞ்சு பேசிக்கலாம். இப்போ சாப்ட்டுட்டு ஸ்டோர் ரூம்ல படுத்துக்கட்டும். ரமேஷ் கண்ணா என்



கூட வா,'' மகனை அணைத்துக் கொண்டு, படுக்கை அறைக்குள் போய் தாழிட்டுக் கொண்டாள்.

கோபாலன் அந்த அறையிருட்டில் தடவித் தடவி தட்டை அடைந்தான். நீர் கொட்டியிருந்த சோற்றை தட்டில் சரித்தான். மோரைக் கவிழ்த்து இரண்டு கவளம் பிசைந்து சாப்பிட்டான். அழுத்திப் பிசைந்து தின்னும் போது விரல்கள் வலித்தன. முதுகு எரிந்தது. நெற்றியும் பின் மண்டையும், உதடுகளும் மீண்டும் வலியில் துடித்தன.

இது என்ன உணவு? நீரும், சோறும், மோரும் எனக்கென்ன ஆயிற்று? மிலிட்டரி ஹோட்டல் பிரியாணி கூட மாமிசம் விலக்கி, அருவருப்பைத் தாண்டி தின்ற சோறு கூட உத்தமமாயிருந்ததே. இப்படிப் பிச்சைக்காரனாய் பிறர் சலித்துப் போட்ட உணவாய் தின்கிறேனே, போய் விடலாமா? நேரே போய் பெருமாள் காலில் விழுந்து விடலாமா? இனி ஒரு அடிகூட தாங்க மாட்டேன் என்று சொல்லி அழலாமா இப்படி சாதம்கூட பிசைய முடியாம அடிவாங்கி, பயத்தில் அலைந்து சிநேகிதமாய் உள்ளவர்களைக் கலவரப் படுத்தி, இத்தனைக்கும் யார் காரணம்? பெருமாளா? ரங்கசுவாமியா, கட்சி காரியக் கமிட்டியா? நானா தொழிலாளிகளா? பொது ஜனமா? யாராய் இருந்தால் என்ன? இனி மறுபடி கூட்டம் சேர்க்க முடியுமா? ஊர்வலம் நடத்த முடியுமா? கூட்டம் போட முடியுமா? இன்னும் இரண்டு மாசம் தடையுத்தரவு இழுத்துக் கொண்டே போகும். இன்றோடு நூறாவது நாள் என்று செய்திவரும் தாங்குவானா? தலைவரே என்று கூப்பிடுவானா?

அடிதாங்கறவன்தான் தடி எடுக்கணும் என்று டெஸ்பேட்ச் நாராயணசுவாமி அய்யர் பொத்தென்று போட்டு விட்டுப் போனார்? ஒன்று நடப்பதற்குமுன் அதன் விளைவைத் தெரிவித்துவிட்டுப் போனார்? இது

விவேகமா? நாராயணசுவாமி விவேகியா? அடிவாங்கி மனம் ஒடிந்து தவிக்கிற நான் புத்திசாலியா?

''தொட்டுக்கறதுக்கு ஏதாவது வேணுமா?''—பின்னால் சாவித்திரி குரல் கேட்டது. ''சாப்பிடவேயில்லையே மனசு வேதனையா?'' —இருட்டில் குரல் பரிவோடு விழுந்தது.

''இல்லை... வேண்டாம். சாப்டுண்டேயிருக்கேன்.''

''தட்டு அசையற சத்தமே கேட்கலையேன்னு எழுந்து வந்தேன்.''

''யம்மா, அறைக்குள் தாழிட்டுக் கொண்டாலும் உன் மனசும் புத்தியும் இங்கேதான் இருக்கிறதா? அசையாத தட்டை வைத்து ஆள் மனசைத் தெரிஞ்சுக்க முடியுமா? சாவித்திரி நீ யார், பிரம்மராட்சஸியா? கோபாலன் மனசுக்குள் வியந்தான்.

''நாரத்தைத் துண்டு இருக்கு, போடட்டுமா'' உள்ளே நகர்ந்து பாட்டில் அசையாமல் எடுத்து புடவையால் மூடியை சப்தமில்லாமல் அழுத்தித் திறந்து இரண்டு துண்டு உப்பு நாரத்தை தட்டில் விழுந்தது.

கடவுளே இந்த விதலைப் பெண்ணைத் தாங்கவிடாமல் வேதனைப் படுத்துகிறேனோ?

''நான் விடிந்ததுமே வேற இடம் போயிடறேன்.''

''எங்கே?''

''எங்காயனும், ஊர் தாண்டிப் போயிடணும்.''

''ஏன்?''

''உங்களுக்குச் சிரமம். நான் மாட்டிண்டா உங்களுக்குக் கஷ்டம் அவமானம்.''

''வந்திருக்கப் படாது.''



''வாஸ்தவம். வேறு வழியில்லை. பசி, உடம்பு முழுக்க வலி—எங்காவது சித்தப்படுத்து தூங்கணும்னு பட்டுது. ரகஸியமா, பாதுகாப்பா இடம் வேணும்னு நினைச்சப்போ உங்க ஞாபகம் வந்தது. இப்போ இதுவும் ரகஸியமில்லாம போயிடுத்து.''

''அப்படியா?''

''ரமேஷ் சின்னப் பையன், யாருக்காவது முன்னாடி வலியப் போய் சொல்லிடலாம். பெருமையா நினைச்சு பேசிடலாம்.''

''சாப்பிடுங்கோ.''

''போறும்.''

''பரவால்லை. சாப்டுங்கோ. அவன் இன்னும் குழந்தையில்லை. இந்த வீட்டுக்குப் பெரிய புள்ளை. ஹெட் ஆப் தி பேமிலி. அவனுக்குத் தெரிஞ்சுதான் ஆகணும்.''

''இந்தப் பதிமூணு வயசு குழந்தையா ஹெட் ஆப் தி பேமிலி.''

''பின்ன நானா? நாலு வருஷம் கழிச்சு, நீ ஏன் அவரைக் கூப்பிட்டு ரகஸியமா வச்சிண்டேங்கறது இப்பத்தான் புரியறதுன்னு அவன் சொல்லிட்டா நான் என்ன பண்ணுவேன்?''

''ஐயோ அப்படியெல்லாம் ஒண்ணுமில்லை—நான் பசி தாங்காம.''

''ஸுட். குழந்தைகள் முழிச்சண்டா நாளைக்கு பள்ளிக்கூடம் போறதுக்குக் கஷ்டப்படும். சீக்கிரம் சாப்பிடுங்கோ.''

கோபாலன் சோற்றுக் கையோடு தலையில் அடித்து கொண்டான். எப்பேர்ப்பட்ட தவறு. எவ்வளவு சுலபமாய் நிஜத்தைச் சொல்கிறான் இவள். இதெல்லாம் ஏன் உரைக்காமல் போயிற்று? கட்சி, காரியாலயம் எம்.எல்.ஏ. வீட்டு கார்ஷெட் உதவித் தலைவர் வீடு... நோ. ஒரு க்ஷணம்கூட இங்கே இருக்கக் கூடாது. உதறி

எழுந்தபோது சாவித்திரி எதிரே வந்து நின்றாள்.

"இப்பப் போறதும் தப்பு. என் புள்ளை எழுந்ததும் சொல்லிண்டு போங்கோ. விடிஞ்சதும் அவன் உங்களைத் தேடுவான். காணோம்னா அந்தக் குழந்தை சந்தேகப் படுவான். குழந்தைகளுக்குப் பெரியவாளைப் பற்றி சந்தேகம் வரப்படாது. சாப்பிடுங்கோ."

கோபாலன் மீண்டும் அமர்ந்து பிடிப்பிடியாகப் பிசைந்து மொத்த சாதத்தையும் சாப்பிட்டான். ஜலம் குடித்தான். கையலம்பினான்.

"ஸ்டோர் ரூம் எது?"

கோபாலன் கண் விழித்த போது சின்னதாய் ஒரு வெய்யில் துண்டு மார் மீது உட்கார்ந்து கொண்டிருந்தது.

முழங்கை ஊன்றி நிமிர்ந்த போது வலிவு இல்லாமல் பொத்தென்று உடம்பு விழுந்தது. பின் மண்டையும் நெற்றியும் வலிக்கத் துவங்கின.

ராம ராம ராமாயனுத...இனிய குரலில் ரேடியோ கேட்டது. ஈரத்துணியை உதறுகிற சப்தம். பிறகு, சைக்கிள் மணி ஓசை, துவரம் பருப்பு வறுபடும் வாசனை, இரும்புச் சட்டியும், கரண்டியும் மோதுகிற ஒலி, மெத்து மெத்தென்று சாவித்திரி நடக்கும் சப்தம். மெல்லத்தலையைத் திருப்பி அறையைச் சுற்றி நோட்டமிட்டான். ஒருபெரிய மரபீரோ, பரண்கள், டப்பாக்கள், சுவரோரம் ஒரு சைக்கிள், சைக்கிளுக்குக் கீழே பெரிய லெதர் ஷு சைக்கிளில் மாட்டியபடி ஒரு பை, வெளியே தெரியும் எவர் சில்வர் டிபன் பாக்ஸ்

கணேசனின் வீடு. என் இனிய நண்பனின் வீடு. அம்மா எவ்வளவு அருமையான தூக்கம். எத்தனை நாளாயிற்று இப்படித் தூங்கி? மணி பத்து இருக்குமா? இன்னும் நான் கைது செய்யப்படவில்லை. விடிந்து இவ்வளவு வெளிச்சம் வந்ததும் எனக்கு ஆபத்து ஒன்றும் வரவில்லை. இது பாதுகாப்பான இடம்தான். அந்தப் பையன் பேசாமல் இருந்துவிட்டால் இன்னும் சில நாட்கள் இங்கேயே பயமின்றி இருக்கலாம் சுப்பையாவோடு தொடர்பு கொள்ளலாம் எல்லாவற்றையும் முடித்துவிடு என்று அவனைச் சொல்லலாம். அவனைத் தலைவனாக்கி விட்டு நான் போய் போலீஸிடம் சரண் அடைந்து விடலாம். தொழிலாளிகள் வேலைக்குப்போன பிறகு நிம்மதியாய் ஜெயிலுக்குப் போகலாம் நான்யாட்டி அடிபடுவது இருக்கட்டும். இந்தப் போராட்டம்வேறொரு காலக் கட்டத்தில் சரியானபடி வளர வகை செய்ய வேண்டும். இது முக்கியம் ஒரு பத்து நாள் தலைமறைவாவது அவசியம்.



வெளிக்கதவுப் பூட்டு திறந்தது. சாவித்திரி லேசாய் கதவைத் திறந்து "குட்மார்னிங்" என்றாள்.

கோபாலன் மிருதுவாய் புன்னகை செய்து, அவளை நமஸ்கரித்தான்.

## 22

கதவுத் தாழ்ப்பாளை ஓசையில்லாமல் திறந்து விட்டு, சியாமளி தண்டபாணியைப் பார்த்தாள். இரண்டு கைகளையும் பின்பக்கம் போட்டபடி, காலை அகட்டியபடி வாயை மெலிதாய் திறந்தபடி, தண்டபாணி தூங்கிக் கொண்டிருந்தான். குழந்தை அவனுக்கு நெருக்கமாய் குப்புறப் படுத்துக் கொண்டிருந்தாள். வெளியே வந்து கதவைச் சாத்திவிட்டு, இருட்டில் கண் பழகும்வரை மௌனமாய் நின்றாள். நகர்ந்து சொம்பை எடுத்து, சிமிண்டு தொட்டியில் முக்கி பின் பக்கம் போனாள். இது நாலாவது தடவை. வயிறு முறுக்கிப் பிழிந்து வேதனை காட்டுகிறது. அரைமணி முன் இருந்த வேதனை இப்போது இல்லை. ஆனாலும் வெளியே போய், பின்பக்க துவைக்கும் கல்லில் வெறுமனே உட்கரார்ந்தால் தேவலை போல் இருந்தது.

சொம்பை. ஜலத்தோடு கீழே வைத்துவிட்டுத் துவைக்கிற கல்லில் குந்திட்டு அமர்ந்தான். சாயங்கால வெந்நீர் அடுப்பு மாதிரி கல் மெலிசான சூட்டோடு பின் புறத்தை உறுத்திற்று. தோள்கள் மீது குளுமையாய் காற்று தவழ்ந்தது. கூந்தலைக் கலைத்தது. மேலே வானம் முழுவதும் நட்சத்திரங்கள் மிமிட்டின. தென்னைகள் அலைந்தன. நிறம் தெரியாத நிறத்தில் நீண்ட நீர்ப்பறவை விண்ணென்று நகர்ந்தது. 'ஓ'வென்று அடித்துக் கொண்டு அழுதால் வேதனை குறையும் போல தோன்றிற்று ஆனால் அழ முடியவில்லை. மன்னி மடக்கின போது குமுறிக் குமுறி அழுத பிறகு சகலமும் வெறுத்துப் போயிற்று. தான் தோற்றுப்போய் விட்டோம் என்கிற வேதனையில் வந்த அழுகை மடிந்து போயிற்று. வெறும் பாரம். இனம் புரியாத தவிப்பு. குழப்பம் அழுத்த ஒரே நேரத்தில் ஆயிரம் யோசனைகள் மண்டையில் ஏறிக் கலவரப்படுத்தின, சங்கரன் என்ன ஆனான் என்று தெரிந்தால் பாதி பாரம் குறையும்-குறையலாம்.

நினைத்தபடி, திட்டமிட்டபடி எல்லாம் சரியாய் நடந்திருந்தால் இப்போது நானும் சங்கரனும் என்ன செய்து கொண்டிருப்போம்?

"காலைத் தொங்கப் போட்டு உட்காருங்கோ அரை மணி நான் உங்க மடில படுத்துக்கப்போறேன்" புடவையைச் சுற்று, தோளைப் போர்த்திக் கொண்டு உடம்பை குறுக்கிக்கொண்டு, திடமான கால்களில் கன்னம் பதித்து, தன்னைத் தானே தூங்கு என்று கட்டளையிட்டுக் கொண்டு, ஓடும் ரயிலின் ஆட்டத்திற்கேற்ப அசைந்து மார்பில் பதிந்த அவன் கைகளை எடுத்து கன்னத்தில் வைத்துக்கொண்டு, பற்களால் அவன் விரல்களை மெல்லக் கடித்து நோகப் பண்ணி, வயிற்றை மடித்து தூங்குகிறேனா என்று குனிந்து பார்க்கும் அவன் முகத்தை க்ஷணநேரம் அரைக்கண்ணால் பார்த்துவிட்டு, மல்லாக்கத் திரும்பி, இப்போது கன்னத்தை அவன வயிற்றோடு ஒட்டி, அவன் கையையெடுத்துத் தன் இடுப்பில் அழுத்தி இந்த நிலையும் ஒட்டாமல், மறுபடி புரண்டு, மூக்கை உதட்டை கண்களை அவன் உடம்போடு ஒட்டி. இருட்டடித்துக் கொண்டு 'முதுகைத் தடவி விடுங்கோ' என்று முணுமுணுத்து, கொஞ்ச நேரம் அந்தச் சுகமும் தூக்கம் கொண்டு வந்து சேர்க்காமல், எழுந்து உட்கார்ந்து, 'உங்களுக்குத் தூக்கம் வரலையா சங்கர்,' என்று கேட்க, வாய்விட்டுச் சிரிக்கிறவனைப் பார்த்து வெட்கப்பட்டு..."



'இப்ப எந்த ஸ்டேஷன் தாண்டினோம்? எப்ப இது கோயம்புத்தூர் போகும்?' என்று வெட்டிக் கேள்வியாய் கேட்டுக் கொண்டு...

மறுபடியும் வானம் பார்க்க நட்சத்திரங்கள் மிமிட்டிக் கொண்டு நின்றன.

சங்கரா, இந்த நட்சத்திரங்களை நீயும் பார்க்கிறாயா? நான் பார்க்கிற அதே கூட்டத்தை நீயும் பார்க்கிறாயா? இதில் எந்த நட்சத்திரத்தின் கீழ் இருக்கிறாய்? என்ன செய்து கொண்டிருக்கிறாய்? சங்கரா... என் பிரிய சங்கரா, என் இனிய சங்கரா, என் அன்பு சங்கரா, பொசுபொசுவென்று துக்கம் பொங்குகிறதே தவிர இப்பவும் அழ முடியவில்லை.

'ஹோ' என்று ஒரு வெறுமைதான் நிற்கிறது. நிற்க முடியாமல், நடக்க முடியாமல், யோசிக்க முடியாமல், துவண்டு சரிந்து, பலமெல்லாம் இழந்து, சின்ன ஓட்டை இந்த துவைக்கிற கல்லில் இருந்தால் அதனுள் புகுந்து கல்லோடு கல்லாய் மாறிவிட வேண்டும் மன்னி வலியில் அரற்றுவது கேட்கிறது. 'அப்பா, என் ராஜா' என்று புலம்புகிறாள். அண்ணா விளக்குப் போடுகிறார். பளீரென்று வெளிச்சத் துளி முற்றமெங்கும் பரவி, இருட்டை நசுக்கப் பார்க்கிறது. ஆனால் கொல்லைப் பக்கம் இன்னும் இருட்டுத்தான்.

தன் போர்ஷன் தாழ்ப்பாள் விலகும் ஒலி, எழுந்திட்டாரோ? தண்டபாணி கண்ணைக் கசக்கி, முற்றத்துக்கு நடுவே வெளிச்சத்தில் நிற்பது தெரிகிறது.

''ஒண்ணுமில்லே, வலி வேதனை...'' அண்ணாவின் குரல்.

''சியாமளியைப் பார்த்தேளா?'' வரும் தண்டபாணியின் விசாரணை.

''இல்லியே''—அண்ணாவின் பதில்.

''பின் பக்கம் போய்ட்டாளோ?''

இருட்டில் கையைப் பரப்பி, குருடன் மாதிரி மெல்ல மெல்ல தன்னை நோக்கி வரும் தண்டபாணி.

சியாமளி மூச்சு விடாமல் மௌனமாய் உட்கார்ந்திருந்தாள்.

''சியாமளி...''

பூனை மாதிரி குரல் தண்டபாணிக்கு

பின்னலை முன்னுக்குப் போட்டால் கண் தெரியாத இருட்டு தூரத்து முற்ற வெளிச்சம் மட்டும் தண்டபாணியை நிழலாய் காட்டிற்று

நின்று. இருட்டைப் பழக்கப்படுத்திக் கொண்டு முன்னேற வேண்டும் என்று தெரியவில்லையே. குத்து மதிப்பாய் காலை வைத்து ஒவ்வொரு அடிக்கும் பயந்து அசிங்கமாய் கைகளைப் பரப்பி... இதையெல்லாம் கத்துக் கொடுக்கவேயில்லையா யாரும் உனக்கு? லேசாய் பரிதாபம் பொங்கிற்று.

''சியாமளி''

கொல்லைக் கதவைப் பிடித்துக் கொண்டு வெளியே துழாவி, அங்கேயே நின்று, பயத்துடன் மறுபடி. ''சியாமளி.''

''என்ன?'' சியாமளி பதில் குரல் கொடுத்தாள்.

தண்டபாணி உடம்பு குலுங்கிப் போடுவது தெரிந்தது.

''நீ எங்க இருக்கே?''



''ம்ம் நரகத்தில்—'' எகிறின வார்த்தையை நாக்கை மடித்துக் கடித்து நிறுத்தினாள்.

சொம்பு ஜலத்தை எடுத்துக் காலில் ஊற்றிக் கொண்டாள்.

ஈரத்தில் மெட்டி கொச்சையாய் சிணுங்கிற்று.

''பின் பக்கம் போய்ட்டு வர இத்தனை நேரமா''

தண்டபாணி குரலில் கோபம் தெரிந்தது. இந்தக் கோபம் பயத்தில் விளைந்த கோபம். இருட்டில் தன்னைக் கை பரப்பி நடக்கவிட்டாளே என்கிற கோபம். பெண்டாட்டி மேல் மட்டும் வரும் ஆண்பிள்ளை கோபம் சுயபரிதாபக் கோபம்.

சங்கரனோடு ரயில் ஏறியிருந்தால் உன்னைப் பிரிந்து எத்தனை நேரமாயிருக்கும் தெரியுமா? ஆறுமணி நேரம் ஆயிருக்கும். உன் முகமே மறந்து போயிருக்கும்...உன் வாசனையே ஒழிந்து போயிருக்கும்.

''நகருங்கோ''

அருகில் நின்று அதட்டினபோது சொல் வேகத்திற்கேற்றபடி பளிச்சென்று நகரும் தண்டபாணி.

மடமடவென்று நகர்ந்து, முற்ற வெளிச்சத்தில் நுழைந்து, வலப்பக்கம் திரும்ப, அண்ணா மன்னியைக் கவலையோடு பார்த்துக் கொண்டிருப்பது தெரிந்தது.

''ஜுரம் இருக்கா பாரும்மா?''—தலையைத் திரும்பி அண்ணா சியாவளியைக் கூப்பிட்டார்.

ஈரக் கையைத் துடைத்துக் கொண்டு, சியாமளி மன்னியின் நெற்றில், நெஞ்சில் கை வைத்துப் பார்த்தாள். ஜுரம் விட்டிருந்தது. தலைக்கு அருகே இருந்த துண்டை எடுத்து முகத்தைத் துடைத்து கவனமாய் நெஞ்சு பக்க வியர்வையை ஒற்றி, புடவையைச் சரி பண்ணி. மறுபடி தன் போர்ஷனுக்குள் நுழைந்த போது, தண்டபாணிவிளக்கு சுவிட்சில் கைவைத்தபடி நின்றிருந்தான். சியாமளி உள்ளே நுழைந்து, கதவைத் தாழிட்டதும் விளக்கை அணைத்தான். இருட்டு மறுபடியும் கண்

ணைத் தாக்கிற்று, சியாமளி கதவருகே ஒட்டி நின்றாள். தண்டபாணி அசைவது கேட்டது. நெடிய மூச்சு தோள் மீது விழுந்தது. தலையைத் தொடவேண்டும் என்று விரும்பிய தண்டபாணியின் கைகள் காதோரம் பட்டு அலைந்து இடுப்பைத் தொட்டன. வலக்கையால் இடுப்பை இறுக்கி, அவளைத் தன்பால் திருப்பி அசிங்கமாய் குனிந்து உடம்பைப் பொருத்திக் கொள்ள முயற்சித்தபோது, சியாமளி கோபத்தின் உச்சிக்குப் பறந்தாள்.

''விடு என்னை''—வேகத்துடன் திமிறினாள் தண்டபாணி தளரவிட்டான்.

''ஏன் சியாமளி?''

''ஏன் சியாமளி...''

சியாமளி பளிச்சென்று தாழ்ப்பாள் விலக்கி, கதவை அகலத் திறந்தாள். அவனைத் தாண்டி விளக்கு சுவிட்சுக்குப் போக யத்தனித்தாள். தண்டபாணி, உயர்ந்த அவள் வலக்கையை இரண்டு கைகளாலும் பிடித்துக் கொண்டான்.

''என்னை ஏன் மதிக்கவே மாட்டேங்கற சியாமளி. வரவர ஏன் இப்படி தூக்கியெறிஞ்சு பேசற!'' சியாமளி பதில் சொல்லாது மூச்சிரைத்துக் கொண்டு நின்றாள்

''நான் ஒரு தப்பும் பண்ணலையே சியாமளி. ஏன் கோவம் என்மேலே. அன்னிக்கு நான் அடிச்சது தப்பு தான். அதுக்காக மன்னிப்புக் கேட்டுக்கறேன். இனிமே சத்தியமா உன்னை அடிக்க மாட்டேன் சியாமளி. உன்னைக்கோவிச்சுக்க மாட்டேன். ப்ளீஸ்...சியாமளி இப்படி பிடிச்சுத் தள்ளினா நான் எங்கே போவேன்.''

ஒரு ஆணின் கேவலமான முகம் தெரியும் நேரம் இரவு தானா? விளக்கு அணைந்த பிறகு கெஞ்சுவதும் வெளிச்சம் வந்தபோது கோபப்படுவதும் உங்களுடைய இயல்பா இது கம்பீரமாய் செய்ய வேண்டிய காரியம் என்று எந்த தகப்பனும் தன் மகனுக்குச் சொல்லித்தர மாட்டானா? ஒருவேளை உலகத்திலுள்ள தகப்பன் அத்தனைபேரும் இதே மாதிரி அல்பத்தனம் உள்ளவன் தானா?

''பத்து நாளா நான் சரியாவே தூங்கலை சியாமளி. என்னவோ வேதனை பொங்கறது, பார்க்குக்குக்கூட



வந்தியானா மனசு விட்டு மன்னிப்புக் கேட்கலாம்னு நினைச்சேன். நீ வரவே மாட்டேனுட்டே. இப்ப மன்னிப்பு கேட்கறேன் சியாமளி, நான் உன்னை அடிக்கவே மாட்டேன் சத்தியமா உன்னைக் கோவிச்சுக்கவே மாட்டேன். சரிதானே சியாமளி.''

சியாமளி மிகுந்த அயர்ச்சியோடு சுவர்மீது சரிந்தாள். பலமெல்லாம் தரையோடு போவதுபோல உணர்ந்தாள். தண்டபாணி இவள் கைகளை விடுவித்து, கதவைத் தாழிட்டான். சுவர்மீது சாய்ந்து கொண்டிருக்கிற சியாமளியின் தோளைத் தொட்டான்.

சங்கரா. சங்கரா. இந்த சித்ரவதையிலேர்ந்து எனக்கு விடுதலையே கிடையாதா சங்கரா? நான் மீளவே முடியாதா சங்கரா.

புடைவை சரிய மடியில் கிடந்தவளைப் போய் தூங்குன்னு சொல்ல உன்னால் முடிஞ்சுதே. ஏன் மத்தவாளுக்குத் தெரியலை. அசிங்கமா பொருத்திக்க ஆசைபடாம 'மாஜானகி' பாட உனக்கு மட்டும் எப்படித் தோணித்து நீயா கத்துண்டயா. யாராவது சொன்னாளா? புஸ்தகத்துல படிச்சியா, இல்லை அந்த இயல்பே உன்னுதா, சங்கரா, சங்கரா எங்க தவிக்கறேள்? எங்க அலையறேள்?

சியாமளி உடைந்தாள். ரொம்ப நேரம் வருமோ வருமோ என்று தவித்த அழுகை இப்போது வயிற்றிலிருந்து புரண்டு, நெஞ்சேறி, கேவலாய் மாறி ஹோ, என்று பொங்கியது. தண்டபாணி அவள் முதுகைத் தட்டிக் கொடுத்தான்.

''வேண்டாம், வேண்டாம். போனா போறது இனிமே பாரேன்...நான் உன்கூட சண்டையே போட மாட்டேன். பாரேன், உனக்குப் பிடிச்ச மாதிரி நடந்துகறேன் பாரேன்.''

அவன் பேசப் பேச சியாமளி உடைந்து நொறுங்கி சுக்கல் சுக்கலாகி குலுங்கி அழுதாள். தண்டபாணி அவளைப் படுக்கைக்குக் கைத்தாங்கலாக அழைத்து வந்து மெல்லச் சாய்த்து ரவிக்கை பட்டன்களை இருட்டில்

துழாவினபோது எந்த எதிர்ப்பும் காட்டாமல் இரண்டு கைகளையும் பின் பக்கம் போட்டு ஆணி மாதிரி கிடந்தான்.

சங்கரன் பெட்டியை வீட்டு வாசற்படியில் வைத்து விட்டுக் கம்பிகளுடே யார் நடமாட்டமாவது தெரிகிறதா என்று உன்னிப்பாய் கவனிக்க ஆரம்பித்தான.

# 23

**அ**கலிகை கல்லாய் மாறிப் போனாளாம். முனிவர் சாபமிட்டதும் பாறையாய் மாறிப் போனாளாம். கல்லாய் மாறுவது என்றால் என்ன? இமைப் பொழுதில் ஒரு பெண்ணின் உருவம் மூடிப் போய் பெரிய பாறையாய் மாறிப் போவதா? இல்லை உடல் வடிவுகளோட சிலையாய் ஆவதா? இது எவ்விதம் முடியும்? உண்மையில் அந்த அகலிகைக் கதை சொல்லும் விஷயம் என்ன?

முனிவன் சாபமிடவில்லை அகலிகையே தன்னைத் தொட்டது யார் என்று தெரிந்ததும் பதறி, மனம் தவித்து சட்டென்று இயக்கமற்று உணர்ச்சி மொத்தமும் புத்தியால் நிறுத்திக் கல்லானாள் என்று யாரோ சொல்லக் கேள்விப்பட்டிருக்கேன். தன்னைக் கல்லாக்கிக் கொள்ள ஒரு பெண்ணால் முடியுமா? கல்லாக்கிக் கொள்வது என்றால் என்ன? என்னை யார் வேண்டுமானாலும் எது வேண்டுமானாலும் செய்து கொள்ளுங்கள், நான் எதற்கும் சலனப்படாமல் என்னுள் என் வாழ்க்கையை என்னோடு வாழ்ந்து கொள்கிறேன் என்றா அர்த்தம்? அகலிகை செய்தது அவ்விதம் தானா?

இதோ இங்கே நடந்து கொண்டிருக்கும் காரியமும் இவ்விதம்தானா? அகலிகை பரபுருஷன் தொட்டதால் கல்லானாள். நான் பரபுருஷனை நினைத்து என் புருஷன் இயக்கத்துக் கல்லாகிறேன். புருஷன் என்பது யார்? தொட்டுத் தாலி கட்டி அக்னி வலம் வந்து பாலிகை கரைத்து என் பெயருக்குப் பின்னால் ஈஷிக் கொள்கிற இன்னொரு பெயரா? என்னைக் கேட்காமல் என் விருப்பம் அறியாமல், என் மனம் காதலிக்காமல் நான் கழுத்து நீட்டிய நிர்பந்தமா?



ஆண்கள் ஏன் இப்படிப் பெண்ணுக்குப் பேயாய்த் தவிக்கிறார்கள். பெண் விருப்பம் தெரியாயல், பெண் மனசும் புரியாமல் கடையில் வாங்கின கீரைக்கட்டாய் மெல்லிசு நார் கட்டி எடுத்து வந்து அலசி, கோதி இப்படி அறுத்து எறிகிறார்கள்.

நான் கல்லாய்ப் படுத்திருக்கிறேன் என்பது உனக்குத் தெரியவில்லையா. நான் இயக்கமில்லாமல் கிடக்கிறது உனக்குப் புரியவில்லையா? நான் வெறும் தாவரம் தானா?

என்னைப் படுக்கையில் சாய்க்கும் முன் உனக்கு விருப்பம் தானா என்று எவனைக் கேளேன். ஏன் இப்படி அழுதேன் என்று யோசனை பண்ணேன். உனக்குள்ளாக கேள்வி கேளேன். நீயாக, எதையாவது என் அழுகைக்குக் காரணம் பண்ணிக் கொண்டு, பொட்டை சமாதானம் பேசி உன் திமிரை வெளியே இரைக்கிற அல்பத்தனத்தை நிறுத்தேன்.

என்னைப் புரிந்து கொள் என் கணவனே. என்னை யார் என்று தேடித்தெரிந்து கொள்ளேன் என் புருஷனே.

என்னைத் தெரிந்து கொள் என்று கதறுகிறேனே நான் உன்னைத் தெரிந்து கொண்டிருக்கிறேனா? உன்னைத் தெரிகிறது எனக்கு. உன் அம்மா, என்னை அழகு என்று சொன்னால் தான் உனக்கு அழகாய்ப் பட்டவள்' ஊர் என்னைக் கெட்டிக்காரி என்று சொன்னதால் நான் உனக்குக் கெட்டிக்காரியானவள். உனக்கென்று ரஸனை இல்லை. உனக்கென்று தனித்த புத்தியில்லை. கூட்டத்தோடு கூட்டமாய்ப் போகிற ஜந்து நீ. குழந்தை பிறந்ததும் சாக்லேட் கொடுக்கிற சம்பிரதாயம்தான் தெரியும் உனக்கு. குழந்தை என்பது ஒரு சந்தோஷம். கர்வம் என்பது தெரியுமா? இயற்கை கொடுத்த பரிசு என்று புரியுமா? குழந்தை என்னை மாதிரி இருக்கா என்று வெளிச்சத்தில் கொண்டு போய் நாலுபேரிடம் காட்டி எப்படிக் கேட்க முடிந்தது உன்னால், சுமந்து சிரமப்பட்டு பெற்ற எனக்கு ஒரு தேங்க்யூ சொல்லத் தெரியவில்லையே உனக்கு? இவனுக்கு

என்ன பேர் வைக்கணும் என்று என்னைக் கேட்கத் தோணலையே உனக்கு. எங்க அம்மா பேர் வெச்சிட்டேன் என்று எச்சில் தெறிக்க கர்வப்பட்டாயே இது உன் ப்ராஜெக்ட். உன் ப்ராடெக்ட்டுக்கு உன் அம்மா பெயர், நான் யார்? மெஷினா? பெத்துத் தள்ளுகிற யந்திரமா?

நான் உனக்கு சமைக்கிற மிஷின் துணி தோய்க்கிற மிஷின் சாயங்காலம் கால் பிடித்துவிடுகிற மிஷின், ராத்திரியில் உன் சொல்படி அகட்டிப் படுத்துக்கொள்கிற மிஷின். மாத்திரை போட்டுண்டிருக்கையா என்று கேட்டுத்தானே பனியனை அவிழ்க்கத் தோன்றது உனக்கு. உன் சுகத்துக்கு நான் மாத்திரை போட்டுக் கொள்கிற கேவலம் எத்தனை நாள் என் புருஷனே.

சியாமளிக்கு மார் வலித்தது. நெற்றிப் பொட்டில் வலி மின்னிற்று. கழுத்துப் பக்கம் ரத்தம் கட்டின மாதிரி நோவு எடுத்தது. குப்பென்று வியர்வை பொங்கி, கண்கள் சொருகி, சாமியாட்டம் ஆடி ஓய்ந்த பூசாரி மாதிரி அலுப்போடு மேலே கிடக்கிற தண்டபாணியைப் பார்த்து "ம்ம்ம்..."

தண்டபாணி தள்ளாடி எழுந்து நின்றான், கோரம் தாங்காமல் இருக்க சியாமளி கண்களை மூடிக்கொண்டாள். ப்ளிச்சென்று எழுந்து சேலையை வாரி மேலே போட்டுக் கொண்டு, வெளிக் கதவைத் திறந்து செம்பை சிமிண்ட் தொட்டியில் முக்கி பின்பக்கம் நடக்கையில் ஏதோ ஒரு உணர்வு பிடரியைத் தாக்க. திரும்பி வாசற் கதவைப் பார்த்தாள்.

சங்கரன் வாசற் கதவுக் கம்பிகளைப் பிடித்தபடி வெளியே நின்றுகொண்டிருந்தான். சொம்பு மழுக்கென்று நழுவியது. இடது கையால் சட்டென சொம்பைப் பிடித்து இது நிஜமா பிரமையா என்று மறுபடி உற்றுப் பார்த்தாள். சங்கரன் கைகளை விட்டுத் தாழ்ப்பாளைத் தேடிக் கொண்டிருந்தான். சியாமளி திரும்பி தன் போர்ஷனைப் பார்த்தாள். தண்டபாணி சுருண்டு



படுத்துக் கொண்டிருந்தான். தன் போர்ஷன் கதவை மூடி விட்டு மன்னியைப் பார்த்தாள். சின்னச் சின்ன முனகலோடு மன்னி சியாமளிக்குத் தன் முதுகைக் காட்டியபடி தூங்கிக்கொண்டிருந்தாள். சொம்பை சப்தமெழாமல் கீழே வைத்து விட்டுத் தலைதெறிக்க வாசற்படியை நோக்கி ஓடினாள். கம்பிகளுக்கு இடையே இருந்த சங்கரன் கைகளைப் பற்றிக் கொண்டாள். 'சங்கர்' என்று காதலுடன் கூப்பிட்டாள்.

சங்கரன் கைகளை விடுவித்துக் கொண்டான். மெல்ல பின்பக்கம் நகர்ந்து பெட்டியைக் கையில் எடுத்துக் கொண்டு அசையாமல் நின்றான். சியாமளி சப்தம் எழாமல் கதவைத் திறந்தாள். அவன் உள்ளே வரட்டும் என்று விலகி நின்றாள். சங்கரன் தெருவின் இருபுறமும் பார்த்துவிட்டுப் பெட்டியை மறுபடி கீழே வைத்தான் உதட்டைக் கடித்துக்கொண்டு வானத்தைப் பார்த்தான். இருட்டில் அவன் பெரிய விழிகள் நீரோடு பளபளத்துக் கிடப்பது தெரிந்தது.

"உள்ள வாங்களேன் சங்கர்."

"ஹூம்..."—சங்கரன் சின்னதாய் பொருமினான். "ரொம்ப அக்கறை சியாமளி உனக்கு. என்னைப் பைத்தியமா ஆக்கிப் பார்க்கறதுலே ரொம்ப அக்கறை உனக்கு."

"ஐயோ வாசல்ல வேண்டாம்."

"ஏன் சியாமளி வழக்கம் மாதிரி மாடி ரூம்லயே வச்சிக்கலாம்னு தோணிடுத்தா, அதான் வாசப்படி இறங்காம நிக்கறயா?"

"மன்னி கழுத்தில கயிறு மாட்டிண்டு தொங்கிட்டா சங்கர். கிளம்பற நேரத்துல மடக்கி பேயா உலுக்கி எடுத்துட்டா சங்கர். மன்னிக்கு சகலமும் தெரிஞ்சு போயிருக்கு. உங்களை மடக்கினா பெரிசாயிடும்னு என்னை மட்டும் மூலையில் மடக்கி—ஐயோ...அந்த இரண்டு மணி நேரமும் நரகம், நரகம் சங்கர். ப்ளீஸ் உள்ள வாங்களேன்."

"ஸோ மன்னி மடக்கிட்டா நீயும் சரின்னுட்டே. நா எங்க போனாலும் பெட்டியோட திரும்பி வருவேன். அப்ப பேசிக்கலாம்னு முடிவு பண்ணிட்டே. ரொம்ப தைரியம் சியாமளி உனக்கு. ஆம்பளைய புழுவா மதிக்கிற தைரியம்."

"சங்கர் ப்ளீஸ்."

"எதுக்கு ப்ளீஸ் சியாமளி. நான் இப்படி பேசக் கூடாதுன்னா? என்கிட்ட நீ எவ்வளவோ பேசியிருக்க சியாமளி. உள்ளங்கையில் வெச்சிதாங்கணும்னு கேட்டியே சியாமளி இப்படி உதறி வுட்டுட்டியே என்னை, நாயா அலைய வச்சுட்டியே வெளில."

"ஐயோ, தப்பு எங்கிட்ட இல்லே சங்கர்."

"கரெக்ட், என்கிட்டதான் தப்பு இருக்கு சியாமளி, கெட்டிக்கார பெண்ணோட வாழ்க்கை நடத்தறதுதான் சுகம்ன்னு நினைச்சது முதல் தப்பு. கெட்டிக்காரத் தனம்ன்னா அதுக்கு அர்த்தம், சுயநலத்தோட இருக்கறதுன்னு தெரியாதது இரண்டாவது தப்பு, சுயநலத்தோட இருக்கிறவாதான் சௌக்கியமா இருப்பான்னு தெரியாதது மூணாவது தப்பு."

"சரி, பேசியாச்சா. வாங்கோ போகலாம். இப்பவே போலாம், ஓடிப்போக வேண்டாம். நடந்தே போலாம். வெளியே போலாம், வாங்கோ." சியாமளி கதவைத் தாண்டி வெளியே வந்தாள்.

"இப்படி ரவிக்கை பட்டன்கூட போட்டுக்காமயா?"

சியாமளி சட்டென்று மார்பை மறைத்துக் கொண்டாள்.

"சங்கர்."

"ஸ்ஸு...இன்னொரு காரணம் சொல்லாதே சியாமளி. தண்டபாணி கேட்டான் என் புருஷன், தட்ட முடியலன்னு சொல்லாத. ஒருத்தன் நாய் .மாதிரி வெளிய தவிச்சுண்டுருப்பான்னு நினைப்புக்கூட இல்லாம... சியாமளி, சொல்லு நீ என்னை லவ் பண்ணது நிஜமா. நான் ஆத்திரப்பட்டுக் கேட்கலை. அவன்கூட நீ எப்படிப்



படுத்துக்கலாம்னு கேட்கலை. இப்போ இந்த க்ஷணம் மனசுல உன்னைப் பத்தி ஒரு அசிங்கம் எனக்குப்படறது அது என்னன்னு புரியாம கேட்கறேன். இது நியாயமா சியாமளி. இப்படி நான் உன்னைக் கேட்கிறதுகூட அசிங்கம்தான். ஆனா நம்ம ரெண்டு பேருக்கும் அசிங்கம் பழக்கமாயுடுத்தே. அதனால கேட்கிறேன். வெட்கமில்லாம சொல்லு. நான் வெளியே, வெட்ட வெளில தனியா தவிப்பேன்னு உனக்குத் தெரியாதா சியாமளி?"

"வர முடியாம போய்டுத்து சங்கர்...?"

"ஏன்?"

"எல்லாத்தையும் வாசல்லையே நின்று கேட்டா நான் என்ன பண்ணுவேன்?"

"எனக்கு உள்ளே வரப் பிடிக்கலை சியாமளி."

"சங்கர் ப்ளீஸ்."

"கொஞ்சினது போதும் சியாமளி."

பளீரென்று முழங்கால் சில் அடி வாங்கின வலியாய்—வலிக்குப் பின் தொடரும் ரௌத்திரமாய் ஒரு வேதனை சியாமளியைப் பிடித்து ஆட்டிற்று. விவரம் புரியாமல் விரும்பினவனும் கேவலப்படுத்துவது ஆத்திர மூட்டிற்று.

"சங்கர், தயவு செய்து உள்ளே வாங்கோ."

"இது பெரிய காயம் சியாமளி."

"மன்னி தடுத்து நிறுத்திட்டான்னு சொல்றேனே புரியலையா, கழுத்திலே கயிறு மாட்டிண்டு நடு ஹால்ல பளீர்ன்னு தொங்கி புறப்படறப்போ...இதை எப்படிச் சொல்றதுன்னே புரியலை சங்கர்."

"மன்னி உசிரோட இருக்காளா செத்துட்டாளா?"—சங்கரன் குரலை உயர்த்தி அதட்டினான்.

"சங்கர்" சியாமளி பதறினபடி அவன் வாயைப் பொத்த கைகளை உயர்த்தினாள்.

"உசிரோட இருக்கேம்பா." மன்னி பத்தடி தள்ளி ரேழிக் கதவில் சாய்ந்தபடி நின்றிருந்தாள்.

சங்கரன் தாக்கப்பட்டவன் மாதிரி அலைந்தான்.

"சியாமளி நீ உள்ளே போ. போய் தாப்பா போட்டுண்டு படு"—மன்னி சிரமத்துடன் பேசினாள்.

சியாமளி மெல்ல நிமிர்ந்து சங்கரனைப் பார்த்து விட்டு மன்னியைக் கடந்து உள்ளே போனாள். தன் போர்ஷன் விளிம்பில் நின்று திரும்பி இருவரையும் பார்த்தாள். மெல்லக் கதவைத் திறந்து உள்ளே நுழைந்து சாத்திக் கொண்டாள். சரிந்து கதவோரம் அமர்ந்தாள்.

"உள்ளே வா சங்கர்."

"......"

"உள்ளே வாப்பா." மன்னி தலையைச் சுற்றி கட்டு போட்டிருப்பதும் மருந்து நெடி வீசுவதையும் சங்கரனால் தெரிந்து கொள்ள முடிந்தது

நீ பண்றது தப்பு குழந்தே. அது மகாபாவம்.

"சங்கரா..." மன்னி குரல் தழதழத்தது தேம்பியது விசும்பி உதடு கோணி புரியாத சொற்றொடர்களுடன் அழுகை வெளிப்பட்டது.

"நீ என் புள்ளைடா. என் செல்வம்டா. என் மடில வளர்ந்தவன்டா. உன்னை உசிரோட கொடுக்கறதுக்கு என்னால முடியாதுடா. நீ பண்றது தப்புன்னு உனக்கு இப்பத் தெரியாது சங்கர், ஆனா ஒருநாள் தெரியும். பொம்மனாட்டி மனசு ரொம்ப நொய்மை சங்கர். ஐயோ பாவம்னு யாராவது சொன்னா இரண்டு தரம் ஹோன்னு அழத் தோன்ற மனசு அது. அழற பொம்மனாட்டிக் கிட்ட ஆம்பிளைக்கு எந்நேரமும் கம்பீரம் காட்டப் படாது சங்கர் ஆம்பிளைக்கு எந்நேரமும் கம்பீரம் வேணும் குழந்தை. தெரியாம பண்ணிட்டேன்னு பொம்மனாட்டி சொல்லலாம். ஆம்பிளை சொல்றது கேவலம் சங்கரா.

"நீ கோச்சுண்டு எங்கேயாவது போ. தடுக்கலை நான், இப்படி ஒரு காரியம் இனிமே பண்ணாதப்பா. மன்னியை அடிச்சுக் கொல்லணும்னு உனக்கு வெறி வரும் செய். ஆனா மன்னி செத்த பிறகுகூட இப்படி பண்ணா



டாதப்பா. பொம்மனாட்டிக்கு ஆம்பிளை புத்தி அடிக்கடி வரும். ஆம்பளைக்கு பொண் மனசு வரக் கூடாது சங்கரா சஞ்சலப் படப்படாது. அவன் மனசு சஞ்சலப்படற வாளை தட்டி சரியா இருன்னு சொல்லணும் குழந்தை போயிட்டு வாப்பா."

"போய் நாலு ஊர் சுத்திப் பாரு. நாலு பேரோட பேசிப் பாரு. கோவம் குறைஞ்ச பிறகு வா. தனியா நின்னு யோசனை பண்ணு. நான் உன்னைத் தடுக்கலை. தடுக்க எனக்குச் சக்தியில்லை. போயிட்டு வாடா கண்ணே. மன்னி காத்திண்டிருப்பேன் போய் நாலு இடம் சுத்து, மனசுமாறும். அப்புறம் வா மன்னிக்கும் அண்ணாவுக்கும் இது எவ்வளவு கஷ்டம் கொடுக்கும். எத்தனை பேர் கேவலப் படுத்துவான்னு யோசனை பண்ணு."

"உன்னை நாலு பேர் சொல்லுவான்னு என்னை மாத்திக்கச் சொல்றயா."

"நிச்சயமா. நான் இப்படி ஒரு தப்பு பண்ணினா, உன்னைச் சொல்ல மாட்டாளா? உன்னைக் கேவலமா பேசமாட்டாளா? உனக்கு அது வேதனை தராதா? எங்க மன்னி பண்ணின தப்புக்கு நான் என்ன பண்ணுவேன்னு எதிர்க்க முடியுமா? அது மாதிரி நீ பண்ணின தப்புக்கு என்னை, அண்ணாவை ஊர் அழவிடாதா?"

"உன்னோட கௌரவத்துக்கு என்னைப் பலி போட்டியா, உன்னைப் பத்துப்பேர் கொண்டாட, நான் என்னை அழிச்சுக்கணுமா. திரும்பி வருவேன்னு மிதப்புல தானே உபதேசம் பண்ற. நீ இல்லாம முடியாதுன்னு தானே நினைச்சிண்டிருக்கே. ஒழியறேன். உன் மூஞ்சில முழிக்காம ஒழியறேன். சௌக்யமா கௌரவமா இரு. என்னை, என் வாழ்க்கையை அறுத்துட்டு நீ மட்டும் சிரி. கயிறு மாட்டிண்டா பயமுறுத்தினே, உன்னைச் சாக விடாம சாகடிக்கிறேன் பாரு—" சங்கரன் பெட்டியை வீசி உள்ளே எறிந்தான். பலத்த சப்தத்துடன் பெட்டி மன்னியின் காலடியில் வந்து விழுந்தது. செருப்பு சப்தம்

அதிர சங்கரன் வேகமாய் நடந்து இருளில் மறைந்தான். அண்ணா தூக்கக் கலக்கத்துடன் எழுந்து விளக்குப் போட்டார். மன்னி மெல்ல கதவில் சரிந்து கீழே விழுந்தாள். சியாமளி பதற்றத்துடன் ஓடிவந்து பெட்டியைத் திண்ணைக்கு அடியில் மறைத்து விட்டு மன்னியைத் தூக்கி தோளில் தாங்கியபடி உள்ளே நடந்தாள். தண்டபாணி கனவில் உதட்டைப் பிரித்துச் சிரித்துக் கொண்டிருந்தான்.

# 24

சுப்பையா காத்திருந்தான். குடிசையை விட்டு வெளியே வந்ததும் கயிறு போட்டு இறுக்கிவிட வேண்டும் என்று திட்டமிட்டு, எப்போதும் தும்பு கயிறு இடுப்பில் வைத்திருந்தான். பதினாறு நாளாய் காத்திருந்து அறிவுக்கரசனின் நடவடிக்கை முழுவதும் தெரிந்து வைத்திருந்து இடுப்பில் கோவணமும், தலையில் வேஷ்டியை முண்டாசு மாதிரிக் கட்டி பகல் நேரங்களில் வயல்புறங்களில் அலைந்தான். நகரத்தின் எல்லை தாண்டி ஆந்திரா போகும் பெரிய சாலையில் இரவு முழுவதும் சுற்றினான்.

ஊர்வலம் முறிந்து போனதும், நூற்றுக்கணக்கான தோழர்கள் கைது செய்யப்பட்டதும் தொழிற்சாலை உடைந்ததும் கோபாலனைப் போலீஸ் தேடுவதும், செவி வழிச் செய்தியாய் அவனை எட்டியது. வெறி ஏற்றியது. துரைசிங்கப் பெருமாள் பெரிய வலை விரித்துத்தன்னைத் தேடிக்கொண்டிருப்பது தெரிந்தது.

மாட்டக்கூடாது. மாட்டினால் வாழ்க்கை அத்தோடு முடிந்து போகும். கோபாலனையும், தன்னையும் உள்ளே போட்டு முட்டியைப் பெயர்த்து, செய்யாத குற்றத்தை ஒப்புக்கொள்ளச் சொல்லி போலீஸ் முயற்சிக்கும்.

''பெருமாளை மடக்கி, நாலுபேரா பொக்கு பொக்குன்னு போடறத உட்டுட்டு பாக்டரியை உடைச்சிருக்காங்க. கும்பலோட கும்பலா பூந்து அவன் மூஞ்சியை



உடைக்கத் தெரியலடா உங்களுக்கு. ஆனா, பெருமாளு என்ன சாதாரண ஆளா? எவ்வளவோ பார்த்திருப்பான் இந்த மாதிரி எமனாச்சே. அவ்வளோ சுளுவா மாட்டிருவானா? ஒண்ணுமில்லாத பொறுக்கிப் பையனைப் பிடிக்கறதுக்கே எனக்கு இவ்வளோ நாளாவுதே? பெருமாளு என்னா...'' சுப்பையா இருட்டு கவிழ்த்த மரத்தடியில் உட்கார்ந்திருந்தான். வானத்தைப் பார்த்துப் பேசினான்.

இத்தனை நாள் தனிமையில் அலைந்தது, தனக்குத் தானே வாய்விட்டுப் பேசிக் கொள்ளும் பழக்கத்தை அதிகப் படுத்தியிருந்தது. வேலையற்றுக் கிடப்பது. பழைய சம்பவங்கள் எல்லாவற்றையும் மனசில் கொண்டு வந்து நிறுத்தி அசைபோடச் செய்தது.

சுப்பையாவுக்கு இரண்டு தமக்கைகள் இரண்டு பேரும் விதவையானவர்கள். மாப்பிள்ளைகளில் ஒருவன் பஸ் மோதி இறந்து போனான். ஒருவனை மாரியாத்தா அழைத்துக்கொண்டு விட்டாள். இரண்டு தமக்கைகளும் குழந்தை குட்டிகளோடு அவரவர் வீட்டில் வெறுமையை மென்று கொண்டு, உறவுகள் வேதனைப்படுத்த, சிரம ஜீவனாய் வாழ்ந்து கொண்டிருந்தார்கள். சுப்பையா எவ்வளவு அழைத்தும் வரமுடியாது என்று சொல்லி விட்டார்கள். சுப்பையாவின் மனைவியைக் காரணம் காட்டினார்கள்.

சுப்பையாவுக்கு விதவைகளைக் கண்டால் மனசு நெகிழ்ந்துபோகும் அவர்களை யாராவது குறை சொன்னால் உடனே கோபம் வந்துவிடும். சாவித்திரி அவனை மெல்ல சுவர்மீது சரித்து பெருமாள் அடித்த காயங்களுக்கு மருந்து போட்டபோது, கூடப் பிறந்த பெண்களின் முகம் தோன்றி அவனைக் குமுற அடித்தது 'என் தாயே' என்று கைகூப்பி அழ வைத்தது. எதேச்சையாய், அறிவுதான் கொலை செய்தான் என்று தெரிந்து விட்ட பிறகு இதை விடவே கூடாது என்ற முடிவு வந்து விட்டது. எந்தக் காரணமுமின்றி எதிர்ப்படுபவனை, ஒருவன் குத்திக்

கிழித்துக் கொன்று போட்டு ஒரு குடும்பத்தைக் குலைத்துப் போடுவது சரியென்றால் நான் செய்வதும் சரி என்று சொல்லிக் கொண்டான். அறிவின் மற்ற நடவடிக்கைகளும் தெரிந்துகொண்ட பிறகு தன் முடிவு சரி என்று உறுதிப்படுத்திக் கொண்டான். எவளோ ஒரு பெண் வயிற்றுப் பிழைப்புக்கு ஒரே ஒரு எருமை வைத்திருக்க அதையும் சரக்கென்று குத்திக் கொல்பவன் மனுஷனேயில்லை.

நெல்லூர் சாலை வழியே சாராய டின்கள் இரண்டு சைக்கிளில் கடந்து சென்றன. எடுத்துப் போனவன் கொஞ்சம்கூடக் கவலையின்றி சீட்டியடித்துக்கொண்டு போனான்.

சாலையிலிருந்து கீழிறங்கின பாதையில், ஒரு குடிசை காடா விளக்கு ஒளியுடன் புகைந்து கொண்டிருந்தது.

அந்தக் குடிசையிலிருந்து ஐம்பது அடி தள்ளி சுப்பையா நின்றிருந்தான். குடிசைக் கதவு பளிச்சென்று திறந்தது.

அறிவு வெளியே வந்து பனியனை மாட்டிச் செல்வது தெரிந்தது. ஒரு சின்னப் பெண் உள்ளாடைகள் வெளியே தெரிய பின்னாலேயே வந்து அறிவுக்கரசனைக் கெஞ்சினாள்.

''இரண்டு ரூபாயாவது கொடு. நீ துட்டு தராத போனேன்னு நா சொன்னா அவங்க நம்பமாட்டேன்றாங்க. துட்டு வாங்குடின்னு அடிக்கறாங்க இரண்டு ரூபாயாவது கொடு.''

''துட்டா? நீ தரணும்டி துட்டு. உங்க ஆளுட்ட சொல்லு ஒழுங்கா தொழில் நடத்தமாட்டீங்கன்னு.''

அந்தப் பெண் அறிவுக்கரசன் கைகளைப் பிடித்து மறுபடி கெஞ்சியது. அசிங்கமாய் கட்டிப்பிடித்துக் கொண்டது.

அறிவுக்கரசன் அந்தப் பெண்ணை உதறினான். ''கவுச்ச மாதிரி நாறிகுன்னு இருக்கற முண்டம். மேல வந்து வுழறியே'' அவள் பாதத்தை மிதித்து முழங்காலால்



தள்ளினான். அந்தப் பெண் பொத்தென்று மணலில் விழுந்தது. அழுது எழுந்து மீண்டும் அறிவுக்கரசனை நோக்கி ஆத்திரத்துடன் ஓடிவந்தபோது அறிவு புறங்காலால் மண்ணைக் கிளறி அவள் முகத்தில் வீசினான். அந்தப் பெண் 'ஐயோ' என்று முகத்தைப் பொத்திக் கொண்டு உட்கார்ந்து விட்டது.

அறிவுக்கரசன் சிரித்தபடி நடக்கத் துவங்கினான். நெடியோடு சுப்பையா அமர்ந்திருந்த இடத்தைக் கடந்து போனான் சற்று இடைவெளி விட்டு சுப்பையா அறிவைப் பின் தொடர்ந்தான் பெரிய பாதையைக் கடந்து வரப்புகளூடே நடந்து புழலேரியின் விளிம்பில் விரைந்து கொண்டிருந்த அறிவு, சட்டென்று நின்றான். பின்னால் தொடரும் சுப்பையாவை நோக்கி, 'என்ன என்று கேட்டான்...

''சரக்கு வேணுங்க. நான் அசலூரு. இடம் தெரியலை.''

''என்னை கேட்டா?''

''வாசனை தெரிஞ்சுது, அதான் விவரமா கேட்கலாம்னு வரேன். வெளிச்சம் பக்கமா போனா கேட்கலாம்னு நினைச்சேன். நீங்களே கேட்டீங்க. தப்பா நினைச்சுக்காதீங்க. ராவுல இது இல்லாட்டி தூங்க முடியாது.''

''எவ்வளவோ வெச்சிருக்க?''

''இருபது ரூபா.''

''எவ்வளவோ சாப்டுவே?''

''இரண்டு கிளாஸ்.''

''சாவு கிராக்கியா நீ.''

''சரக்கு சுத்தம் இல்லீங்க இங்கெல்லாம். நல்லா இருந்தா நாலு சாப்டலாம்.''

''சப்பை பாட்டில் வேணுமா?''—அறிவு பனியனைத் தூக்கி சின்ன பாட்டிலை எடுத்தான்.

''எவ்வளோங்க.''

''எட்டு ரூபா.''

''காலு போறாதுங்களே.''

''இத இப்ப எடுத்துக்க. அப்புறம் இடம் காமிக்கிறேன்.''

பத்து ரூபாய் சுப்பையா நீட்டினதும் அறிவு பாட்டில் கொடுத்து விட்டு, நிக்கர் விளிம்பிலிருந்து மெல்ல ஸ்டிலட்டோவை அகற்றி மீதி இரண்டு ரூபாயை அதற்குப் பிறகு எடுத்துக் கொடுத்தான்.

சுப்பையா மூடியை உடைத்து ஒரு வாய் ஊற்றிக் கொண்டான். தொண்டை எரிந்தது.

''நல்ல காரமா, இருக்குதுங்க.''

''பாக்கி இந்தா இரண்டு ரூபா.''

''அது என்னாங்க. வெள்ளி மாதிரி நீளமா இருக்குது?''

''உன் வேலையைப் பார்த்துட்டுப் போய்யா.''

''சரிங்க நீங்க சாப்டலீங்களா.''

சுப்பையா பாட்டிலை அறிவுக்கருகே நீட்டினான்.

''வேணாம்.''

''சாப்டுங்க பரவாயில்லை.''

அறிவு அதை வாங்கி ஒரு மிடறு குடித்துவிட்டு சுப்பையாவிடம் கொடுத்தான்.

'நான் சாப்பிடறதுக்கு வச்சிருந்தேன். தூக்கம் வரலைன்னு கேட்டியே. அதான் கொடுத்தேன்.''

''நான் தனியா சாப்பிடறதில்லைங்க. ஊர்லகூட நாலைந்து பேராதான் போவோம்.''

''சிநேகிதங்களோட சாப்டா அது தனி சமாச்சாரம் தான்.''

' அது என்னங்க கத்தியா.''

''நீ யாருயா பேஜாரு பிடிச்சவனாட்டம்.''

''மன்னிச்சுடுங்க இனிமே கேக்கலை.''

''கத்திதான். ஒரு ஜாக்கிரதைக்கு வச்சுக்கறது.''



''மொக்கையா இருக்குதே.''

''இது உறை உள்ளே கத்தி இருக்குது.''

''அட்டா இதுலே மெலிசு. இதுக்குள்ளே கத்தியா ''

''பாரேன்.'' அறிவு சுப்பையாவுக்கு எதிரே நீட்டினான்.

''எங்கப்பாரு இந்த மாதிரி ஒன்னு வெச்சிருந்தாரு' வாழைத் தோட்டம் போறப்போ எடுத்துக்குனு போவாரு ''

''நாட்டுப்புறம். இலை நறுக்கற கத்தியா இது?''

அறிவு பனிச்சென்று உறையிலிருந்து கத்தியை உருவினான்.

''வாணங்க பட்டிற போகுது.''

''பட்டா தேறமாட்டே.''

''அதெல்லாம் ஆவாதுங்க ப்ளேடு மாதிரிதானே.''

''அப்படித்தான் நானும் நினைச்சேன். விசிட்டப் புறவுதான் தெரிஞ்சுது.''

''யாருங்க அது?''

''சைக்கிளைக் கொண்ணாந்து ஒருத்தன் மேல இடிச்சான்.''

''இந்த ஊர்லயா?''

''இங்கித்தி ஆள்தான். டிராக்டர் கம்பெனி இல்ல. ஏரி திரும்பினதும். அதுல ஒரு சண்டை கும்பல் மொத்தமும் ஓரம் கட்டி நிக்குது. இவுரு பெரிய புருஸ்லி மாதிரி சைக்கிளைக் கொண்ணாந்து இடிச்சாரு. வெறுப்புல பிரிச்சு சரக்குன்னு இழுத்தேன். விரல் நீளம் உள்ள பூட்சி, எனக்கே என்னடான்னு புரியலை, சைக்கிள் ஆளோ பேயடிச்ச மாதிரி அப்படியே நின்னுட்டான்.

பாஞ்சுட போறானோன்னு போட்டேன். அப்புறம் துரை எழுந்துக்கவேயில்லை.''

சுப்பையாவின் கால்கள் ஆத்திரத்தில் ஆடின. இடுப்பில் வேகம் பரவியது. கணேசன் கணேசன். எங்கள் தோழன் கணேசன். இனிய கணேசன் இரண்டு பிள்ளைகளுக்கு அப்பன். பெயர் சொல்லிக் கூப்பிட்டதும் பளீரென்று சிரிக்கிறவன்.

''நீ என்னடான்னா வாழைத்தோட்டம் கத்தின்ற.'' பொறுமையாய் இருளில் தடம் பார்த்து, உறைக்குள் ஸ்டிலட்டோவை அறிவு சொருக எத்தனித்த போது சுப்பையா பளிச்சென்று பாய்ந்து அதைப் பிடுங்கினான். பிடுங்கிய வேகத்தில் அறிவின் முகத்தில் எட்டி உதைத்தான்.

உதை தாங்காம பின்னுக்குப் பறந்து சரிந்த அறிவு ஊன்றி நிற்பதற்குள், ஸ்டிலட்டோவைப் பிரிந்து வாகாய் கையில் ஏந்தி, இறுக்கி, முழு பலத்துடன் சுப்பையா, அறிவுக்கரசனின் தொண்டைக் குழியில் குத்தினான். ஸ்டிலட்டோ பஞ்சுப் பொதியில் இறங்குவது போல் தடையின்றி அறிவின் தொண்டைக்குள் இறங்கியது.

இடக்கையால் அறிவின் முகத்தில் குத்தி, மறுபடியும் ஸ்டிலட்டோவை இறுக்கி வயிற்றில் இறக்கினான். இன்னொரு குத்து மார்பில் இறக்கினான்.

ரத்தம் மேலே பீறிடும் என்று பயந்து பின்வாங்கி புலிபோல் பதுங்கி அறிவு சரிந்து விழக் காத்திருந்தான். அறிவுக்கரசன் கண்கள் வலியில் மின்னின, வேதனையுடன் சுருங்கின. மடிந்து முழங்கால் போட்டு சப்தமெழுப்பவாய் திறந்த போது, எதுவும் வெளிவராமல் பளீரென்று கைகள் விரித்து தரையில் மல்லாந்தான்.



சுருட்டி, மடக்கி, நிமிர்ந்து, உதறிப்புரண்டு வேதனையில் தவித்தான்? ஓட வேண்டும் என்ற அனிச்சை உணர்வுக்குக் கட்டுப்பட்டு முடியாமல் மெல்ல ஊர்ந்து ஏரி விளிம்புக்குப் போய் திரும்பினான்.

''த்தேவடியாப் பையன்.'' —சுப்பையாவின் பற்களுக்கு இடையே இருந்து வார்த்தை புலப்பட்டது. இந்த முறை குத்து சரியாய் இருதயத்தில் தைத்தது. அறிவுக்கரசன் மெல்ல மெல்ல வேதனையில் அழுந்தி மயங்கிப் போனான். மூன்றாவது நிமிடம் இறந்து போனான்.

சுப்பையா சுற்றுமுற்றும் பார்த்த போது வெறும் இருள் மட்டும் இந்தச் சண்டைக்குச் சாட்சியாய் இருக்கிறது என்பது தெரிந்தது.

ஏரி ஓரத்தில் மழைக்காலத்தடுப்பாக இருந்த பாறைக் கற்களைப் புரட்டினான். தன் எட்டுமுழ வேஷ்டியை இரண்டாய் கிழித்து, ஒன்றை முறுக்கி பாறையுடன் அறிவுக்கரசனைச் கட்டினான். மெல்லப் புரட்டி, நிதானமாய் ஏரிக்குள் அவனைத் தள்ளினான் 'மளேர்' என்ற சப்தத்துடன் ஏரி, அறிவுக்கரசன் என்கிற பால் தாமஸ் என்கிற பாவாடை என்று முதன் முதலாய் அழைக்கப்பட்ட இளைஞனை வாங்கிக் கொண்டது.

சுப்பையா ஸ்டிலட்டோவை உறையிலிட்டு மறுபடியும் சுற்றிப் பார்த்து விட்டு வெகுதூரம் முழுபலத்துடன் அதை ஏரிக்குள் வீசி எறிந்தான். குறைந்த பட்சம் அடுத்து ஆயிரம் வருஷங்களுக்கு அப்பால் கூட அந்த ஸ்டிலட்டோ வெளியே வரவாய்ப்பில்லாமல் பளிச்சென்று ஜலத்தில் தெறித்து உள்ளே முழுகிற்று.

சுப்பையா நகரத்தை நோக்கி வேகமாய் நடக்கத் துவங்கினான்.

## 25

தூங்கி எழுந்தவுடன் பசித்தது. பசி பரவ ஆரம்பித்த சிறிது நேரத்திற்கெல்லாம் சாவித்திரி சாதம் போட்டாள். அள்ளி, உறிஞ்சி சூடும் மணமுமாய் சாப்பிட்ட பிறகு தூக்கம் வந்தது. சாப்பிட்ட ஸ்டோர் ரூமிலேயே கைகளை மார்பின் குறுக்கே கட்டி, கட்டை மாதிரி விறைப்பாய் கனவுகள் இன்றித் தூங்க முடிந்தது.

தூங்கி எழுந்தவுடன் மறுபடி பசித்தது பசிக்க ஆரம்பித்த சிறிது நேரத்தில் சாவித்திரி டிபன் தட்டை உள்ளே கொண்டு வந்து வைத்தாள். பூரியும் காஃபியும் முடிந்த பிறகு மறுபடி தூக்கம் வந்தது. சாவித்திரி தட்டு எடுத்துப்போகும் வரை காத்திருந்துவிட்டு, தட்டு எடுத்து போனதும் மறுபடி சுருண்டு கோபாலன் படுத்தான்.

''ராத்திரி சாப்பிடறதுக்கு...'' ஸ்டோர் ரூமை எட்டி பார்த்துப் பேச ஆரம்பித்த சாவித்திரி சட்டென்று நிறுத்திக் கொண்டு பின் வாங்கினாள். சாவித்திரி குரல் கேட்டதும் கோபாலன் வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்து விட்டான்.

''பரவாயில்லை. தூக்கம் வந்தா தூங்கட்டும். நான் அப்புறம் கேட்கிறேன்.''

''தூக்கம் ஒண்ணுமில்லை. வெறுமனே கண்ணை அசத்தியது. என்னவோ சொல்ல வந்தேளே.''

''எதுவுமில்லை. நீங்க தூங்கறதை அனாவஸ்யமா கெடுத்தேன் ராத்திரி சாப்பாடா பலகாரமா?''

''எது வேணாலும். எது சிரமம் இல்லையோ அது போட்டா போறும். எனக்கு இதுதான்னு எதுவுமேயில்லை.''



''யாருக்கிருந்தது இப்படி நாலு விதமான பண்டம்? அதுல நமக்குப்பிடிச்ச பண்டம் மாதிரியா யாருக்குக் கிடைக்கிறது, இடதா, வலதா, மேலயா, கீழயா. வேணுமா, வேண்டாமா இரண்டே சாய்ஸ்தானே.''

''வாஸ்தவம், அதையும் நீங்க கேட்டமாதிரி யாரும் கேட்கறதில்லை உனக்கு இதுதான்னு தீர்மானமாகவே சொல்லிடறா, நாமும் பழக்கம் காரணமா சரின்னு சொல்லிடறோம். என்ன வேணும்னே நம்மூர்ல நிறைய பேர்க்குத் தெரியாது.''

''தெரிஞ்சு என்ன பண்ணப்போறோம்?''

''போராடலாமில்லையா, வேணுங்கறதுக்கு?''

''போராட்டம்தான் ஸ்டோர் ரூமில ஒளிஞ்சுண்டு இருக்கே. இனிமே என்ன பண்றது?''

''ஒளியறது டெம்பரரி, போராட்டம் தொடர்ந்து நடக்கும்.''

''தொடர்ந்து எதுவும் நடக்கறதில்லை, போராட்டமும் சரி, ஒளியறதும் சரி, எல்லாமும் டெம்பரரிதான். இரண்டுநாள் போராட்டம் நடந்தா, இருபதுநாள் அது பத்தின யோசனையாகவே உட்கார்ந்திருக்க வேண்டியிருக்கு. மொத்தம் இருபத்து ரெண்டு நாள் போராட்டம்னு கணக்குத் தோண்றது.''

''புரியறது. எங்க ஐம்பது நாள் போராட்டத்தைக் கேலி பண்றேள்.''

''ச்சே, ச்சே, கேலியா, நானா, கேலி பண்றதுக்கு புத்திசாலித்தனம் வேணும். நான் அவ்வளோ புத்திசாலி இல்லை.''

''ஒருவேளை வேதனையோ என்னவோ, வேதனையை வெளியே சொல்றபோது கேலியோட ஆரம்பிக்கிறேன்னு தோண்றது.''

''எனக்கென்ன வேதனை''

''கணேசன் செத்துப் போனது.''

''எல்லாம்தான் முடிஞ்சு போச்சு.''

''இந்த முடிவு வேதனையில்லையா?''

''கொஞ்ச நாள்—இரண்டு வாரம் கண்ணுல நினைக்க நினைக்க நீர் வடிஞ்சுது, இப்போ ஒன்னுமில்லை.''

''ஒன்னுமில்லையா''

''சாவு பரியந்தமும் இதையே நினைச்சுண்டிருக்கிறதா பொய் சொல்லணுமா? உப்பில்லாம மோர், சர்க்கரையில்லாம காபி. அவர்போன பிறகு எதுவுமே வேண்டியிருக்கலைன்னு சொல்லிச் சொல்லி, அலட்டிக்கி_டே வாழ்க்கையா மாத்திக்கணுமா? அது ஒரு அற்புதமான ஜீவன், உயர்ந்த புருஷன், எவ்வளவு அற்புதம், எவ்வளவு உசத்தின்னு எனக்கு இப்பத்தான் புரியறது. எனக்கு இது புரியணும்னே போய்டுத்தோ என்னவோ?''

''அப்பா—எவ்வளவு முரட்டுச் சமாதானம் நீங்க பேசறது?''

''ம்ம்ம்...''

''நம்ம தேசத்து ஜனங்கள் கோழையா இருக்கறதுக்கு உங்க மாதிரி பொம்மனாட்டிகள்தான் காரணம். கையிலிருக்கிற பொம்மையைப் பிடுங்கினா— மேலே விழுந்து அடிக்கிற குழந்தை ரொம்பக் குறைச்சல். வெறுமனே இரண்டு நிமிஷம் அழுதுட்டு கட்டை விரலை வாயில வச்சிண்டு தூங்கற குழந்தைகள் அதிகம்.''

''உங்களுக்கு'என்ன தேசம்''

'மக்கள் சினம்' தொண்டைக்குள் சட்டென்று பதில் எழுந்தது கோபாலனுக்கு. மௌனமாய் தரையைப் பார்த்து நின்று கொண்டிருந்தான். பெருமாளிடம் சொல்லி, முதுகு முழுவதும் பிரம்படிபட்டது நினை



வுக்கு வந்தது. தோளைச் சுற்றிப் போர்வையைப் போர்த்திக் கொண்டு சாவித்திரி தொடர்ந்தாள்.

''நீங்க சொன்னது சரி இந்தத் தேசத்துக்கு ஒரு குணம் இருக்கு சண்டையோ சமாதானமோ. இரண்டு நிமிஷத்துக்கு மேலே இதைக் கொண்டு போறது சுபாவமில்லாத விஷயம்னு இங்கே இருக்கிறவாளுக்குத் தெரியும். இது இரண்டுமே நிலையில்லைன்னு புரியும்''

''அப்போது எது நிலையானது?''

''வெறுமை. எதோடையும் ஒட்டாத ஒரு தனிமை, ஒவ்வொருத்தர் உள்ளேயும் ஒவ்வொரு உலகம் ஒண்ணோடு ஒண்ணு சம்பந்தமில்லாத உலகம் ஒண்ணோடு ஒன்னு கலக்க முடியாத உலகம்''

''அப்போ இந்தக் கல்யாணம், குடித்தனம் இதுக்கு என்ன அர்த்தம்?''

''ஒண்ணாயிடறதுன்னு அர்த்தம்? இல்லை வெறும் பக்கத்துப் பக்கத்தில இருக்கிறதுக்குத்தான், பக்கத்துல இருக்கிற வரைதான் உறவு. இல்லேன்னா...''

''யப்பா—எவ்வளவு விரக்தி உங்க பேச்சுல. உங்க முகமே புதுசா தெரியறது. இப்படிப் பேசறப்போ கணேசன் இல்லாத உணர்வு உங்களுக்குத் தனிமையைக் கொடுத்து என்னென்னமோ பேச வைக்கிறது.''

''என்னென்னமோ பேசலை எதனாலயும் பேசலை. உங்களுக்கு இது புரியும்னுதான் பேசறேன். இந்தக் காரியத்துக்காகவே பிறந்திருக்கோம்னு நீங்க கங்கணம் கட்டி நிக்க வேண்டாம்னு சொல்றேன். அவர் உசிரோட இருந்தவரை எனக்கு எதுவும் தெரியாது. —ன்னை விட்டு சட்டுன்னு போன பிறகுதான் சகலமும் புரியறது. கல்யாணம் ஆனதும், குடித்தனம் பண்ணினதும், குழந்தைகள் பெற்றுக் கொண்டதும் அதிசயமா இருக்கு விலகிப்போன பிறகுதான் இது எவ்வளவு பெரிய விஷயம்னு தெரியறது.''

"இங்க எது நிஜம்? நான் பதினாறு வயசப் பொண்ணா ஓடி ஆடினதா? பதினெட்டு வயசில புருஷனோட பூரிச்சு நின்னதா? அவனுக்கு ஓடி ஓடி சோறு பொங்கி சிச்ருஷை பண்ணினதா? குழந்தை பெத்து வளர்த்ததா? இன்னிக்கி வெற்று நெத்தியும் மூளிக் கழுத்துமா நிக்கறதா? எது நான்? எது என் முகம்? எது இங்க என் முக்கியமான காரியம்? இந்தப் பிராஸஸ்ல எது ஜீவநாடி? நான் சொல்றது உங்களுக்குப் புரியறதா? எது என்னுடைய நிஜமான காரியம்? இதே மாதிரி உங்களை என்னைக்காவது யோசனை பண்ணிப் பார்த்திருக்கேளா?"

"யார் நீங்கள்? வீட்டைவிட்டு ஓடிவந்த கோபாலனா கம்யூனிஸ்ட் கட்சி மெம்பரா? பொலிட் பீரோ ஆளா? கம்பெனி க்ளார்க்கா? யூனியன் லீடரா? போலீஸ் கைதியா? புரட்சியாளனா? எது இம்பார்டென்ட் ரோல்? எதனால் இது? கம்யூனிஸ்ட் கட்சி மெம்பரா இருந்ததால் யூனியன் லீடராயிட்டேளா? இல்லை யூனியன் லீடர் ஆகணும்னு கம்யூனிட் கட்சில சேர்ந்தேளா? என்னமோ ஆனேன், இப்படி யூனியன்ல ஒரு சான்ஸ் கிடைச்சுது, திரும்பிட்டேன்'னு நீங்க நிச்சயம் சொல்ல மாட்டேள்னு எனக்குத் தெரியும்..."

கோபாலன் அசையாமல் அவளைப்பார்த்துகொண்டு நின்றான். எதற்காக இவ்வளவு கடுமையாய் ஒரு விமர்சனம் பண்ண ஆரம்பித்து விட்டாள் என்று உள்ளே கலங்கினான். சாவித்திரி ஹால் மூலையில் நின்றபடி லேசாக புன்னகை செய்தாள். "நான் கேட்டதுக்குப் பதிலே சொல்லலையே ராத்திரி பலகாரமா?"

"சாப்பாடு."

"குட் இன்னும் ஒரு மணி நேரத்தில இலை போடறேன்."



ஆனால் இலை போட்டுச் சோறு பிசைகிறவரை அவன் கேட்ட கேள்வி மனசில் ஓயவில்லை.

"இது ஒரு சான்ஸ்தான், கம்யூனிட் கட்சியிலே சேரப் போறேன்னு கங்கணம் கட்டிக் கொண்டா பிறந்தேன்? கர்ணன் மாதிரி யுத்தத்திற்காகக் கவச குண்டலங்களுடனா தோன்றினேன். கட்சியில் சேர்ந்தது ஒரு விபத்து. யூனியனில் ஈடுபாடு கொண்டது அதன் தொடர்ச்சி. லீடரானது ஒரு விபத்து அதன் பிறகு அதன் பலனை இப்படி அனுபவிப்பது ஒரு தொடர்ச்சி. இன்னதிற்காக இப்படி ஒரு நடவடிக்கை என்று திட்டமிடுதல் எவ்விதம்? ஒரு உத்தேசமாய் நகரலாமே ஒழிய, இன்ன விதமாய் இது முடியும் என்று யார்தான் சொல்ல முடியும்?"

"வெரிகுட். ஒரு சான்ஸ்தானே" மறுநாள் குழந்தைகளைப் பள்ளிக்கு அனுப்பிவிட்டு நடுஹாலில் அரிசியில் கல் பொறுக்கிக் கொண்டிருந்தவளிடம் பேச்சை ஆரம்பித்த போது, திடமான குரலில் சாவித்திரி பேசினாள்.

"சான்ஸ்னு தெரிஞ்ச பிறகு இறுதிவரை போராடுவோம்னு எப்படிச் சொல்ல முடியும்? எதனுடைய இறுதி வரை? யாருடைய இறுதி வரை? கிடைச்ச வரையில் என்று வந்த பிறகு தீவிரமாய் இருப்பது அர்த்தமுள்ளதாயிடுமா, வெறும் பிடிவாதமா தானே போய்டும்? எட்டணா தர மாட்டியா இரண்டு காசு குறைச்சு கொடுன்னுதானே போயிடணும்? எட்டணா வாங்கறது கெளரவப் பிரச்சனையா மாறி நான் வாங்கிக் காட்டறேன் பாருன்னு சவாலா நின்னு, இடதும் இல்லாம வலதும் இல்லாம இரண்டும் கெட்டானா மாறிடுத்தே"

"போராட்டமே தப்பு, கேட்கறதே பிசகுன்னு சொல்றேளா?"

"நோ, நான் அப்படிச் சொல்லலை. எட்டணா காசு நீங்க கேட்டதன் பலன், பின் விளைவு, ஒரு உயிர் போச்சு

ஒரு குடும்பம் குலைஞ்சுது. ஒரு பாக்டரி நொறுங்கியது. முன்னூறு பேருக்குக் காயம் பட்டது. பத்தாயிரம் குடும்பம் அரைப் பட்டினியாய்க் கிடக்கிறது. எனக்குத் தெரிஞ்சு எல்லா ஸ்ட்ரைக்கும், ஸ்ட்ரைக் மட்டுமில்லை, யுத்தம் சண்டைன்னு வச்சுக்குவோமே. எல்லா யுத்தமும் ஒரு நேரத்துல ஏன் எதுக்குன்னு விவரம் தெரியாம முழிக்கத்தான் செய்யறது.''

''ஆயிரத்துத் தொள்ளாயிரத்துப் பதினேழாம் ஆண்டுல ரஷ்யப் புரட்சி நடக்கிறப்போ...'' கோபாலன் தொண்டையைச் செருமிக் கொண்டு பேச ஆரம்பித்தான் சாவித்திரி இடை வெட்டினாள் ''ச்சு இது ரொம்ப தப்பான விவாதம். எதுக்கெடுத்தாலும் ரஷ்யப் புரட்சியைக்'' காமிக்கிறது பல பலவீனம். எனக்கு இந்த ஊர் கம்யூனிஸ்ட் கட்சியைப் பத்தித் தெரியாம இருக்கலாம். ஆனா ரஷ்யப் புரட்சி பத்தித் தெரியும். அது திட்டமிட்ட புரட்சியில்லை. சட்டென்று பத்திக் கொண்ட நெருப்பு. புரட்சிக்குப் பிறகு ஏற்பட்ட முதல் உலகப் போர், வெற்றிக்குப் பிறகு ராணுவ ஆட்சி, ராணுவ பலம் பெருக்கிக்கொள்ள ரஷ்யா உழைத்த உழைப்பு. மறுபடி இரண்டாம் உலகப்போர் இரண்டாம் உலகப் போர் ஜெர்மன் தோல்வி. எல்லாமே சான்ஸ்தான். ஒத்துக்கமாட்டா விளம்பரமா அழகா ரஷ்யப் புரட்சின்னு ஆரம்பிப்பா இதைக் காரணம் காட்டி நம்ம ஊர் சமாச்சாரம் பேசக்கூடாது.

யார் இவள்? என்ன காரணத்தால் என்னை இவ்விதம் கதற அடிக்க முனைகிறாள்? வேளா வேளைக்குச் சோறு போட்டு ஏன் குளவியாய்க் கொட்டுகிறாள். அடிமட்டமாய் அறுத்தெறிகிறாள்? இவளோடு ஒருவன் எவ்விதம் குடித்தனம் நடத்தினான். கணேசன் பாக்கியவானா? 'பரிதாபமானவனா'

'நான் ரொம்ப பிடுங்கறேனோ—நிம்மதியா தூங்க வந்த இடத்தில் இப்படி இரண்டு நாளா பேசிப் பேசி



எழவெடுக்கிறதேன்னு தோண்றதோ?' இலையில் சாதம் தள்ளியபடியே சாவித்திரி கேட்டபோது கோபாலன் நிமிர்ந்து பார்த்துவிட்டுச் சோறு சாப்பிடத் துவங்கினான்.

''என்னுடைய பேச்சுக்கு அர்த்தம் ஒரே ஒரு சின்ன விஷயம்தான் எங்கயாவது ஒரு சந்தர்ப்பம் கிடைச்சா கம்பெனியை மறுபடி திறக்கறதுக்கு நீங்க முயற்சி பண்ணனும். இதுல கௌரவம் பார்த்து வீணாயிடப்படாது. எல்லாரும் சேர்ந்து உடைச்சு நொறுக்கியிருக்கிற பாக்டரி இப்படியே விட்டுவிட்டுப் போனா சரி பண்ண முடியாம போயிடலாம்.''

இவளிடம் பாடம் கேட்கும்படியாக ஏன் ஆயிற்று! ஆனால் இவள் சொன்ன பாடத்தில் என்ன தவறு? யார் இனி இதைச் சரிபண்ணு என்று கூப்பிடப் போகிறார்கள். யார் இங்கே மணி கட்ட முன்வரப் போகிறார்கள்? ரங்கசுவாமியிடம் போய் சமாதானம் பேசிவிடலாம் பேச பெருமாள் விடுவானா? கட்சி அனுமதிக்குமா? அரசு ஆவன செய்யும் என்று முதலமைச்சர் மறுபடி அறிக்கை விட்டிருக்கிறார் ஆவன செய்யும் என்பதற்கு என்ன அர்த்தம்? யாருக்குத் தெரியும்?

மூன்றாம் நாள் விடிகாலை வீட்டிற்குள் விழுந்த வாரப் பத்திரிகையில் ஒரு துண்டு பேப்பரில், 'அறிவு முடிந்தது—இரவு வருகிறேன்' என்று சிவப்பு மையில் எழுதியிருந்ததை சாவித்திரி கோபாலனிடம் காட்ட, அவன் 'சுப்பையா...' என்று சந்தோஷத்துடன் முணுமுணுத்தான்.

## 26

ஆனால் இரவு முழுவதும் பொட்டுத் தூக்கமில்லை. இரண்டு நாள் வெறுமே தூங்கி, தின்று கழித்ததற்கு நேர் மாறாய் இரண்டு கவளம் நிறைவாய் சாப்பிடக் கூட முடியவில்லை. வெறும் மோர் சாதம் போதும் என்று

சாவித்திரியிடம் சொல்லிவிட்டு அதையும் நீர்க்க ஊற்றி கரைத்துக் குடித்துவிட்டுச் சுப்பையா எப்போது வரப் போகிறான் என்று மனசு அலைய காத்திருக்கத் தோன்றி விட்டது. வெளியே கேட்கும் சின்ன அசைவைக்கூட சுப்பையாவோ என்று யோசிக்க வைத்தது.

"இன்னிக்கு அரிசி கூடப் போட்டிருக்கேன். சுப்பையாவுக்கும் சேர்த்து. என்னை எழுப்பினாலும் சரி நீங்கள் எடுத்துப் போட்டுண்டாலும் சரி!"...சாவித்திரி சாதாரணமாய்ச் சொல்லிவிட்டு, அறைக்குள் நுழைந்து தாளிட்டுக் கொண்டதும், தாளிட்ட கதவை நோக்கி நீண்டதாய் விழுந்து வணங்க வேண்டும்போல் இருந்தது.

'இப்படிக் கவனிச்சுக் கவனிச்சு எனக்கு யாரும் சாதம் போட்டதே இல்லை' என்று அவளிடம் சற்று முன்பு சொன்னது மீண்டும் நினைவுக்கு வந்தது.

"பேசாம நல்ல பொண்ணாப் பார்த்துக் கல்யாணம் பண்ணிட்டாப் போறது கவனிச்சு சாதம் போடுவா, சிச்ருஷை பண்ணுவா."

"எல்லா பெண்களுக்கும் சாதம் பரிமாறத் தெரியும்னு தோணலை எனக்கு. இதுக்குத் தனியா ஒரு மனசு வேண்டியிருக்கு. ஒவ்வொரு ஏப்பத்தையும், மூக்குறிஞ்சலையும், அசைவையும் ஞாபகம் வச்சிண்டு அர்த்தம் கண்டுபிடிச்சு பரிமாற எல்லோருக்கும் தெரியுமா? ஒரு மதர் தெரஸா மனசு வேணும் இதுக்கு."

"ஐயோ பாவம்!"

"என்ன?"

"மதர் தெரஸாவை வெறும் சாதம் பரிமாறரவளா மாத்திட்டேளே."

வேசாய் சிரித்த போது கோபாலனுக்குப் புரைக் கேறிக் கொண்டுவிட்டது. சாப்பிடுகிற சந்தோஷத்தில் சாதாரணமானவனாகி, "சுப்பையா நினைக்கிறான் போல இருக்கு" என்றான்.



"பாவம். பசியோட இருக்காரோ என்னவோ?" சாவித்திரி சட்டென்று பதில் சொன்னாள் 'ஹா' என்று வியந்து சாவித்திரியைப் பார்க்கத்தான் தெரிந்தது. இப்படியெல்லாம் இவ்வளவு இணக்கமாய், மிருதுவாய் மற்றவர்களைப் பற்றி எனக்கு ஏன் யோசிக்கவே தெரியவில்லை. கோபாலன் கையலம்பி, முகம் துடைத்துக் கொள்கிற வரையில் உள்ளுக்குள் சாவித்திரியைப் போற்றிக் கொண்டேயிருந்தான்.

இரவு முழுவதும் பொட்டுத் தூக்கமில்லை. சின்ன விடிவிளக்கு ஹாலில் எரிய, கதவுகளைச் சாத்திவிட்டு குறுக்கும் நெடுக்கும் சப்தமெழாமல் நடந்து, நடந்து போனவை மொத்தமும் முழுக்க யோசனை பண்ணி, சின்ன அசைவுகளையும் சுப்பையா என்ற மனசு ஆவலுடன் எதிர்பார்த்து, கொஞ்சம் படுப்போம் என்ற விஷயற்காலைப் பொழுதில் கொல்லைப்புறக்கதவு தீர்க்கமாய் தட்டப்பட்டது.

விடிவிளக்கை அணைத்துவிட்டு, கோபாலன் நாற்காலி மீது ஏறி வெண்டிலேட்டர் வழியாய் கொல்லைப் புறத்தை எட்டிப் பார்த்தான்.

சுப்பையா.

மெல்ல இறங்கி. கதவுத் தாழ்ப்பாளை அகற்றி சுப்பையா உள்ளே நுழைந்ததும் மறுபடி கவனமாய் தாளிட்டுத் திரும்பியதும்.

"தலைவரே..." சுப்பையா குரல் உணர்ச்சியில் பிசிறு தட்டி, கரகரத்து சப்தத்துடன் வெளியே வந்தது.

கோபாலன் மிகுந்த ஸ்நேகத்துடன் சுப்பையாவின் கைகளைப் பற்றிக்கொண்டான். சிலநொடிகள் தாமதித்து அவனை இறுக அணைத்துக் கொண்டான். முரட்டுக் தேகம். வலிவு மிகுந்த தோள்கள், சொர சொரப்பான முகம், ஒளி மிகுந்த கண்கள், அணைத்துப் பிடித்து மறுபடி கைகளைக் கோர்த்துக்கொண்டு, "வர்க்கப்

போராட்டம் வாழ்க.'' ''தொழிலாளர் வர்க்கம் வாழ்க.'' ''வாழ்க கம்யூனிஸ்ட் கட்சி'' என்று வாழ்த்துச் சொல்லிக் கொண்டார்கள்.

''எங்கள் தலைவர் கோபாலன் வாழ்க.'' என்று சுப்பையா கடைசியில் சேர்த்துக் கொண்டான். சுப்பையாவை ஸ்டோர் ரூம் போகச் சொல்லிவிட்டு மீண்டும் நாற்காலியில் ஏறி வெண்டிலேட்டர் வழியே மெல்ல ஊடுருவினான். வெளியே இருள் சலனமின்றி இருந்தது.

ஸ்டோர் ரூம் கதவைச் சாத்திக் கொண்டதும் சுப்பையாவின் எதிரில் அமர்ந்து, அவன் தோளில் தட்டிக் கொடுத்தான்.

''எனக்கு ஆயிரம் யானை பலம் இப்போ வந்திருச்சு சுப்பையா, எப்படிக் கண்டு பிடிச்சே?''

''உத்தேசமாதான் இப்படி வந்தேன். அந்த அம்மா ஹால்ல அரிசி புடைச்சிக்கிட்டு இருந்தது. அரிசி அளவு பார்த்தப்போ கூட. ஆள் இருக்கணும்னு தோணிச்சு. புஸ்தகத்துல எழுதி பையங்கிட்ட கொடுத்துப் போடச் சொன்ன பிறகு அந்த அம்மா வெளியேவந்து ஆளைத் தேடிச்சு சரிதான்னு நினைச்சுக்கிட்டேன். ஒளிய வேண்டாத ஆளா இருந்தா நடமாட்டம் இல்லை. சரி நீங்க தான்னு தெரிஞ்சு போச்சு.''

''பீடி இருக்கா?''

''இருக்குது தலைவரே, பின்பக்கம் போய்டுவமா?''

''வேணாம். பீடி வேணாம்''

''சரி இங்கேயே ஒன்று பிடி.''

''வேணாம் சுப்பையா. விடு. விஷயம் சொல்லு'' கதவுக்கு வெளியே மெல்ல நடக்கும் ஒலி கேட்டது.



சுப்பையா விசுக்கென்று எழுந்திருந்தான். கோபாலன் நடையை உற்றுக் கேட்டுவிட்டு பயப்படாதே என்று சைகை செய்தான்.

''அந்த அம்மா எழுந்திருச்சிடிச்சா?''

''ஆமாம்.''

''அப்போ பீடி வேணாம்.''

ஸ்டோர் ரூம் கதவுகளின் 'அடிப்பக்கம் சற்று விலகி விலகலூடே, ஒரு தீப்பெட்டி நுழைந்து சரக்கென்று சுண்டப்பட்டு நடுத்தரையில் தேய்ந்தபடி வந்தது

சுப்பையாவிடம் பேசு என்று சொல்லிவிட்டுக் கோபாலன் பீடியைப் பற்றவைத்துக் கொண்டான்.

''என்ன இது தலைவரே?''

''பீடி பீடி—எனக்கு ஆட்சேபனை இல்லைன்னு சொல்றாங்க, இப்ப சொல்லு என்ன பண்ணினே அந்தப் பையனை?''

''குத்தி ஏரில போட்டுட்டேன்.''

''ராத்திரியா, பகலா?''

''நடு ராத்திரி. ஒரு ஈ, காக்கா இல்லாத இடமா பார்த்துப் போட்டுட்டேன்.''

''கத்தியா?''

''கத்திதான். அவன்கிட்டேயே இருந்துச்சு.''

''மெடிக்கல் ரிப்போர்ட்ல சொன்னானே ஸ்டிலட்டோன்னு அந்தக் கத்தியா?''

''தெரியல. மெல்லிசா இருந்துச்சு. வெறி தீர இழுத்துட்டேன்''

''மெதக்குமே.''

''பாறை கட்டிப்போட்டேன்.''

"கத்தி?"

"ஏரில கடாசிட்டேன்."

"இறங்கித் தேடினா கிடைக்குமா?"

"நூறு ஆள் தேடணும்."

"அவன்தானா கணேசனைக் குத்தியது."

"அவன் வாயாலயே சொன்னான்."

"நான் இங்கே இருக்கிறது யாருக்காவது தெரியுமா?"

"கட்சிக்குத் தெரியும்னு நினைக்கிறேன்."

"எப்படி."

"கழுத்துல சிகப்பு கர்ச்சீப் வெச்சிக்கிட்டு ஒரு ஆள் என்னை விடியகார்த்தால பார்த்து ராத்திரி வேணாம்னு சொன்னான்"

"அப்புறம்?"

"சென்ட்ரல் கவர்மெண்ட் ஏன் என்னதுன்னு கோட்டைக்குப் போன் போட்டுக் கேட்டதாம். நம்ம எம்.எல்.ஏ. வை சீப் மினிஸ்டர் கூப்பிட்டு எதுக்கு கலாட்டா பண்றீங்க? நீங்களே தூண்டிவிட்டு நீங்களே சென்ட்ரல் கவர்மெண்டுக்கு தந்தி அடிச்சு இப்படியெல்லாம் செய்தா என்னைக் கவிழ்த்துட முடியாது. போய் உங்க சென்ட்ரல் மினிஸ்டர்கிட்ட சொல்லுன்னு கோபப்பட்டாராம் எம்.எல்.ஏ, எதிராலே சென்ட்ரல் மினிஸ்டர் கிட்டப் பேசினாராம்."

"யார் சென்ட்ரல் மினிஸ்டர்?"

"மோகன்."

"என்னது?"



"மோகன்."

கோபாலன் பரபரப்புடன் நிமிர்ந்து உட்கார்ந்தான். பீடியைச் சட்டென்று அணைத்தான். சற்று நேரம் கழித்து இன்னொன்று பற்ற வைத்துக்கொண்டு, புகை இழுத்து தீவிரமாய் யோசனை செய்தான்.

"சுப்பையா-நல்ல முடிவு சீக்கிரம் வந்துடும் போல இருக்கே."

"வரணும் தலைவரே. நம்ம ஆளுங்க இனிமே தாங்க மாட்டாங்க."

"பத்திரிகை எல்லாம் எப்படி எழுதுது?"

"வேற நியூஸ் பரபரப்பா இல்லை. அதனால எல்லா பத்திரிகையும் ஒண்ணா படம் போட்டுப் பெரிசு பண்ணிடுச்சு."

"பப்ளிக் சப்போர்ட்?"

"நம்ம பக்கம்தான்."

"ஜெயிலுக்குள்ள எத்தினி ஆட்கள் இருக்காங்க?"

"யாரும் இல்ல. நேத்து காத்தால எல்லாரையும் வெளியே ரிமாண்ட்ல வுட்டுட்டான். நம்ம இரண்டு பேரை மட்டும்தான் தேடறாங்க."

"கட்சி என்னா சொல்லுதாம்?"

"என்னை ஊரைவிட்டுப் போய்டச் சொல்லிடுச்சி. நீ இருக்குற இடத்திலியே இருக்கணும்னு அபிப்ராயப்படுது."

"போலீஸ் தேடாதா?"

"அவ்வளவா ஜரூர் காட்டல. உள்ளுக்குள்ளேயே ஏதோ தகராறு போல. சென்ட்ரல் கவர்மெண்ட் ஐ.ஜி.

லெவல்ல பேசி, முரட்டுத்தனம் காட்டாதன்னு சொல்லிட டாப்போல.''

''பெருமாளு காட்டாத விடுவானா?''

''அதெப்படி காட்டாத விடுவான்?''

''நீயும் ஊரைவிட்டுப் போய்ட்டா எனக்குத் தகவல் எப்படி வரும்?''

''அதுக்கு ஒரு பையனைப் பிடிச்சேன் தலைவரே, நம்ம கம்பெனி ஆளு. அவ்வளவா பட்டுக்காதவன், யூனியன் விஷயத்துல. இரண்டு நாள் முன்னாடி ரயில் ட்ராக்ல தலைய வெச்சி படுத்துகினு இருந்தான். இழுத்து நாலு அறை விட்டேன். என்னமோ லவ் பண்ணி தோத்துட்டானாம். நம்மயூனியன் கட்டடத்தில் வச்சிட்டு வந்திருக்கேன். சங்கரன்னு பேரு.''

''உயரமா தலைமுடி வச்சிகிட்டு.''

''ஆமா, ஹிப்பி பையன்தான். உனக்குத் தெரியுமா.''

''அடப்பாவி. கவிதையெல்லாம் எழுதுவான்யா... என் ரயில் ட்ராக்ல போயி?''

''அது பழைய கதை. மூணு நாளா பையனை உரு ஏத்தி சாவறதானா பொண்ணுக்கோசரம் சாவாதே யூனியனுக்கோசரம் சாவுன்னு சொல்லியிருக்கேன்.''

''இப்ப யூனியன் கட்டடத்தில் என்னா பண்றான்?''

''நீ சொன்ன மாதிரிதான் நோட்புக்ல என்னமோ எழுதிக்கினு இருந்தான். மூணு நாளா நான் ஒளிஞ்சுக்கிற இடத்துல சோறு கொண்ணாந்து கொடுத்தான். பீடி வாங்கினு வந்தான். இது அவன் செருப்புதான். என்னது எப்பவோ அறுந்து போச்சு. செருப்பைப்பாரேன். ஜான் உயரம். எப்படித்தான் நடக்கறானுங்களோ இதை மாட்டிகினு.''



கோபாலன் சிரித்தான். ''இது நடக்கிற செருப்பு இல்ல சுப்பையா, மிதிக்கிற செருப்பு. அவனை நம்பிக் காரியம் பண்ண முடியுமா?''

''வேறு வழியில்லை தலைவரே. அவனைத்தான் போலீஸ் சந்தேகப்படாது. நான் அவனுக்கு இந்த இடம் காமிச்சுட்டுப் போறேன்.''

''கட்சி ஆளுங்களுக்கும் அவனை அடையாளம் காட்டு.''

''காட்டிட்டேன்.''

''அப்போ?''

''நான் கிளம்பறேன் தலைவரே...''

''திரும்பியும்''

''எல்லாம் நல்லபடி முடிஞ்சா மறுபடி சந்திப்போம் இந்தா பீடி கட்டை நீயே வச்சிக்க.''

எழுந்து நின்று தோழர்கள் மறுபடி அணைத்துக் கொண்டார்கள். இருக கைகளைப் பிடித்துக் கொண்டு நின்றார்கள்.

''வர்க்கப் புரட்சி...'' என்று கோபாலன் குரல் கொடுக்க, ''ஒங்குக'' —சுப்பையா உணர்ச்சியுடன் மெல்ல சப்தமிட்டான். கண்ணோரம் துளிர்த்த நீரைத் துடைத்துக் கொண்டான்.

''நீங்க நிச்சயம் ஜெயிப்பீங்க தலைவரே'' என்றான்.

கதவைத் திறந்தது சாவித்திரி. சுவரோரம் சாய்ந்து நின்று கொண்டிருப்பது தெரிந்தது. இவர்களைக் கண்டதும், சமையலறைக்கு ஓடி, காபி தம்ளருடன் சாவித்திரி வந்தாள். காபி தம்ளர்களை நின்று கொண்டிருந்தவர்களின் காலடியில் வைத்தாள்.

சுப்பையா அவளை நோக்கிக் கைகூப்பினான்.

''தங்கச்சி சௌக்கியமா?''

சாவித்திரி பதிலுக்குப் புன்னகை செய்து வணங்கினாள்.

''குழந்தைகளுக்குக் கொடு தங்கச்சி'' இரண்டு மிட்டாய் ரோல்களைப் பையில் கைவிட்டு எடுத்துக் கொடுத்தான்.

சாவித்திரி வாங்கிக் கொண்டு மறுபடி வணங்கினாள்.

''உங்க வீட்டு அட்ரஸ் கொடுங்க. நான் போய் உங்க வீட்டு அம்மாவைப் பார்க்கிறேன்'' என்றாள்.

''ரொம்ப சந்தோஷம் தங்கச்சி, ரொம்ப சந்தோஷம் யாரண்ட சொல்றதுன்னு உள்ளாற தவிச்சிகினு இருந்தேன்.'' —பையிலிருந்து சிகப்பு பென்சில் எடுத்து பேப்பர்தேடி, விலாசம் எழுதி பின்பக்கம் ''தம்பி நன்றாய் படி அப்பா சீக்கிரம் வருவேன்'' என்று மகனுக்கு இரண்டு வரி எழுதினான்.

''நீங்க தலைவர் எல்லாம் இருக்கச் சொல்ல எனக்கு என்னா கவலை'' என்றபடி ஒரே விழுங்கில் காபியைக் குடித்தான்.

கொல்லைக் கதவைத் திறந்து நிதானமாய் நோட்டமிட்டு விட்டு, ''வரேன் தலைவரே. வரேன் தங்கச்சி'' என்றான். மெல்லிய இருளில் இறங்கி மறைந்து போனான்.

தங்கச்சி... தங்கச்சி... தங்கச்சி... தங்கச்சி... ரொம்ப நேரம் இந்த ஒரு வார்த்தை கோபாலனை மனசுக்குள் அறுத்துக் கொண்டிருந்தது.

## 27

காதற்கிளிகள் பறந்த காலம்
கண்ணில் தெரியும் நெஞ்சம் உருகும்.
கண்ணீர் கலங்கி கன்னம் வழிந்து
நெஞ்சில் விழுந்தால் புரியும்.

உயரமான யூனியன் கட்டடம். அதற்கு இடமும் வலமும் முன்னும் பின்னும் ஓட்டு வீடுகள், ஒண்டுக் குடித்தனங்கள். எந்தப் பக்கத்து ஜன்னலுக்குப் போனாலும் இந்தப் பாட்டு ஓட்டு கூரை வழியாய் கிளம்பி சங்கரன் நெஞ்சை அறுத்தது வெறும் சினிமாப் பாட்டா இது? இத்தனை வலி ஒரு சினிமாப் பாட்டுக்கு உண்டா? அன்றாடம் உபயோகப்படுத்தும் மெல்லிய வார்த்தைகளைப் பிணைத்து வேதனையைப் பாட்டாய் வெளிப்படுத்தியிருக்கானே. இது அல்பமா? ஒரு வேளை இதை எழுதினவனும் வேதனையை அநுபவித்தவனோ? பிரிவின் வலி அறிந்தவனோ?

அப்பா, இந்த நேரம் இந்தப் பாட்டு எவ்வளவு இதம் சுரீரென்று வானத்தைக் கிழித்துக் கூச்சலுடன் பறந்த ஜோடிக் கிளிகள் மாதிரி நானும் சியாமளியும் சிரித்துக் கிடந்த காலங்கள் எத்தனை சுகம். இது போன்று மறுபடி ஒரு அநுபவம் வருமா? மனசு ஒத்த பெண்ணோடு கூடிக் களிப்புற்ற காலங்கள் மீண்டும் மீண்டும் வருபவைதானா?

''சியாமளி உனக்கு என்ன சினிமாப் பாட்டு பிடிக்கும்''—ஒரு முறை கேட்டது ஞாபகம் வந்தது.

''எதுக்கு?''

''சொல்லேன்.''

''ஏனிந்த இரவு, ஏனிந்த நிலவு?
களவாட இரவு, ஒளிவீச நிலவு.''

சின்னதாய்ப் பாடினாள். ''ஏன் கேட்டேன்'' பாடின பிறகு கேட்டாள்.

''ஒரு ரெபரன்ஸுக்குத்தான் உன்னை நினைக்கறச்சே உனக்குப் பிடிச்ச பாட்டைப் பாடுவேன், பிடிச்ச பாட்டு கேட்கறச்சே உன்னை நினைச்சுக்குவேன்.''

பாட்டு மாதிரி உறவும் வெறும் களவாடிய இரவாய் போய்விட்டது. இரவில் களவாடியபிறகு பகலில் நடமாட முடியுமா? முடியாமல்தான் போய்விட்டது. நெஞ்சு நிமிர்த்தி இன்னாரைக் காதலித்தேன், தோற்றுப் போனேன் என்று சொல்லக்கூட முடியாதபடி ஆகிவிட்டது. சுப்பையா அடித்து ரயில்வே ட்ராக்கிலிருந்து இழுத்து காரணம் கேட்டபோது லவ் பெய்லியர் என்று சொல்ல முடிந்ததே தவிர யார், என்ன எதனால் விளக்கவே முடியாமல் போயிற்று. சொல்லாட்டா ஒழி' என்று அலுத்துப் போய் சுப்பையா போய் விட்டான். இலக்குத் தப்பிய அம்பாய் ஏன் காமமும், காதலும் இவளிடம் போய் விழுந்து விட்டது. திருமணமாகாத பெண்ணை நான் காதலித்திருந்தால் இத்தனை சிரமம் இல்லையோ என்னவோ? இந்தக் காதல் தவறுதானா உலகம் இதை இவ்வளவு மூர்க்கமாய் எதிர்க்கிறதே காரணம் என்ன? 'பிறன்மனை நோக்கா பேராண்மை? வலிமையும் நிறைய புத்தியும் நிதானமும் உள்ள ஆண்மை. எப்பேர்ப் பட்ட இச்சகத்திற்கும் இசைந்துவிடாத வலிமை. என்ன செய்கிறோம் என்கிற புத்தி. ஒரு காரியம் நடக்கும் போதே இது தேவைதானா என்று யோசிக்கிற, நிதானம். நான் யோசித்திருந்தால் செய்திருக்கமாட்டேனா இதை?

ச்சே. எவ்வளவு கேவலமா கழிவிரக்கம். ஒரு பெண் மனதைச் சஞ்சலப்படுத்தி விட்டு, பின் விளைவுகள் யோசிக்காமல் கிளர்ச்சியுற வைத்துவிட்டு, மன்னியிடம்



பொட்டைக் கோபம் காட்டி...என்ன பிரயோஜனம்? என்னால வாயைத் திறந்து பிறரிடம் இதைக் காதல் என்று சொல்ல முடியவில்லை. சியாமளிக்கும் இவ்விதம் சொல்ல முடியாது போகும் இல்லையா.

மன்னி மடக்கிக் கேட்டபோது அவளும் தவித்திருப்பாள் இல்லையா? இது நியாயமில்லை என்ற அடிப்படை பலவீனம்தான் அவளை மீற ஒட்டாமல் செய்திருக்குமோ? போராட முடியாமல் ஆகியிருக்குமோ? இதுவே சியாமளி கன்னிப் பெண்ணாய் இருந்தால் நானே இன்னும் துணிவோடு இருந்திருப்பேனோ? என்னை அழித்துக் கொண்டால் என் காதல் எல்லோருக்கும் புரியும் என்கிற அபத்தக் கணக்கு போட்டிருக்க மாட்டேனா?

தற்கொலை பண்ணிக்கொள்ளும் அளவுக்கு நிதானமிழந்து விட்டேனோ? நான் தற்கொலை செய்து கொள்ளக் காரணமே நான்மரபு மீறினதை என்னால் சகித்துக் கொள்ள முடியவில்லை என்பதாலா? அடெல்ட்ரி அவ்வளவு பெரிய குற்றமா? குதிரை ஏறி, படைதிரட்டி கும்பல் கும்பலாய் பெண்களைப் பிடித்து, தனியே இடம் அமைத்து, 'முருகிச் சிவந்த கழுநீரும் முதிரா இளைஞர் ஆருயிரும் திருகிச் சொருகும் குழல் மடவீர்' என்று பரணி பாடியிருக்கிறானே. அதற்கு வீரம் என்றா பெயர்? ஆடு மாடுகளைப் பிடித்து வருவதைப்போல, பெண்களைப் பிடித்து வருவதுபோல் நான் செய்தது என்ன? திருட்டு கன்னம் வைத்தல் சின்னச் சருகு ஓசைக்கும் பயந்து கட்டிபிடித்தவளை விட்டு விலகி இத்தனை பயத்தில் காதல் எப்படி வரும்?

ஒரேவித ரஸனை, மென்மை குணம், பாராட்டும் சுபாவம், இது காதலிக்கத் தகுதியாகாதா?'' எனக்கு இணையாய் ரஸனை இல்லாதவளை நான் காதலிக்க முடியாதா? சியாமளி மாதிரி அழகான பெண் மட்டும் தான் காதலிக்கத் தகுதி உள்ளவளா? நான் காதலித்தது அழகையா? இல்லை. இந்தத் திருட்டுத்தனத்தையா?

பயமில்லாமல் இருத்தல் எவ்வளவு சுகம்? பயம் எத்தனை சுமை? சியாமளியும் யாராவது நிறுத்தினபோது நின்று விடுவோம் என்று விலகிவிட்டாளா? இவ்வளவு குழப்பம் ஏற்படுத்துகிற உறவு எவ்விதம் வளரும்? இந்த உறவு ஏன் ஏற்பட்டது? விருப்பமில்லாமல் திருமணம் நடக்கிற தேசத்தில், கட்டாயக் கல்யாணம் செய்கிற இடத்தில், இந்தக் குழப்பங்கள் வரத்தான் செய்யுமோ முன்பின் தெரியாத ஆணுடன் தன்னை பிணைத்துக் கொள்கிற பெண்கள், தன் ரசனைகள் புரிகிறதா என்று ஆதங்கப்படுகிற பெண்கள் மரபை மீறத்தான் முயற்சிப்பார்களோ?

பாவம் என்னைவிட சியாமளிக்குத்தான் வேதனை. சதாநேரமும் சமையலறையில், வெளி உலகம் அறியாது இதே வேதனையாய் சரிந்து உட்கார்ந்திருக்கப் போகிறாள். எனக்கு இதோ ஒரு யூனியன், ஒரு போராட்டம் வேறு இடம் போகும் சூழ்நிலை சுலபமாய் கிடைத்துவிட்டது. மனசு மாறவழி இருக்கிறது. ஆசுவாசப்படுத்திக் கொள்ள வகையிருக்கிறது. சியாமளி என்ன செய்வாள்? மறுபடியும் தண்டபாணியிடம் சீறுவாளோ குழந்தையிடம் ஆத்திரம் காட்டி அரற்றுவாளோ? பற்று பானையை அரக்கத் தேய்த்துக் கோபத்தைக் கொட்டிக் கொள்வாளோ?

ச்சே, அந்தப் பெண்ணை நான் சமாதானப்படுத்தியிருக்கவேண்டும். இன்னும் தெளிவாய் இதை யோசனை செய்திருக்க வேண்டும். நானும் சேர்ந்து அவள் நெஞ்சை மிதித்துவிட்டு வந்துவிட்டேன். ஒருவேளை அவளுக்கும் தன்னை மாய்த்துக் கொள்ளத் தோன்றியிருக்குமோ?

மன்னி கயிறு மாட்டித் தொங்கினாளாம் என்ன பயமுறுத்தல். என் மரணத்துக்குக் காரணம் நீ என்று காலா காலம் வதைக்கிற வழி. கட்டிப்போடுகிற காரியம் ஆனால் வேறு எதைச் செய்தால் சியாமளி நின்றிருப்பாள்.



'நிலவே என்னிடம் நெருங்காதே
'நீ நெருங்கும் வகையினில் நானில்லை.'

இன்னொரு பாட்டு கூரையிலிருந்து கிளம்பிற்று. இந்த வயலினும், புல்லாங்குழலும், கிளாரினட் அழுகையும், மிருதுவான தபேலாவும் கண்ணில் ஜலம் கோர்க்க வைத்தன. ஜன்னல் கம்பியில் முகத்தைப் புதைத்து வெளி நீலவானத்தை வெறித்து, எனக்காகவே இந்தப் பாடல் இப்போது—என்ற மயக்கத்தைக் கொடுத்து—விசும்பி விசும்பி அழலாமா?

இந்த விவிதபாரதி சோகம் வேண்டாம்... ரேடியோ கேட்டு மனசை வருத்திக் கொள்வது வேண்டாம். 'கண்ணீரும் கதை சொல்லும் தீபாவளி' என்று இருட்டில் நடந்து போகும் பைஜாமா கதாநாயகன் அவலம் கூடாது மற—மற மறந்துபோ. அடுத்தபடி என்ன செய்ய வேண்டும் என்று யோசி. மறுபடி ஓட முயற்சி செய் இல்லை மறந்து போ. வெறும் அழுகை என்ன பயன்? யாருக்கு லாபம்? என் துக்கமே என்னை வதைத்து இன்னும் கையாலாகத்தனம் அதிகமாகி சாகிறவரை சோகப் பாட்டே சாசுவதம் என்ற நிலைமை வரக் கூடாது.

மடமடவென்று யாரோ கதவை இடித்தார்கள். சங்கரன் பளிச்சென்று நடந்து முகத்தைத் துடைத்துக் கொண்டு ஓடிப்போய் கதவைத் திறந்தான்.

சுப்பையா.

"சங்கரா எப்படியிருக்கே, இன்னிக்கு எதுனாச்சம் புதுசா எழுதினியா?"

"ஒண்ணுமில்லீங்க."

"சபாஷ். இது எழுதற நேரமில்லே சங்கரா. நிறைய காரியம் இருக்குது. உன்னை நம்பி வுட்டுட்டு போறேன் கோபாலன் சாரண்டை உன்னைப்பத்திச் சொன்னேன்.

சரின்னுட்டாரு. முன்னாடியே தெரியுமாமே உன்னைப் பத்தி. ரயில்வே ட்ராக் சமாச்சாரம் சொன்னேன் பதறிப் பூட்டாரு.

''இது நம்ம கணேசன் சார் விலாசம். கணேசன் யாரு தெரியுமா? குத்தி சாவடிச்சானுங்களே அந்த கணேசன். அவங்க அம்மாதான் கோபாலன் சாருக்கு சோறு போட்டு ரகசியமா வச்சிருக்காங்க. அப்பப்ப கட்சி வந்து உனக்கு இன்பார்மேஷன் கொடுக்கும். நீ நிதானமா அவங்கவூட்டு ஆளு மாதிரி போய் விஷயம் சொல்லிட்டு வரணும். கைச் செலவுக்குக் கட்சி ஆளே துட்டு குடுக்கும். போலீஸ் மடக்கினா வேற எங்காவது பூடு—வீடு காமிச்சிடாதே. என்னா, செய்வியா?'

''செய்யறேன்.''

சுப்பையா உள்ளே போய் ஒரு ட்ரங் பெட்டியைத் திறந்து ஷேவிங் செட்டை எடுத்தான் சம்மணமிட்டு உட்கார்ந்தான். சின்ன கத்தியால் தன் முடியைப் பரபர வென்று வெட்டி எறிந்தான். ஷேவிங் ப்ளேடை மாட்டி தலையில் சோப்பைத் தடவி மடமடவென்று இழுத்தான்.

''இது ஏன்?''

''அடையாளம் தெரியாம இருக்கத்தான் இந்த வழி''

''சுப்பையா, ரத்தம் வருதே.''

''அட கெடக்கு கழுதை. எவ்வளவோ ரத்தம் வந்தாச்சு.''

''மொட்டை அடிச்சுக்கறது அவசியம்தானா?''

''மாட்டினா போலீஸ்காரனே அடிப்பான். அதுக்கு முன்னே நாமளே அடிச்சிக்கிட்டா என்ன?''

''நிதானமா செய்யுங்க சுப்பையா, ரொம்ப ரத்தம் வருது.''



''நாமா செய்துகிட்டா அப்படித்தான்.''

''நான் செய்துடட்டுமா?''

''வேணா சங்கரா. ஐயரு வூட்டுப் புள்ளை உனக்கு எதுக்கு?''

''சுப்பையா நிறைய கிழிச்சுக்கிட்டீங்களே ''

சங்கரன் ப்ளேடைத் தனியே எடுத்து, சுப்பையாவின் பக்கத்தில் உட்கார்ந்து நிதானமாய் முடியை வழித் தான்.

''ரொம்ப நன்றி தம்பி, உங்களை இதுக்கு உபயோகப் படுத்தும்படி ஆயிடுச்சு.''

''பரவால்லை சுப்பையா. நீங்க எவ்வளவோ காரியம் செய்நீங்க. யூனியனுக்கு நான் இதைச் செய்தா என்ன?''

''எல்லாரும் காரியம் செய்யலாம் தம்பி. மனசு வோணும், இது பெரிய காரியம்னு படணும். அவ்வளோ தான்.''

''இதைத் தவிர வேறெதாவது நான் செய்யணுமா?''

''எது தவிர?''

''கணேசன் வீட்டுக்கு நியூஸ் கொண்டு போறதைத் தவிர.''

''போஸ்டர் ஒட்டலாம். கட்சில அப்படி ஒரு திட்டம் இருக்கு.''

''ஒட்டலாமே ''

''வேல கொஞ்சம் கஷ்டம். ராவுலதான் ஒட்டணும். சொல்லிட்டுப் போவா?''

''நான் ரெடி சுப்பையா.''

''தேங்க்ஸ் தம்பி ஆளு இல்லாத நேரம் நிறைய செய். உம் மனசுக்கு தெம்பா இருக்கும். சாவறதைவிட

ஊர்ல முக்கியமான வேலை நிறைய இருக்குன்னு தெரியும், தைரியமா இரு. உசிரோட இருக்கறது ரொம்ப முக்கியம். நல்லவனா இருக்கறது அதைவிட முக்கியம், உனக்கே புரியும் தம்பி."

சுப்பையா சரக்கென்று எழுந்திருந்து துண்டால் தலையைத் துடைத்துக் கொண்டு விடை பெற்றுப் போனான்.

"ஆந்திரா பக்கம் போய்டப் போறேன் ஒரு மாதிரி எல்லாம் முடிஞ்சதும் வரேன், வர்க்கப் போராட்டம் வாழ்க உரக்கச் சொல்லுங்க தொழிலாளர் ஒற்றுமை ஓங்குக. போராடுவோம். போராடுவோம் இறுதிவரை போராடுவோம்."

கீழே கிடந்த ரோமக் குப்பைகளைப் பெருக்கி, அள்ளிய போது, ஒரு க்ஷணம் மனசில் வேதனை பொங்கிற்று. இது என் காரியமா? நான் ஏன் இவ்விதம் அலைக்கழிகிறேன்?

சுப்பையாவுக்கும் கோபாலனுக்கும் என்ன காரியம்? அவர்கள் மட்டுமேன் அடியும் உதையும் பட வேண்டும். ஒளிந்து ஒளிந்து வாழ வேண்டும்? சுப்பையாவும் பயப்படுகிறான் பதுங்கிப் பதுங்கி ஓடுகிறான் என் பயமும் அவன் பயமும் எவ்வளவு வித்தியாசம்? சுப்பையாவின் பயத்துக்கு அடியில் எவ்வளவு பெரிய உள்ளர்த்தம் இருக்கிறது. இதில் கேவலமென்ன?

இரவு பன்னும் டீயும் சாப்பிட்டுவிட்டு கட்சி ஆட்கள் எழுதின போஸ்டரைப் பிரித்தான். 'போராட்டம் தொடர்ந்து நடக்கும்' என்ற வாசகங்கள். அரசாங்கத்து மெத்தனத்தைக் கண்டனம் பண்ணும் சொற்றொடர்கள்

"இன்னும் பொயட்டிக்கா எழுதலாமே"

"செய்யுங்கோ தோழரே."

சங்கரன் சிகரெட்டைப் பற்ற வைத்துக்கொண்டான். சுவர் பக்கம் போய் பெரிய தூரிகையுடன் உட்கார்ந்தான்.



அதிகம் உழைத்தோம்
அதிகம் கேட்டோம்
தடியால் அடித்தான்
தாலியை அறுத்தான்
தமிழக அரசே நீ யார் பக்கம்?
ரௌடிக் கூட்டம் துணையோட
ட்ராக்டர் கம்பெனி நடக்காது.
உழைப்பவன் வயிற்றில் அடித்துவிட்டால்
ஒரு நெல்கூட விளையாது.

"சபாஷ் இது வசனம். எழுது தோழரே, இன்னொரு பக்கெட் தரவா?"

ஊர் முழுக்க சிவப்பில் கோஷங்கள் மின்னிற்று. ஒவ்வொரு இரவு ஒவ்வொரு பேட்டையாய் சங்கரன் தூரிகை கவிதை பாடிற்று.

மத்திய அரசே மோகன் அவர்களே
ஐம்பது நாட்கள் பட்டினி கிடக்கிறோம்
அனல்மின் திட்டம் அப்புறம் திறக்கலாம்
ஆணை கொடுங்கள் கம்பெனி திறக்க.
மின்னும் செங்கொடி துணையுடனே,
மீண்டும் வருவீர் போராட
இன்னொரு ஊர்வலம் வரும் வாரம்,
எதிர்க்க முடியுமா பெருமாளே?

தோழர்கள் கைகொட்டிச் சிரித்தனர். சங்கரனைத் தட்டிக் கொடுத்தனர். "இது மட்டுமே போதும் தோழரே கவர்மெண்டு தானா வழிக்கு வரும் பாரேன்" தினசரிப் பத்திரிகைகள் சுவர் கவிதைகளைப் படம் பிடித்துப் போட்டன ஜனங்கள் தெருத் தெருவாய் நின்று ரசிக்க ஆரம்பித்தார்கள்.

இடையே சங்கரன் கோபாலனையும் சாவித்திரியையும் போய் பார்த்துவிட்டு வந்தான். உள்ளே

நுழைந்த சங்கரனைக் கோபாலன் நெஞ்சாரத் தழுவிக் கொண்டான். "உன் சக்தி உனக்குப் புரிகிறதா சங்கரா இதைவிடவா உன் காதல் பெரிசு? நமது போராட்டம் ஜெயிக்கும் கவலையே இல்லை."

மத்திய மந்திரிக்குக் கொஞ்சம் கொஞ்சம் தமிழ் தெரியும். போஸ்டர் கவிதைகள் அவருக்குச் சொல்லப் பட்டன. முதல் மந்திரியோடு பேசுகையில் இவை பற்றி கேட்கப்பட்டன.

முதல் மந்திரி பெருமாளிடம் சீறியிருந்தார்.

பெருமாள் நான்காம் நாள் இரவு சங்கரன் தலை முடியைக் கொத்தாய்ப் பிடித்து லாரியில் ஏற்றினான். கதவை மூடிக்கொண்டு பிரம்பால் விளாசினான். பூட்ஸ் காலால் மிதித்தான். பென்சிலைக் கைவிரல்களுக்கு இடையே கொடுத்து முறுக்கினான். கோபாலன் எங்கே என்று திருப்பத் திரும்பக் கேட்டான்.

வலியும் ஜுரமுமாய் அரற்றலோடு லாக்—அப்பில் படுத்திருந்த சங்கரனைக் கூடவே, கைதாகி, அடிப்பட்ட தோழர்கள், கட்சி ஆட்கள் மடியில போட்டுச் சமாதான படுத்தினார்கள்.

சங்கரன் வீட்டுப் பால்காரன் அவனை லாக்—அப்பில் பார்த்துவிட்டு ஓடிப்போய் அவன் மன்னியிடம் விஷயம் சொல்ல, மன்னி ஸ்வாமி படத்துக்கு முன்பு நின்று கதறி அழுதாள். திரும்பின பால்காரனை மடக்கி நிறுத்திச் சியாமளி, "எந்தப் போலீஸ் ஸ்டேஷன்" என்று கேட்டாள்.

# 28

**ரொம்ப** அடிச்சுட்டாங்களாப்பா?—சியாமளி வாசலுக்கு வந்து தணிந்த குரலில் கேட்டாள். திரும்பி மன்னி எங்கே நிற்கிறாள் என்று பார்த்துக்கொண்டான் லேசாய் வெளுத்துப் போயிருந்தாள். பார்வையில் ஒரு சோர்வு படர நின்றிருந்தாள். மார்புக்கூடு குறுகி, லேசாய் கூன் போட்டு தளர்வோடு சுவரில் சாயந்திருந்தாள.

"கார்த்தால மோர் சாதம்தான் சாப்பிட்டே, இப்பவும் மோர்சாதம்தான் போட்டுக்கற. உடம்பு கிடம்பு சரியில்லையா?"—தண்டபாணி சட்டையை மாட்டிக் கொண்டே கேள்வி கேட்டுவிட்டு ஆபீஸுக்குப் போய் விட்டான்.

அந்த மோர் சாதம்கூட சாப்பிட முடியவில்லை. குனிந்து கையலம்பும்போது சாப்பிட்ட சோறு முழுக்க ஓக்காளமாகி சாக்கடை எதிரில் தலையைப் பிடித்துக் கொண்டு உட்கார நேர்ந்துவிட்டது. அடுப்பு ஜ்வாலை யையே வெறித்துக் கொண்டு இருக்கத்தான் முடிகிறது! மார்புவரை பாவாடையைக் கட்டிக்கொண்டு வெந்நீர்த் தவலை எதிரில் குளிக்க உட்காருகையில் சொம்பை நெஞ்சோடு சேர்த்துக் கொண்டு யாரோ செத்துப்போனதற்கு அழுவது மாதிரி அழுது தீர்த்தாயிற்று. இந்தப் பிரிவுக்கு, வீட்டு மத்தியில் அழ முடியாது. ஸ்வாமி பகவானே என்று கேட்க முடியாது. எந்த ஸ்வாமியும் இதை ஏற்றுக் கொள்ளாது. எந்த ஆசாமிக்கும் இது காதல் என்று தோன்றாது. தேவிடியா சிறுக்கி என்று

தான் சகலமான மனிதர்களும் சொல்வார்கள். கொழுப்பு என்று அசிங்கமாய் ஏசுவார்கள்.

காமம்தான் காதலின் உந்து சக்தி என்று எல்லோருமே தவறாய் நினைத்துக் கொள்கிறார்கள். ஒருவனைப் பிரியம்தான் காதல் என்றால் நம்பமாட்டார்கள்.

காதலை வெளிப்படுத்துகிற பாஷைதான் காமம் என்றால் மூர்க்கமாய் மறுப்பார்கள். அடி என் செல்ல ராஜாத்தி என்று மூன்று வயதுக் குழந்தையை மகிழ்ச்சியோடு, கட்டிக் கொஞ்சத் தோன்றுவது ஒரு உணர்வு ஒரு எக்ஸ்ப்ரெஷன். ஐ லவ் யூ சங்கரா என்று சொல்லும் போதே விரலைப் பிணைத்துக் கொள்ளத் தோன்றுவது ஒரு உணர்வு. இன்னொரு வித எக்ஸ்ப்ரெஷன். நான் சங்கரனோடு படுத்துக் கொண்டது அதிக அன்பு. உடல் உறவு இல்லாது போயிருந்தால், இத்தனை ஸ்நேகம் வெளிப்பட்டிருக்காது. இத்தனை மனப் பிணைப்பு நேர்ந்திருக்காது, உடல் மயக்கம் இல்லாத காதல், கூடல் இல்லாத பிரியம். எங்கேயோ நிச்சயம் ஒரு பெரிய தப்பு இந்த தேசததில் இருக்கிறது. என்ன என்று சொல்லத் தெரியவில்லை, உடம்பு ரொம்ப அபத்தம் என்று யாரோ தவறாய்ப் பேச ஆரம்பித்திருக்கிறார்கள். செத்துப்போய் விடுவோம் என்கிற பயத்தை இருக்கிற போதே அநுபவித்து அநுபவித்து உடம்பைப் பார்த்து 'சீ போ' என்று எரிந்து விழ ஆரம்பித்து விட்டார்கள். இயற்கையாய் மனுஷன் நியதியால் இவ்விதம் உடம்பும்' அதில் உணர்வுகளும் இருப்பதை பலவந்தமாகப் புறக்கணிக்கிறார்கள்.

அடக்கி அடக்கி, சுருட்டிச் சுருட்டி வயிற்றோடு வைத்துக்கொண்டு எனக்கு இதெல்லாம் இல்லை என்று பொய் சொல்கிறார்கள். தீண்டுதலே தகாது என்கிறார்கள். பார்க்கவே கூடாது என்று மறைத்துக் கொள்கிறார்கள். ஒரே அடியாய் பயப்படுகிறார்கள், பதறுகிறார்கள். இது இந்த உடம்பு அநித்தியம் என்றால்



இதற்கு இத்தனை வஞ்சனை ஏன்? இதுவே சத்தியம் என்றால் இதை இவ்வளவு இழிவுபடுத்துவானேன்.

ப்யூரிடி, ப்யூர். எதுப்யூர், ஜலமா, காற்றா, மண்ணா? இந்த பூமியில் எது ப்யூர்? ஏன் பொம்பனாட்டி மட்டும் நிர்மலமாய், ஆகாசமாய், பூமியிலிருந்து எட்டாத உயரத்தில் 'பே' என்று பரவிக் கிடக்கிற மாதிரி இருக்க வேண்டும்? அவளுக்கு மட்டும் ஆகாசம்தான் இடமா? பூமியில் அவளை இறுக்கி வைத்து ஆகாசமாய் ஏன்பார்க்கிறார்கள் இயற்கை விதிகளுக்கு அப்பாற்பட்டு ஒரு நியதியைக்கண்டு பிடித்து சுமக்க மாட்டாமல் ஏன் நடக்க வேண்டும்? கல்ப கோடி காலங்களுக்கு முன்னால் மனித மனத்தில் ஏதோ ஒரு சின்னத் தப்பு நடந்து விட்டதோ?

தெரியவில்லை. தோ. இது இப்படித்தான் என்று முரட்டுத்தனமாய் அதில் சொல்ல முடியவில்லை. உண்மை என்று கண்டு பிடிக்கவும் முடியவில்லை. யோசிக்க ஒரு பாழ் இருட்டாய் போய்க்கொண்டிருக்கிறதே தவிர விடை தெரியவில்லை. இப்படி நான் யோசிக்க ஆரம்பித்தது பிசகோ? கொஞ்சம் என் புத்தியால் நடந்து கொண்டது தவறோ, சின்ன வட்டத்தில் சொன்னதற்கெல்லாம் தலையசைத்து 'தெரியாமையா சொல்லியிருக்கா பெரியவா' என்று யார் மேலோ பழி போட்டு வாழ்ந்து கொண்டிருந்தால் வம்பே இல்லையே.

முதன் முதலில் படி சறுக்கி மேலே இடித்துவிட்ட சங்கரனைப் பார்த்துக்கற்பே போய்விட்டமாதிரி முறைத்திருக்க வேண்டுமா? நல்ல வேளை விழாம தப்பிச்சேளே என்று சொன்ன போது நான் விழுந்து விட்டேனா.

யோசிக்க, யோசிக்க, யோசிக்க யோசிக்க உடம்பு பலம் அத்தனையும் வற்றிப் போய்—சங்கரா— உம்மேல சாஞ்சுக்கணும் போல இருக்கே என்று வாய்விட்டு அரற்றத்தான் முடிகிறது.

பெண்ணை மாயப்பிசாசு என்று சொல்லி விட்ட தேசம் இது. இங்கே பிறந்தது தவறு. மாதவம் பண்ணியிருக்க வேண்டுமாம்.

நீங்களெல்லாம் எங்கேயோ ஒரு இடத்தில் தவறு செய்கிறீர்கள் என்று புரியவேயில்லையா?

சியாமளி தலையை உலுக்கிக்கொண்டாள். "ரொம்ப அடிச்சுட்டாங்களாப்பா" மறுபடி கேட்டாள்.

"லாடம் கட்டிட்டாங்கன்னு தோணுதுமா."

"அப்படினா"

பால்காரன் ஒரு சந்தோஷமான குரலுடன் அந்தச் சித்திரவதையை விவரித்துச் சொன்னான். "குப்புற பெஞ்சில் படுக்கப் போட்டுறுவாங்க முதுக அழுத்தி ஒருத்தர் புடிச்சுக்குவாரு. லட்டியை முழங்கால்ல வச்சி அழுத்திடுவாங்க அப்புறம் உள்ளங்கால்ல கனம்மா பளிச்சு பளிச்சுனு போடுவாங்க. ஒவ்வொரு அடிக்கும் தலை உச்சிலே நோவு எடுக்கும். தடுக்குன்னு எழுந்து நிக்கவச்சா கால் தரையில் ஊனமுடியாதபடி பூடும் எப்பேர்ப்பட்டவனும் கக்கிடுவான் அப்புறம் நாலு நாள் கையை ஊனி நகர்ந்து நகர்ந்து தானே போகணும்.

இங்கே மனிதன் பிறவியிலேயே முரடனோ மிருகம் தானோ? உருவ அமைப்பு புத்தி எல்லாம் தவறோ.

"எதுக்குப்பா அவ்வளோ கடுமையா அடிக்கிறாங்க"

போஸ்டர் ஒட்டினாப் போல. கவர்மெண்டை எதிர்த்து கோஷம் போட்டாப்போல. சேப்பு கட்சி ஆளோட பூட்டி வச்சிருக்காங்க. உதடு கண்ணு எல்லாம் வீங்கியிருக்கும்மா. பார்த்துட்டு மனசு தாங்காமதான் ஓடியாந்தேன்."

பால்காரன் போய்விட்டான்.



சியாமளி தெரு நடையில் வெறுமையோடு நின்றிருந்தாள். மலைமீது சிலுவையோடு தனியாய் ஏறும் பெண் மாதிரி ஒரு கற்பனை இனமில்லாமல் மனசுகள் ஓடிற்று. அந்தச் சிலுவையில் சங்கரனை அழுத்தி அடித்து மரத்தோடு மரமாய் ஒட்டியிருக்கிறது. சங்கரன் இரத்தம் தன் தோள்மீது வழிந்து. விழுந்த இடமெல்லாம் திராவகமாய் எரிகிறது.

இந்த வலி. இந்த வேதனை இவனுக்கு ஏன்? எனக்குப் பிரியமான இந்த இளைஞனுக்கு ஏன்? நான் மனமாரக் காதலித்த இந்த வாலிபன் இத்தனை வேதனை படுவானேன்? மரணவலியில் தவிப்பானேன்? குறுஞ்சிரிப்பும் குதூகலமும் கண்களில் மின்னும் அறிவும் ஏன் அழிக்கப்படுகின்றன? நான் தொட்ட பாவமா, என் துரதிர்ஷ்டமா என்னால்தானா? என் சங்கரா, என் சிவனே, என் அப்பா.

"நோற்றேன் பல்பிறவி உன்னைக் காண்பதோர்
ஆசையினால்
ஏற்றேன் இப்பிறப்பே இடர்உற்றனன்
எம்பெருமான்
கோற்றேன் பாய்ந்தொழுகும் குளிர்சோலை சூழ்
வேங்கடவா
ஆற்றேன் வந்தடைந்தேன் அடியேன்
ஆட்கொண்டருளே."

முகத்தைப் பொத்திக் கொண்டு விசும்பின சியாமளி. மன்னி. அருகே நகர்ந்து தோளைத் தொட்டதும் வாய் விட்டு அழுதாள். சரிந்து அவள் காலைப் பிடித்துக் கொண்டாள்.

"எனக்கு வலிக்கிறது மன்னி...எனக்கு வலிக்கிறது மன்னி...எனக்கு வலிக்கிறது மன்னி."

மன்னியும் அழுதாள். சியாமளி முகத்தைத் தடவிக் கொடுத்தாள். தலையை கோதி விட்டாள். நெஞ்சோடு

அணைத்துக் கொண்டாள். நெற்றியில் முத்தமிட்டாள். "நீ ரொம்ப லேட்டுடி குழந்தை ரொம்ப லேட்டு" என்றாள்.

ஐந்து நிமிடம் மௌனத்துக்குப் பிறகு மன்னி, "நீ வேணா போய் அவனைப் பார்த்துட்டு வா, எனக்கு போலீஸ் ஸ்டேஷனெல்லாம் போக முடியாது. அந்தக் கோலத்தில் அவனைப் பார்த்தா எனக்குத் தாங்காது." என்றாள்.

அடுத்த அரை மணியில் பளிரென்ற சிகப்புப் புடைவையும், சீவின தலையும், நெற்றி செந்தூரமுமாய் தோளில் !காபி ப்ளாஸ்கோடு கிளம்பின சியாமளியை வேதனையோடு பார்த்தாள்.

"ப்ளாஸ்க் எதுக்குடி" என்று கேட்டாள்.

"காஃபி வேண்டியிருக்காதா மன்னி, ரெண்டு வாய் குடிச்சா தெம்பா இருக்காதா."

"சியாமளி"—மன்னி மெல்ல நெருங்கி அவளை அணைத்துக்கொண்டாள். 'அவன் படற வேதனைய விட நீ படற அவஸ்தைதாண்டி எனக்குக் கஷ்டமா இருக்கு. சங்கரன் உன்கிட்டதான் சந்தோஷமா இருப்பான்னு நினைச்சிண்டிருக்கியா? நம்மை மாதிரி அத்தனை பலகீனம் ஆம்பளைகளுக்குக் கிடையாது சியாமளி ஒரு ஆம்பளை சந்தோஷமா இருக்கணும்னு தீர்மானிச்சுட்டா எங்க வேணா சந்தோஷமா இருப்பான். யாரோட வேணா சட்னு கலந்துப்பான். பொம்மனாட்டி அளவுக்கு ஒட்டுதல் ஆம்பளைக்குக் கிடையாது சியாமளி எல்லாத்தையும் மறுபடி கவனமா யோசனை பண்ணு. இது சரியா சரியான்னு நினைச்சிண்டே போ அப்புறம் ஸ்வாமி விட்ட வழி நல்லவாளுக்கு ஸ்வாமி நல்லதுதான் பண்ணுவார். நீ கெட்டவள் இல்லை, எனக்குப் புரியறது போ—போய் அவனைப் பார்."



போலீஸ் ஸ்டேஷன் வாசலில் பெருமாள் வானத்தைப் பார்த்துக் கொண்டு பின் கை கட்டியபடி நின்று கொண்டிருந்தான்.

சற்று நேரம் முன்புதான் கமிஷனரும் கம்யூனிஸ்ட் கட்சி எம்.எல் ஏவும் ஸ்டேஷனுக்கு வந்தார்கள். அந்த எம். எல். ஏ. ஸ்டேஷன் முழுக்க நடந்து பேயாய் கூச்சலிட்டார் லாக்—அப்பைத் திறக்கச் சொல்லி அந்தப் பையன் சங்கரனைத் தொட்டுத் தொட்டுப் பார்த்தார். வெளியே வந்து சரமாரியாய் கெட்ட வார்த்தை இறைத்தார்

"உன்னை உருத் தெரியாம பண்ணிடுவேன். ஊர் ஊரா துரத்துவேன். போலீஸ்காரனாயா நீ?" என்று எகிறினார்.

பெருமாளுக்கு இந்த அரசியல் மிரட்டல்கள் புதில்லை. இதைவிட ஆயிரம் பார்த்திருக்கிறான். ஆனால் கூடவே இருந்த கமிஷனர் வாய் திறவாமல் நின்றது வேதனையளித்தது. பயமுறுத்தியது.

காரில் ஏறும்போது கமிஷனர் தனியே அழைத்து, "அவர்கள் அரசியல் கைதிகள் இவ்வளவு கடுமையாய் ஏன் நடந்து கொண்டாய்?" என்று கேட்டார்.

"அந்தக் கோபாலனை மறைத்து வைத்திருக்கிறார்கள் சார். கோபாலன் கிரிமினல் ஆள் சார்."

"ஸ்டுப்பிட். கணேசனைக் கொன்றது கோபாலன் என்றா நீ நினைக்கிறாய். அந்த எம் எல்.ஏ. சொன்னது சரி. நீ போலீஸ்காரனேயில்லை."

பெருமாளை வதைத்து விட்டது இந்த வார்த்தை.

இருபது வருட சர்வீஸுக்குப் பிறகு தன்னை யார் என்று கேட்டுக் கொள்ள நேர்ந்து விட்டது. கட்டையும்

கல்லும் எடுத்து அடித்த கூட்டத்தைக் கிரிமினல் என்று சொன்னது பிசகாகி விட்டது. ஜாமீனில் வெளியே வந்து தலைமறைவானவனை கிரிமினல் என்றது ஸ்டுப்பிடிட்டி யாகி விட்டது. ஒரு எம்.எல்.ஏவுக்குப் பயப்படும்படி ஆகி விட்டது. மத்திய அமைச்சர் அனுதாபம் காட்டிய தால் விஷயம் தலைகீழாய் போய்விட்டது. கணேசனைக் கொன்றதற்காகவா கோபாலனைப் பிடித்தது?

இது தேங்க்லெஸ் ஜாப். ஒரு கம்பெனியில் காவல் காரனாய் இருந்தால் இந்த சர்வீஸுக்கு இன்னும் அதிக சம்பளமும் மனநிம்மதியும் கிடைத்திருக்கும்.

வீட்டைக் கவனிக்காமல், மனைவி மக்களைத் துறந்து நாயாய் அலைவதின் பலன் ஸ்டுப்பிட் பட்டம். எனக்குக் குழந்தை பிறந்து இரண்டு மாதமாயிற்று ஒரு போஸ்ட்கார்டுகூட போடவில்லை மனைவிக்கு. நலமா என்று விசாரிக்கவில்லை வாய் திறந்து. உத்தியோகத் தைப் பேயாய்க் கட்டிக் கொண்டு என்ன பிரயோஜனம்? வெறும் கெட்ட பெயர், கேலி, ஊர் முழுக்க எதிரிகள் எல்லோருக்கும் போலீஸ்காரன் கெட்டவன்.

பேசாம லீவு போட்டு விட்டு ஊரைப்பார்க்கப்போய் விடலாமா. இப்படி நான் என் உத்தியோகத்தில் மயங் கியது தவறுதானா?

ஸ்டேஷனுக்கு நேர் எதிரே ஒரு பெண் சிகப்புப்புடை வையும் செந்தூரப் பொட்டுமாய் மெல்ல தெரு தாண்டி நடந்து வந்து கொண்டிருந்தாள்.

ஒருவேளை என் மனைவி இப்படி அழகானவளாய் இருந்திருந்தால் நான் வீட்டோடு ஒட்டுதலாய் இருந் திருப்போனா.

''எக்ஸ்க்யூஸ் மி! திரு சங்கரன் என்பவர் இங்கே இருக்கிறாரா?''



அந்தப் பெண்ணைப் பெருமாள் கூர்மையாய் உற் றுப் பார்த்தான்.

''திரு. சங்கரனுக்கு நான் உறவு. அவரைச் சந்திக்க எனக்குத் தயவு செய்து சிறிது நேரம் அனுமதி தருகிறீர் களா?''

மிருதுவாய் மெல்லிய குரலில் ஆங்கிலம் பேசுகிறாள். இந்த மென்மையை வெளிப்படுத்தி, நிதானம் காட்டி, காரியம் சாதிக்க நினைக்கிறாள்.

ஒரு வேளை எனக்கு இந்த நிதானம் குறைவோ? நான் முரடன் தானோ? எனக்கு, என் வம்சாவளிக்கே இந்தப் பொறுமை, நிதானம் குறைவோ? இவைகள் இந்தக் காலகட்டத்தில் மிகவும் அவசியமோ?

பெருமாள் அவளுக்குப் பதில் ஒன்றும் சொல்லாது கட்டை விரலை உயர்த்திப் பின்பக்கமாய் காட்டிவிட்டு நகர்ந்து கொண்டான்.

தன்னைக் கடந்துபோன பெண்ணின் அசைவு களை உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தான்.

''எக்ஸ்க்யூஸ் மி. என் பெயர் சியாமளி. திரு சங்கரன் என்பவர்...''

ஒருவேளை என் மனைவி இத்தனை மிருதுவாய் பேசுபவளாக இருந்திருந்தால் அது எனக்கும் தொற்றி என்னை உயர்த்தியிருக்குமோ? கமிஷனரின் உயர்வுக்கு அவர் மனைவியின் குணநலன் காரணமோ?

ஊருக்குப் போய் மனைவியைப் பார்க்க வேண்டும், குழந்தையைப் பார்க்க வேண்டும். இரண்டு மாதம் லீவு கேட்க வேண்டும், மனநிலை, உடல்நிலை, சரியில்லை என்று சொல்லிவிட வேண்டும்.

லாக்—அப் கதவு திறந்ததும் விந்தி விந்தி நடந்து வெளியே வந்த சங்கரன், லேசான அதிர்ச்சியுடன்

சியாமளியைப் பார்த்தான். "என்ன?" என்று அதிகாரமாய்க் கேட்டான்.

சியாமளி சட்டென்று சுருங்கிப் போனாள்.

## 29

"மின்னும் செங்கொடி துணையுடனே
மீண்டும் வருவீர் போராட.
இன்னொரு ஊர்வலம் வரும் வாரம்
எதிர்க்க முடியுமா பெருமாளே?"

—பெரிய பையன் அரை டிராயரை இழுத்துவிட்டுக் கொண்டு, தோளில் சாத்திய குச்சியுடன் குதித்து ஆடினான். சின்னவனுக்கு மழலை மறையாத வயசு, தமையனுடன் சேர்ந்து விவரம் புரியாமல் அதுவும் குதித்தது.

"ஸ்ஸா...என்ன சத்தம் இது. ரமேஷ் சும்மாயிரு..." சாவித்திரி குழந்தையை அதட்டினாள்.

"ரெட் ஸல்யூட், ரெட் ஸல்யூட், ரெட் சல்யூட்டு மோகன்."

"அடடே. இது யார் அம்பி உனக்குச் சொல்லிக் கொடுத்தா?"—கோபாலன் பையனைப் பார்த்து ஆச்சரியத்துடன் கேட்டான்.

"மினிஸ்டர் கார் எங்க பள்ளிக்கூடத்து வழியா போச்சு மாமா. சேப்பு கொடி வச்சுண்டு திடீர்னு பத்து பேர் கத்தினா. போலீஸ்காரர் வந்ததும் திபுதிபுன்னு ஓடியே போய்ட்டா. போலீஸ்காரங்க போனதும் நாங்களும் கத்தினோம்."



"ரமேஷ் வரவர மோசமாயிண்டே வரே." சாவித்திரி அடிக்குரலில் அதட்டினாள்.

"போனாப் போறது, குழந்தைதானே."

"அதுதான் பயமாயிருக்கு."

"என்ன பயம்?"

"வெளியே உளறிடப் போறதேன்னுதான்."

"ரமேஷ் இங்க வா. நான் போலீஸ்காரனுக்குத் தெரியாம உங்க வீட்டில் இருக்கேன். உனக்குத் தெரியுமில்லையா? இப்படிக் கத்தினா போலீஸ்காரன் இங்க வந்துடுவானே."

"இனிமே கத்தலை மாமா."

"வெரிகுட் போய் விளையாடு."

"வெளியே போகாதே ரமேஷ், வீட்ல இரு."

"பரவாயில்லை, போகட்டும். நீங்க படற சிரமம் போறும். குழந்தைகளை வேற இம்சைப்படுத்த வேண்டாம். போய் விளையாடு ரமேஷ்."

ரமேஷ் அம்மாவின் கட்டளைக்காக மௌனமாய் காத்திருந்தான்.

"ம்ம்ம்... சுருக்க வா"

துள்ளிக்கொண்டு வெளியே ஓடினான் "மின்னும் செங்கொடி துணையுடனே—" அவன் கீச்சுக் குரல் தொலைவில் கேட்டது. ஜன்னல் பக்கம் நகர்ந்து, ஓடுகிற குழந்தையைக் கவலையுடன் கோபாலன் பார்த்தான். தலையைச் சிலுப்பிக் கொண்டான்.

"நான் இன்னிக்கு ராத்திரி வேற இடத்துக்கு நகர்ந்துடப் போறேன். அதுதான் எல்லாருக்கும் நல்லதுன்னு தோண்றது."

''அவனை வெளியே போக வேண்டாம்னுஅதுக்குத் தான் சொன்னேன்.''

''எத்தனை நாளைக்குச் சொல்ல முடியும்?''

''இது என்ன கேள்வி? ஆயுசு பூரா மறைஞ்சேவா ஒரு மனுஷா இருப்பா?''

''இருந்தா தேவலைன்னு கூட படறது.''

''ம்ம்ம்...''

''அவ்வளவு சொகம் தெரிஞ்சு போச்சு. இத்தனை ருசியா சாப்பாடும், உபசரணையும் மனசுக்கு இதமா பேச்சும் மனுஷனைத் துருப்புடிக்க வச்சுடும். குழந்தை வெளியே சொல்லிடுவானேனு போகலை. எனக்கு இதுக்கு மேலே சௌகரியமா இருக்கத் தாங்கலை. இத்தனை சௌகர்யம் தப்புன்னு படறது.''

''அடிபடறதுக்கு ஆசை வந்துடுத்தோ என்னவோ?'' கோபாலன் சாவித்திரியின் கேள்விக்கு மெல்லச் சிரித்தான். ''போலீஸ்காரன் அடிபத்தி உங்களுக்குத் தெரியாது. ஒரு தடவை வாங்கியவன், மறுதடவை நிஜமாகவே பயப்படுவான். அடிவாங்கறது சுகம்னு ஒரு பேச்சுக்குச் சொல்லலாம். அனுபவிச்சவாளுக்குத்தான் தெரியும் அதும் வேதனை.''

''அப்படியும், போறேன் போறேன்னு சொல்வானேன்.''

''இன்னும் ஜாக்ரதையா இருக்கத்தான்.''

''யாருடைய ஜாக்ரதைக்கு?''

இவனுக்குப் புரிந்துவிட்டது. கோபாலன் திரும்பி சாவித்திரியின் கண்களை ஊடுருவினான். நூல் இழை போதும், இவளுக்கு. மொத்த சேலையும் தரம் சொல்லி விடுகிறான்.



கண் இமை ஒரு முறை அதிகப்படி நகர்ந்தால் போதும், இவளுக்கு, கண்டுபிடித்து விடுகிறாள்.

''இதுக்குமேல பேச வேண்டாமே.''

''பேசிடுவோம்.''

''கசந்து போய்டும்.''

''தித்திப்பாவேவா திங்க முடியும்?''

''போராட்டம் தொடர்ந்து நடக்க வேண்டிய விஷயம்னு கம்யூனிஸ்ட் வகுப்புல சொல்லுவா. சூழ்நிலை மாறாம—அதுக்கு இப்பத்தான் முழு அர்த்தம் புரியும். சாஞ்சுக்க ஆசைப்பட்டமோ போச்சு. எழுந்திருக்க முடியாது.''

''இவ்வளவு வேகமாவா நெகிழ்ந்து போவா மனுஷா''

''ஆள் உசரத்தோட ஒப்பிட்டுப் பார்த்தா விரக்கடை நீளம்தான் வாழைப்பழத் தோல். வாரி விட்டுடாதோ''

''அது மாதிரி.''

''உங்க கேலி போதும். நீங்க உறுதியானவர்ன்னு எனக்கு நன்னாத் தெரியும். இல்லேன்னா சுப்பையாவுக்கு மருந்து போட முடியுமா? பூனியன் கொடுத்தகாசை மூட்டை கட்டி வைக்க முடியுமா? என்னை மறைச்சு வச்சு சாதம் போட முடியுமா?''

''அந்த மூட்டையைப் பார்த்துட்டேளா''

''இப்படி நிறையப் பார்த்துப் பார்த்துத்தான் நெகிழ்ந்து போயிட்டேன் இவ்வளவு தெளிவா ஒரு பொம்மனாட்டின்னு நினைச்சு நினைச்சு மலர்ந்து போயிட்டேன்.''

''பொம்மனாட்டியைப் பார்க்காதவா மாதிரி இல்ல பேச்சு வரது.''

"ஆமா, அதுவும் காரணம். ரொம்ப வறளியான நிலத்துல மழை பெஞ்ச சந்தோஷம்."

"அந்தச் சந்தோஷம் என்னதான் சொல்றது..."

"ஐ லவ் யூன்னு சொல்றது."

"சொல்லிடட்டுமே."

"சாவித்திரி."

"மென்னிலயே அடைச்சு வச்சுப்பானேன், வார்த்தை தானே மனசு தானே மேல நெருப்பு கொட்டின மாதிரி நான் அதிர்ந்து போனா அது நடிப்பு பொய். உங்க அபிப்பிராயத்தைச் சொல்றேன் அவ்வளவுதான். மேற்கொண்டு யோசிக்கத் தெரியாத ஜன்மமா—இரண்டு பேரும். சரி நீங்க லவ் யூ, நானும் லவ் யூ எனக்கு ரெண்டு குழந்தைகள் இருக்கே—அதுகள் லவ் யூன்னு சொல்லுமோ உங்களை நான் யோசிக்க வேண்டாமா? அப்பாவைக் கண் முன்னாடி பார்த்து வளர்ந்த பையனாச்சே அவனுக்கு உறுத்தல் இல்லாமப் போகுமா? அது உடையாம இருக்குமா...அப்படித்தான் யோசிக்கணும். என்னோட சந்தோஷம்னு ஒண்ணு உண்டா? சுப்பையாவுக்கு அடிப்பட்டபோது எனக்கு வலிச்சுதே எனக்கும் துக்கம் பொங்கித்தே என் புருஷன் செத்துப் போனதுக்கு நீங்க எல்லோரும் கதறினேளே துக்கம் பொது சந்தோஷம் தனியா? தனக்கு மட்டும் சந்தோஷம் பொதுவா பகிர்ந்துக்கத் துக்கமா. என் குழந்தையோட சந்தோஷம் என் சந்தோஷம் இல்லையா? அதுகளை அவஸ்தைப் படுத்திட்டு நான் சிரிச்சுட முடியுமா? எனக்கு என்னவோ இப்படித்தான் யோசிக்க முடியுது நான் சொல்றது சரிதானே"

மாணிக்க வீணாம் உபலாலயந்தீம்
மதாலஸாம் மஞ்சுள வாக்விலாஸாம்
மஹேந்திர நீலத்யுதி கோமளாங்கீம்
மாதங்க கன்யாம் மனஸா ஸ்மராமி.



உள்ளுக்குள் கைகூப்பிக் கண்ணீர் வழிய கோபாலன் நின்றான். பத்து வயசுப் பையனாய் காவிரிக்கரை பிராமணச் சிறுவனாய், தலையை மழித்து உபநயனம் செய்த நாளில் சின்னக்கிளை தாங்கி நடந்த பாலகனாய் மிதந்தான்.

"ஐயாம் ஸாரி"

"லவ் யூன்னு சொன்ன வாயோட ஸாரியா, சரியா போச்சு."

"வேறென்ன சொல்றது?"

"சொன்னதையே திருப்பித் திருப்பிச் சொல்றது. இந்த சாவித்திரிகிட்ட மட்டும் சொல்லாமே, என் புள்ளைகிட்ட, செத்துப்போன என் புருஷன்கிட்ட, ஊர் உலகம் எல்லாத்துக்கிட்டேயும் சொல்றது. லவ் பண்றதுல என்ன தப்பு? இது தவிர வேறு என்ன செய்ய வேண்டிக்கிடக்கு?"

"அம்மா..."

"அத்தனை பொம்மனாட்டியும் அம்மாதான் நான் முரட்டு வைதீகம் பேசலை அம்மா கொண்டாடல உரிமையை பொம்மனாட்டிக்குக் கொடுக்கணும், அம்மாவுக்குக் கொடுக்கற கரியாதையைப் பொம்மனாட்டிக்குத் தரணும். அவ்வளவு ஸ்நேகம் வரணும். இது இடைக்காமதான் இந்தத் தேசத்துப் பெண்கள் தவிச்சுப் போறதுகள். இவன், மாரைக் காமிச்சா மசிவானா, இடுப்பைக் காமிச்சா மசிவானான்னு போயிடறதுகள். பளபளன்னு உடுத்தினா இதமா பேச மாட்டானோன்னு தப்புக் கணக்குப் போடறதுகள்."

"ஐயோ நான் இந்த வேகத்தில் பேசலை."

"எனக்கு நன்னாத் தெரியும். எம் மேலே பரிதாபமும் தனக்குத் தெரிஞ்ச பொண்ணாச்சேன்னு ஸ்நேக

மும் சொல்ல வச்சிருக்கலாம். பொம்மனாட்டியை பொத்துன்னு கீழபோட்டுட்டு பரிதாபப்படுவானேன்? நான் குறைபட்டுப் போனவள்னு நினைக்கிறேன் இல்லையா பொம்மனாட்டியை மட்டும் குறைபடறவளா சொல்றேளே இது பாபமில்லையா? சமதையா உட்கார வைக்கவே மாட்டேங்கறேளே? இது நியாயம் தானா பரிதாபத்துமேலேயா லவ் பண்ண முடியும். எதுத்து என்ன மிஸ்டர்னு கேட்டா லவ் ஓடியே போய்டாதா? கேட்டுட்டாளேன்னு கோவப் படறதும் அவளைச் சண்டி சாமுண்டின்னு வையறதும் எதுக்கு?''

''எனக்குப் புரியறது.''

''சந்தோஷம். நாம ஸ்நேகமா இருப்போம். ஒருத்தர ஒருத்தர் பார்த்து பயப்படாம இருப்போம். உங்களைப் பத்தி எனக்குப் பயம் வந்துடுத்துன்னா உங்களோட நான் பேசவே முடியாது கோபாலன்.''

''எனக்குப் புரியறது.''

''இதுக்கப்புறமும் நாம ஸ்நேகிதர் தானே.''

''ஆமாம்.''

''நிச்சயமா என் மேல வருத்தமில்லையே?''

''இல்லை.''

''மனசார சொல்லுங்கோ வருத்தமில்லையே.''

''இல்லவே இல்லை.''

''ரொம்ப சந்தோஷமா இருக்கு. ரொம்ப இதமா பத்திரமா எனக்கு இப்பப் படறது. ஐ லவ் யூ கோபாலன்.'' சாவித்திரி கோபாலனுக்காய் கை நீட்டினாள். கோபாலன் அவள் கையை மிருதுவாய்ப் பற்றி ஒருமுறை குலுக்கினான். தளரவிட்டான்.

''என் கையை இப்பத் தொட்டப்போ வித்தியாசமா பட்டுதா?''



''இல்லை. இது ஸ்நேகிதியின் கை''

''வெரிகுட். ராத்திரி நான் என்ன சமைக்கட்டும்?''

''இல்லை. நான் வெளியே போறேன்.''

''நோ யூ ஆர் நாட் கோயிங் மை ஃப்ரெண்ட். ரமேஷ் உள்ளே வா, அம்மாவுக்குக் கொஞ்சம் உதவி செய்.''

''மின்னும் செங்கொடி துணையுடனே...''— பையன் குதித்துக்கொண்டு உள்ளே வந்தான். அவனை அதட்ட சாவித்திரி நின்றபோது யாரோ ஒருவன் வாசலில் சட்டென்று சைக்கிளை நிறுத்தினான். சின்னக் கல்லில் காகிதம் கட்டி உள்ளே எறிந்தான். மீண்டும் படுவேகமாய் சைக்கிளை மிதித்து மறைந்தான். சாவித்திரி காகிதத்தை எடுத்து கோபாலனிடம் கொடுத்தாள்.

''தோழர் சங்கரனும், பலமுனைகளில் கட்சித்தோழர்களும் நேற்று இரவு கைது செய்யப்பட்டார்கள். தோழர்களை, சங்கரனை பெருமாள் மிகவும் மோசமாய் தாக்கிவிட்டான். கட்சி மேலிடம் கடுமையான நடவடிக்கையில் இறங்கிவிட்டது. எங்கேயும் நகரவேண்டாம்.'' இது உத்தரவு.

சிகப்பு எழுத்துக்களில் டைப் பண்ணப்பட்ட காகிதத்தை மறுபடி ஒரு முறை படித்து பிறகு அதை எரித்துவிடச் சொன்னான். மௌனமாய் தரையில் குத்திட்டு உட்கார்ந்தான்.

கடிதத்தை சாவித்திரி சாம்பலாக்கிவிட்டு மீண்டும் அவனெதிரே வந்தாள்.

''இங்க வந்தானே நாலு நாள் முன்னாடி. அந்தப் பையனா?''

''ஆமாம்.''

''ரமேஷ் பாடறானே ஏதோ வசனம் மாதிரி, அவன் எழுதினதா?''

''உங்களுக்கு எப்படித் தெரியும்?''

''இங்க வந்தபோது என்னமோ பேசிண்டிருந்தேனே கவிதை பத்தி.''

''ஒரு நோட்புக் நிறைய எழுதியிருக்கான். என்னமோ லவ் சமாச்சாரம்.''

''ஐயோ பாவம்.''

''எதுக்கு?''

''மாட்டிண்டா அவஸ்தைதான். என்னைப் புரிஞ்சிக்கோ என்னைப் புரிஞ்சிக்கோன்னு கொஞ்சறதுதான் காதலா, கவிதையா வரது. பேசாம இருந்தாலே புரியும் புரியாம போயிடப் போகறதேன்னு பயம்.''

''எல்லோரும் உங்களை மாதிரி இருக்க முடியுமா. நீங்க ஒரு உதவி பண்ணனும். பெருமாள். பிடிச்சிருக்கான்னா வடசென்னை போலீஸ் ஸ்டேஷன்தான் ஒரு நடை அங்க போய்ப் பார்த்துவிட்டு வரமுடியுமா?''

சாவித்திரி சைக்கிள் ரிக்ஷாவைவிட்டு இறங்கின போது, சங்கரனும் சியாமளியும் தோட்டம்போல் இருந்த போலீஸ் ஸ்டேஷன் வெளிப்புறத்தில் எதிரும் புதிருமாய் நின்று கொண்டிருந்தார்கள். சங்கரன் சாவித்திரிக்கு முதுகைக் காட்டியபடி சின்ன மரக்கிளையைப் பிடித்த படி நின்று கொண்டிருந்தான்.

## 30

''சரி பார்த்தாச்சா? சந்தோஷம்தானா? அப்ப கிளம்பலாம். போய் மன்னிட்டே சங்கரன் இன்னும் உசிரோடதான் இருக்கான்னு சொல்லலாம். ஐயோபாவம் ஐயோ பாவம்னு மாத்தி மாத்தி இரண்டு பேரும் சொல்லிண்டிருக்கலாம்.''



சங்கரன் இரண்டு கைகளையும் அறைந்து சியாமளி முன் கூப்பினான்.

பின்பக்கம் நின்றுகொண்டிருந்த சாவித்திரிக்கு இந்தக் கைக்கூப்பல் சின்னதாய் ஒரு முறுவலைக் கொடுத்தது இது தஞ்சாவூர்ப் பாணி. எதிரே உள்ளவர்களைச் சட்டென்று அவமானப்படுத்தும் செயல். மென்மையாய் தனிமையாய் அன்று பேசின இந்த சங்கரன் இத்தனை ஆங்காரத்துடன் பேசுவதும் வெடு வெடுப்பதும் ஆச்சர்யமாய் இருந்தது.

எதிரே இருக்கிற பெண் யார்? அவன் கண்ணில் எதற்கு இத்தனை மயக்கம்? ஒரு வேளை இவள்தான் சங்கரனின் 'லவ்'வோ? இடுப்பு அகண்டு கிடக்கிறதே. அச்சோ, தாலிக் கொடி. வேறு...ஈஸ்வரா. இவளைப் போய் சங்கரனின் 'இது' என்று நினைத்தேனே. வேறு உறவாய் இருக்குமோ? தங்கையென்றால் இவ்வளவு இடைவெளி அவசியமில்லையே. கண்ணில் இத்தனை படபடப்பு வராதே. சங்கரன் ஜாடை வரவில்லையே சங்கரனைவிட இவள் அழகு. ஆனால் மனசில் எங்கோ ஒரு நசுக்கல் இருக்கிறது. புடைவையைக் கொசுவி படியப்படிய உடுத்திக் கொண்டிருப்பதில் ஒரு சித்தம் தெரிகிறது. இந்த வயசில் இத்தனை அழகாய் உடம்பில் புடைவை படிய வேண்டுமென்றால் சின்ன வயசில் இவள் இன்னும் அழகாய் இருந்திருக்க வேண்டும். பதினெட்டு வயசில் இவளிடம் ஊர் முழுக்க மயங்கியிருக்க வேண்டும்.

''நான் என்ன தப்பு பண்ணினேன் சொல்லுங்கோ? நான் அத்தனை விவரமா சொல்லியும் புரியலையோ? நான் துரோகம் பண்ணியவளா போய்ட்டேனா?'' சியாமளி ப்ளாஸ்கை பிடித்துக் கொண்டு பேசினாள்.

ம்ம்ஹூம்...சரியில்லை என்னமோ ரசக்குறைவா தான் இருக்கு இந்த இடம். ஏதோ தப்பு நடந்து போயிருக்கு நடுவில்.

''ப்ளீஸ் சியாமளி, எனக்கு விவரம் வேண்டாம். என்னைத் தனியா விடு. இடத்தைக் காலி பண்ணு.''

''சரி போறேன் காஃபி எடுத்துக்கலாமே''

''எவ்வளவு இருக்கு?''

''இரண்டு டம்ளர்''

''ஆறுபேர் இருக்கோமே இரண்டு எப்படி போறும்?''

''புரியலையே.''

''என்னோட லாக்காப்பில் இன்னும் அஞ்சு பேர் இருக்கா. அவர்களுக்கும் காஃபி கொண்டு வந்தா சாப்பிடலாம்.''

''இரண்டுதான் இருக்கு.''

''ஓரமா கவுத்து கொட்டிட்டு வீட்டைப் பார்க்கப் போ.''

''சங்கர்'' சியாமளி அவனை நெருங்கி வந்தாள். சங்கரன் விலகிக்கொண்டு பின்னே நகர்ந்தான். சாவித்திரி சம்பந்தப்படாதவள் போல் சுவர் அருகே ஒதுங்கி வேறு பக்கம் பார்க்க ஆரம்பித்தாள்.

வேமாக நகர்ந்த சங்கரனை, எங்கோ அழுத்தி வலியை அதிகப்படுத்தியிருக்க வேண்டும். முழங்காலைப் பிடித்துக் கொண்டு ''அம்மா...'' என்று முனகினான்

''ரொம்ப அடிச்சுட்டாளா சங்கர்?''

''ம்ம்ம்...ம்ம்...'' அலட்சியமான ஹுங்காரம்.

''ரத்தக் காயம் இருக்கா? மருந்து கொண்டு வந்திருக்கேன் சங்கர்... ப்ளீஸ் கொஞ்சம் நில்லுங்களேன்'' சியாமளி நெருங்கி அவன் புஜங்களைப் பற்றி சிமெண்ட் பெஞ்சில் உட்கார வைத்தாள். தரையில் குத்திட்டு



உட்கார்ந்து அவன் முழங்காலைத் தடவினாள். உள்ளங் காலைத் தடவிப் பார்த்து 'ஐயோ' என்றாள். பட்டன் இற்று நெகிழ்ந்துவிட்ட அவன் சட்டையை விலக்கி விலாவைச் சோதித்தாள் கடவுளே. கடவுளே கடவுளே...''

''ச்சு...இது போலீஸ் ஸ்டேஷன்''

''இப்படி ஒரு இம்சை எதுக்கு சங்கர்? எனக்காகவா? நான்தான் காரணமா என்னை மறக்கணும்னா, என் மேல வஞ்சம் தீர்க்கறமாதிரியா வீட்டுக்கு வந்தா நான் சமாதானப்படுத்திடுவேன்னு இங்க மாட்டிண்டு அடிபடணுமா, உடம்பு முழுக்க வரி வரியா கடவுளே...நான் போய்டறேன் சங்கர். உங்க வழிக்கே வராம போயிடறேன். உங்க பக்கம் தலைவச்சுப் படுக்காம எங்கேயாவது நகர்ந்து போயிடறேன். ப்ளீஸ் வாண்டாம் இந்தக் கொடுமை வாண்டாம். என்னாலதான் இதெல்லாம்னு சொல்லுங்கோ, இப்பவே போயிடறேன். இல்ல இதுக்கெல்லாம் ஒரு அர்த்தம் இருக்கு. இதுக்கு ஒரு பர்பஸ் இருக்குன்னா சரி. நடக்கிறபடி நடக்கட்டும்.''

''பர்பஸ் இல்லாமலா உள்ளே அஞ்சு பேர் உட்கார்ந்திருக்கான், எல்லோரும் என்னை மாதிரி லவ் பண்ணிட்டா போலீஸ் ஸ்டேஷன் வந்திருக்கான்? உள்ளே இரண்டு எம். ஏ., ஒரு பி. ஏ, ஒரு பி. காம். இருக்கான் இது எதுவும் இல்லாம தமிழையும் இங்கிலீஷையும் படிச்ச பிரகிருதி ஒண்ணு இருக்கு. காரணமில்லாமையா இந்த உதை வாங்கிட்டு உள்ள இருக்கான் இத்தனை பேரும்''

''அவங்களோட கம்பேர் பண்றபோது நான் ஒண்ணுமே இல்லை. எழுந்து போ சியாமளி நீதான் சகலமானதுக்கும் காரணம்னு நினைச்சுக்காம போ. நா ஒண்ணும் வகை தெரியாம மாட்டிக்கலை. விவரம் தெரியாம முழிக்கலை. அடி வாங்கிட்டபோது பயந்து நடுங்

கலை. இது சந்தோஷமான காரியம். உன்னோட சந்தோஷமா இருந்த மாதிரி இதுவும் சந்தோஷமா செய்தேன். கார்த்தாலே அடிவாங்குவோம். ராத்திரி உட்கார்ந்து மார்க்ஸ் பத்தி டிஸ்கஸ் பண்ணுவோம். உனக்கு பயந்து இங்க வரலை சியாமளி உன்கிட்ட பழகியதை எவ்வளவு ஸின்ஸியரா செய்தேனோ அவ்வளவு ஸின்ஸியரா இங்கேயும் செய்யறேன் போறுமா எழுந்துபோ."

''போ போன்னு தொரத்துவானேன்! இவ்வளவு வெறுப்பு வரும்படி நான் என்ன பண்ணினேன்''

''வெறுப்பு இல்ல சியாமளி சக்தி இல்லாத பொம்மனாட்டிகிட்ட மயங்கினதுக்கு வருத்தப்படறேன். எதிர்த்துப் போராட என்னைத் தூண்டிட்டு, எதுக்கோ இளகிப் போய் காரணம் காட்டின மூட்டாள்தனத்தைப் பார்த்துட்டு நொந்து போறேன் சியாமளி உன்னை நான் வெறுக்கலை. என்னால உன்னை வெறுக்க முடியாது அக காலா காலத்துக்கும் இப்படி ஊசலாடிண்டு இருக்க முடியாது என்னால ஒளிஞ்சி ஒளிஞ்சி பேச முடியாது இனிமே. இன்னும் இரண்டு மாசம் இப்படியே நடக்கட்டும். அப்புறம் பார்த்துப்போம்னு மனசைச் சமாதானப்படுத்திக்க முடியாது. நேரே போய் தண்டபாணிகிட்ட எல்லாத்தையும் சொல்லிட்டு வெளியே வருவியா இப்போ, உன்னால இதைச் செய்ய முடியுமா காரணம் வேண்டாம் எனக்கு சியாமளி. வெத்து சமாதானம் வேண்டாம்.''

''மன்னியை மீறிண்டு...''

''மன்னி... அந்தை நினைச்சாத்தான் ஆத்திரம் பொங்கறது. ப்ளாக்மெயிலிங் மன்னி. அவளைச் சாகவிட்டிருக்கணும் சியாமளி. தன்னுடைய கௌரவத்துக்கு இன்னொருவரை நொறுக்கறவாளை நொறுங்கவிட்டிருக்கணும் நீ. எப்பேர்ப்பட்ட ராட்க்ஷஸத்தனம்.



வெறுப்பு வெறுப்புன்னு சொன்னையே அது மன்னி மேல வந்துடுந்து எனக்கு. இனி எனக்கு அங்கே ஒட்டலே ஒட்டாது'''

''நெஜமாவே நீங்க இங்கே சந்தோஷமா இருக்கேளா?''

''யெஸ்.''

''அந்த அடி உதை வலியோடேயேவா?''

''ஆமாம்.''

''என் நினைப்பு, என் தனிமை. என்னோட துக்கம் வரலையா?''

''இல்லை. உன்னைவிட இது இன்னும் பெரிய காரியம் இப்ப இதுதான் என் ஞாபகம்.''

''ஆர் யூ ஷ்யர்?''

''யெஸ்.'

''தேங்க்யூ சங்கரா. உங்க சந்தோஷத்தை நான் கெடுக்க விரும்பலை. நாம் பிரிஞ்சுடுவோம். நான் மறுபடியும் வெளியே வர விரும்பலை. அது முடியாது. உங்களுக்கு எங்கிட்டேர்ந்து நகர விருப்பம் வந்துடுத்து, தப்பு என் பேர்லதான். ஆற அமர ஒடிப்போக முடியாது. இது வேகமாப் பண்ற கார்யம்' நான் லேட். ரொம்ப லேட். நான் பண்ணின தப்புக்கு மன்னிப்பு கேட்டுக்கறேன். உங்க ஸ்பீட் எனக்கு இல்லை. பயமா, வயசா? காரணம் தெரியலை ஒருவேளை நான் பொம்மனாட்டியா இருக்கறதும் காரணமா இருக்கலாம், உங்களோட இருந்தவரை சந்தோஷமா இருந்தேன். நிறையக் கத்துண்டேன். இந்தாங்கோ காபி...''

''வேண்டாம்.''

''ஏன் சங்கர்?''

''ஆறு பேருக்கும் காஃபி வேணும். ஆறுபேருக்கும் மருந்து வேணும். முடிஞ்சா கொண்டு வா. இல்லேன்னா எடுத்துண்டு வெளியே போ.''

''நான் வரேன் சங்கர்.''

''வர வேண்டாம்.''

தன்னைக் கடந்து சங்கரனை நோக்கித் திரும்பின சியாமளி முகத்தைப் பார்த்தபோது 'திக்'கென்றது சாவித்திரிக்கு. உலகத்து ஜீவராசிகள் அனைத்தையும் ச்சே என்று பார்க்கும் முகம் வேதனை மண்டிக் கிடக்கிற விழிகள் அடிப்பாவி. சனியனே. உனக்கெதுக்கு இத்தனை இழிவு. மண்ணை வாரித் தலையில் தேய்த்துக் கொண்டு பிச்சியாய் பார்ப்பது எதற்கு?

சங்கரன் விலகிக்கொண்டு போலீஸ் ஸ்டேஷன் பின் பக்கமாய் போனான். லாக்கப் பக்கம்தான் போலிருக்கிறது. இவனைத் தொடர்ந்து போவோமா? அனுமதி கேட்கணுமா? தெரியலையே. அந்தப் பெண் வாயிலைப் பார்த்துக்கொண்டு நிற்கிறது. ப்ளாஸ்கைத் தடவினபடி மறுபடி திரும்பி உள்ளே ஒரு பார்வை. தொண்டைக் குழியில் மட்டும் துக்கம் வேதனை உதடு உயரத் தவிக்கும் பரிதாபம். யார் நீ? எவன் மனைவி நீ? ஏன் இந்த வலி உனக்கு? உன் முகத்தில் வேடம் தெரியவில்லையே. இது பொய் அழுகையாய் படவில்லையே. தளரத் தளர பார்த்துக்கொண்டு நின்றாள்.

சங்கரனைப் பார்த்தாகிவிட்டது பயப்படும்படி எதுவும் இல்லை. விந்தினாலும் நடக்க வலு இருக்கிறது இனி பேசி என்ன ஆகவேண்டும்? சவுக்கியமா என்று எங்கே கேட்க முடியும்? வேண்டாம். சங்கரனைப் பார்த்துப்பேச வேண்டாம், இவள் யார்?

அந்தப் பெண், சாவித்திரி ஏறி வந்த சைக்கிள் ரிக்ஷாகாரனிடம் ஏதோ பேசுகிறாள்.



ரிக்ஷாக்காரனை அவளை ஏற்றிக்கொண்டு போகச் சொல்லிவிடலாமா? எனக்கு வேறு ரிக்ஷா பார்த்துக் கொண்டால் போயிற்று.

ரிக்ஷாக்காரன் பார்த்துவிட்டான் போலிருக்கிறது. மீண்டும் தளரத் தளர எங்கோ நிலையாய் தெரு தாண்ட சரேர் என்று ஒரு லாரி வலப்பக்கம் ஒடித்துக் கொண்டு விலகி ஓடுகிறது லாரி க்ளீனர் கைநீட்டி ஏசுகிறான். ''பிடை, எழவு...ஏதோ வசவுகள் காற்றில் புகையோடு கலக்கின்றன. அந்தப் பெண் கலங்கிப்போய் நிற்கிறாள் தடுமாறுகிறாள். சரிந்து விடுவாளோ, சரிகிறாள். சாவித்திரி ஓடிப்போய் சியாமளியைத் தாங்கிக் கொண்டாள்.

''தேங்க்யூ இப்ப சரியாயிடுத்து எனக்குப் போதும்'' ப்ளாஸ்க் மூடியை சாவித்திரியிடம் கொடுத்தாள். ரிக்ஷாவில் சரிந்து உட்கார்ந்து கொண்டாள்.

''இன்னும் கொஞ்சம் இருக்கே?''

''வேண்டாம் போறும், இப்ப தேவலை''

''கொஞ்சம் சாப்பிடறயப்பா...?'' ரிக்ஷாக்காரனுக்கு காஃபியை சாவித்திரி ஊற்றிக் கொடுத்தாள். ரிக்ஷாக்காரன் ஓரமாய் நின்று உயர்த்திக் குடித்தான்.

''எம்பேர் சாவித்திரி. கணேசன்னு இவா கம்பெனில கேள்விப்பட்டிருப்பேளே... என் வீட்டுக்காரர்...''

சியாமளி நிமிர்ந்து உட்கார்ந்தாள் சின்ன வியப்பைக் கண்கள் காட்ட சாவித்திரியின் கரங்களைப் பற்றிக் கொண்டாள். சந்தித்த சந்தோஷம். துக்க விசாரிப்பு நீ தானா அந்த சாவித்திரி என்ற வியப்பு. எல்லாம் அந்தத் தொடலில் பூர்த்தியாயிற்று.

''நீங்க இந்த வண்டில போயிடுங்கோ. நான் வேற பார்த்துக்கறேன்.''

''வேண்டாம். நான் கிட்ட ஹோட்டல் இருக்கான்னு பார்க்கணும்.''

''எதுக்கு?''

''ஆறு காஃபி வாங்கணும். கொஞ்சம் மருந்து வாங்கணும்.''

அடிபெண்ணே, எட்டி நெஞ்சை மிதித்த பிறகும் இரக்கப்படுகிற ஜென்மமே.

''கிட்டத்திலேயே இருக்குமா'' ரிக்ஷாக்காரன் மூடியை திருப்பிக் கொடுத்தான். இரண்டு பேரையும் ஏறிக்கொள்ளச் சொன்னான்.

ஆறு காபியும் மருந்தும் வாங்கி சியாமளி ஸ்டேஷனுக்கு வந்தாள். போலீஸ்காரனிடம் கொடுத்தாள். திருப்பிக் கீழிறங்கி சாவித்திரி அருகே ஸ்டேஷனுக்கு முதுகைக் காட்டி நின்று கொண்டிருந்தாள். தரையை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தாள். பத்து நிமிஷத்தில் காலி பிளாஸ்க் வந்தது. ப்ளாஸ்க் மூடியில் நன்றி என்று சிவப்பு பென்சிலில் எழுதியிருந்தது.

''எல்லாத்துக்கும் ஒரு சிவப்பு பென்சில்'' —சாவித்திரி சிரித்தபடி ப்ளாஸ்கைத் தோளில் மாட்டிக்கொண்டாள்.

''ம்ம்ம்...''

''ஒண்ணுமில்லை. போகலாமா?''

''எங்க வீட்டு வரைக்கும் வாங்களேன்''

''இன்னொரு நாள் வரேனே இப்ப மனசு சரியில்லை.''

''அதனாலதான் வரச் சொல்கிறேன்''

''என்ன...''



''என்கூட வா சியாமளி!'' சாவித்திரி சியாமளியைத் தொட்டபோது உள்ளே என்னவோ உடைந்து போயிற்று.

''நான் ரங்கசாமி ட்ராக்டர் கம்பெனி சேர்மன் மேன்மை தங்கிய அமைச்சரைச் சந்திப்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். நலமா''

''நலம். மிக்க சந்தோஷம் ரங்கசுவாமி மிக்க சந்தோஷம். நீங்கள் கேம்பிரிட்ஜ் மாணவராமே?''

மத்திய மந்திரி அடர்ந்த புருவத்தைச் சுருக்கிக் கொண்டு முகம் முழுவதும் சிரிப்போடு ரங்கசுவாமியின் கைகளைக் குலுக்கினார்.

''கேம்பிரிட்ஜில் எந்த வருடம் நீங்கள்? நானும் அங்கதான் படிப்பை முடித்தேன்.''

ரங்கசுவாமி மெல்ல தான் முடித்த வருடத்தைச் சொன்னார்.

''அப்படியா? எனக்கு சீனியர் நீங்கள். என்ன ஸ்திதியில் இருந்தாலும் சீனியருக்கு எழுந்து நின்று வந்தனம் செய்வது கேம்பிரிட்ஜ் மரபல்லவா? என் வந்தனங்கள் ரங்கசுவாமி.'' மந்திரி எழுந்து நின்று வணங்கினார்.

ரங்கசுவாமிக்கு வியர்த்துப் போயிற்று.

''எதற்கு இதெல்லாம்?''

''மரபு, நல்ல மரபு. அவ்வளவே. உட்காருங்கள் ரங்கசுவாமி.''

''நன்றி அமைச்சர் அவர்களே.''

''உங்க ட்ராக்டர்களைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறேன். இங்கிலாந்து கம்பெனியுடன் கூட்டாக இருக்கிறீர்களா—இல்லை...?''

"ஆமாம் இரண்டு வருடம் இருக்கிறது ஒப்பந்தம் முடிய."

"இங்கே பிரச்சனைகள் மிக்க கடுமையாய் இருக்கின்றனவா?"

"அவ்விதம் சொல்ல முடியாது அமைச்சர் அவர்களே."

"சிரமப்பட வேண்டாம், சாதாரணமாய் பேசுங்கள். ஐயா என்று அழையுங்கள் போதும்."

"சுரைக உற்பத்தித் தொழிற்சாலைகளில் பிரச்சனையெனில் கடுமையானதுதான். பல பேரைப் பாதிக்கும் விஷயம் .பொருளாதாரம் மிகவும் அடிபடும். மத்திய அரசு விவசாயக் கருவிகள் உற்பத்திச் சலுகை நிறைய கொடுத்திருக்கிறதே, உங்களுக்கும் கிடைக்கிறதா? அதில் குறைகள் உண்டோ?"

"குறைகள் இல்லை ஐயா."

"நல்லது. சலுகையின் நோக்கம் அதிக உற்பத்தி, அதிக வளம், ஆனாலும் பிரச்சனைகள் வரத்தான் செய்யும். இங்கே நடந்த பிரச்சனைகள் வேறு மாதிரி இல்லையா? உற்பத்தி இல்லை என்னும்போது சலுகைகள் இத்தனை கொடுப்பது சிரமம், நமது பிரதமரைச் சந்தித்ததுண்டா நீங்கள்?"

"இல்லை ஐயா!"

"விவசாயம் பற்றி அவர் நோக்கம் மிகப் பரந்தது. அவரைச் சாதாரணப் பெண்மணி என்று நினைத்துக் கொள்ளக்கூடாது; மிகக் கூர்மையான அறிவு படைத்தவர். எப்பாடு பட்டேனும் உற்பத்தி பெருக ஆர்வம் கொண்டவர்."

"நான் அறிவேன் அமைச்சர் அவர்களே!"



"தொழிற்சாலையில் வேலை நிறுத்தம் என்பதைக் கூட அவர் ஏற்றுக் கொள்வார். கதவடைப்பு என்கிற போது கடுமையாகி விடுகிறார். அவர் சித்தாந்தம் வேறு மாதிரியானது. ஓவர்டைம் காசுதானே பிரச்சனை ரங்கசுவாமி?"

"ஆம் ஐயா. ஆனால் கேட்ட விதம்..."

"வாஸ்தவம் கேட்ட விதம் தவறு. மிரட்டல் கூடவே கூடாது. அது நல்ல உறவை வளர்க்காது. நான் நல்ல உறவுக்கு உத்தரவாதம் தருகிறேன். ஓவர்டைம் ஊதியம் கொடுத்துவிட முடியும்."

"உங்கள் கட்டளைப்படி."

"என் கட்டளை அல்ல ரங்கசுவாமி—அந்தச் செலவு நியாயம்தானா சொல்லுங்கள்."

"நியாயம்தான் ஐயா."

"நல்லது. வேறு என்ன எதிர்பார்க்கிறீர்கள்?"

"அடுத்த ஆறு மாதம் பிரச்சனை எதுவும் என்னால் தாங்க முடியாது. சேதம் அதிகமாக்கி விட்டார்கள்."

"தெரியும். மிகத் தவறான வழியைக் கையாண்டு விட்டார்கள். நான் எச்சரிக்கிறேன். ஆறுமாதம் எந்தத் தடங்கலும் இல்லாமல் உற்பத்தி தர சம்மதிக்க வைக்கிறேன். மற்றபடி பஞ்சப்படி உயர்வுகள்... பற்றி என்ன சொல்கிறீர்கள்?"

"உற்பத்தி தடங்கலின்றிக் கொடுத்தஆறாவது மாதம் இன்னொரு புதிய ஒப்பந்தம் போட்டும், நடுவே இடைக்கால நிவாரணம் சிறிது தருகிறேன்."

"நல்லது, அந்த கம்யூனிஸ்ட் கட்சி எம்.எல்.ஏ.வை வரச் சொல்லுங்கள்."

ஹாலின் மறுபக்கமிருந்து எம்.எல்.ஏ. நுழைந்தார். கோரிக்கைகளைச் சொன்னார். குறிப்புகள் தயார் செய்யப்பட்டன.

முதலமைச்சர் உள்ளே நுழைய அனைவரும் எழுந்து வரவேற்றனர்.

நீண்ட பேச்சுகள் தொடர்ந்தன.

இரவு வணிகர் மாநாட்டில் முதலமைச்சரும் மத்திய மந்திரியும் கலந்து கொண்ட போது—

''இந்த அனல் மின் திட்டம் தமிழகத்திற்குக் கிடைத்த காரணம் உங்கள் முதல் அமைச்சர் அவருடைய பிடிவாதம் சாதுர்யமான பேச்சு, விவாதத் திறன். தமிழுக்குத் தமிழ் மக்களும் நெடுங்காலம் அவர் சேவையை நினைவு கொள்ளப் போகிறார்கள். அவர் பேசுவதை விழி இமைக்காமல் நீங்கள் கேட்டதைப் பார்க்கும் போது தமிழ் மொழியை நான் நன்கு தெரிந்து கொள்ளவில்லையே என்று வருந்துகிறேன். வாழ்க தமிழக முதலமைச்சர். வாழ்க தமிழ்நாடு. வாழ்க பாரதம்.''—மத்திய அமைச்சர் பலத்த கரகோஷத்திடையே பேச்சை முடித்தார். எங்கிருந்தோ ஒரு காற்று சில்லென்று கூட்டத்துள் வீசியது.

## 31

''ராத்திரி முழுக்க யோசனை பண்ணிப் பார்த்தேன். புரியவேயில்லை. அவளை எதுக்கு இங்கு அழைச்சிண்டு வந்தேன்னு தெரியவேயில்லை.''

''நான் அவ வீட்டுக்குப் போக முடியாது. இன்னும் ஒரு வருஷத்துக்கு யார் வீட்டுக்கும் போகக்கூடாது. அதனாலதான்.''



''யப்பா...நான் அதைச் சொல்லலை.''

''நான் சும்மா விளையாட்டுக்குச் சொன்னேன் நடு ரோடுல சுருண்டு விழுந்துடுவா மாதிரி இருந்தது. பாவமா பட்டது. சித்தநாழி இங்கு படுத்திண்டிருக்கட்டுமேன்னு தான்.''

''அதான் வந்த உடனே சுருண்டு படுத்துண்டுடுத்தா?''

''வேற ஆள் பார்த்தவுடன் திக்குன்னுதாக்கும்.''

''வாஸ்தவம்...நீங்களும் கூட வந்தேள்ங்கற போது சமாதானமாச்சு. ஆனா உங்களுக்கு அவளைப் பாவம்னு தோணித்தே அது எப்படி? எனக்கு சீப்பா படறதே.''

''கெட்டுப் போனவள்னு அவகதை சொன்னவுடனே கதவு சந்து வழியா அவளை எட்டிப் பார்த்தது சீப் இல்லையோ.''

''ஒரு க்யூரியாஸிடி!''

''கெட்டுப் போனவ எப்படி இருப்பான்னு பார்க்கற ஆம்பளை க்யூரியாஸிடி. அடிச்சுக்க இரண்டு கை போறாது.''

''அவ பண்ணினது சரிதானா?''

''எனக்கு ஒண்ணும் அதைப்பத்தி அபிப்பிராயம் இல்லை.''

''அடெல்ட்ரி தப்பு இல்லையா?''

''தப்புதான்.''

''அவளை இப்படி சீராட்டிக் கொண்டாடுவானேன். இதோபதேசம் பண்ணி அனுப்புவானேன்?''

''வேதனைப்பட்ட மனசை என்னால முடிஞ்ச அளவு சமாதானப்படுத்தி அனுப்பினேன்.''

''சமூக சேவையா? நிஜமாகவே மதர் தெரஸா வேஷமா?''

சாவித்திரி பளிச்சென்று திரும்பி கோபாலனைப் பார்த்தாள்.

''இன்னிக்கு மதர் தெரஸா அவ்வளவு இளக்காரமா யிடுத்தா? தப்பை தப்புன்னு குத்திக் காமிச்சாத்தான் உத்தமமா? அவ பேசினது என்ன புரிஞ்சுது உங்களுக்கு? இது அவ தப்புதானா? இதுல யாருக்கும் பங்கே இல்லையா? பொம்மனாட்டியை பிடிச்சு வச்சிட்டு, நல்ல புருஷனுக்குக் கனா காண வச்சிட்டு தேர்ந்தெடுக்கக் கொஞ்சம்கூட வாய்ப்பு கொடுக்காம கட்டிப் போட்டுட்டு அறுத்துண்டா, சீப்புன்னு வாய் கூசாம சொல்ற நீங்க காரணமில்லையா?''

''அறுத்துக்கட்டும் இப்படி திருட்டுத்தனமா...

''நன்னா விடுவாளே அறுத்துக்க, 'ஆறு மாசம் பார்க்காம இரு ஆறு மாசம் பேசாம இரு ஒரு வருஷம் பொறுத்துக்கோ'ன்னு சொல்வேன். பிரிஞ்சு வந்த பொம்மனாட்டியை சீப்பும்பேள்.''

''இந்தச் சட்டம் ஆம்பளைக்கும் உண்டே.'

''சட்டம் மட்டும்தான் ஆம்பளைக்கும் பொம்மனாட்டிக்கும் ஒண்ணு, அக்ஸப்ட் பண்ணிக்கிற புத்தி மட்டும் வெவ்வேற சோஷியல் ரெகக்னிஷன் ஆம்பளைக்கும் மட்டும்தான். அறுத்துப் போனவளையே ஒதுக்கி இன்னும் வச்சிருக்கும் இங்கே.''

''எனக்கு அப்படித் தெரியலை.''

''கண்ணை இறுக மூடிண்டா தெரியாது. நாளைக்கு நான் தலையில் கூடைப் பூவை வச்சிண்டு, சுப்பையா அண்ணே சௌக்கியமா'ன்னு கேட்டா உங்க தியாகி



சுப்பையா என்ன சொல்வார் தெரியுமா? அந்த வார்த்தை நான் சொல்லப்படாது. நான் அறுத்துப் போனவோ. எனக்கு இனிமே விமோசனமே கிடையாதுன்னு இருக்கறப்போதான் தங்கச்சின்னு பாசம் பொங்கக் கூப்புடுவார். அவர் பாசம், பாசமா இருக்கணும்னா நான்மழிச்ச தலையும், நார்மடியுமா நிக்கணும். இந்த ஊர்ல எனக்கு மரியாதை என்னை நான் இப்படி இறுக்க அடிச்சுக் கறதுனாலதான். நான் உங்களை லவ் யூன்னு சொன்னேன்னு போய் கம்பெனில சொல்லுங்களேன், வீடு முழுக்க மிட்டாய் ரோலா குவியும் ''

''அசிங்கமா பேசறேன்.''

''இல்லை கோபாலன். நெஜத்தைச் சொல்றேன். அதையும் உங்ககிட்ட மட்டும்தான் சொல்வேன்.''

''நீங்கள் இப்படிப் பேசலாகாது, ஒரு பெண் கடைசி வரை தன் புருஷன் நினைவாகவே இருப்பது ஒரு கம்பீரம் அவளுக்கு அதுவே உயர்வு.'' கோபாலன் மீசையை முறுக்கிக் கொண்டு பேசினான்.

''அதை யார் தீர்மானம் பண்றது, நீங்களா? அந்தப் பெண் தீர்மானம் பண்ணனும். தன்னோட கம்பீரம் எதுன்னு அவளா யோசிக்கணும். உங்க புத்தியை அவ தலைல கல்லா ஏத்தப்படாது, யார் மாதிரியோ டயலாக் பேசினா ஆயிடுத்தா''

''சியாமளி விஷயம் வேற. வெறும் உடம்பு கவர்ச்சியோன்னு படறது.''

''அப்படினா சங்கரன் ஒழிஞ்சு பிறகு ஒரு கிங்கரனை தேடிண்டு போயிருக்கணுமே''

''போனாலும் போவாங்க.''

'கோபாலன், ஒருமணி நேரம் பேசின பேச்சை வச்சு ஒருத்தரை இப்படி எடை போடறது தப்பு. என்னைப்

பத்தியும் இப்படி உங்களுக்குத் தோணிடும் இல்லையா, ஒருநாள்.''

''நோ நோ, உங்களை எனக்குத் தெரியும்.''

''இந்த பன்னென்டு நாளாதானே தெரியும்—வெறும் முரட்டுத்தனமா பேசறதுல லாபமில்லை கோபாலன், இன்னி தேதிக்கு இந்த தேசம் மொத்தமும் உழப்பலா கிடக்கு. கட்டாந்தரையாகவும் இல்லாம, சலசலப்பா போற ஆறாவும் இல்லாம, மழை பெஞ்ச பூமியா சேற்று நிலமா கிடக்கு கிழக்கு மேற்கு வடக்கு தெற்குன்னு எல்லா பக்கமும் வாழ்க்கையும் வரது. எல்லா இடத்திலயும் மோதி எதுவும் சரியா இல்லா மூளியா கிடக்கு ஒருத்தர் கையை ஒருத்தர் ஆதரவா பிடிச்சுண்டு நடந்தா தான் நல்லது.''

''சியாமளிக்குக் கடைசியா என்ன சொன்னேள்''

''உங்ககிட்ட சொன்னதைத்தான் சொன்னேன். என்னைப் பத்திப் பேசினேன். என் தலையெழுத்து என்னவோ இப்படி ஆயிடுத்து எனக்குப் பிறகு என் குழந்தைகள் என்னைவிட நன்னா இருக்கணும். எனக்கு ஏற்பட்ட கஷ்டம் என் குழந்தைகளுக்கு வரக்கூடாது என் பிள்ளை என்னைவிட தெளிவா, சுயமா யோசிக்கிறவனா பலத்தோட வளரணும். அப்பதான் அவன் குழந்தை நன்னா வருவான்னு சொன்னேன். வாஸ்தவம் சாவித்திரி. என் பொண்ணுக்கு என் கஷ்டம் வரவே கூடாதுன்னு சொல்லிட்டுப் போனா, புரிஞ்சுதான் சொன்னாளோ என்னமோ''

''அப்போ அடுத்த தலைமுறை சுதந்திரமா இருக்க இப்பவே வித்து போட்டாச்சாக்கும்''

''வேற எதுக்குத்தான் மனுஷாளா பொறந்திருக்கறது லவ் யூ லவ் யூன்னு சொல்றது?''

''ஸரஸவாணின்னு ஒரு பொண் பத்தி படிச்சிருக்கேன், சங்கரர் கதையில். இப்பத்தான் நேர பார்க்கிறேன்.''



''போதும். எனக்கு தலைக்கு மேல வேலை கிடக்கு. யாரோ வரா மாதிரி இருக்கே. சீக்கிரம் உள்ள போயிடுங்கோ.''

வாசலில் கார் வந்து நின்றது. கல்லில் செய்திக் காகிதம் கட்டி எறிந்தவன் வண்டியைத் திறந்து இறங்கினான். பின் கதவை பயபக்தியாய் திறந்தான்.

''இந்த வீடுதானாப்பா? வெளியே கூப்புடு கோபாலனை. ஒட்டு மொத்தமா உள்ள போனா பயப்படப் போறாங்க.''—கனமாய் ஒரு குரல் கேட்டது.

சாவித்திரி கதவுகளை மடமடவென்று அகலத் திறந்துவிட்டு ஸ்டோர் ரூம்பக்கம் ஓடினாள். உள்ளே சுவரோரமாய் நின்றிருந்த கோபாலனைப் பார்த்து ''கங்கிராஜுலேஷன்'' என்றாள்.

''அப்ப நாங்க போயிட்டு வரேங்க.'' கம்யூனிஸ்ட் கட்சி எம்.எல். கை கூப்பினார். கூடத்தில் உள்ள காப்பி தம்ளர்களை ஜாக்கிரதையாய் தாண்டிக்கொண்டு உள்ளே வந்தவர்கள் வாசலை நோக்கி நடந்தார்கள். ''யூனியன் உங்களுக்கு ரொம்ப கடமைப்பட்டிருக்கு மிஸஸ் கணேசன். எங்க தலைவரை இத்தனை கஷ்டத்துலவும் பத்திரமா காப்பாத்தினதுக்கு நாங்க எல்லோரும் கடமைப்பட்டிருக்கோம். நம்ம தோழர் சங்கரன் உங்களை விசாரித்ததா சொல்லச் சொன்னாரு. காத்தால தான் விடுதலையானோம். நான் இப்படி வந்தேன், அவர் வீட்டாண்ட போயிருக்காரு. தலைவரே போகலாமா?''

கோபாலன் மௌனமாய் நடந்து அவர்களோடு சேர்ந்து கொண்டான் வாசல்வரை நடந்தான். எல்லோரும் வெளியே போனபின், மெல்லத் திரும்பி சாவித்திரியைப் பார்த்தான். அன்பும் ஸ்நேகமும் கண்களில் பொங்க, மலர்ச்சியுடன் முறுவலித்தான். மிருதுவான குரலில் ''தேங்க்யூ'' என்றான்.

அலுவலகம்

சாவித்திரி லேசான வெட்கத்துடன் தரையைநோக்கினாள். அவன் முகத்தைப் பார்க்காமல் கரங்கூப்பினாள். அவன் கார் ஏறிப்போன பிறகு மெல்ல நடந்து கணேசன் படத்திடம் போனாள். விழியில் நீர் தளும்ப அதை வெறித்துப் பார்த்தாள். படச்சட்டத்தின் விளிம்பில் மெல்ல முத்தமிட்டாள். அதில் முகத்தைப் பதித்துக் கொண்டு 'ஐ லவ் யூ கணேசன்' ஐ லவ் யுவர் ப்ரெண்ட்ஸ் என்றாள்.

காபி தம்ளரைக் கீழே வைத்துவிட்டு அடுப்பைப் பார்த்தபடி உட்கார்ந்திருந்த சியாமளியின் தோளை தண்டபாணி லேசாய்த் தொட்டான்.

''ஏன் ஒரு மாதிரியா இருக்கே? கேட்டா பதிலே சொல்லமாட்டேங்கறே, நேத்திக்கு போலீஸ் ஸ்டேஷன் போனியாமே. சங்கரனைப் பார்த்தியா? ரொம்ப அடியாமே மன்னி சொன்னா கேட்கிறபோதே பயம்மா இருக்கு முதுகு இடுப்பு எல்லாம் வரிவரியா இருக்காமே. ரொம்ப அடியா? எப்படித்தான் நீ போலீஸ் ஸ்டேஷன் உள்ளே போனியோ? எனக்கு பயம்பா முரட்டுப் பசங்க நேத்திக்கு எவனோ பிக்பாக்கட்டை பிடிச்சுட்டான் கும்பல்ல, போலீஸ்காரன் போட்டு அவனை மிதிக்கிறான் பாரு. யம்மா கலங்கியே போச்சு எனக்கு. என்ன சியாமளி ரொம்ப அடியா நம்ம சங்கரனுக்கு?''

சியாமளி மெல்ல நிமிர்ந்து அவனைப் பார்த்தாள். ஆமென்று தலையசைத்தாள். ''நான் இன்னிக்கு மத்தியானம் அவாளுக்குச் சாதம் எடுத்துண்டு போறேன். சங்கரோட இன்னும் ஆறுபேர் லாக்கப்பில் இருக்கா''

''நீ போ தாராளமா போ. சங்கரன்யாரு? நம்மாத்து பையன். எவ்வளவோ உதவி மன்னியும் சங்கரனும் நமக்கு. நிச்சயமா போ. நிறைய எடுத்துண்டு போ. நான் கேண்டீன்ல பார்த்துக்கறேன். அந்நியமா? வேத்து



மனுஷாளா? அப்படி எடுத்துண்டு போலாமா? பர்மிஷன் வாங்கிட்டாயா? உள்ளங்கால்ல லத்தில அடிக்கிறதாமே, என்னமோ லாடங் கட்டறதுன்னாளே.''

''கேண்டீன் எதுக்கு? உங்களுக்கு வழக்கம் போல காத்தாலேயே கொடுத்துடறேன்.''

''அறிவு கெட்டவளே எனக்கெதுக்கு மெனக்கெடறே? பாவம். அடிவாங்கி தவிக்கிறான் அவனுக்கு வேணுங்கறத பண்ணுவியா? ஒரு நாள் நான் கேண்டீன்ல சாட்பிட்டா என்ன? உனக்கு ஜுரம்ன போது நாலுநாள் டாக்டர் கிட்ட ஓடி மருந்து வாங்கிண்டு வந்தவனில்லையா சங்கரன்? அந்தமருந்துக்குக் காசு வாங்கிக்க மாட்டேன்னுட்டான் தெரியுமோ எவ்வளவோ சொன்னேன் கடைசி வரைக்கும் வாங்கவேல்லையே அவனுக்கு உதவி பண்ணினா என்ன? நீ சாதம் எடுத்துண்டு இப்பவே வேணாப் போ. நான் குழந்தையைப் பார்த்துக்கறேன். உடம்பு முழுக்க பிரம்படின்னா சாதாரணமா என்ன? நான் கேண்டீன்ல சாப்பிட்டுக்கறேன்.'—தண்டபாணி துண்டை உதறித் தோளில் போட்டுக் கொண்டு குளிக்க போனான்.

சியாமளிக்கு அவன் பதட்டம் மெல்லிய சிரிப்பைக் கொடுத்தது. இவனுக்குச் சல்லாபிக்கவும் தெரியாது. சந்தேகப்படவும் தெரியாது. வெகுளி சராசரி போக்கிரித்தனமும் தெரியாது போலீஸ் ஸ்டேஷனும் தெரியாது இவனிடம் நான் வீட்டை விட்டுப் போறேன் என்றால் இற்று விழுந்து விடுவான் தூள் தூளாய் நொறுங்கி விடுவான். குழந்தையைக் கட்டிக் கொண்டு மன்னியைப் பார்த்துக் கதறுவான் காலம் முழுக்க தாடி வளர்த்துக் கொண்டு அழுது தீர்ப்பான் என் குழந்தை அழுது விசும்பும் தகப்பனிடம் வளர்ந்து மனசு முடங்கி போகும். என்னைவிட மோசமான மனநிலைக்கு ஆளாகிவிடும். யாரிடமும் மனசுவிட்டுப் பேசாமல் உள் காயத்தோடு வளரும். தன் குழந்தைகளை, சின்ன தவறுக்கும் கடுமை

யாய் தண்டிக்கும். இந்தக் குழந்தைக்காகவாவது பேசாமல் மௌனமாய் இருந்துவிட வேண்டும். நேர்ந்த வரை போதும். எனக்குக் கிடைக்கவில்லையே என்று எல்லோரையும் சித்திரவதை பண்ணிவிடாமல் இருந்து விட்டுப் போய்விட வேண்டும். ஆறு பேருக்கும் சாதம் பண்ணி ஸ்டேஷன் வாசலில் வைத்து விட்டு வெளியே நின்று விட வேண்டும்.

''சியாமளி, சியாமளி, சங்கரன் வந்துட்டான்... சங்கரன் வந்துட்டான்.'' வெளியே தண்டபாணி குரல் கேட்டது. திபுதிபுவென்ற ஓட்டத்தோடு 'இங்க வாயேன்' என்று கூவி மறைந்த தண்டபாணியின் மலர்ந்த முகம் அறைக்குள் தெரிகிறது.

சியாமளி எழுந்து சுவரருகே போனாள். வலது கரத்தால் இறுக அணைத்து மெல்ல சங்கரனை உள்ளே கூட்டி வரும் தண்டபாணியைப் பார்த்தாள். அவனைக் கூடத்தில் உட்கார வைத்து மின்விசிறியை ஓடவிட்டு, தோளில் போட்டிருக்கிற துண்டைப் பிரித்து சங்கரன்மீது போர்த்தி ''நல்ல ஜுரம் இருக்கு சங்கரா உடம்பு ரொம்ப சுடறதேப்பா.'' என்று பதட்டப்படுகிற கணவனைப் பார்த்தாள்.

''சியாமளி சித்த இவனைப் பார்த்துக்கோ. மன்னி பின்பக்கம் போயிருக்கா போல இருக்கு. நான் போய் டாக்டரைக் கூட்டிண்டு வரேன்.'' என்று அரற்றினவனை சோகத்துடன் பார்த்தாள்

உள்ளே நகர்ந்து கண்களை மூடிக் கொண்டாள். மறுபடி திறந்து தண்டபாணியின் சட்டையை எடுத்து வெளியே வந்தாள். செருப்பைக் கொண்டு வந்து கூடத்தில் வைத்தாள். 'போய் டாக்டரைக் கூட்டிண்டு வந்துட்டு சட்டுன்னு குளிச்சுடுங்கோ சமைச்சு வைச்சுடறேன் நல்ல வேளை, நீங்க கேண்டீன் போக வேண்டாம்'' என்றாள். தண்டபாணி நகர்ந்ததும் தன் போர்ஷன் கதவை மூடிக் கொண்டாள்.

# 32

மூடின கதவைப் பார்த்து சங்கரன் மெல்ல சிரித்தான்.

கதவை மூடினதில் வேகம் இல்லை ஆத்திரம் இல்லை. அலட்சியம் தெரியவில்லை. அவமானப்படுத்த வேண்டும் என்ற எண்ணமில்லை. ஆனால் அறுத்து எறிந்தது தெரிந்துபோயிற்று இனி சியாமளி ஏறெடுத்தும் பார்க்க மாட்டாள் என்பது புரிந்து போயிற்று.

இதுதான் வலி இதுதான் துக்கம். இதுதான் வேதனை உறவு அறுந்து போகும் வேதனை. முறிந்து போகும் மனதின் தவிப்பு சுமுகமாய்ப் பிரிவது என்பது நமக்குத் தெரியவில்லை. இதில் நானும் சேர்த்தி. மனசை காயப்படுத்தாமல், பிறர் நெஞ்சைக் குத்திக் கிழிக்காமல் 'ஸோலாங்' என்று கையசைத்துவிட்டுப்போகும் நளினம் வரவேயில்லை இதற்கெல்லாம் பழக்கப்படுத்தப்படவில்லை பிடிக்காது போனால் என்ன, மதிக்காமல் போக வேண்டுமா? போலீஸ் ஸ்டேஷன் வரை வந்து, ஆறு காஃபி வாங்கிக் கொடுத்த பெண்ணுக்கு வெளியே வந்து நன்றி சொல்லத் தெரியவேண்டாமா? பயம் நன்றி சொன்னால் ஒட்டிக்கொண்டு விடுவோமோ என்ற பயம். ஓடுவது என்பதற்கு மறுபடியும் பதுங்கிப் பதுங்கிச் சில காரியங்களைச் செய்யவேண்டுமே என்கிற பயம். மறைந்து மறைந்து பேசி இருட்டோடு இருட்டாய், நகர்ந்து சருகு அசைந்தாலும் பயந்து நடுங்கி வியர்த்து, இத்தனை இம்சைக்கும் நடுவே 'ஐ லவ் யூ' என்று சொல்ல வேண்டாமோ என்கிற எண்ணம்.

இத்தனை பயத்தில் சொல்லும் 'ஐ லவ் யூ' அர்த்தமற்றது என்கிற எண்ணம். வாஸ்தவம், இத்தனை நாள்

சியாமளியிடம் சொன்ன 'லவ் யூ' அர்த்தமற்றதுதான். 'லவ்' என்பதே என்ன என்று தெரியாமல் சொன்னதுதான். இரண்டு பேருக்கும் ஒரே சினிமாப் பாட்டு பிடித்திருக்கிறது. இரண்டு பேருக்கும் ஒரே ராகத்தில் ஈடுபாடு இருக்கிறது. இரண்டு பேருக்கும் கொஞ்சம் இலக்கியம் தெரிந்திருக்கிறது. இவை போதுமா லவ் பண்ண; ஈடுபாடு ஒன்றாய் இருந்தால் அடுத்த வார்த்தை லவ் தானோ? இதே சியாமளி ஆணாய் இருந்தால் நல்ல நண்பனாய் 'ஹலோ' என்று சொல்லும் ஆளாய் இருந்திருப்பாள் இல்லையா? பெண்ணாகிப் போனதால் ஈர்ப்பு வந்துவிட்டது. எதிர் எதிர் உலகம் இழுத்து விட்டது. இத்தனை மிருதுவா உன் கை உடம்பு. உதடு என்ற ஈர்ப்பு. யம்மா இவ்வளவு உரமா உன் உடம்பில், என்ற ஈர்ப்பு. ஈர்த்தது தவறில்லை. இது விதி. இயற்கை ஈர்க்கும்படியே படைக்கப்பட்டிருக்கிறோம் என்பது உண்மை.

ஈர்ப்புக்கு அப்பாலும் யோசித்திருக்க வேண்டும். 'லவ் யூ' என்று சொன்னபோது பொருள் உணர்ந்திருக்க வேண்டும். உண்மையிலேயே சியாமளியைக் காதலித்தால் அவளை இவ்வளவு இம்சித்திருக்க மாட்டேன். தவறு என்னுடையது. அவள் இடத்திலிருந்து அவள் பலவீனம் வழியாய் அவளைத் தெரிந்து கொண்டிருப்பேன் வரமுடியாது போனதில் விவரம் புரிந்து கொண்டிருப்பேன், இவ்விதப் பிரிவை, பெருங்குற்றத்தை சமுதாய மீறலை இவள் தாங்க முடியுமா என்று யோசனை செய்திருப்பேன். என்னுடையது காதல் இல்லை. கவர்ந்து கொள்ளும் வெறி, உடமையாக்கிக் கொள்ளும் எண்ணம் அவனுக்குப் பிடிக்கிறது என்று தெரிந்ததும் இரண்டு கவிதை அதிகமாய் எழுத மனசு யோசனை செய்கிறது. இன்னும் எப்படி இம்ப்ரெஸ் பண்ணலாம் என்று புத்தி போகிறது, தன்னைப் பத்தி



கவிதை எழுதுபவனை கண் விழித்து இரவில் அந்தப் பெண்ணை யோசிக்கும்படி செய்கிறது. மனதை கலைக்கிறது.

சகல நேரமும் நான் கவிதை எழுதிக் கொண்டிருப்பேனா, நானும் தட்டுத் தூக்கி அடிக்கிற நேரம் வரும். என் முகமும் முரட்டுத்தனமாய் மாறும். என்னை சியாமளி இடித்துப் பேசும்படி நேரிடும்,

சியாமளி இனிமையானவள், புத்திசாலி அழகி அத்தனையும் வீணாகி விடுமோ என்றபயம் வந்து விட்டது அவளுக்கு. பாராட்டத் தெரியாதவனோடு கடைசி வரை காலம் தள்ளிக் காணாமல் போய்விடுவோமா என்று ஏக்கம் வந்துவிட்டது, தன்னை அறிந்துகொள்ள வேண்டும் என்ற ஆசை வந்துவிட்டது. பாராட்ட ஆள் கிடைக்காவிட்டால் முடிந்து போயிற்றா? பாராட்டுப் பெறுதல் மட்டுந்தான் வாழ்க்கையோ? 'போதும் பாராட்டினது என்று ஒரு நாள் இரண்டு பேருக்குமே தோன்றி விடாதா பிறகு வாழ்க்கை என்ன ஆகும்' யோசிக்கவில்லை நானும் யோசிக்கவில்லை. அவளும் யோசிக்கவில்லை இதமாய் இணை தேடிக்கொண்ட பரபரப்பில் லயித்து விட்டோம் நிதானமாய் நிறுத்தி பயமின்றி இதை விவாதிக்க இடம், நேரம் கிடைக்காததால் ஓடிப் போய் விடலாம் என்று முடிவு எடுத்து விட்டோம். ஓடிப் போன பிறகு நேரம் நிறையக் கிடைக்கும் நிறைய விவாதம் வரும் விவாதம் பண்ணப் பண்ண அசல் முகம் தெரியும். அப்போது படுகிற வேதனை இருக்கிறதே இன்று படுகிற வேதனைக்கெல்லாம் சிகரமாய் இருந்திருக்கும்.

முடிந்து விட்டது.

நெஞ்சில் ஒரு வடுவாய் இது விழுந்து நிலைத்து விட்டது. சாகிற வரையில் மறைக்க முடியாதபடி அமைந்து விட்டது.

இந்த ஸ்டிரைக், இந்தக் கதவடைப்பு இல்லாதிருந்தால் இது நடந்திருக்காது குறுகின காலத்துக்குள் புயல் அடித்து ஓய்ந்த மாதிரி என்னென்னவோ நடந்து விட்டன. மனசும் புத்தியும் வேரோடு சாய்ந்து வெள்ளமாய் நிகழ்ச்சிகளில் சிக்கி வலுவற்றுக் கிடக்கின்றன. மறுபடி துளிர்க்குமோ மரமாய் வளருமோ? தெரியவில்லை.

ஆனால் புயலோய்ந்த அமைதியாய் கிடக்கிற இந்த நேரம் உன்னதமானது. இப்போது மனதை ஒருமுகப்படுத்தி உட்கார்ந்து கொள்ள வேண்டும். இன்னார்தான் காரணம் என்று கைநீட்டிக் குற்றம் சாட்டாமல் நல்லதுக்குத்தான் நடந்தது என்று அமைதிப்படுத்திக் கொள்ள வேண்டும். யார் மீதும் கோபம் கொள்ளாமல் இருக்க வேண்டும்.

சங்கரன் கழுத்தைப் பின்னுக்குத்தள்ளி, விட்டத்தைப் பார்த்தான். மன்னி இந்தக் கொடியில்தான் சுருக்கு மாட்டிக்கொண்டாள் போலிருக்கிறது. 'என் கிட்டேர்ந்து எப்படிடீ பிரிப்பே' என்று சத்தம் போட்டாளாம். இதில் மட்டும் ஒரு தவறு தெரிகிறது. சியாமளி இல்லாது போனா எவளோ ஒருத்தி பிரித்துப்போகிறாள். பிள்ளையின் தலையில் உட்கார்ந்துகொண்டு அவன் பெண்டாட்டியை விரட்டுகிற தவறு. என் புள்ளை எனக்குக் கீழ்ப்படிந்து நடப்பான், அவனுக்கு உண்டான நீ எனக்கும் அடங்கு என்கிற தவறு. அடக்கிவைக்கிற ஆனந்தம், எல்லா அம்மாக்களும் செய்கிற தவறு. இயல்பாய் சுதந்திரமாய் விட மறுக்கும் குணம், பாசக் கொக்கியில் சிக்க வைத்து துடிக்கப் போடும் எண்ணம்.

இனி மன்னியோடு உள்ள உறவும் போதும்.

''சங்கரா வந்துட்டியாப்பா?'' —மன்னி பின்பக்கத்திலிருந்து ஓடி வந்தாள். நெற்றியில் கைவைத்துப் பார்த்தாள். ''காபி தரட்டுமா'' என்று கேட்டாள்,



சங்கரன் பதில் சொல்லாது உட்கார்ந்திருந்தான், மனிதர்களுக்கு நடுவே இருந்தும் தனித்துப் போனதாய் ஒரு உணர்வை அடைந்தான் காபி இப்போது சாப்பிட்டாலும் ஒன்றுதான். சாப்பிடாது போனாலும் ஒன்றுதான் என்கிறதாய் நினைத்தான் மறுபடி மனிதர்கள்மீது கீறிக் காயப்படுத்துவதைவிட மௌனமாய் இருந்துவிடுவது உத்தமம் என்று முடிவு செய்தான்

மன்னி சமையலறைக்கு ஓடினாள். பாத்திரங்கள் ஓசைப்பட்டன. 'பிறந்த நாள்... இன்று பிறந்தநாள்...'' சிலோன் கரகரப்புடன் எக்காளமிட்டது.

நாராயணஸ்வாமி கம்பிக் கதவைத் திறந்துகொண்டு உள்ளே எட்டிப் பார்த்தார் வழிநடையைத் தாண்டினார் ஹாலுக்குள் நுழைந்து சங்கரன் அருகே வந்தார், அவன் தோளைத் தொட்டார்

''சங்கரா. ஒரு இரண்டாயிரம் ரூபா வேணும்பா போலீஸ் ஸ்டேஷன்லேர்ந்து வந்துட்டேன்னு கேள்விப்பட்டதும் உடனே கிளம்பிட்டேன். ஒரு இரண்டாயிரம் ரூபா வேணும்பா. பொண்ணு கல்யாணம் நின்னுடும் போல் இருக்கு கல்யாணத்துக்கு முதல் நாள்தான் எதிர்ஜாமீன் குடுக்கறதா பேச்சு இப்ப நிச்சயதார்த்தத்துக்கே மொத்த காசும் குடுன்னு குதிக்கிறான் புரோக்கர். பொண்டாட்டி நகையை வச்சு இரண்டாயிரம் எடுத்தேன். இன்னும் இரண்டாயிரம் வேணும்பா, காசு இல்லேன்னு கல்யாணம் நடக்காதுன்னு சொல்வா. நிச்சயதார்த்தமே நின்னுடும்போல இருக்கே. இரண்டாயிரம் இருக்குமா உங்ககிட்ட? கம்பெனி திறந்ததும் கொடுக்கறேம்பா. லோன் போட்டிருக்கேன். கிடைக்கும். இப்பத்தான் எல்லாரையும் விடுதலை பண்ணிட்டானே சீக்கிரம் தொறந்துடுவான் கம்பெனி. என்ன சொல்றே? தொறக்க மாட்டானா இரண்டு நாள்ல. ஒரு இரண்டாயிரம் கொடுப்பா. எனக்கு வேறு யாரையும் தெரியல. நீதான் உதவி பண்ணனும்''

மன்னி எட்டிப் பார்த்தாள். ''யார் நீங்க? குழந்தை இப்பத்தான் ஸ்டேஷன்லேர்ந்து வந்திருக்கான். உடம்பு உடம்பா இல்லை. என்ன வேணும் உங்களுக்கு?'' அதட்டின குரலில் பேசினாள்.

''வரகூர் பையன். தனியா மளிகைக் கடை வச்சிருக்கான். ஜாதகம் பொருத்தியிருக்கு, மூவாயிரம் எதிர் ஜாமீன் கேட்டா. சரின்னுட்டேன். இப்ப திடீர்னு மொத்தக் காசும் நாளைக்கே நிச்சயதார்த்தத்துக்கு வேணும்னுட்டா என்ன பண்றது, யாரைக் கேட்கறது ஒன்றும் புரியலை... சங்கருக்கு என்னைத் தெரியும், அவனால் குடுக்க முடியும்னு எனக்குத் தெரியும். நாளைக்கே வேணும். அதான் அடக்க முடியாம உடனே கேட்டுட்டேன்.''

''அடிச்சு நொறுக்கியிருக்கா ஸ்வாமி அவனைப் போலீஸ்ல.''

''அது கிடக்கும்மா. இவன் இதையும் தாங்குவான் இதுக்கு மேலயும் தாங்குவான். வாலிப வயசு. இவர் முன்னாடி நிக்காம, இப்ப இந்த மாதிரிப் போராட்டம் பண்ணாம என்னிக்குப் பண்றது. வலிக்கிறதா, வலிக்கறதான்னு கேட்டாதான் வலிக்கும். என்ன சங்கரா நான் சொல்றது சரிதானே?''

சங்கரனுக்கு நாராயணஸ்வாமியின் குரல் வேகம் பிடித்திருந்தது. நேரடியாய் தயக்கமின்றி, பீடிகையின்றி, பொய்யின்றிச் சட்டென்று பேசியது பிடித்துப் போயிற்று.

''உட்காருங்கோ நாராயணஸ்வாமி.''

நாராயணஸ்வாமி சட்டென்று தரையைத் துண்டால் தட்டி ''ஈஸ்வரா'' என்று உட்கார்ந்து கொண்டார்.

''இதென்ன கீழே உட்கார்ந்துட்டீங்க. சேர்ல உட்காருங்க சார்.''

''அட வேணாம்பா. இதுதான் சௌகர்யம். கால் வலிக்காம இருக்கும்.''



மன்னி காஃபி கொண்டு வந்தாள். சங்கரன் அதை நாராயணஸ்வாமியிடம் கொடுத்தான். ''அது உனக்கு சங்கர்... நான் அவருக்கு வேற போடறேன்'' சங்கரன் பதில் சொல்லாது அவரையே பார்த்துக்கொண்டிருந்தான்.

''சொல்லுங்க. என்ன வேணும்?''

''இருப்பா. காஃபி குடிச்சுட்டு வரேன்.'' —நாராயணஸ்வாமி நிதானமாய் ஆற்றி காபி குடித்தார். உதட்டைத் துண்டால் துடைத்துக்கொண்டு டம்ளரை நகர்த்தினார்.

''ஒரு இரண்டாயிரம் ரூபா வேணும் சங்கர்.''

''இரண்டாயிரம் குடுத்தா சரியாயிடுமா?''

''இப்போதைக்கு நிச்சயதார்த்தம் நடந்துடும்''

''மூத்த பொண்ணுக்கா?''

''ஆமாம்பா,''

''ஜலம் கொண்டு வந்து கொடுத்தாளே. அந்தப் பொண்ணா?''

''ஆமா துரை. இருபத்துமூணு வயசு மார்ச்சோட முடிஞ்சாச்சு. எத்தனை நாள் வச்சுக்க முடியும் வீட்டோட சொல்லு?''

''சரி...மேற்கொண்டு செலவுக்கு...?''

''இப்படி வீடு வீடா யாசகம் போக வேண்டியதுதான்.''

''எவ்வளவு யாசகம்?''

''பத்தோ பதினைஞ்சோ.''

''கிடைக்கலேன்னா?''

''கிடைக்காமப் போகாது சங்கர்.''

''குறைஞ்சுதுன்னா...''

"சரி, இவ்வளவுதான்னு சொல்லி கிடைச்சதுல முடிக்க வேண்டியதுதான்."

"கல்யாணம் சரியா நடத்தலைன்னு கோவப்பட்டாங்கன்னா?"

"பட்டுக்கட்டும்."

"உங்க பொண்ணுக்குக் கஷ்டமில்லையா?"

"பட வேண்டியதுதான். தாலி கட்டியாச்சு. அவ இனி உன் ப்ராபர்டின்னு சொல்லிட்டு, அவளை மாப்பிள்ளைகிட்ட அனுப்பிச்சிடுவேன். அவ பாடு. அவ தலையெழுத்து."

"இப்படி ஒரு கல்யாணம் அவசியமா?"

"என்னிக்குப் பண்ணினாலும் இப்படிப்பட்ட கல்யாணம்தான். நாலு வருஷம் பொறுத்தா இன்னும் நல்லபடி ஆயிடுமா கல்யாணம்?"

"தெரிஞ்சே உங்க குழந்தையை இப்படித் தள்றேளே."

"வேற வழியில்லை சங்கர்"

"இதுக்குக் கல்யாணமே பண்ண வேண்டாம் சார்."

"வேலைக்குப் போற அளவுக்குப் படிக்கலை படிப்பு வரலை. பாட்டு தையல்னு கொஞ்ச நாள் போனா, அதுவும் சரிப்படலை. சரிப்படலை என்ன, எனக்கு அதுக்கும் காசு கொடுக்கக்கூட முடியலை. வீட்டோட இருக்கா வெறும் பொண்ணா. கல்யாணம் பண்றதுதான் வழி."

"இது ரொம்ப பாவம் சார்."

"பாவம்தான், இல்லேன்னா எனக்குப் பொண்ணா பெறேக்குமா?"

"நாராயணஸ்வாமி."

"என்ன?"



"பணம் இல்லாட்டா நிச்சயதார்த்தம் என்ன ஆகும்?"

"நின்னு போகும் வெறும் கேசரி, மிச்சர் தின்னுட்டு எழுந்து போயிடுவான்."

"போகட்டும் விடுங்கோ!"

"நல்லா இடம்பா, சொந்த மளிகைக் கடை வச்சிருக்கான் இரண்டாயிரம் கொடுப்பா, மாட்டேன்னுடாதே."

"மாட்டேன்னு சொல்லலை; நானே பண்ணிக்கிறேன்னு சொல்றேன்."

"என்ன? என்ன?"

மன்னி திரும்பினாள், வாசற்படியில் நுழைந்தபடி சங்கரனை உற்றுப் பார்த்தாள்.

"ஜாதகம் பார்க்காம—வெறும் மனுஷா நம்பிக்கையில் உங்களுக்குக் கல்யாணம் பண்ண விருப்பமுண்டானால் உங்க பெண்ணை நான் பண்ணிக்கிறேன்! அவளை நான் பார்த்திருக்கேன். அவளும் என்னைப் பார்த்திருக்கா அவகிட்ட போய் கேளுங்கோ. உங்க வீட்ல போய் கன்ஸல்ட் பண்ணுங்கோ. உங்க பொண்ணை எனக்குப் பிடிச்சிருக்கு. என்கிட்ட கொஞ்சம் காசு இருக்கு ஸிம்பிளா முடிப்போம்."

"மன்னி, உங்க மன்னி அண்ணா! என்னப்பா சொல்ற நீ?"

"அவர் எனக்கு மன்னி அண்ணாதான் அப்பா அம்மா இல்லை. நான் மேஜர், எனக்கு என் கல்யாணம் பத்தி ஒரு அபிப்பிராயம் உண்டு. யோசனை பண்ணிட்டு வாங்கோ. இரண்டாயிரம் ரூபா காசு வேணும்னாலும் சரி, மாப்பிள்ளையா நான் வேணும்னாலும் சரி. உங்களை, உங்க வீட்டை எனக்குப் பிடிச்சிருக்கு. நேரிடையாப் பேசற உங்களை, மேல் பூச்சு இல்லாம

இருக்கற உங்களை எனக்குப் பிடிச்சிருக்கு. யோசனை பண்ணிட்டு வாங்கோ.'' சங்கரன் மெல்ல மாடிக்கு நடந்தான்.

''அவர் கோத்திரம் கேட்க வேண்டாமா?'' மன்னி மறித்தாள்.

''சகோத்திரம் இல்லையம்மா; வேற கோத்திரம் எனக்குத் தெரியும். ஆனா இப்படி தடேல்னு சரிங்கறாளே?''

''அவன் சின்னப் பையன்!''

''இல்லைம்மா, ரொம்பப் பெரியவன்.''

''உங்க பொண்ணை சரின்னுட்டானே அதுனாலையா?''

''எம்பொண், கிடக்கா எவ்வளவு யோசனை பண்ணியிருந்தா இவ்வளவு திடமா இந்த வார்த்தை சொல்ல நேர்ந்திருக்கும் அவ்வளவு யோசனை பண்ண இந்த வயசுல வேதனை எவ்வளவு வந்திருக்கும்?''

''நீங்க சொல்றது புரியலை!''

''புரியாதம்மா நீங்க குறுக்க நிக்காம இருக்கணும். என் பொண்ணுக்கு நல்ல பையன் கிடைச்சுட்டான். நீங்க மாட்டேன்னு தடை பண்ணாம இருக்கணும்.''

''அவன் அப்படிப் பேசக் காரணம் இருக்கு.''

''எது வேணும்னா இருக்கட்டும். நீங்க தடங்கல் பண்ணிடாதீங்கோ!

''அதைக் கேட்டா அவனை மாப்பிள்ளையாக்கிக்கத் தோணாது!''

''கேட்க வேண்டாம்!''

''பொண்ணைப் பெத்தவராச்சே. நாலும் தெரிய வேண்டாமா புள்ளையப்பத்தி?''



''வேண்டாம். நானும் பிள்ளையா, வாலிபமா, இருந்தவன்தான். ஒன்னும் கேட்க வேண்டாம்.''

''முன்னமே பேசி வச்சுண்டு வந்திருக்கிரோ?''

''எனக்கே இப்ப அப்படித்தான் தோணறது. எந்த ஜன்மத்திலியோ நாங்க இரண்டு பேரும் ஒற்றுமையா இருந்திருக்கோம். அது இப்ப உறவா திரும்பறதுன்னு படறது.''

''பின்னால் வருத்தப்படுவீர்.''

''நான் அப்பப்ப பட்டுடறவன் தாயே. நிதானமா வருத்தப்படறது சந்தோஷப்படறது இல்லை என்கிட்ட.''

''உங்க விலாசம் என்ன?''

''தரேன் அவசியம் வரணும் மாமாவைக் கூட்டிண்டு வரணும். இன்னிக்கு நாள் நன்னாயிருக்கு சங்கரையும் கூட்டிண்டு வரணும்.''

''பெண் பார்க்க வராமாதிரிதான் வருவோம்.''

''நான் யாருக்கும் வேதனை கொடுத்தவன் இல்லையம்மா. என் பொண் சாது. அவளும் யாரையும் நோகப் பண்ணினவள் இல்லை. அவளுக்கு நல்ல புருஷன் கிடைப்பான்.''

''ரொம்ப நம்பிக்கையோட பேசறீர்.''

''பூமியில் நடக்கிற சகலமானதும் நல்லதுக்குத் தான்னு நான் நம்பறேன். அதனாலதான் எத்தனை பாரமிருந்தாலும் நிம்மதியா தூங்கறேன்''

சங்கரன் பெண் பார்க்கப் போக மறுத்து விட்டான். அந்தப் பெண்ணும் நாராயண ஸ்வாமியும் சரியென்றால் போதும் என்று சொல்லி விட்டான் பிரைவேட் நர்ஸிங் ஹோமில் போய்ச்சேர்ந்து மூன்று நாள் ரெஸ்ட் எடுத்துக் கொண்டான். சிகிச்சை செய்து கொண்டான். இன்னும் ஒரு வாரத்தில் கம்பெனி திறக்கும் என்று பேப்பர்

சொல்லிற்று. திருவல்லிக்கேணி பண்டாபீஸ் சத்திரம் மலிவாய் கிடைத்து விட்டதென்று நாராயணஸ்வாமி சொன்னார். கலியாணத்திற்கு முதல் நாள்வரை சியாமளி அவன் கண்ணில் தென்படவேயில்லை. பெரிய பெரிய மாக்கோலங்கள் மட்டும் ஒவ்வொருதெளிவிலும் அவளின் நீண்ட கூர்மையான விரல்களை நினைவுபடுத்தின.

## 33

"அம்மா குழந்தே, வலது கையைத் தாமரை மொக்கு மாதிரி வச்சுக்கோ. நாராயணசுவாமி, இங்க வா மாப்பிள்ளை கையை பிடிச்சு உன் பொண்கிட்ட கொடு காசிக்கு படிக்க. உன் பொண்ணை கல்யாணம் பண்ணிண்டு இங்கேயே சௌக்கியமா குடித்தனம் நடத்தறதா வாக்கு வாங்கிக்கோ. சங்கரா, குவிச்ச கையை ஒட்டு மொத்தமா அத்தனை விரல்களைச் சேர்த்துப் புடி. கெட்டி மேளம், கெட்டி மேளம், கெட்டி மேளம், சொல்லுங்கோ."

வயிற்றுக்குள் முரசு அதிர்ந்து ஏதோ ஒன்று குழம்பி மேலே நெஞ்சு மத்தியில் வெடித்து மார்பு முழுக்கப் பாவிற்று. புருவத்துக்கு அருகில் மெல்லிய வலி ஒன்று மீட்டிற்று. மருதாணி இட்டுச் சிவந்த கையை சங்கரன் இறுக்கிப் பிடித்துக் கொண்டான்.

தன் எதிரே தலை குனிந்து நிற்கும் பெண்ணை வியப்பும் வேதனையுமாய் பார்த்தான்.

'ரீயா?"

"இனி, நீதானா?"

"நான் இங்கே பிறந்து, வளர்ந்து, ஓடி வாலிபனாகி திமிர் பிடித்துத் திரிந்து, வளைய வந்தது உனக்காகத் தானா? நீதான் என் துணையா? நீதான் என் மனைவியா நீதான் உடற்பாகமா? பகுதியா? சகதர்மிணியா?

"யார் நீ"

"யாருடைய மகள்?"

"எதற்காகப் பிறந்திருக்கிறாய் இங்கே?"

"என்னைக் கருதியா?"

"எனக்காகவா?"

"என் வரவு ஒன்றே லட்சியமாகவா? செம்புலப் பெயர் நீர் போல் என்னோடு கலப்பதற்கா? யார் நீ பெண்ணே? எந்த ஜென்மத்து உறவு இது? என்ன கடன் பட்டு இப்படி கணவன் மனைவியானோம்? எத்தனை யுகங்கள் இப்படி ஒருவரை ஒருவர் தொடர்கின்றோம்? யார் கோடு போட்டு நம்மைச் சேர்த்தார்கள்? எது பிணைத்துப் போட்டது நம்மை"

அந்தப் பெண்ணுக்கு அருகே அமர்ந்து தாலி கட்டி அக்னியின் எதிரே கைகூப்பி வலம்வந்து அம்மியை அவள் மிதித்த பிறகு அருந்ததி காட்டி... எந்த ஒரு நேரத்திலேயும் இவளை ஏன் தீர்க்கமாய் பார்க்க முடியவில்லை என்னால்? காதலுமின்றி, காமமுமின்றி இப்படி வெறுமையாய் உட்கார்ந்திருக்கிறேனே ஒரு பெண் பக்கத்தில், எப்படியாயிற்று இது எனக்கு. இது நல்லதா? எனக்கு உள்ளே உத்தமம்தானா?

ஒருவேளை இன்று பார்க்காது போனால் என்ன.

நாலு நாள் கழித்து நாள் பூரா இவளைப் பார்க்கப் போகிறோமே என்ற நினைப்பில் வந்த அலட்சியமா? ஒத்திப் போடலாமா?

இல்லை, நீ யாராய் இருந்தாலும் சரியென்று என் கண் பார்க்கும் முன்பே, விரல் தீண்டும் முன்பே மனம் உன்னைப் பூரணமாக ஏற்றுக்கொண்டு விட்டதா? கேள்வி கேட்காமல் உன்னை அங்கீகரித்து விட்டது காரணமாய் இருக்குமா?

நீ எவளானாலும் சரி உன்னோட குடித்தனம் பண்ண முடியும் என்கிற தன்னம்பிக்கையா?

எதனால் இப்படி விருப்பு வெறுப்பின்றி உன் அருகே நிற்கிறேன்?

நடுக்கமும், நெற்றிப் பொட்டு வலியும் நடுப்பகல் வரையில் இருந்தது. பிரளயத்தில் அடித்துப் போகும் துரும்பு என்கிறதாய் ஒரு விகசிப்பு மீண்டும் மீண்டும் உள்ளே எழுந்தது.

எதிர்காலம் எப்படி இருக்கும் என்று கற்பனை செய்ய பயமாய் இருந்தது. சிறகை விசிறி போட்ட மாதிரி ஒரு மெல்லிய எகிறலுடன் சினிமா பாட்டுப்பாடி கதாநாயகியைச் சுற்றி சுற்றி வரும் ஸ்லோமோஷன் நாயகன் மனசுக்குள் காணவேயில்லை. மாறாக பழுப்பேறின புகைப்படத்தில் துணியில் எழுதிய தூணுக்கு முன்னால் விறைத்துக்கொண்டு டர்பனும் தாடியுமாய் உட்கார்ந்திருக்கிற புருஷனும், காரையும் காசு மாலையுமாய் ஒரு பெண்மணியும் மனசுள் தோன்றினார்கள்.

'பண்ணின பாவத்துக்கு பிராயசித்தம்' என்கிற மாதிரி எங்கேயாவது முரட்டு வைதீகனாய் முடிந்துவிடப் போகிறேனா? வெற்றுச் சடங்குகளை மனசு நிம்மதிக்கு தலையில் தூக்கிக் கொண்டு வேதனைப்பட போகிறேனா? இளமையில் கண்டபடி சுற்றிவிட்டு மத்திம காலத்தில் வேரோடு கடவுளைப் பிடுங்கும் ஆட்களில் நானும் ஒருவனாவேனா?

இந்த ஆபத்து எனக்கு வந்துவிடக்கூடாது. மனிதர்கள் மீது வெறுப்பு ஏற்பட்டுக் கடவுளைக் காதலிக்கக் கூடாது கடவுள் என்பதின் நோக்கமே மனிதர்களைக் காதலிக்க வழியாய் இருக்கையில் மனிதர்கள் மீது கோபித்துக் கொண்டு தனித்துப் போய்விடக்கூடாது.

''நான் இனி என்ன செய்ய வேண்டும்? எது செய்தால் உத்தமம்?...?''



சகிப்புத் தன்மையைக் கற்றுக்கொள்ள வேண்டும், பிரயாசையின்றிச் சுலபமாய் எல்லோரையும் ஏற்றுக் கொள்ள ஆரம்பிக்க வேண்டும். கோபமின்றி மனிதர்கள் இவ்விதம்தான் என்று அமைதியுடன் இருக்க வேண்டும். எல்லார் தோளிலும் கைபோட்டுக் கொண்டு எனக்குத் தெரிந்ததைச் சொல்லிக் கொடுக்க வேண்டும். அமைதியாய் இரு என்று பேச வேண்டும். இன்று எனக்கருகே இருந்து தாலி கட்டிக் கொண்டாளே அவளிடமிருந்து இதை ஆரம்பிக்க வேண்டும்.

எக்காரணம் கொண்டு ஆத்திரப்படாமல், தோற்று விட்டோமே என்று குமைந்து போகாமல் புதுசாய் பளபளவென்று மனசைத் துடைத்து வைத்துக் கொள்ள வேண்டும். ஆபீஸ் கோபத்தை அகமுடையாளிடம் காட்டாத ஆணாக இருக்க வேண்டும். வாசற்படி இடித்த வலியை குழந்தை முதுகில் அறைந்து தீர்த்துக் கொள்ளாத புருஷனாய் நிற்கவேண்டும் என்னால் முடியுமா? முடியும்.

அவ்வப்போது புத்தி சறுக்கினாலும் விடாப்பிடியாய் ஸ்நேகத்தைக் கைக்கொள்ள வேண்டும் அன்பாய் இருக்க முயற்சி செய்யவேண்டும்.

கல்யாணச் சத்திரத்தின் மேல்மாடி இரண்டு பனை உயரம் திறந்த வெளி மூலையில் இரும்புப் பெட்டி. உட்கார வைத்த மாதிரி ஒரு அறை. பரிசாய் வந்த சென்ட் பாட்டிலை மைத்துனன் பயல் வயலுக்குப் பூச்சி மருந்து அடிப்பது மாதிரி, அறைமுழுக்க பீச்சியடித்து விட்டான். அக்கா மீது அத்தனை பாசம், கதவைத் திறந்தவுடன் சென்ட் வாசனை முகத்தில் குத்தியது.

அறையில் தனித்து விடப்பட்டுப் பூக்களுக்கு நடுவே உட்கார்ந்திருக்கையில் மறுபடியும் குழப்பம் அதிகரித்தது. தவறு செய்து விட்டோமோ என்று பயம் எழுந்தது. கொஞ்சம்கூட இந்தப் பூவோ, வாசனையோ கிளர்ச்சியுறச் செய்யவில்லையே என்ற கவலை வந்தது.

நாலைந்து பெண்கள் துணையோடு மனைவி, உள்ளே நுழைந்ததும் எழுந்து நின்றான். சட்டை விளிம்பை இழுத்துவிட்டுக் கொண்டான். நிறைய தமிழ் சினிமா காட்சிகள் மனசுக்குள் பறந்தன கே ஆர். விஜயா, ஜெயலலிதா, விஜயகுமாரி தலையில் அதிகமான பூவுடன் தாட்டிகமான பெண்களாய் மனசுள் நெருக்கியடித்து நின்றார்கள் சங்கரனுக்கு மூச்சு முட்டிற்று. அவளுடன் வந்த நாலு பெண்களும் ஆசை ஆசையாய் அறைக்குள் எட்டிப் பார்த்தார்கள்.

''காமாக்ஷி, ஆத்துக்காரர் சொல்ற பேச்சைக் கேட்டு சமத்தா நடந்துக்கணும். அவர் என்ன சொன்னாலும் மாட்டேன்னு சொல்லாமே கேட்கணும்''

சங்கரன் வெட்கத்தின் உச்சகட்டத்தை அடைந்தான்.

சங்கடப்பட்டான், இந்த சடங்குகளின் ஆபாசச் சிகரம் இந்த முதலிரவு நாடகம்தான் என்று பட்டது.

''எல்லாம் சௌகர்யமா இருக்கா'' —ஒரு முதிர்ந்த பெண் இவனைப் பார்த்துக் கேட்டாள்.

பதில் சொல்லாது வெறுமே நின்றிருந்தவனை விநோதமாய் பார்த்துவிட்டு வெளியே போனாள்.

''உங்காத்துக்காரர் எதுக்கோ கோவமா இருக்கார் போல இருக்கு பார்த்து நடந்துக்கோ காமாக்ஷி'' என்று உரக்கச் சொன்னாள்.

முகம் நிறைய கலக்கத்துடன், பயத்துடன் காமாக்ஷி தன் கண்களை ஊடுருவிப் பார்ப்பதைக் கண்டதும் சங்கரன் நெகிழ்ந்து போனான்.

''புருஷனிடத்தில் இவ்வளவுபயம் எதற்கு பெண்ணே உனக்கும் எனக்கும் இடையே மூன்றாவது ஆள் எதற்கு, நான் உன் ஸ்நேகிதன் நீ என் ஸகி. என்னைக் கண்டு நீ ஒருநாளும் பயப்பட வேண்டாம், பயத்தை எடுத்து வெளியே போடு, பயமின்றி என்னைப் பார், புரிந்து



கொள், நடுக்கமற்று என்னை அறிந்து கொள். நானும் முயற்சிக்கிறேன்.''

சாந்தமாய் உதடு நெளியச் சிரிக்கும் சங்கரனின் காலில் விழுந்து காமாட்சி நமஸ்கரித்தாள்.

சங்கரன் அவளைத் தூக்கி நிறுத்தினான். ''ஹலோ'' என்றான். காமாட்சி. 'என்னது?' என்று பயத்துடன் கேட்டாள்.

''ஒண்ணுமில்லே ஏன் இப்படி வேர்க்கிறது உனக்கு? பயந்து போயிருக்கியா, இல்லை பட்டுப் புடவை புழுக்கமா?''

''தெரியலை. என்னமோ ஜாஸ்தி வேர்க்கிறது.''

''கதவைத் திறந்து மொட்டை மாடிப்பக்கம் போயிடலாமா? காத்து வரும்.''

''வேண்டாம் வேண்டாம்.''

''ஏன்?''

''வாசல்லயாராவது இருப்பா, என்னமோ ஏதோன்னு கேள்வி வரும்.''

''உனக்குச் சந்தோஷம்தானே காமாட்சி''

''ரொம்ப. எனக்கும் கல்யாணம்னு கேள்விப்பட்ட உடனே கிறுகிறுன்னே வந்துடுத்து.''

''சந்தோஷ மயக்கமா.''

''இல்லை பயம். இவ்வளவு நல்ல இடம் கிடைச்சிருக்கு. நான் கெட்டிக்காரியா குடித்தனம் பண்ணணுமேங்கற பயம்.''

''உட்காரேன்.''

''வேண்டாம். இப்படி நிக்கறேன்.''

''ஏன்?''

''உட்கார்ந்தா மறுபடி கிறுகிறுன்னு வந்து சாஞ்சுடுவேன் போல இருக்கு.''

''ஏன் காமாட்சி, உடம்பு சரியில்லையா?''

''உடம்புக்கு ஒண்ணுமில்லை மனசுதான்.''

''மனசுக்கு என்ன?''

''என்னமோ பயம்.''

''என்னன்னு சொல்லேன்''

''எல்லோரும் உங்களைப் பாராட்டறா. ரொம்ப கெட்டிக்காரர். படிச்சவர்னு பேசறா, ஹீரோ மாதிரி நடத்தறா நான் உங்களுக்கேத்தபடி இல்லைன்னு அவா பேசப்பேசத் தெரியறது. நீங்க நன்னா கவிதை எழுதுவேளாம். பாட்டு பாடுவேளாம்''

''யார் சொன்னா?''

''சியாமளி மாமி''

சங்கரன் கூர்மையானான்.

''எப்ப?''

''இப்ப அஞ்சு நிமிஷம் முன்னாடி.''

''அப்புறம்?''

''எனக்கு கவிதை பாட்டு தெரியுமான்னு கேட்டா தெரியாது போனாலும் பரவாயில்லை. கத்துக்க ட்ரை பண்ணுன்னு அட்வைஸ் பண்ணினா. நான் என்னிக்கு கவிதை கத்துண்டு பாட்டு கத்துண்டு குடித்தனம் பண்ணப் போறேன்னு கவலையாய் இருக்கு.''

சங்கரன் இரண்டு கைகளையும் கொட்டி வாய் விட்டுச் சிரித்தான். ''ஏய் இங்க வா'' என்று அவளைப் பற்றி இழுத்தான். ''உட்கார் இப்படி'' என்று அருகில் அமர்த்தினான்.

''குடித்தனம் பண்றதுக்கும். கவிதைக்கும் என்ன சம்பந்தம்?''

''உங்களுக்குப் பிடிச்சது எனக்கும் பிடிக்கணுமில்லையா? எனக்கும தெரியணுமில்லையா?''

''அவஸ்யமில்லை உனக்குத் தெரிஞ்சுக்க ஆசையா இருந்தா தெரிஞ்சுக்கோ, போறும், சமைக்கத் தெரியுமில்லையா உனக்கு?''



''பேஷா''

''பரபரன்னு வீட்டு வேலை பண்ண முடியும் இல்லையா?''

''உம்ம்ம்.''

''போறும் காமாட்சி. மற்றது நான் பார்த்துக்கறேன்.''

''நான் சரின்னு படறதா உங்களுக்கு?''

''என்ன பேச்சு இது?''

''அப்பா—கடவுளே—பாதி பயம் குறைஞ்சுடுத்து.''

''மீதி பயம் என்ன காமாட்சி?''

''கடைசி வரைக்கும் நீங்க கோபப்படாம இருக்கணுமேங்கற பயம்—உங்களுக்கு நான் கோபமுண்டாக்காம இருக்கணுமேங்கற பயம்.''

''எனக்கு கோபம் வராது காமாட்சி.''

''நிஜம்மாவா.''

''ம்ம்ம்,''

''கோச்சுக்கோங்கோ பரவாயில்லை. நாலுபேர் முன்னாடி வேண்டாம். தனியே ரூம்லே கூப்பிட்டு பளீர் பளீர்ன்னு அடிங்கோ. வாங்கிப்பேன். இன்னொருத்தர் முன்னாடி வேண்டாம். இன்ஸெல்ட் தாங்கவே முடியாதுன்னா. எனக்கு இன்ஸெஸ்ட் பண்ணினா அப்படியே உடைஞ்சு தூள் தூளாயிடுவேன். நிமிரவே முடியாது எனக்கு.''

இது இருபத்து மூன்று வயதுக்குழந்தை அதட்டினால் அசையாமல் கண்ணில் ஜலம் கோர்த்து நிற்கிற சிறுமி கவர்ந்து இழுக்கத் தெரியாத வெகுளி.

''நான் இங்கே காதலன் இல்லை. கணவனும் இல்லை கதாநாயகன் இல்லை பொம்மலாட்டக்காரன்.''

வாஸ்தவம் வாழ்க்கை இவளோடு சச்சரவின்றிப் போய்க்கொண்டிருக்கும். ஆட்டுக்கும், மேய்ப்பவனுக்கும் என்ன சண்டை வரும்? ஒன்றாம் வகுப்புக் குழந்தைக்கும்

வாத்தியாருக்கும் ஏன் சச்சரவு ஏற்படும்? எப்படி கண்டினாலும் எதிர்ப்புக்காட்டாத பொம்மை மீது ஆட்டக்காரன் என்ன கோபித்துக் கொள்ள முடியும்?

''ஹலோ சங்கர் எப்படி இருக்குப்பா மேரேஜ் லைஃப்?''

''அற்புதம்.''

ஒரு க்ஷணம் கைகுலுக்கி மறுக்ஷணம் உருவிக் கொண்டு சம்பிரதாயமாய் ஓடும் ஓட்டம் மாதிரிதான் இந்தத் திருமணமும். இது இம்சையில்லை, ஆனால் வாழ்க்கையுமில்லை.

சங்கரன் மெல்லக் காமாட்சியின் தலையைத் தடவிக் கொடுத்தான், முன் நெற்றியை வருடி விட்டான், வருடிக் கொடுத்த சுகம். திருமணக் களைப்பு, காமாட்சி மெல்லிய தாய் கொட்டாவி விட்டாள்.

''தூக்கம் வருதா? தூங்கேன் காமாட்சி.''

''புகை ஜாஸ்தி, அதுதான் களைப்பாயிடுத்து. தூக்கமெல்லாம் இல்லை.''

''எனக்கும் களைப்பாத்தான் இருக்கு காமாட்சி.''

''அப்ப தூங்குங்கோ லைட்டை அணைச்சுடட்டுமா?''

தோளில் முகம் புதைத்துப்படுத்தவள் மூன்றாவது நிமிடம் தூங்கிப் போனாள். மெல்ல அவளைப் படுக்கையில் சரித்துப் போர்வையை எடுத்துப் போர்த்தி, ஜன்னல்களை அகலத் திறந்து அவள் குழற்கற்றைகளை ஒதுக்கி விட்டு, கதவை ஓசைப்படாமல் திறந்து வெளியே வந்து கைகட்டி நிற்க, வெகுதூரம் நிலபரப்பும், நீலவானமும் தெரிந்தது.

இப்படிக் கல்யாணம் பண்ணிக் கொண்டது போக வேறெதாவது உருப்படியான விஷயத்தில் இறங்கினால் தான் மனசு ஒரு நிலைக்கு வரும். புத்தி அசையாமல் இருக்கும். பாட்டு கற்றுக் கொள்ளலாமா? வீணை



வாசிக்கத் துவங்கலாமா? ஈவினிங் காலேஜ் சேர்ந்து இலக்கியம் படிக்கலாமா?

'விழியே கதையெழுது
கண்ணீரில் எழுதாதே
மஞ்சள் வானம்
தென்றல் காற்று

எதிர்ப்பக்கம் கல்யாணம் புலம்பிக் கொண்டிருந்தது

சங்கரன் மெல்லச் சிரித்துக் கொண்டான்.

## 34

**போலீஸ்காரன்** உணர்ச்சி வயப்படக் கூடாது. பெருமாள் எமோஷனல் ஆட்களோடு போராட வேண்டியவன் போலீஸ்காரன். அவன் கொதித்துவிடக்கூடாது. அரசியல்வாதி, இளைஞர்கள், வயிற்றுக்கில்லாதவன் இவனெல்லாம் உணர்ச்சி வசப்படலாம். போலீஸ்காரன் மௌனமாய் இருக்க வேண்டும். பெரிய வார்த்தை சொல்லி பயமுறுத்தவில்லை பெருமாள். இவ்வளவு கோபப்பட்டால் உடம்பு வலுவிழந்து போய்விடும். கோபப்படக் கோபப்பட கட்டுத் தளர்ந்து போய்விடும். வலுவிழந்து போகிறோமே என்று மேலும் கோபம் வரும். முடிவே இல்லாது போய்விடும். என்னை மீறி நீ முதலமைச்சரிடம் போனாக்கூட தவறில்லை, பெருமாள். இது ஒரு அரசியல் போராட்டம் என்று ஆரம்ப முதல் தெரியாமல் போயிற்றே உனக்கு? அதுதான் தவறு.

''இரண்டு மாதம் லீவு எதற்கு? மனைவியைப் பார்க்கவா? புவர் வுமன், இந்த இரண்டு மாதமும் நரகமாய்ப் போகும் அவளுக்கு. போ, போய் உடனே திரும்பி வா. மணியிடம் அனுப்புகிறேன் உன்னை மூன்று மாதம் அடிப்படைப் பயிற்சி எடுத்துக் கொள். கராத்தே மணி

தெரியுமில்லையா? கற்றுக்கொள் பெருமாள். உண்மையான வலு கிடைத்து விடும் உன் கைகளுக்கு. கோபம் மனசிலிருந்து பறந்து போகும். தைரியம் வந்து விடும். தைரியம் வந்த பிறகு தண்டிக்கத் தோன்றாது. காரத்தே மணியைப் பார்த்திருக்கிறாயா? உன்னைவிட முரட்டு உருவம், ஆனால் அந்தக் கண்களில் படிந்திருக்கிற சாந்தம் இருக்கிறதே... இது ஒவ்வொரு போலீஸ்காரனுக்கும் வரவேண்டும் என்று நான் விரும்புகிறேன்.

''பெருமாள், நீ போகலாம். உனக்குப் பத்து நாள் லீவு தரப்பட்டது.''

டிராக்டர் கம்பெனி திறந்த நாளில் துரைசிங்கப் பெருமாள் வாசலில் வெள்ளைச சட்டையும், நீலப் பேண்டுமாய் ஒரு ஓரம் நின்று உள்ளே போகிறவர்களை கவனித்துக் கொண்டிருந்தான். மொட்டைத் தலையும் மழுங்க சிரைத்த முகமுமாய் ஒன்று கடந்து போக—சுப்பையா என்று அடிக்குரலில் கூப்பிட்டான். கூப்பிட்ட குரலுக்குத் திரும்பின கண்களில் பயம் தெரிந்தது' ''சுப்பையா இங்கே வா''

''டேய், போய் தலைவரைக் கூப்பிடறா போலீஸ் காரன் மடக்கறான்னு உள்ளே சொல்லு''—சுப்பையா இரைச்சலுடன் பேசினான்.

மடமடவென்று சின்னக் கும்பல் கூடிற்று. பெருமாள் அசையாமல் நின்று கொண்டிருந்தான். கோபாலன்—ரங்கசுவாமியுடன் பேசிக் கொண்டிருப்பதாய் தகவல் வந்தது

''ஏன் சார் மடக்கறே?''

''நீ பயப்படறயான்னு பார்க்கத்தான்.''

''உன்னைப் பார்த்து எனக்கென்ன பயம்? எல்லார் மேலேயும் கேஸ்தான் வாபஸ் வாங்கிட்டாங்களே.''

''அப்ப கூப்டா வரவேண்டியதுதானே. ஆள் படைக்கு குரல் கொடுக்கிறியே?''



''என்ன சொல்லு''

''இட்டவா''

''என்னா''

''அறிவுக்கரசனை கொன்னது நீ தானே?''

''தெரியாது''

''நான் லீவுல போறேன் சுப்பையா, எனக்கு ட்ரான்ஸ்பர் ஆயிடும். தெரிஞ்சுகிட்டுப் போலாம்னுதான் கேட்கறேன்''

''.........''

''அறிவு'' 'பாடி' நேத்திக்குக் கிடைச்சது. அடையாளம் சரியாயில்லை. அனாதைப் பிணம்னு தாக்கல் ஆயிடுச்சு, சொல்லு.''

''ஆமா, நான்தான்''

''சரி, போ''

''என்னா சுப்பையா எதுக்கு மடக்கறான் உன்னை?''—எவனோ குரல் கொடுத்தான்

''ஒண்ணுமில்ல ப்ரதர், சுப்பையா நமக்கு தூரத்து உறவு. சகலபாடி மாதிரி—ஒரு சாவு சமாசாரம் சொல்றதுக்குத்தான் கூப்பிட்டேன்.''

''நான் போகட்டுமா?'' ...சுப்பையா பின்னால் நகர்ந்தான்.

''போய் வா—உன் தலைவராண்டபோய்ச் சொலனு பெருமாளுக்குத் தெரிஞ்சு போச்சு கண்டுபிடிச்சிட்டான்னு சொல்லு. போலீஸ்காரனைக் கீரை புடுங்கின்னு நினைச்சுக்க வாணாம்னு சொல்லு''

பெருமாள் கண்களை மூடிக்கொண்டான். 'என் கணக்கும், கண்டுபிடிப்பும் தவறில்லை கமிஷனர் அவர்களே. அவை துல்லியமாய் இருக்கின்றன. காலம்தான் மாறிப் போயிற்று. அவ்வளவே' மனசுகள் அமைதியாய் பேசிக்கொண்டான். மெல்ல மோட்டார் சைக்கிளில் ஏறி நிதானமாய் உதைத்து, சின்ன சீட்டியடித்துச்

சாவகாசமாய் நகர்ந்தான். என் குழந்தைக்கு மணி என்று பெயர் வைக்க வேண்டும். கமிஷனர் சொன்னது சரி. கராத்தே மணிக்கு முரட்டு உருவம், ஆனால் சாந்தமான கண்கள் என் பையன் பெரியவனானால் அவனுக்குக் கராத்தே கற்றுக் கொடுக்க வேண்டும். நேரே ஐ. பி. எஸ். போகும்படி செய்ய வேண்டும். மணிதுரை சிங்கம் ஐ பி. எஸ். உலகம் முழுவதும் சந்தோஷமாய் இருந்தது. பெருமாளின் மனசுக்குள் தகப்பனின் சிரிக்கும் கண்கள் தோன்றின.

''பதினொன்னரையாச்சு. இன்னும் டீ வரலப்பா, பால் இல்லையாம் நாளைக்குத்தான் சொல்லிருக்காம்''

''புத்திய காமிச்சிட்டானே மேனேஜ்மெண்ட்ல. டீ இல்லாம வேலை செய்ய முடியாது போய்ச்சொல்லிடு.''

''சொல்றது என்னாடா? சொச்ச நச்சத்தையும் உடைச்சுப்போடு...தானா வரும்''

''என்னப்பா என்னா சங்கதி.''

''டீ வராதாம், நாளைக்குத்தானாம், என்னாத்துக்கு கம்பெனி திறந்தான்.''

''த்தா டேய்...''

எதிரே இருந்த காலிடின்னை ஒருவன் எட்டி உதைத்தான். இன்னொருவன் அதைத் தூக்கி சப்தமெழப் போட்டான்.

ஓவென்று எல்லோரும் கூச்சலிட்டார்கள்.

கோபாலன் படிகளில் இறங்கி ஓடி வந்தான். விவரம் கேட்டான்.

''யாரு டின்னை உதைச்சது?''

''நான்தான் தலைவரே''

''நேத்திக்கு நீ டீ சாப்பிட்டியா''

''ஏன் தலைவரே.''



''கேட்டதுக்குப் பதில் சொல் நேத்திக்குப் பதினொரு மணிக்கு டீ சாப்பிட்டியா?''

''இல்லை தலைவரே'

''இன்னிக்கு ரொம்ப கோவமா எட்டி உதைக்கிற டீ இல்லேன்னு.''

''நேரத்துக்கு மேனேஜ்மெண்ட் கொடுக்க வேணாயா?''

''இரண்டு மாதம் காஞ்சிட்டு வந்த உங்களுக்குக் கோபம் வேறயா? ஏன்யா, புத்தியில்லை உனக்கு? போஸ்டர் ஒட்டக் கூப்பிட்ட போது மச்சினி கல்யாணம்னு போய்ட்டே. இப்ப காலை அகட்டிப் போறயே. நேரா நில்லுய்யா, இன்னிக்கு டீ வராது. போய்ச் சொல்லு எல்லாரண்டையும். பத்தாயிரம் பேருக்கு பால் வாங்கி டீ போடறது சுலபமா? யார் அது, யாருகைல தடி எடுத்தது? கீழ போடுய்யா அதை? எப்படியா டீ கொடுப்பான் மேனேஜ்மெண்ட்ல. யோசிக்க வேணாம். கான்டீன் மொத்தமும் உடைச்சி குறையாடியாச்சு. எங்கேர்ந்து அடுப்பு பத்த வைப்பான்? போ—நாளைக்கு டீ வரும் போய் உன் இடத்துல நில்லு.''

''ஹூ ஸெட்? எப்படி வராமப் போகும்? பெர்ஸனல் மேனேஜர் எங்கே? கெட் ஹிம் ஹியர். ஏன் டீ வரவில்லை? அதைவிட என்ன வேலை உங்களுக்கு? அக்ரிமெண்ட் டிராப்டா? கிழிச்சுப் போடுங்க சார் அதை. யார் கேட்டா டிராப்ட்? டீ ஏன் வரவில்லை? கெட் அவுட் முதல்ல போய் நல்ல ஹோட்டல்லேருந்து டீ வர ஏற்பாடு பண்ணுங்க. ஒரு டீ ஒரு ரூபாயானாலும் பரவாயில்லை. என் கார் உட்பட அத்தனை வண்டியையும் எடுத்துக்கிட்டுப்போய் இன்னும் அரை மணில டீ வரணும். என்ன செய்வீங்களோ தெரியாது. ஐ வில் பே ஒன் ருபி பெர் கட், கெட் இட் ஐ ஸே''—ரங்கசுவாமி மேஜையில் ஓங்கி அடித்தார்.

''கோபாலன் ஐயம் சாரி, இன்னும் அரை மணியில் டீ வரும். பரபரப்புல மறந்து போயிட்டாங்க. நான் மன்னிப்பு கேட்டுக்கிறேன். வெளியே வந்து அலங்கமத்தில வேணும்னா கேட்கறேன்.''

''வேணாம் சார்—வரட்டும், மெள்ள வரட்டும்.''

பெரிய டிரம்களில், தொட்டிகளில், தவலைகளில், அண்டாக்களில் டீ இறங்கியது. வண்டி வண்டியாய் வந்தது.

''என்ன கோபாலன்? டீ எப்படி இருக்கு? எனக்கு ஒரு கப் கொடுப்பா?''

''நல்லா இருக்கு சார்—இந்தப்பா டம்ளரை நல்லா கழுவு. வேற டம்ளர் எடுப்பா... நசுங்கிப் போய் என்ன இது?''

''பரவாயில்லை கோபாலன் அதையே கொடுங்கள்.''

தொழிற்சாலைப் புல்வெளிகளில் ரங்கசுவாமியும் கோபாலனும் டீ டம்ளர்களுடன் மெல்ல நடந்தார்கள்.

''மூனு நாள் க்ளீனிங் வச்சுக்கலாம் கோபாலன், ப்ரொடக்ஷன் பத்தி நாலாம் நாள் யோசிக்கலாம்.''

''டயர் வருமா சார்?''

''வந்தாச்சு கோபாலன். வேற இடத்தில் இறங்கியிருக்கு.''

''எடுத்திட்டு வந்திடலாம் சார். உள்ளே வந்தா உடனே வண்டி போடச் சொல்றேன்.''

''க்ளீன் ஆகட்டுமே.''

''ப்ரொடக்ஷனும் முடிஞ்ச அளவு போடலாம் சார்.''

''தேங்க்யூ கோபாலன்? இது நல்லாவே இருக்கு.''

''எது சார்?''

''டீ... உங்க உடம்பு இப்ப தேவலாமா கோபாலன், மோசமா அடிச்சுட்டாங்களாமே போலீஸ்''



''தாங்க முடிஞ்ச அளவுக்குத்தான் என்னை அடிச்சாங்க. எனக்கு ஆறிப்போச்சு.''

''என்ன கோபாலன்?''

''நடு ரோட்ல ஒருத்தனை சாக அடிச்சிட்டாங்க சார். அதான் ஆறல.''

''கோபாலன், அது நான் செய்யல.''

''நம்பறேன்.''

''டு ப்ரொடக்ட் பேக்டரின்னு சில பேரை பர்ஸனல் டிபார்ட்மெண்ட் அப்பாயிண்ட் பண்ணிச்சு. கோபாலன்...''

''போனது போயிடுச்சு. குறை வேண்டாம் சார் அந்தக் குடும்பம் தவிக்குது சார்.''

''என்ன செய்யணும்? சொல்லுங்க.''

'',அந்த அம்மா, கணேசன் மனைவிக்கு வேலை கொடுங்க சார்.''

''என்னுடைய மதர்கூட இதைச் சொன்னாள்' கோபாலன். எனக்கு மௌண்ட் ரோட்ல புஸ்தகக் கம்பெனி ஒண்ணு இருக்கு.''

''தெரியும் சார்.''

''அங்க போய் ஜாயின் பண்ணட்டும். படிச்சவங்க தானே. டைப்பிஸ்ட் வேலை பரவாயில்லையா.''

''தேங்க்யூ சார்.''

''கோபாலன். நீங்களே இதை அவங்ககிட்ட சொல்லிடுங்க யூனியன் மூலமா ஆர்டர் போகட்டும். உங்ககிட்ட லெட்டர் கொடுக்கச் சொல்லட்டுமா? நீங்க போறீங்களா.''

''நான் போகலை சார். நீங்களே அனுப்பிடுங்க.''

''ஏன் உங்களுக்கு மிஸஸ் கணேசனைத் தெரியாதா.''

கோபாலன் ஒரு கணம் மனசுள் நுழைந்தான். அவன் வசித்த தெரு முனையில் ஒரு நடைபாதை அம்மன்

கோயில் இருக்கும் மார்பளவு புதைந்து சிரித்தபடி ஒரு கருங்கல் பெண் முகம், போகும்போது, வரும்போது கண்ணில் படும். கிட்டத்தட்ட அப்படி ஒரு பெண் உருவம் பூமியிலிருந்து கிளம்பி குத்துக்காலிட்டு பீடத்தில் அமர்ந்து பல் தெரிய மனசுக்குள் சிரித்தது. 'எனக்கு உங்க கம்யூனிஸ்ட் கட்சியைப் பத்தி தெரியாது. ஆனா ரஷ்யப் புரட்சி பற்றித் தெரியும்' என்று சிரிப்போடு பேசிற்று.

''கோபாலன்?''

''எஸ் சார்.''

''மிஸஸ் கணேசனிடம்...''

''உங்க மதர் போகட்டும் சார் ஆர்டரோட, அதான் நல்லா இருக்கும்.''

''வீடு தெரியாதே. நீங்க கூட்டிட்டுப் போறீங்களா''

''வேணாம் சார் சங்கரன்னு ஒரு ஸ்டெனோ இருக்கார் ஆபீஸ்ல இவரைக் கூட்டிட்டிப் போகச் சொல்றேன்.''

''யார்—அந்த வால் பொய்ட்ரி எழுதினவரா?''

''உங்களுக்குத் தெரியுமா சார்?''

''கேள்விப்பட்டேன். அவரும் அடிபட்டார் இல்லையா? அவரை வரச்சொல்லுப்பா இங்கே.''

''டீ ஆறினா நல்லதுதான் கோபாலன். முன்னெல்லாம் சூடா சாப்பிடுவேன். இப்ப முடியல. அல்சர் மாதிரி.''

''சார்—இப்படி வாங்க. பல்பு உடைஞ்சு இருக்கு. மெர்க்குரி பல்பு கால்ல பட்டா விஷம் சார்.''

ரங்கசாமி குனிந்து பல்புத் துண்டுகளை ஓரமாய் எடுத்துப் போட்டார்.

''யு ஆர் கரெக்ட். உடைஞ்சு போச்சுன்னா விஷம் தான். ஆனா இது சரியா எரியற போது—என்ன பிரகாசம்? ப்ளைட்ல போயிருக்கீங்களா கோபாலன்



நைட்ல டேக் ஆஃப் போது ஹோல் சிடியும் பளீர்னு பூக்கள் சிதறின மாதிரி தெரியும். மெர்குரி லைட்டுக்கே தனி அர்த்தம் புரியும். எடுத்து கோர்க்கலாம்கற மாதிரி எனக்குப்படும். இராத்திரி ஊர் மொத்தமும் தனியா பூக்கள் பூத்த மாதிரி இருக்கும்.''

பின்னால் வந்து கைகட்டி நின்றபடி இதைக்கேட்ட சங்கரன் மனது மடமடவென்று ஒரு வார்த்தையை டைப் செய்தது.

மெர்க்குரிப் பூக்கள், மெர்க்குரிப் பூக்கள், மெர்க்குரிப் பூக்கள்

''சங்கரன் உங்களுக்கு மிஸஸ் கணேசன் வீடு தெரியுமில்லையா?''

'என்ன இன்னைக்கு பாயசம் திடீர்னு ஏதாவது விசேஷமா?''—தண்டபாணி உள்ளே நுழைந்தபடி கேட்டான்.

'பௌர்ணமி வெறும் பாயசம்தான். வேற ஒண்ணும் இல்லை.''

''பௌர்ணமியா? வழக்கமா பண்ண மாட்டாயே.''

''என்னமோ தோணித்து. இனிமே பௌர்ணமி பௌர்ணமிக்கு பாயசம் பண்ணலாம்னு நினைச்சேன்''

''வெரிகுட், வெரிகுட் காபி வேண்டாம். பாயசமே கொடு முதல்லே முந்திரிப் பருப்பு போட்டிருக்கையா?''

''பூஜையை முடிச்சுடறேனே.''

''பூஜை வேறயா, வெரிகுட் வெரிகுட்.''

''ஏன்?''

''வழக்கமா பண்ண மாட்டாயே?''

''பண்ணலாம்னு தோணித்து.''

''வெரிகுட் வெரிகுட்.''

சியாமளி குளித்து பூ முடித்திருந்தாள் சிவப்பு பட்டுப் புடவை உடுத்தியிருந்தாள். மெட்டியும் கொலுசும்தான

மிட நகர்ந்தாள். குழந்தைக்குப் பூச்சூட்டி படங்களின் எதிரே விளக்கேற்றி அருகில் உட்கார வைத்துக் கொண்டாள்.

குழந்தை யாகுந்தேந்து பாடிற்று. ''நீயும் பாடுமா?'' என்றது.

''எனக்குத் தெரியாது கண்ணம்மா'' என்று சியாமளி மறுத்தாள்.

''பாடேன் சியாமளி. சின்னதாய் பாடேன். நீ பாட்டுப் பாடி எவ்வளவு நாளாச்சு?'' தண்டபாணி உடம்பைத் துடைத்துக் கொண்டபடி கேட்டான்,

சியாமளி ஆடிக்கொண்டிருந்த திபம் நெற்றியில் நின்றது பெரிதாயிற்று. உடம்பு முழுவதும் தம்பூர் சுருதி மாதிரி ஒலி அலைகள் மனசுக்குள் படர்ந்தன.

''என்ன செய்தாலும் எந்தன் துணை நீயே
என் அன்னை உமையே என்னை...நீ...'

சியாமளிக்கு பாட முடியவில்லை பொங்கிப் பொங்கி அழுகை வந்தது. அடக்கவில்லை. குமுறிக் கொண்டு வந்த துக்கத்தை அழுத்திக்கொள்ள முடியவில்லை.

''அம்மா'' குழந்தை பயத்துடன் சியாமளியிடம் தாவினாள். ''சியாமளி சியாமளி, என்ன இது? என்ன இது?'' தண்டபாணி பதறிக்கொண்டு அவளை அணைத்தான் ''நீ பாட வேண்டாம். விடு'' என்றான்.

சியாமளி க்ஷண நேரத்தில் சரிப்படுத்திக் கொண்டாள். குழந்தையை இறுக்க அணைத்துக் கொண்டாள். ''நீங்களும் உட்காருங்கோ'' என்றாள்.

பாட்டு முழுவதும் பிசிறில்லாமல் பாடினாள்.

பாயசத்தைப் பங்கிட்டுக் கொடுத்தாள்.

தண்டபாணி உறிஞ்சிச் சாப்பிட்டான். ''சில சமயம் உன்னைப் பார்க்கறபோ பயம்மா இருக்கு சியாமளி'' என்றான்,



சியாமளி மெல்ல நிமிர்ந்து ''இனிமே பயப்பட வேண்டாம்னா'' என்றாள்.

அந்தி மயங்கும் நேரத்தில் சாவித்திரி வீட்டுவாசலில ரங்கசுவாமியின் கார் நின்றது காரின் கதவுகள் திறந்தன சங்கரன் உள்ளே ஓடி சேர்மன் ரங்கசுவாமியின் தாயார் வந்திருப்பதைச் சொன்னான். சாவித்திரி புடவைத் தலைப்பைப் போர்த்திக் கொண்டு சமையலறை குழாயடியில் நின்று கொண்டாள்.

மெல்ல தன் கையைத் தொட்டு, ''ரொம்பச் சின்னப் பொண்ணா இருக்கியேம்மா...'' என்று தழுதழுத்த அம்மாவின் முகத்தைப் பார்க்காமலிருக்க விட்டத்தை நோக்கி வெறித்தாள். சின்னதாய் நீர் திரண்டு விழியோரம் ததும்பி சரக்கென்று இறங்கியது.

பெண்கள் பேசட்டும் என்று சங்கரன் ஒதுங்கிக் கொண்டான். வீடு முழுவதையும் நோட்டம் விட்டான்.

கம்பெனி திறந்துவிட்டது மறுபடி சகல நிலைமை வந்துவிட்டது. எல்லாம் மெல்ல மெல்ல சரியாகும் என்ற நம்பிக்கை எல்லோருக்கும் வந்து விட்டது. ஆனால் இந்த வீடு...சரித்திர சின்னமாகி விட்டதே இது சரித்திரம் தான், எல்லார் வாழ்க்கையும் சரித்திரம்தான்.

ஒவ்வொருவர் வாழ்க்கையும் அற்புதம்தான். சில மட்டுமே எழுதப்படுகின்றன. ஏன்? இதை எழுதினால் என்ன? இப்படி கம்பெனி மூடி—ஒரு குடும்பம் கலைந்தது பற்றி எழுதினால் என்ன? கம்பெனி மூடினதில் கணேசன் குடும்பம் கலைந்தது சாவித்திரி குங்குமம் கலைந்தது. என் மனசு கலைந்தது. கோபாலன் முரட்டுத்தனம் கலைந்தது. ரங்கசாமியின் பிடிவாதம் கலைந்தது. பெருமாளின் கர்வம் கலைந்த பிறகு எல்லாம் மறுபடி எழுதப்படவிருக்கிறது. இன்னும் நிதானமாய் திண்மையாய் இன்னொரு அத்தியாயம் துவங்க இருக்கிறது. சரித்திரம் முடியவில்லை என்று இதைத்தான் சொல்கிறார்களோ?

இதை எழுதினால் என்ன ஆக்ஷன், பதிலு[illegible]ரியாக்ஷன் என்று திட்டமிட்டு, கதையாய், நாவ[illegible] எழுதினால் என்ன? எழுத வேண்டும், யோசித்து க[illegible]மாய் எழுத வேண்டும். எங்கேயிருந்து துவங்க[illegible] நாவலை இங்கேயிருந்து துவங்கிட வேண்டும். கணேசன் வீட்டிலிருந்து ஆரம்பிக்க வேண்டும். இது கணே[illegible]ன் என்பவன் வாழ்ந்த இடம் பழகின வீடு. அதோ அவன் படுத்து சந்தோஷமாய் மனைவியோடு புரண்ட கட்டில். கட்டிலில் இருந்து தெரியும் வானம் தினம்தினம் கணேசன் பார்த்த வானம்.

சங்கரன் அறைக்குள் மெல்ல நுழைந்து ஜன்னல் வழியே வானத்தைப் பார்த்தான். தொலைவில் ஒரு மாலை நேர நட்சத்திரம் மின்னிக் கொண்டிருந்தது. நட்சத்திரம் தெரிகிறதே, தினம் தினம் தெரியுமோ? கணேசன் பார்த்திருப்பானோ?

கணேசன் கண் விழித்ததும் அவன் முதலில் பார்த்த பொருள் ஒரு நட்சத்திரம் ஜன்னலுக்கு வெளியே வெகு தொலைவில் அற்புதமாய் மின்னிக் கொண்டிருக்கிற விஷயம்.

சங்கரன் மனது நாவலின் மூதல் வரிகளை மடமட வென்று டைப் செய்தது.

குட் வெரிகுட். ஆரம்பித்துவிட வேண்டியதுதான். உட்கார்ந்து ராப்பகலாய் எழுதிவிட வேண்டும். இழை இழையாய் பிரிந்து யோசனை செய்யவேண்டும் ஆனால் நாவலுக்கு என்ன தலைப்பு வைக்கலாம்?

ரங்கசுவாமி சொன்னாரே ஒரு வார்த்தை மெர்க்குரி பல்புகள். நோ...நோ...அது அவர் வார்த்தை. அப்போது எனக்குள் ஒன்று தோன்றியதே அது என்ன? ஹா! ஞாபகம் வந்துவிட்டது! மெர்க்குரிப் பூக்கள்...மெர்க்குரிப் பூக்கள்...மெர்க்குரிப் பூக்கள்...சங்கரன் நாவலை எழுத ஆரம்பித்து விட்டான்.

★

P-336
23/5/05
23